# திறந்திடு சீஸேம்

அரிய பொக்கிஷங்களின் அபூர்வ வரலாறு

முகில்

திறந்திடு சீஸேம் : அரிய பொக்கிஷங்களின் அபூர்வ வரலாறு

Copyright © 2020 by Mugil

All rights reserved. No part of this publication may be reproduced, distributed, or transmitted in any form or by any means, including photocopying, recording, or other electronic or mechanical methods, without the prior written permission of the author, except in the case of brief quotations embodied in critical reviews and certain other noncommercial uses permitted by copyright law.

Author's Home Page: www.writermugil.com

Email: writermugil@gmail.com

FB & Twitter : writermugil

## ‘பொருள்’ நிறைந்த புத்தகம்!

அருங்காட்சியகத்துக்குச் செல்கிறீர்கள். அங்கே உங்களை வழிநடத்தும் நபர் உங்கள் கையில் ஆயுதம் ஒன்றைக் கொடுக்கிறார். அது ஒரு வாள். மிகவும் பழைமையானது. ‘என்ன இது?’ என்பதுபோல அவரைப் பார்க்கிறீர்கள்.

‘இந்த வாளைக் கொண்டுதான் இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு போரஸ் என்கிற புருஷோத்தமன், மாவீரன் அலெக்ஸாண்டரை எதிர்த்துப் போரிட்டான்’ என்று சொல்கிறார் அவர். போரஸ் அமர்ந்திருந்த கம்பீரமான யானையின்  உங்களுக்குள் ஒலிக்க, அப்படியே ஒரு கணம் உடல் சிலிர்த்துப் போகாதா என்ன!

பழைமையான பொருள்களுக்கு எப்போதுமே தனி மதிப்பு உண்டு. பழைமையான பொருள்கள்தாம் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றை நமக்குப் புரிய வைக்கின்றன. ஆதி மனிதனின் கலாசாரத்தையும், ஆப்பிரிக்கப் பழங்குடிகளின் வேட்டை முறையையும், எகிப்தியர்களின் கலை நுணுக்கத்தையும், ஏதேன்ஸ் நகரத்தின் எழிலையும், ராஜ ராஜ சோழனின் ஆட்சித் திறனையும், நெப்போலியனின் உடை அழகையும், புத்தரின் வாழ்வியலையும், ஹிட்லரின் மறுபக்கத்தையும், இன்னும் பலவற்றையும் நம் கண் முன் விரிய வைக்கின்றன.

கண்டுபிடிக்கப்பட்டப் பொக்கிஷங்கள் நம்மைக் காலச் சக்கரத்தில் ஏற்றிக் கொண்டு நொடிப்பொழுதில் அந்தக் காலத்துக்கே அழைத்துச் செல்கின்றன. கண்டுபிடிக் கப்பட்டு காணாமல் போன பொக்கிஷங்கள் கொஞ்சம் பதைபதைப்பையும் நீண்ட பெருமூச்சையும் சேர்த்தே தருகின்றன. இன்னும் கண்டுபிடிக்கப்படாத பொக்கி ஷங்கள் உண்டாக்கும் ஏக்கம் அளவிட இயலாதது.

அப்படிப்பட்ட பொக்கிஷங்களின் கதைகளைப் பேச இந்து தமிழ் திசையின் சிறுவர்களுக்கான இணைப்பித ழான மாயா பஜாரில் வாய்ப்பு அமைந்தது. வரலாற்றை மாணவர்கள் விரும்பும் விதத்தில் எளிமைப்படுத்தி எழு துவது சற்றே சவாலான விஷயம்தான். அதேசமயம் மாணவர்களுக்காக பேசும் விஷயத்தின் கணத்தைக் குறைப்பதிலும் எனக்கு உடன்பாடில்லை. ஆக, எல்லா வயதினருக்கும் பொதுவான நடையில்தான் இந்தக் கட் டுரைகளை எழுதினேன். மாணவர்களுடன் சேர்த்து பல்வேறு தரப்பினரும் இந்தத் தொடருக்கு வாசகர்க ளாக அமைந்தார்கள். மகிழ்ச்சி. இந்த யோசனையைத் தொடராக எழுதுவதற்குக் களம் அமைத்துக் கொடுத்த மாயா பஜார் ஆசிரியர் சுஜாதா அவர்களுக்கு என் அன் பும் நன்றியும்.

அந்தத் தொடரில் வெளியான 41 கட்டுரைகளின் மேம் படுத்தப்பட்ட வடிவமே இந்த மின்நூல். கால எந்திரத்தில் ஏறி பின்னோக்கிப் பயணம் செய்யும் ஓர் அற்புதமான அனுபவத்துக்குத் தயாராகுங்கள்!

அன்புடன்

முகில்

# பொக்கிஷப் பட்டியல்


1. மஸாமுனே வாள்

2. டக்கர் சிலுவை

3. பாக்திரியாவின் தங்கப் புதையல்

4. தென்னாப்பிரிக்காவின் முதல் வைரம்

5. லிமாவின் பொக்கிஷங்கள்

6. ஃபேபெரெஜ் முட்டைகள்

7. மயிலாசனத்தின் கதை

8. எத்தியோப்பியாவின் கிரீடம்

9. உலகின் பழைமையான தங்கம்

10. மூன்று வைரங்களின் கதை

11. வோனொபாயோ புதையல்

12. தோர் சுத்தியல்! வைகிங் வாள்!

13. ஒரு புத்தரின் கதை

14. காணாமல் போன முகம்

15. பாதாள நூலகம்

16. தம்மாஸேதி மணி

17. உலகின் மிகப்பெரிய முத்து

18. மூன்று ஓவியங்கள்

19. துட்டன்காமனின் கத்தி

20. மெர்ச்செண்ட் ராயல்

21. டெரகோட்டா வீரர்கள்

22. ஆர்லவ் வைரம்

23. மெட்டல் டிடெக்டர் புதையல்கள்

24. ஒரு கவிதை! ஒரு புதையல்!

25. நீரோவின் தங்க மாளிகை

26. ரைடன் கோப்பைகள்

27. சீனாவின் ராஜமுத்திரை

28. தாராவின் சிலை

29. வாசிக்க முடியாத புத்தகம்

30. நாஜி தங்க ரயில்கள்

31. சதுரங்கப் பொக்கிஷங்கள்

32. சாஃபோவின் கவிதைகள்

33. நாஸக் வைரம்

34. திப்பு சுல்தானின் வாள்

35. நெப்போலியனின் தங்கப்புதையல்

36. கொள்ளை போன ஓவியங்கள்

37. பெங்காஸி பொக்கிஷம்

38. அரேனி-1 அதிசயங்கள்

39. ஆடையின் வயது 5000

40. பேல் புதையல்

41. ஐந்தாம் ஜார்ஜின் மணிமகுடம்

# 1. மஸாமுனே வாள்

அந்த ஆற்றின் நீர் தெளிவாக இருந்தது. நீரோட்டம் அவ்வளவு வேகமாக இல்லை. அதனுள் நின்று கொண்டிருந்தார் முராமஸா. அவர் கையில் ஒரு வாள். பல நாள்கள் தூங்காமல் பார்த்துப் பார்த்துச் செதுக்கிய கூர்மையான முனை கொண்ட வாள். முராமஸா, வாளின் முனை தரையை நோக்கிப் பாயுமாறு நீரினுள் போட்டார். அது 'ஸ்ஸ்ஸ்ஸ்ஸூக்...' என காற்றைக் கிழிக்கும் சத்தத்துடன், நீரைத் துளைத்துக் கொண்டு, இடைப்பட்ட இலைகளை எல்லாம் சரசரவெனக் கிழித்துக்கொண்டு, எதிர் வந்த மீன்களையெல்லாம் மளமளவெனத் துண்டாக்கியபடி ஆற்றின் அடித்தரையில் குத்தி நின்றது. ரத்தம் நீரினுள் பரவ முராமஸாவின் முகத்தில் பெருமிதம்.

அவருக்கு அருகில் மஸாமுனே நின்று கொண்டிருந்தார். அவர் கையிலும் ஒரு வாள் இருந்தது. பல நாள்கள் உழைப்பில் அவரே செதுக்கிய அந்த அழகான வாளை, நீரினுள் இட்டார். அது காற்றை மென்மையாகத் தழுவியபடியும், நீரின் ஓட்டத்தைப் பாதிக்காதபடியும் தன்மையாக இறங்கியது. இலைகள் வாளின் கூர்மையால் கிழிந்தன. ஆனாலும் அடுத்த விநாடியே ஒட்டிக் கொண்டன. வாள், மீன்களை எந்தவிதத்திலும் பாதிக்காமல்

ஆற்றின் தரையைச் சென்றடைந்தது. மஸாமுனேவின் முகத்தின் சாந்தமான புன்னகை.

யாருடைய வாள் சிறந்தது என்ற போட்டிதான் அங்கே நடந்து முடிந்தது. முடிவை அறிவிக்கும் பொறுப்பு துறவி ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்தத் துறவி முடிவைச் சொன்னார். 'முராமஸாவின் வாள் ரத்த வெறி பிடித்தது. எதை வெட்டுகிறோம், யாரை வெட்டுகிறோம் என்று பிரித்துணரத் தெரியாத தீய வாள். அது ஒரு பட்டாம்பூச்சியைக்கூட எதிரியின் தலையைப் போல வெட்டிவிடும். மஸாமுனேவின் வாளுக்கு எதை வெட்ட வேண்டும், யாரை வெட்ட வேண்டும் என்ற புரிதல் இருக்கிறது. அப்பாவி உயிர்களை எந்தவிதத்திலும் பாதிக்காத அற்புதமான வாள், மஸாமுனேவினுடையதே!' என்றார் துறவி.



மஸாமுனே பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர். ஜப்பானின் சரித்திரத்திலேயே சாமுராய்களுக்கான வாள் செய்வதில் மிகச்சிறந்தவர் என்ற பெயர் மஸாமுனேவுக்குத்தான் உண்டு. முராமஸா, அவரது சீடர்தான். குருவுக்கும் சிஷ்யனுக்கும் நடந்த போட்டியில் குருவே வென்றார். ஏனென்றால் மஸாமுனே தயாரித்த வாள்கள் எதிரிகளிடத்தில் வீரத்துடனும், மற்ற உயிர்களிடத்தில் அன்புடனும் நடந்து கொண்டன. ஹோஞ்ஜோ, ஃப்யூடோ, முஸாஷி, ஹோச்சோ, கோடேகிரி - இவையெல்லாம் மஸாமுனே தயாரித்த சரித்திரப் புகழ்பெற்ற சாமுராய் வாள்கள்.

இவை ஒவ்வொன்றும் பல போர்க்களங்களைக் கண்டவை. அவற்றில் மஸாமுனே, தன் பெயரையும் பொறித்திருந்தார்.

இவற்றில் மிக முக்கியமான வாள், ஹோஞ்ஜோ. ஜப்பானில் இதுவரை தயாரிக்கப்பட்ட வாள்களிலேயே மிகவும் நேர்த்தியுடன் அழகாகவும் வலிமையானதாகவும் உருவாக்கப்பட்ட வாள் என்ற பெருமை ஹோஞ்ஜோவுக்கு உண்டு. இரும்பை உருக்கி, இஷ்டம்போல வளைக்கும் தொழில்நுட்பம் எல்லாம் அதிகம் வளராத அந்தக் காலத்தில், மஸாமுனே இப்படி ஓர் அருமையான வாளைத் தயாரித்தது பேரதியமாகக் கருதப்படுகிறது.

பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜப்பானிய ராஜ்ஜியம் ஒன்றின் தளபதியாக இருந்த ஹோஞ்ஜோ என்பவர், போர் ஒன்றில் எதிரி வீரரான உமானோசுகேவின் வாளால் தாக்கப்பட்டார். அந்த வாள் ஹோஞ்ஜோவின் வலிமையான தலைக்கவசத்தை இரண்டாகப் பிளந்தது. அந்த வாளின் வலிமையைக் கண்டு அதிசயத்த ஹோஞ்ஜோ, பின் சுதாரித்துக் கொண்டு எதிரியை அழித்தார். அந்த வாளைத் தனக்கான போர்ப் பரிசாக எடுத்துக் கொண்டார். அந்த வாள், மஸாமுனேவால் தயாரிக்கப்பட்டது. பல போர்க்களங்களைக் கண்ட பிறகும், பலரது தலைகளைக் கொய்த பிறகும் கூர்மை குறையாமல் மின்னியது. பின் அந்த வாளுக்கு 'ஹோஞ்ஜோ மஸாமுனே' என்ற பெயர் நிலைத்தது.

பின் அந்த வாள் ஹோஞ்ஜோவால் 13 பெரிய தங்கக் காசுகளுக்கு இன்னொருவரிடம் விற்கப்பட்டது. காலப் போக்கில் வேறு வேறு நபர்களிடம் கைமாறியது. இருபதாம் நூற்றாண்டில், டோகுகவா குடும்பத்தினரிடம் அந்த

வாள் இருந்தது. இரண்டாம் உலகப்போரின்போது அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஷிமாஸா என்பவர், வாளின் உரிமையாளராக இருந்தார்.

இரண்டாம் உலகப்போரின் முடிவில், ஜப்பான் சரணடைந்த பின், அமெரிக்க வீரர்கள் அங்கிருந்து ஏகப்பட்ட செல்வங்களைத் தங்களுக்கான போர்ப்பரிசாக எடுத்துக் கொண்டனர். அதில் சாமுராய் வாள்களும் நிறைய உண்டு. ஷிமாஸா தன்னிடமிருந்த ஹோஞ்ஜோ மஸாமுனே உள்ளிட்ட பல வாள்களை அருகிலுள்ள காவல் நிலையத்தில் ஒப்படைத்தார். அந்த வாள்கள் செர்ஜண்ட் கோல்டி பைமோர் என்ற அமெரிக்கரிடம் ஒப்படைக்கப்பட்டதாக ஜப்பானியத் தரப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அமெரிக்கத் தரப்பில் அப்படி ஒரு வீரர் ஜப்பானுக்கு அனுப்பப்பட்டதற்கான பதிவே இல்லை.

இப்போது அந்த ஹோஞ்ஜோ மஸாமுனே வாள் அமெரிக்காவில் எங்கு இருக்கிறது, எப்படி இருக்கிறது என்பதற்கான எந்தத் தகவலும் இல்லை. அமெரிக்க வீரர்கள் பலர் தாங்கள் கைப்பற்றிய வாள்களை உருக்கி, கோப்பையாகவும் பதங்கங்களாகவும் செய்து கொண்டார்கள். சுமார் 700 வருட வரலாறு கொண்ட ஜப்பானின் அரிய பொக்கிஷமான ஹோஞ்ஜோ மஸாமுனே வாளும் அப்படி உருக்கப்பட்டு மாற்றப்பட்டிருக்கலாம். ஆனால், அது யாரிடம் எந்த வடிவத்தில் இருக்கிறது என்பதை இதுவரை கண்டறிய முடியவில்லை.

இப்போதைக்கு ஜப்பானிய கார்ட்டூன் கேரக்டர்கள் மட்டும் மஸாமுனேவின் வாள்களை வீரத்துடன் சுழற்றிக் கொண்டிருக்கின்றன.

## 2. டக்கர் சிலுவை

உலகில் அதிகம் கப்பல் போக்குவரத்து நடக்கும் கடல் பகுதி அதுதான். பல நூற்றாண்டுகளாக, அதிக அள வில் கப்பல் விபத்துகள் நடந்த பகுதியும் அதுதான். பெர்முடா. வட அமெரிக்கக் கண்டத்தின் கிழக்கிலும், வட அட்லாண்டிக் பெருங்கடலில் மையப்பகுதியிலும் அமைந்த சிறிய தீவு. பிரிட்டனின் கடல் கடந்த ஆட்சி, அதிகாரத்துக்கு உட்பட்ட பகுதி இது.

பதினைந்து, பதினாறாம் நூற்றாண்டுகளின் பெர்முடா வின் கடல் பகுதியை ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த ஏகப்பட்ட கப்பல்கள் கடந்து சென்றன. மோசமான வானிலை, புயல் காரணமாக அதில் பல கப்பல்கள் விபத்துக்குள்ளாயின. அதில் ஸ்பெயின் மற்றும் போர்ச் சுகலைச் சேர்ந்த கப்பல்கள் அதிகம்.

டெடி டக்கர் (Teddy Tucker), பெர்முடாவைச் சேர்ந் தவர். சிறுவயதில் கடலுக்குள் குதித்து, சிப்பிகளைப் பொறுக்கி வந்து சுற்றுலா பயணிகளிடம் விற்றவர். தன் இளவயதில் நீர் வாழ் உயிரினங்களின் கண்காட்சி சாலை (Aquarium) ஒன்றைத் திறந்தார். மூழ்கிப் போன பழைய கப்பல்களில் புதையல் வேட்டை நடத்துவது டக்கரின் இன்னொரு வேலை. சிறிய தங்க, வெள்ளிக்

கட்டிகள், பழங்கால கண்ணாடிகள், தட்டுகள், பாத்திரங்கள், ஜாடிகள், பித்தளை திசைகாட்டிகள், வெண்கலத்தினாலான சிறு பீரங்கிகள், பழங்கால கையெறி குண்டுகள் போன்றவை அவருக்குக் கிடைத்தன. அவற்றைத் தன் அக்குவேரியத்தில் காட்சிக்கு வைத்தார்.

1955. கோடைகாலத்தில் ஒருநாள். தன் குழுவினருடன் கடலுக்குச் சென்ற டக்கர், நீரினுள் டைவ் அடித்தார். அதுவரை அவர் கண்ணில் சிக்காத கப்பல் ஒன்று தென்பட்டது. அந்தக் கப்பலின் உடைந்த பாகங்களில் தன் தேடுதலைத் தொடங்கினார். மூன்று பெரிய முத்துகள், தங்க பட்டன்கள், பழங்கால ஸ்பானிய, பிரெஞ்சு நாணயங்கள் கிடைத்தன. வெளியே வந்து அந்தக் காசுகளை ஆராய்ந்தபோது அதில் ஒரு நாணயத்தில் 1592 என்று வருடம் பொறிக்கப்பட்டிருந்தது. அது 1594-ல் மூழ்கிப் போன ஸ்பானிய கப்பலான San Pedro.



டக்கர், அடுத்தடுத்த நாள்களிலும் அந்தக் கப்பலில் தனது தேடுதல் வேட்டையைத் தொடர்ந்தார். சிறிய தங்க உருண்டை, ஸ்பானிய அரச முத்திரை, 36 அவுன்ஸ் எடை கொண்ட தங்கக்கட்டி, சிறு முத்துகள் என்று ஒவ்வொரு நாளும் சில பொருள்கள் அகப்பட்

டன. தேடுதல் வேட்டையின் ஏழாவது நாள். டக்கர், கப்பல் உடைந்துகிடைந்த பகுதியில் இருந்த பவளப் பாறைக்கு அருகில் தன் கைகளால் தோண்டினார். கலங்கிய நீர் தெளிவான பின், கடலின் தரையில் பளிச் சென ஒரு பொருள் தென்பட்டது. 22 காரட் தங்கத்தால் ஆன ஒரு சிலுவை. அதன் மீது ஏழு பெரிய மரகதக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. சிலுவையின் வலப்புறத் திலும் இடப்புறத்திலும் இயேசுவின் கைகளைக் குறிக் கும்படி தங்கத்தாலான தொங்கட்டான்கள் இருந்தன. இயேசுவின் கால்களைக் குறிக்கும்படியான தொங்கட் டான் மட்டும் காணாமல் போயிருந்தது.

‘இதுவரை கடலுக்கடியில் நாம் எடுத்த பொருள்களி லேயே மிகவும் மதிப்பு வாய்ந்த பொக்கிஷம் இந்தச் சிலுவைதான்’ - டக்கர் தன் நெருங்கிய நண்பர்களிடம் மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் சொன்னார். அதை அவர்கள் ரகசியமாக வைத்திருக்க முடிவு செய்தனர். பீட்டர்ஸன் என்பவரை வரவழைத்து அந்த தங்க-மரக தச் சிலுவையின் மதிப்பு என்ன என்று ஆராயச் செய்தார் டக்கர். கண்கள் ஆச்சரியத்தில் அகல விரிய, பீட்டர்ஸன் சொன்ன அன்றைய மதிப்பு, இரண்டரை லட்சம் அமெ ரிக்க டாலர்கள்.

எப்படியோ இந்த ‘டக்கர் சிலுவை’ குறித்த தகவல்கள் வெளியே கசிந்தன. லைஃப் இதழில் இந்தச் சிலுவை குறித்த கட்டுரை வெளிவரவும், டக்கருக்குத் தொந் தரவுகள் ஆரம்பமாயின. அவரை அரசாங்க அதிகாரி கள் கண்காணித்தனர். அவரது வீட்டை கொள்ளை யன் ஒருவன் உடைத்து சிலுவையைக் கொள்ளைய டிக்க நினைத்தான். நடக்கவில்லை. பெர்முடா அரசின் கடல் எல்லைக்குள் கைப்பற்றிய புதையல் என்பதால், அது அரசாங்கத்துக்கே சொந்தம் என்று பெர்முடா அரசு

டக்கருக்கு நெருக்கடி கொடுத்தது. டக்கர், முடிந்தவரை சமாளித்தார்.

பலகட்ட போராட்டத்துக்குப் பின் டக்கர், 1959-ம் ஆண் டில் அந்த பொக்கிஷ சிலுவையை அரசிடம் ஒரு லட் சம் டாலருக்கு விற்றார். சிலுவையின் உண்மையான மதிப்புக்கு அது மிகக்குறைந்த விலைதான். 'எக்கார ணத்தைக் கொண்டும் பெர்முடா தீவை விட்டு இந் தச் சிலுவை வெளியே போகக்கூடாது' என்று அரசிடம் கேட்டுக் கொண்டார். சில வருடங்களுக்கு டக்கரும் அவரது மனைவியுமே அரசின் மியூஸியத்தை நடத் தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். அங்கே அந்தச் சிலுவை பாதுகாப்பாக வைக்கப்பட்டது. 1975-ம் ஆண் டில் இங்கிலாந்து ராணி எலிசபெத், பெர்முடா மியூஸி யத்துக்கு அந்த 'டக்கர் சிலுவை'யைப் பார்வையிட வந் தார். அப்போது தங்க நிறத்தில், பச்சைக் கற்களுடன் ஒரு சிலுவை இருந்தது. ஆனால், அது போலி. அசலான டக்கர் சிலுவை காணாமல் போனது அப்போதுதான் கண்டுபிடிக்கப்பட்டது.

யாரோ போலியான சிலுவையை வைத்துவிட்டு, உண் மையானதைத் திருடிக் கொண்டு சென்றிருந்தார்கள். அது எப்போது நடந்தது என்று கண்டறிய முடியவில்லை. பெர்முடா போலீஸ், FBI, ஸ்காட்லாந்து யார்ட் எனப் பலரும் அந்தச் சிலுவையைத் தேடினார்கள். திருடிய வர்களைக் கண்டறிய முயற்சி செய்தார்கள். இதுவரை அது யாரென்றே கண்டறியப்படவில்லை. உண்மையான டக்கர் சிலுவை என்ன ஆனதென்ற தகவலும் தெரிய வில்லை. இப்போதும் பெர்முடா மியூஸியத்தில் போலி சிலுவையே ஜொலித்துக் கொண்டிருக்கிறது.

பெர்முடா பகுதியில் மூழ்கிக் கிடந்த சுமார் நூறு கப்பல்களைக் கண்டறிந்தவர் என்ற பெருமை கொண்ட டக்கர், 2014-ம் ஆண்டில் தனது இறந்துபோனார். உலகின் மிகச்சிறந்த ஆழ்கடல் ஆய்வாளர்களில் டக்கருக்கு என்றுமே இடமுண்டு. தான் கண்டறிந்த அந்த அற்புதச் சிலுவையை இழந்த வருத்தம் டக்கருக்கு இறுதி வரை இருந்தது.

உலக வரலாற்றில் கடலுக்கடியில் கண்டெடுக்கப்பட்ட பொக்கிஷங்களிலேயே, மிகவும் விலை மதிப்புள்ள தனிப்பொருள் என்றால் அது டக்கர் சிலுவைதான்.

## 3. பாக்திரியாவின் தங்கப் புதையல்!

‘எங்கே தோண்டலாம்?’ என்று கேட்டார் விக்டர் சரியானிடி. அவர் ரஷ்யாவைச் சேர்ந்த தொல்லியல் ஆய்வாளர். 1978-ம் ஆண்டில் சோவியத் அரசும், ஆப்கானிய அரசும் இணைந்து விக்டர் தலைமையில் தொல்லியல் ஆய்வு ஒன்றை மேற்கொண்டன. அவர்கள் வட ஆப்கனிஸ்தானின் ஜோவ்ஸ்ஜான் பிரதேசத்தில் ஆய்வு மேற்கொள்ளவிருந்தனர்.

‘Tillya Tepe என்றொரு மலை இருக்கிறது. பாக்திரியா ராஜ்ஜியத்தை ஆண்ட ராஜ வம்சத்தினரை இந்தப் பகுதியில்தான் புதைத்திருக்கிறார்கள். இங்கே ஏழு கல்லறைகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஒவ்வொரு கல்லறையும் சுமார் இரண்டாயிரம் வருடம் பழமையானவை.

இன்னொரு விஷயம், Tillya Tepe என்றால் தங்க மலை என்று அர்த்தம்’ என்றார் நடேர் ரசோலி. அவர் ஆப்கனிஸ்தான் அரசு தொல்லியின் துறையின் தலைவராக இருந்தவர். விக்டரும் நடேரும் சேர்ந்து அந்தத் ‘தங்க மலை’யில் இருந்த கல்லறைகளைத் தோண்ட முடிவு செய்தனர்.

அன்றைய பாக்திரியா ராஜ்ஜியம் என்பது இன்றைய ஆப்கனிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் பகுதிகள் அடங்கியது. இந்துகுஷ் மலைகளுக்கு வடக்கிலும், அமு தர்யா நதிக்கு தெற்கிலும் அமைந்தது. மாவீரன் அலெக்ஸாண்டர், அவரது தளபதி செலூகஸ் போன்றோர் ஆட்சி செய்தது. கிரேக்கர்கள், சாகா பழங்குடியினர், குஷானர்கள், ஹன் சீனர்கள் என்று பலரும் பல்வேறு காலகட்டங்களில் அதனை ஆண்டனர். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பாக்திரியா இஸ்லாமிய ஆட்சியாளர்களின் பிடியில் வந்தது.

தொல்லியல் ஆய்வாளர் விக்டர் தலைமையில், நடேரின் வழிகாட்டுதலில் அந்தப் பழைமையான கல்லறைகள் தோண்டப்பட்டன. அவர்கள் எதிர்பார்த்தபடியே அவற்றில் மனிதர்களின் எலும்புக்கூடுகள் இருந்தன. அவர்கள் எதிர்பார்த்ததுக்கும் மேல் ஒவ்வொரு கல்லறையிலும் தங்கம் குவிந்திருந்தது.

அவை யாருடைய எலும்புக்கூடுகள் என்று துல்லியமாகச் சொல்ல இயலவில்லை. ஆனால், அந்த எலும்புக்கூடுகள் கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்று கண்டறியப்பட்டன. அப்போது அந்தப் பகுதியை சிதியப் பழங்குடியினர் அல்லது பார்த்தியப் பழங்குடியினர் ஆண்டிருக்கலாம். அவர்களது உடல்கள் இந்தக் கல்லறைகளில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சிலர் கருத்து தெரிவித்தார்கள். சீனப் பழங்குடியினரான யுவஸி (Yuezhi) வம்சத்தினரது ராஜ்ஜியமாக பாக்திரியா அப்போது இருந்திருக்கலாம். அந்த ராஜ குடும்பத்தினரது இறந்த உடல்கள் இங்கே புதைக்கப்பட்டிருக்கலாம் என்றும் சிலர் சொன்னார்கள். எதுவும் உறுதி செய்யப்படவில்லை.

ஏழில் ஆறு கல்லறைகள் தோண்டப்பட்டன. அதில் ஒன்றில் மட்டும் ஆண் எலும்புக்கூடு கிடைத்தது. மற்ற ஐந்திலும் பெண் எலும்புக்கூடுகள். அவர் அரசர், மற்ற ஐவரும் அவரது மனைவிகளாக (அரசிகள்) இருக்கக் கூடும். ஏனென்றால் அரசர், அரசிகளைத்தான் இவ்வ ளவு தங்கத்துடன் புதைக்கும் வழக்கம் அப்போது இருந் தது. இறந்தபின் வேறு உலகத்துக்கு அவர்கள் செல் வார்கள். அப்போது இந்த செல்வங்கள் அவர்களுக்கு உதவும் என்ற நம்பிக்கையுடன், இறந்த உடல்களை இப்படிப் புதைத்தார்கள்.



தங்க வளையல்கள், காதணிகள், கழுத்து அட்டி கைகள், கைக்காப்புகள், மோதிரங்கள், உடலில் பல பாகங்களில் அணியும்படியாக விதவிதமான நகைகள், இரண்டு தங்கக் கிரீடங்கள், தங்கச் சிலைகள், ஆயு தங்கள், நாணங்கள், தங்கம் - வெள்ளி - யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட கலைப்பொருள்கள் - இவை அனைத்தும் சேர்த்து சுமார் 22,000 பொருள்கள் அந் தக் கல்லறைகளில் இருந்து சேகரிக்கப்பட்டன. இவற் றின் மதிப்பை அளவிடவே முடியாது. நகைகள் நுணுக் கமான வேலைப்பாடுகளுடனும், மதிப்புமிக்க கற்கள் பதிக்கப்பட்டும் உருவாக்கப்பட்டிருந்தன. சிதியர்களே இப்படிப்பட்ட வேலைப்பாடுகள் கொண்ட நகைகளைச் செய்வதில் வல்லவர்கள் என்பது ஆய்வாளர்களது கருத்து.

விக்டரும் நடேரும் அந்தச் செல்வங்களை எல்லாம் கவனமாகச் சேகரித்து பாதுகாப்புடன் காபுல் தேசிய அருங்காட்சியகத்துக்குக் கொண்டு சென்று ஒப்படைத்த னர். 1979-ம் ஆண்டில் சோவியத், ஆப்கனிஸ்தான் மீது படையெடுத்தது. அந்தப் போரினால் உள்நாட்டில் அர சியல் குழப்பங்கள். அப்போது காபுல் அருங்காட்சி ஊழி யர்கள், பாக்திரிய செல்வங்களை அதிபர் மாளிகைக்கு அருகில் இன்னொரு அருங்காட்சியகத்தில் பத்திரப்ப டுத்தினர். பின் அருங்காட்சியின் தலைமை அதிகாரி உமர் கான், அந்தச் செல்வங்களை சென்ட்ரல் ஆப் கன் வங்கியின் பாதுகாப்புக் கிடங்கில் ஒரு ரகசிய அறையில் பத்திரப்படுத்தினார். அமருதீன் அஸ்கர்ஸாய் என்பவரிடம் அதற்கான சாவிகள் வழங்கப்பட்டிருந்தன. அவர் நம்பிக்கைக்குரிய ஐந்து நபர்களிடம் சாவிகளைப் பிரித்து வழங்கியிருந்தார். அவர்களைப் பற்றிய விவரம் ரகசியமாக வைக்கப்பட்டது.

1990. தாலிபன்களின் பிடியில் ஆப்கனிஸ்தான் சிக் கியது. அங்கிருந்த கலாசாரத்தை அழிக்கும்வித மாக தாலிபன்கள் அருங்காட்சியகத்திலிருந்த 70 சதவி கித பழம்பொருள்களை அபகரித்து அவற்றை வேறு வேறு இடங்களுக்கு அனுப்பி வைத்தனர். கிடங்குக் குப் பொறுப்பாக இருந்த அமருதீன், தன் சாதுரியத்தால் பாக்திரிய செல்வங்களைக் கஷ்டப்பட்டுக் காப்பாற்றி வந்தார்.

ஒருமுறை கிடங்கின் அந்த ரகசிய அறையைக் கண்ட தாலிபன்கள், அதில் என்ன இருக்கிறது என்று கேட்க, ‘பழைய சீன ஜாடிகள்’ என்று பொய் சொல்லி சமாளித் தார். 2003-ம் ஆண்டில் தாலிபன்களின் ஆட்சி அங்கே முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

அப்போதுதான் விக்டர் தோண்டாமல் விட்டிருந்த ஏழா வது கல்லறை தோண்டப்பட்டு, கொள்ளையடிக்கப்பட் டதும் தெரிய வந்தது. பாதுகாப்புக் கிடங்கையும் திறக்க முடியவில்லை. ஏனென்றால் சாவிகள் வைத்திருந்த ஐந்து பேர் யாரென்று கண்டுபிடிக்க இயலவில்லை. பிறகு, கடும் முயற்சிக்குப் பிறகு ஐந்து பேரும் கண்டுபி டிக்கப்பட்டனர். சாவிகள் கிடைத்தன.

திறந்திடு சீஸேம்!

ரகசிய அறை திறக்கப்பட்டது. பாக்திரிய தங்கப் பொக்கி ஷங்கள் சேதாரமின்றி மீட்கப்பட்டன.

2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட அந்தப் பொக்கிஷங்கள், இப்போது காபுல் அருங்காட்சியகத்தில் பத்திரமாக இருக் கின்றன.

## 4. தென்னாப்பிரிக்காவின் முதல் வைரம்!

ஐந்து கல் விளையாட்டு தென் ஆப்பிரிக்காவிலும் உண்டு. பல நூற்றாண்டுகள் பழைமையான விளை யாட்டு அது. அந்த விளையாட்டுக்காகக் கூழாங்கற் களைச் சேகரிப்பது எராமஸ் ஜேக்கப்ஸ் என்ற பதி னைந்து வயது சிறுவனின் வழக்கம். அன்றைக்கும் எரா மஸ் தன் தங்கையுடன் ஆரஞ்சு நதிக்கரையோரமாகத் திரிந்து கொண்டிருந்தான். கூழாங்கற்களைச் சேகரித் தான். அப்போது பளபளப்பான உருண்டையான கல் ஒன்று எராமஸுக்குக் கிடைத்தது. எடுத்து வைத்துக் கொண்டான். தென்னாப்பிரிக்காவின் என்ற தேசத்தின் தலைவிதியையே மாற்றிய கல் அதுதான். 1867-ம் ஆண் டில் இது நிகழ்ந்தது.

எராமஸின் தந்தை டேனியல், டச்சுக்காரர். அவர்கள் தென்னாப்பிரிக்காவின் கேப் மகாணத்தில் கேப் கால னியில் வசித்து வந்தார்கள். தொழில் விவசாயம். எரா மஸ், தந்தைக்குப் பண்ணையில் உதவி செய்வான். பொழுதைப்போக்க ஐந்து கல் விளையாடுவான். ஒரு நாள் அவனும் தங்கையும் வீட்டின் அருகில் விளை யாடிக் கொண்டிருந்தபோது, பக்கத்து வீட்டில் வசித்த ஸ்கால்க் வான் நைகெர்க் என்பவர், எராமஸ் கையில்

இருந்த பளபளப்பான கல்லைக் கவனித்தார். வாங்கிப் பார்த்தார். 'நிச்சயம் இது சாதாரண கல் அல்ல!' அவரது கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன.

'இந்தக் கல்லை எனக்குத் தருகிறீர்களா? எவ்வளவு பணம் வேண்டும்?' என்று எராமஸின் தாயிடம் ஸ்கால்க் கேட்டார். 'பணமெல்லாம் எதற்கு? நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்' என்று எராமஸின் தாய் அதன் மதிப் பெல்லாம் தெரியாமல் தூக்கிக் கொடுத்துவிட்டார். ஸ்கால்க் அந்தக் கல்லுடன் ஜான் ஓ'ரெய்லி என்ற வியாபாரியைச் சந்தித்தார். கல்லைக் கொடுத்தார். அவர், கிரஹாம்ஸ்டன் நகரத்தில் வசிக்கும் வில்லி யம் அதெர்ஸ்டோன் என்ற ஆய்வாளருக்கு அதனைச் சாதாரண தபாலில் அனுப்பி வைத்தார். அதெர்ஸ் டோன், இது போன்ற கற்களை ஆய்வு செய்வதில் வல் லவர். அவர் இந்தக் கல்லை ஆராய்ந்தார். 'இது பழுப்பும் மஞ்சளும் கலந்த வைரக்கல். இதன் எடை 21.15 கேரட்' என்று கண்டறிந்தார். வேறு சில ஆய்வாளர்களும் அது வைரம்தான் என்று உறுதி செய்தனர்.

தென்னாப்பிரிக்காவின் கண்டுபிடிக்கப்பட்ட முதல் வைரம் அதுதான். ஆகவே அதற்கு 'யுரேகா' என்ற பெயர் வைக்கப்பட்டது. யுரேகா என்றால் கிரேக்க மொழியில் 'புதிய கண்டுபிடிப்பு!' என்று பொருள்.

அதெர்ஸ்டோன், வைரம் குறித்த தகவலை ஜான் ஓ'ரெய்லிக்கு அனுப்பி வைத்தார். அவர் ஸ்கால்க்கிடம் தகவலைப் பகிர்ந்தார். அன்றைய மதிப்பில் £500-க்கு யுரேகா வைரம் விற்கப்பட்டது. அதை பிலிப் வொட்ஹ வுஸ் என்பவர் வாங்கினார். அவர் அப்போது அந்த பிரிட் டிஷ் காலனியின் கவர்னராக இருந்தவர். 1867-ம் ஆண் டில் பாரிஸில் நடந்த கண்காட்சி ஒன்றில் யுரேகா வைரம்

காட்சிக்கு வைக்கப்பட்டது. இல்லை, யுரேகா வைரத்தின் மாதிரிதான் வைக்கப்பட்டது என்று சிலர் சொல்கிறார்கள். உண்மையான வைரம், குயின் விக்டோரியா பரிசோதிப்பதற்காக பிரிட்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றும் சொல்கிறார்கள்.



யுரேகா வைரம் கண்டெடுக்கப்பட்ட பின் அந்தத் தகவல் தென்னாப்பிரிக்கா எங்கும் வேகமாகப் பரவியது. அந்த மண்ணில் வைர வளம் இருப்பதை அறிந்து பலரும் வைர வேட்டையில் ஈடுபட ஆரம்பித்தார்கள். ஸ்கால்க் மேலும் வைரங்களைத் தேடி அலைந்தார். ஸான்ஃபோண்டைன் என்ற ஊரில் ஒரு மந்திரவாதியிடம் வைரம் ஒன்று இருப்பதை அறிந்து தேடிப்போய் பேச்சு வார்த்தை நடத்தினார். ஸ்கால்கிடம் இருந்த மொத்த சொத்து என்பது 500 ஆடுகள், 10 எருதுகள், ஒரு குதிரை. அனைத்தையும் அந்த மந்திரவாதியிடம் கொடுத்தார். அந்த வைரத்தை வாங்கி வந்தார். 'தென்னாப்பிரிக்காவின் நட்சத்திரம்' என்று பெயரிடப்பட்ட அந்த வைரத்தை நல்ல தொகைக்கு விற்று (£11,200) லாபம் பார்த்தார்.

டைடெரிக் அர்னால்டஸ் டி பியர், ஜோஹன்னஸ் நிகோலஸ் டி பியர் (சுருக்கமாக, டி பியர்ஸ் சகோதரர்கள்) என்று இருவரும் டச்சு நாட்டைச் சேர்ந்தவர்கள். தென்னாப்பிரிக்காவில் ஆரஞ்சு ஆற்றுப்பகுதியில் அமைந்த போஸ்ஹோஃப் என்ற மாகாணத்தில் Vooruitzicht என்ற பெயரில் விவசாயப் பண்ணை ஒன்றை நிர்வ

கித்து வந்தனர். Vooruitzicht என்றால் டச்சு மொழியில் ‘வாய்ப்பு’ என்று பொருள். உலகெங்கும் வளங்களைச் சுரண்டுவதில் நம்பர் ஒன் கேடிகளாக இருந்தவர்கள் பிரிட்டிஷார்தானே. அவர்கள், டி பியர்ஸின் பண்ணை யில் வைர வளத்துக்கான வாய்ப்பு பிரகாசமாக இருப் பதைக் கண்டறிந்தனர். எனவே டி பியர்ஸ் சகோதரர் களை நச்சரித்தனர்.

ஒரு கட்டத்துக்கு மேல் அழுத்தம் தாங்க முடியாமல் பண்ணையை விற்க டி பியர்ஸ் சகோதரர்கள் ஒப்புக் கொண்டனர் அல்லது ஒப்புக்கொள்ள வைக்கப்பட்ட னர். £6,600 மதிப்புக்கு 1871-ம் ஆண்டில் அல்ஃப் ரெட் ஜான்சன் எப்டென் என்ற பிரிட்டிஷ் வியாபாரி அந்தப் பண்ணையை வாங்கினார். ஆம், உலகின் புகழ்வாய்ந்த வைரச்சுரங்கம், அவ்வளவு குறைவான விலைக்குத்தான் வாங்கப்பட்டது. பின் அந்த வைரச்சு ரங்கத்தின் உரிமையாளராக மாறியவர் செஸில் ரோட்ஸ். அவர் ஆரம்பத்தில் சுரங்கத்துக்கு தண்ணீர் விநியோ கம் செய்து வந்தவர் என்பதெல்லாம் தனிக்கதை. சுரங் கத்துக்கான பெயர் ‘டி பியர்ஸ்’ என்றுதான் நிலைத்தது. இன்றைக்கு உலக வைர வணிகத்தில் பெரும்பங்கு டி பியர்ஸ் மூலமாகத்தான் நடைபெறுகிறது.

யுரேகாவின் கதைக்கு வருவோம். விக்டோரியா ராணி யிடம் காண்பிக்கப்பட்ட பிறகு யுரேகா வைரம் அழகான வடிவில் வெட்டப்பட்டது. பின் அதன் எடை 10.73 கேரட் ஆனது. பின் பலரது கைகளுக்கும் யுரேகா கைமாறியது. 1947-ம் ஆண்டில் ஓர் ஏலத்தில் யுரேகா வைரம் விற்கப் பட்டது. அப்போது ஒரு பிரேஸ்லெட்டுடன் அது பொருத் தப்பட்டிருந்தது.

தென் ஆப்பிரிக்காவில் முதல் வைரம் கண்டெடுக்கப்பட்ட பிறகுதான், அந்தத் தேசத்தின் தலையெழுத்து, பொருளாதாரம், மக்களின் வாழ்க்கை எல்லாமே மாறின. இனி யுரேகா வைரம் தென்னாப்பிரிக்காவில்தான் இருக்க வேண்டும். அந்த மக்களுக்கும், வைரங்கள் அள்ளி அள்ளித் தரும் அந்த மண்ணுக்கும் செய்யும் மரியாதை இதுதான் என்று டி பியர்ஸ் நிறுவனம் முடிவு செய்தது. எனவே 1967-ம் ஆண்டில், யுரேகா கண்டெடுக்கப்பட்ட நூறாவது ஆண்டில் டி பியர்ஸ் நிறுவனம் அதனை வாங்கியது. கிம்பெர்லி நகர அருங்காட்சியத்தில் யுரேகா வைரம் காட்சிக்கு வைக்கப்பட்டது.

இன்றைக்கும் அங்குதான் ஜொலித்துக் கொண்டிருக்கிறது. இனி அது ஒருபோதும் விற்கப்படாது.

## 5. லிமாவின் பொக்கிஷங்கள்!

2016 ஏப்ரலில் கோஸ்டா ரிகா நாட்டின் கோகோஸ் தீவைப் புயல் ஒன்று தாக்கியது. கடலோரப் பகுதியில் ஆமைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் காலம் அது. எனவே, ஆமைகள் பாதுகாப்பாக இருக்கின்ற னவா என்று சோதனை செய்ய வனத்துறை அலுவலர் கள் சிலர் கடலோரமாக ரோந்து சென்றார்கள். அப் போது அவர்கள் கண்ணில் மண்ணில் பாதி புதைந்து கிடந்த சில மரப்பெட்டிகள் தென்பட்டன. சிரமப்பட்டு அதைத் திறந்து பார்த்தவர்கள் ஆச்சரியத்தில் திகைத் துப் போய் நின்றனர்.

*

பதினாறாம் நூற்றாண்டு முதலே பெரு தேசம், ஸ்பெ யினின் காலனியாதிக்கத்தில் சிக்கியிருந்தது. பதினெட் டாம் நூற்றாண்டின் இறுதியில் ஸ்பெயினுக்கு எதிராக கிளர்ச்சிகள் எழுந்தன. கி.பி. 1820-ம் ஆண்டில் பெரு நாட்டின் தலைநகரான லிமாவை, புரட்சிப் படையினர் ஸ்பெயினிடமிருந்து மீட்டனர்.

அத்தனைக் காலம் பெருவில் சுரண்டிச் சேர்த்த செல் வங்களை எல்லாம் எங்கே பதுங்கி வைப்பது என்று

ஸ்பானியர்கள் பதட்டத்துடன் யோசித்தனர். பெருவில் நியமிக்கப்பட்டிருந்த ஸ்பெயின் வைஸ்ராய் பெஸுவே லாவும், லிமாவின் தேவாலயத்தைச் சேர்ந்த தலைமை மதகுருவும் ரகசியக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்த னர். லிமாவில் வாழ்ந்து கொண்டிருந்த ஸ்பெயினைச் சேர்ந்த செல்வந்தர்கள் எல்லாம் தமது செல்வங்களைச் சுமந்துகொண்டு தேவாலயத்தை அடைந்தனர். அந்தச் செல்வங்களுடன், தேவாலயத்துக்குச் சொந்தமான சில பொக்கிஷங்களும் சேர்க்கப்பட்டன. அவற்றை எல்லாம் கடல் வழியே மெக்ஸிகோவுக்குக் கொண்டு சென்று பத் திரப்படுத்த முடிவு செய்தார்கள்.

அப்போது துறைமுகத்தில் ஸ்பானியக் கப்பல்கள் எது வும் இல்லை. மேரி டியர் என்ற கப்பல் மட்டும் புறப்ப டத் தயாராக இருந்தது. அதன் கேப்டன் பிரிட்டனைச் சேர்ந்த வில்லியம் தாம்ப்ஸன். மதகுரு, கேப்டன் தாம்ப் ஸனிடம் உதவி கேட்டார். விவரங்களைச் சொன்னார். தாம்ப்ஸன் ஒப்புக்கொண்டார். செல்வங்கள் கப்பலே றின. உடன் ஆறு ஸ்பெயின் வீரர்களும், இரண்டு மத குருமார்களும் கப்பலேறினர். மேரி டியர் தனது 'மதிப்பு மிக்க' பயணத்தைத் தொடங்கியது.

கப்பல் ஆழ்கடலுக்கு வந்திருந்தது. கேப்டன் தாம்ப் ஸனின் மனத்தில் உறங்கிக் கொண்டிருந்த வில்லன் விழித்துக் கொண்டான். அடேங்கப்பா, இவ்வளவு செல் வங்களா! காலம் முழுக்க திரைகடலோடி உழைத்தா லும் இவ்வளவு எல்லாம் சம்பாதிக்கவே முடியாதே. தங்க நகைகள், நாணயங்கள், வைரக்கற்கள் பதிக்கப் பட்ட சிலுவைகள், மதிப்புமிகுந்த பூஜைப் பொருள்கள், தங்கத்தாலான மெழுகுவர்த்தித் தாங்கிகள், அன்னை மேரியின் கையில் குழந்தை இயேசு இருப்பதுபோல

இரண்டு சிலைகள், மேலும் பல அழகான சிலைகள், இன்னும் இன்னும்! ஜீஸஸ்!

தாம்ப்ஸன் தன் குறுவாளை எடுத்தார். அவரது சமிக்ஞையைப் புரிந்துகொண்டு கப்பலின் பணியாளர்களும் சேர்ந்து கொண்டனர். அடுத்த சில நிமிடங்களில் கப்பல் எங்கும் ரத்த வாடை. ஸ்பெயின் வீரர்களும் மதகுருமார்களும் கொல்லப்பட்டு, தூக்கிக் கடலில் வீசப்பட்டனர்.

சில நாள்கள் கழித்து மேரி டியர், கோகோஸ் தீவுகளை அடைந்தது. வட, தென் அமெரிக்கக் கண்டங்களை இணைக்கும் வால்பகுதியான கோஸ்டா ரிகாவிலிருந்து சுமார் 340 மைல்கள் தொலைவில் பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள ஆளில்லாத தீவு அது. தற்சமயத்துக்கு லிமாவின் பொக்கிஷங்களை அங்கே புதைத்து வைத்து விடலாம். பின் சந்தர்ப்பம் வாய்க்கும்போது வந்து தோண்டி எடுத்துக் கொள்ளலாம் என்பது தாம்ப்ஸனின் திட்டம். பொக்கிஷங்கள் அந்தத் தீவில் இறக்கப்பட்டன. அவற்றைக் கண்ணாரக் கண்டு அகமகிழ்ந்த தாம்ப்ஸன், ஆழத்தோண்டி பத்திரமாகப் புதைத்து வைத்தார். அந்த பொக்கிஷங்களின் இன்றைய உத்தேச மதிப்பு $208 மில்லியன் வரை இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

கோகோஸ் தீவிலிருந்து மேரி டியர் கிளம்பியது. தாம்ப்ஸன் மீண்டும் கோகோஸ் தீவுகளுக்கு வந்தாரா? புதையலை மீட்டாரா? அல்லது ஸ்பெயின்காரர்களிடமே அந்தப் புதையல் மீண்டும் சிக்கிக் கொண்டதா? இதைச் சுற்றி சில கதைகளும், சில சம்பவங்களும் சொல்லப்படுகின்றன.

மேரி டியர் தன் பயணப்பாதையின் நடுவே ஸ்பானியர்களிடம் சிக்கிக் கொண்டது. அவர்கள் மிரட்ட தாம்ப்

ஸனும், அவரது கப்பலின் துணை கேப்டனும் புதை யலைப் பதுக்கி வைத்திருக்கும் இடத்தைக் காட்டிக் கொடுக்க ஒப்புக் கொண்டனர். மீண்டும் கோகோஸ் தீவுக்கு வந்தனர். இங்கேதான் புதைத்தோம். தோண் டிப் பாருங்கள். அங்கே என்று நினைக்கிறேன். எதற்கும் அங்கேயும் தோண்டிப் பார்க்கலாம். இருளில் புதைத்த தால் சரியாக நினைவில்லை. எதற்கும் இன்னும் தேடிப் பார்க்கலாம். இப்படியாக தாம்ப்ஸனும் துணை கேப்ட னும் ஸ்பெயின் வீரர்களை அலைக்கழித்தனர். ஒரு கட் டத்தில் அவர்களை ஏமாற்றிவிட்டு அடர்ந்த காட்டுக் குள் புகுந்து ஓடித் தப்பித்தனர். அதற்குப் பின் ஸ்பானி யர்களால் தாம்ப்ஸனையும் லிமா பொக்கிஷங்களையும் கண்டுபிடிக்கவே முடியவில்லை. தாம்ப்ஸன் புதைய லோடு அங்கிருந்து தப்பித்தாரா என்பது குறித்த எந்தத் தகவலும் கிடையாது. இது ஒரு வெர்ஸன்.

கேப்டன் போக், கேப்டன் கீட்டிங் என்ற இருவர் லிமா வின் பொக்கிஷங்களை மீட்டுப் பெரிய படகு ஒன்றில் திரும்பும்போது, அது நடுக்கடலில் கவிழ்ந்தது. பொக்கி ஷங்கள் கடலில் மூழ்கின என்றொரு சம்பவமும் சொல் லப்படுவதுண்டு. 1889-ம் ஆண்டில் ஆகஸ்ட் கிஸ்லெர் என்ற ஜெர்மானியர் கோகோஸ் தீவுக்குப் புதையலைத் தேடி வந்தார். அங்கேயே 20 ஆண்டுகள் தங்கி நிதா னமாக, அர்ப்பணிப்புடன் பொக்கிஷங்களைத் தேடி னார். ஆனாலும் கிஸ்லெருக்குக் கிடைத்ததென்னவோ ஆறே ஆறு தங்கக்காசுகள் மட்டுமே. 1908-ம் ஆண்டில் கிஸ்லெர் மனம் வெறுத்துக் கிளம்பினார். சீச்சீ... இந்தப் புதையல் புளிக்கும்!

இதுவரை முந்நூறுக்கும் மேற்பட்டோர், கோகோஸ் தீவில் புதையல் வேட்டை நடத்தி தோல்வியை ருசித் துள்ளனர். 1978-ம் ஆண்டில் கோகோஸ் தீவில் புதை

யல் வேட்டை நடத்த கோஸ்டா ரிகா அரசு தடை விதித்தது.

*

'நிறைய தங்கக்காசுகள், வெள்ளிக்காசுகள், அன்னை மேரி குழந்தை இயேசுவுடன் இருப்பதுபோல இரண்டு சிலைகள், தங்க மெழுவர்த்தித் தாங்கிகள், இன்னும் பல பொக்கிஷங்கள் இந்தப் பெட்டிகளில் இருக்கின்றன' - அந்த வனத்துறை அலுவலர்கள் இருவரும் தங்கள் உயரதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்தனர். அரசு அவற்றைக் கைப்பற்றியது. அவை கோஸ்டா ரிகாவின் சான் ஜோஸ் நகர அருங்காட்சியகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டன.

2016-ல் வனத்துறையினரால் கண்டெடுக்கப்பட்டவை தான் லிமாவின் பொக்கிஷங்களா என்பது இன்னும் உறுதி செய்யப்பட்டவில்லை. கண்டெடுக்கப்படாத லிமாவின் பொக்கிஷங்கள் இன்னும் கோகோஸ் தீவுகளில் இருக்கின்றனவா என்ற கேள்விக்கும் பதில் தெரியவில்லை.

## 6. ஃபேபெரெஜ் முட்டைகள்!

சிலுவையில் அறையப்பட்ட இயேசு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். அதைக் கண்ட உடனே மரியாள், ரோமின் அரசனிடம் சென்றாள். ‘இயேசு உயிர்த்தெழுந்தார்’ என்ற செய்தியைச் சந்தோஷத்துடன் கூறினாள். அரசன் அதை நம்பவில்லை. தன் மேசையின் மேலிருந்த முட்டையைச் சுட்டிக்காட்டி, ‘இந்த முட்டை சிவப்பாக மாறாத வரை, இயேசு உயிர்த்தெழுந்திருக்கவில்லை’ என்று கூறினான். அவன் சொல்லி முடித்த மறு கணமே அந்த முட்டை ரத்தச் சிவப்பாக மாறியது என்று சொல்லப்படுவதுண்டு.

இதனால் கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் மறுபிறப்பின் அடையாளமாக முட்டையைக் கருதுகிறார்கள். ஆகவே ஈஸ்டர் பண்டிகையின்போது ஒருவருக்கொருவர் சிவப்புச் சாயம் பூசப்பட்ட அல்லது அலங்கரிக்கப்பட்ட முட்டைகளைப் பரிசளிக்கும் வழக்கம் உருவானது.

1885-ம் ஆண்டில் ரஷ்ய ஜார் மன்னரான மூன்றாம் அலெக்ஸாண்டர், தன் மனைவியும் பேரரசியும் மரியாவுக்கு ஈஸ்டர் முட்டை ஒன்றைப் பரிசளித்தார். முழுவதும் தங்கத்தினாலான முட்டை அது. கோழியின் முட்டை போன்று தெரிவதற்காக அதன் வெளிப்புறத்

தில் வெள்ளை நிறத்தில் எனாமல் பூசப்பட்டிருந்தது. முட்டையை இரண்டாகத் திறந்தால் அதனுள் தங்கத் தினாலான மஞ்சள் கரு உருண்டையாக இருந்தது. அதையும் திறந்து பார்த்தால், தங்கத்தினாலான கோழி யின் உருவம் வைக்கப்பட்டிருந்தது. கோழியின் கண் களாக மாணிக்கக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. அந் தக் கோழிக்குள்ளும் ஆச்சரியம் காத்திருந்தது. அதைத் திறந்தால் உள்ளே தங்கத்தில் வைரம் பதிக்கப்பட்ட ராஜ கிரீடத்தின் சிறிய மாதிரி வடிவம் ஒன்று இருந்தது. சங்கிலியில் கோர்த்துக் கொள்ளும்விதமாக மாணிக் கத்தினாலான பதக்கம் ஒன்றும் இருந்தது.

மரியா, அந்த ஈஸ்டர் முட்டையைக் கண்டு வியந் தார். மகிழ்ந்தார். அலெக்ஸாண்டருக்கும் மனைவி யைக் குஷிப்படுத்தியதில் பெரும் மகிழ்ச்சி. அந்த ஈஸ்டர் முட்டையை அருமையாக உருவாக்கியவர் ரஷ்யாவைச் சேர்ந்த நகை வடிவமைப்பாளரான பீட்டர் கார்ல் ஃபேபெரெஜ். பேரரசர், ஃபேபெரெஜுக்கு ராஜ குடும்பத்தின் ஆஸ்தான நகை வடிவமைப்பாளர் என்ற பதவியைக் கொடுத்து கௌரவித்தார்.

ஒவ்வொரு ஈஸ்டருக்கும் பேரரசரை மகிழ்விக்கும்வித மாக பேரழகு முட்டையை வடிவமைக்கத் தொடங்கி னார் ஃபேபெரெஜ். அதற்காகவே தனி குழு ஒன்றை வைத்துக் கொண்டார். முட்டை வடிவமைப்பில் பேரர சரின் தலையீடு எதுவும் இருக்கவில்லை. செலவு பற் றியும் கவலைப்பட வேண்டாம் என்று அலெக்ஸாண்டர் சொல்லிவிட்டார். கட்டுப்பாடுகளற்ற சுதந்தரம்தானே கலைஞனுக்குத் தேவை! ஒவ்வொரு முறையும் தனித் துவமான அழகுடன், வடிவமைப்புடன், ஆச்சரியங்களு டன் ஈஸ்டர் முட்டைகளை உருவாக்கி அசத்தினார் ஃபேபெரெஜ். அலங்கரிக்கப்பட்ட ஒவ்வொரு முட்டைக்

குள்ளும் ஆச்சரியப்படுத்தும் பரிசுகளும் உருவாக்கப் பட்டன. முட்டையைத் திறந்தால் வைரம், அரண்மனை யின் மினியேச்சர், மன்னரின் புகைப்படம், அலங்கரிகப் பட்ட பறவைகள், விலங்குகள் என்று அசத்தினார் ஃபேப பெரெஜ்.



1894-ம் ஆண்டில் பேரரசர் அலெக்ஸாண்டர் இறந்து போனார். அடுத்து பேரரசராகப் பொறுப்பேற்ற அவரது மகன் இரண்டாம் நிகோலஸும், தொடர்ந்து ஈஸ்டர் முட் டைகளை வடிவமைக்கும்படி ஃபேபெரெஜைக் கேட் டுக் கொண்டார். ஒரு சில வருடங்களில் இரண்டு அல் லது மூன்று ஈஸ்டர் முட்டைகள்கூட வடிவமைக்கப்பட் டன. ராஜ குடும்பத்தினர் அல்லாமல் வெளியே சில செல்வந்தர்களும், வேறு அரசர்களும் ஃபேபெரெஜிடம் ஈஸ்டர் முட்டைகளை வடிவமைக்கச் சொல்லி வாங்கிக் கொண்டனர்.

1917 வரை ஃபேபெரெஜ், அரச குடும்பத்தினருக்காக மட்டும் 50 ஈஸ்டர் முட்டைகளை வடிவமைத்திருந்தார். அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பெயர் வைக்கப் பட்டிருந்தது. 1917 - ரஷ்யப் புரட்சி நிகழ்ந்தது. ஜார் ஆட்சி ஒழிக்கப்பட்டது. பேரரசர் இரண்டாம் நிகோல ஸும் அவரது குடும்பத்தினரும் சிறைபிடிக்கப்பட்டனர். பின்பு கொல்லப்பட்டனர். சோவியத் ஒன்றியம் மலர்ந்

தது. ஃபேபெரெஜ், தனது குடும்பத்துடன் ரஷ்யாவிலி ருந்து தப்பி ஓடினார். மனத்தளவில் மிகவும் பாதிக்கப் பட்டிருந்த அவர், 1920-ம் ஆண்டில் சுவிட்சர்லாந்தில் இறந்துபோனார். சரி. அவர் படைத்த பேரழகு ஈஸ்டர் முட்டைகள் என்னவாயின?

1917. முதல் உலகப்போர் நடந்து கொண்டிருந்த சம யத்தில் ஜெர்மானியப் படைகள் ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பக் நகரத்துக்குள் புகுந்துவிடும் அபாயம் இருந் தது. ஆகவே, சோவியத் ஒன்றியத்தின் முதல் அதிப ரான லெனின், ஃபேபெரெஜ் உருவாக்கிய ஈஸ்டர் முட் டைகள் உள்ளிட்ட ராஜ குடும்பத்தின் செல்வங்களை கிரெம்ளின் நகரக் கோட்டையில் பத்திரமாகப் பதுக்கி வைக்கச் சொன்னார். ஆனால், அப்போதே சில முட் டைகள் காணாமல் போனதாகத் தகவல் உண்டு.

லெனினுக்குப் பிறகு பதவிக்கு வந்த ஸ்டாலின் ஆட்சிக் காலத்தில், ஃபேபெரெஜ் ஈஸ்டர் முட்டைகள் உள்ளிட்ட செல்வங்கள் பலவும் விற்கப்பட்டன. தேச வளர்ச்சித் திட்டங்களுக்காகவும், பிற செலவினங்களுக்காகவும் அந்தத் தொகை பயன்படுத்தப்பட்டது. இதனால் முட் டைகள் பலவும், ரஷ்யாவைத் தாண்டி பிற தேசங்களுக் கும் சென்றன. பலரது கைகளுக்கு மாறின.

பிறகு, ஜார் குடும்பத்தினருக்காக ஃபேபெரெஜ் உரு வாக்கிக் கொடுத்த முட்டைகள் எங்கே, யார் கைக ளின் இருக்கின்றன என்ற விவரங்கள் சேகரிப்பட்டன. 50 ஈஸ்டர் முட்டைகளின் 43 முட்டைகள் எங்கிருக் கின்றன என்ற விவரம் தெரிய வந்தது. 10 முட்டைகள் கிரெம்ளின் அரண்மனையில் இன்றும் உள்ளன. விக்டர் வெக்ஸெல்பெர்க் என்ற ரஷ்யப் பணக்காரரிடம் 9 முட் டைகள் இருக்கின்றன. அமெரிக்காவின் வெர்ஜினியா

அருங்காட்சியகத்தில் 5, லண்டன் அரண்மனையில் 3, நியு யார்க் அருங்காட்சியகத்தில் 3, அமெரிக்காவின் பல் வேறு இடங்களில் இன்னும் சில முட்டைகள், ஜெர்மனி, கத்தார் என்று வெவ்வெறு தேசங்களில் மற்ற முட்டை கள் இருக்கின்றன.

மூன்றாம் அலெக்ஸாண்டருக்கு ஃபேபெரெஜ் முதன் முதலில் செய்து கொடுத்த தங்கக்கோழி முட்டை உள் ளிட்ட ஏழு முட்டைகள் மட்டும் எங்கே என்று கண்டுபி டிக்க முடியவில்லை. உலகமெங்கும் பலரும் அந்த விவ ரங்களை இப்போதும் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

சரி, இத்தனை அற்புதமான ஈஸ்டர் முட்டைகளை உரு வாக்கிய ஃபேபெரெஜின் குடும்பத்தினரிடம் ஒரு முட் டையாவது இருக்கிறதா?

தென்மேற்கு ஜெர்மனியின் பேடன்-பேடன் என்ற நக ரத்தில் ஃபேபெரெஜின் பெயரில் ஒரு அருங்காட்சி யகம் அமைக்கப்பட்டிருக்கிறது. ரஷ்யாவைச் சேர்ந்த கலைப்பொருள்கள் சேகரிப்பாளரான அலெக்ஸாண் டர் இவானோவ் என்பவர் ஃபேபெரெஜின் பெயரில் இந்த அருங்காட்சியகத்தை 2009-ம் ஆண்டில் தொடங் கினார். இங்கே ஃபேபெரெஜ் வடிவமைத்த சுமார் 1500 கலைப்பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின் றன. அதில் அவர் ரஷ்ய ராஜ குடும்பத்திற்காக 1917-ம் ஆண்டில் வடிவமைத்த Karelian Birch என்ற ஈஸ்டர் முட்டை காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முட்டைக்குள்ளும் ஒவ்வோர் ஆச்சரியமான பொருள் இருக்குமல்லவா. இந்த முட்டைக்குள் ரோஸ் கட் வைரங்கள் பதிக்கப்பட்ட குட்டி யானை ஒன்று வடி வமைக்கப்பட்டிருக்கிறது. இந்த Karclian Birch முட் டையை ஃபேபெரெஜ், ராஜ குடும்பத்தினரிடம் ஒப்ப

டைக்கும் முன்பாகவே ரஷ்யப் புரட்சி நிகழ்ந்துவிட்டது. பின்பு திருடுபோன இந்த முட்டை, ஒரு வழியாக ஃபேபெரெஜின் பெயர் சொல்லும்விதமாக, அலெக்ஸாண்டர் இவானோவ் புண்ணியத்தில் இந்த அருங்காட்சியத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறது.

அதே 1917-ம் ஆண்டில் Constellation என்ற நீல நிற முட்டையையும் ஃபேபெரெஜ் வடிவமைத்தார். அந்த முட்டை முழுவதுமாக செய்து முடிக்கப்பட்டவில்லை. ஃபேபெரெஜ் செய்து முடிக்காத ஒரே முட்டையான Constellation, ஃபேபெரெஜ் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. ரஷ்யாவின் மாஸ்கோவில் அமைந்துள்ள ஃபெர்ஸ்மென் மினரலாஜிக்கல் அருங்காட்சியமும் தங்களிடம்தான் Constellation ஈஸ்டர் முட்டை இருப்பதாகச் சொல்கிறது. இரண்டில் எது ஃபேபெரெஜ் உருவாக்கிய அசல் Constellation முட்டை என்ற சர்ச்சை தொடர்கிறது.

## 7. மயிலாசனத்தின் கதை

1150 கிலோ தங்கம் ஒதுக்கப்பட்டது. மரகதம், மாணிக்கம், நீலமணிக்கற்கள், வைரம் உள்ளிட்ட விலையுயர்ந்த கற்கள் 230 கிலோ ஒதுக்கப்பட்டன. இதைச் செய்வதற்காகத் தனியே சையத் கிலானி என்ற பொற்கொல்லர் தலைமையில் குழு ஒன்று உருவாக்கப்பட்டது. அவர்கள் ஏழு வருடங்கள் உழைத்து இதனைப் படைத்தனர். மயிலாசனம், முகலாயப் பேரரசர் ஷாஜஹானின் கனவு அரியணை!

ஷாஜஹானின் ஆட்சிக்காலம்தான் முகலாயப் பேரரசின் பொற்காலம் என்கிறது வரலாறு. இன்றைய இந்தியாவின் பெரும்பகுதி ஷாஜஹானின் கட்டுப்பாட்டில்தான் இருந்தது. பேரரசின் தலைநகரை ஆக்ராவிலிருந்து தான் உருவாக்கிய புதிய நகரமான ஷாஜஹான்பாத்துக்கு (இன்றைய பழைய டெல்லி) மாற்றினார் ஷாஜஹான். தனது அவையில் தான் அமர உலகிலேயே சிறந்த அரியாசனம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று கனவு கண்டார். பூமியையும் சொர்க்கத்தையும் இணைக்கும் பொக்கிஷமாக அந்த அரியாசனம் இருக்க, அதில் தான் அமர்ந்துகொண்டு மக்களின் குறைகளை இறைவனிடம் தெரிவிக்கும் தூதுவராக

ஆட்சி செய்ய வேண்டும் என்று எண்ணினார். அதற்காக மயிலாசனத்தைப் பார்த்துப் பார்த்து உருவாக்கினார்.

இந்த ஆசனத்தில் இரண்டு மயில்கள் இருந்தன. அவற்றின் தோகையை அழகுபடுத்த விதவிதமான கற்கள் பதிக்கப்பட்டன. எனவே, இந்த அரியாசனத்துக்கு ஹிந்தியில் மயூராசனம் என்றும், தமிழில் மயிலாசனம் என்று பெயர் வந்தது. முகலாய அவைக்குறிப்புகளின்படி இந்த ஆசனத்தின் பெயர், Takht-e-tavus. நான்கு அடி உயரத்தில் செவ்வக வடிவ மேடை, அழகிய கலைவேலைப்பாடுகள் கொண்டு கூரை, மேடையையும் மேற்கூரையையும் இணைக்கும்படி முத்துக்களும், இதரக் கற்களும் பதிக்கப்பட்ட பன்னிரண்டு தூண்கள், ஏறுவதற்கு வெள்ளிப் படிக்கட்டுகள், அமருவதற்கு பட்டு மெத்தை போன்றவை அமைக்கப்பட்டிருந்தன. ஷாஜஹானின் அவையிலிருந்த கவிஞரான குவிட்ஸி, பேரரசரின் பெருமைகளைப் புகழ்ந்து பாடிய இருபது கவிதைகள், மரகத எழுத்துகளால் மயிலாசனத்தில் செதுக்கப்பட்டிருந்தன. 116 மரகதக்கற்கள் (ஷா, ஜஹாங்கீர் போன்ற புகழ்பெற்ற மரகதக்கற்களும் இதில் உண்டு), 108 மாணிக்கக்கற்கள் (தைமூர் என்ற மாணிக்கமும் இதில் உண்டு), பல்வேறு வைரக்கற்கள் மயிலாசனத்தில் பதிக்கப்பட்டிருந்தன. உலகப்புகழ்பெற்ற கோஹினூர் வைரமும் மயிலாசனத்தில் பதிக்கப்பட்டிருந்தது.



ஷாஜஹானுக்குப் பின் மயிலாசனம், பேரரசர் ஔரங்க சீபின் வசம் சுமார் ஐம்பது ஆண்டுகள் வரை இருந் தது. ஔரங்கசீப் மயிலாசனத்தைக் கைப்பற்றியபோது, அதிலிருந்த ஷாஜஹானின் புகழ்பாடும் கவிதைகளை நீக்கச் சொல்லி உத்தரவிட்டார். ஔரங்கசீபின் காலத் துக்குப் பிறகு முகலாயப் பேரரசின் வீழ்ச்சி ஆரம்பித் தது. மயிலாசனத்தைக் குறிவைத்து வாரிசுகள் நடத்திய அரசியலில் பேரரசு பலவீனம் அடைந்தது. எல்லைகள் சுருங்கிப்போயின.

பெர்ஸியப் பேரரசர் (இன்றைய இரான்) நாதிர் ஷா, இந்தியாவின் மீது படையெடுக்க முடிவெடுத்தார். முக லாயர்கள் சேர்த்து வைத்த செல்வங்கள், குறிப்பாக மயி லாசனம் அவரது ஆசையைத் தூண்டியது. கி.பி.1739-ம் ஆண்டில் முகலாயப் படைகளையெல்லாம் சுலப மாகச் சிதறடித்துவிட்டு நாதிர் ஷா தன் படைகளோடு டெல்லியை அடைந்தார். அப்போது பெயருக்கு முகலா யப் பேரரசராக இருந்த முகம்மது ஷா, நாதிர் ஷாவிடம் அடிபணிந்தார். நாதிர் ஷா, தன்னை இந்தியாவின் பேர ரசராக அறிவித்துக் கொண்டார். ஆசைதீர மயிலாசனத் தில் அமர்ந்து பெருமிதப்பட்டுக் கொண்டார்.

சுமார் இரண்டு மாதங்கள் நாதிர் ஷா டெல்லியில் இருந்தபோது, பெர்ஸிய வீரர்கள் சுமார் 30,000 பேரைக் கொன்றதாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். அந்தச் சமயத்தில் முடிந்த மட்டும் அங்குள்ள செல்வங்களைக் கொள்ளையடிக்கச் சொல்லி தன் வீரர்களுக்கு உத்தரவிட்டிருந்தார். அதில் கொள்ளையடித்த பணம் மட்டும் முப்பது கோடி இருக்கும். தவிர நகைகள், விலையுயர்ந்த உலோகங்கள், பொக்கிஷங்கள் தனி. கோஹினூர் வைரம், தர்யா-ஏ- நூர் வைரம் உள்ளிட்டவையும் பறிபோயின. அதுபோக நூறு யானைகள், 7000 குதிரைகள், 10,000 ஒட்டகங்கள், சில நூறு அடிமைகள், எழுத்தாளர்கள், சிற்பிகள், கட்டடக் கலைஞர்கள், தச்சர்கள் என்று நாதிர் ஷா அபகரித்த பட்டியல் நீ...ளமானது. ஷாஜஹான் உருவாக்கிய பொக்கிஷமான மயிலாசனத்தையும் அபகரித்துக் கொண்ட நாதிர் ஷா, டெல்லியிருந்து வயிறு முட்டத் தின்ற யானை ஒன்றின் சாவகாச நடையைப் போலக் கிளம்பினார்.

மயிலாசனம், பாரசீகத்தின் அரியணை என்று பெயர் மாறியது. நாதிர் ஷா அந்த அரியணையைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்டார். நாதிர் ஷாவுக்கும் ஏகப்பட்ட அரசியல் எதிரிகள் இருந்தார்கள். 1747-ம் ஆண்டில் தன்னைச் சுற்றி பின்னப்பட்ட சதிவலை ஒன்றில் வசமாகச் சிக்கிக் கொண்ட நாதிர் ஷா, கொல்லப்பட்டார். அவரிடமிருந்து பறிபோன மயிலாசனம் அதற்குப் பின் சிதைந்துபோனது. அதில் உள்ள தங்கத்தையும், பிற விலையுயர்ந்த கற்களையும் பலரும் உடைத்து எடுத்துக் கொண்டனர். மயிலாசனம் துண்டு துண்டாக பாரசீகம் எங்கும் பரவியது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பத் அலி ஷா காஜர் என்ற பெர்ஸிய அரசரின் காலத்தில் நாதரி என்ற அரியாச

னம் புதிதாக உருவாக்கப்பட்டது. அதில் மயிலாசனத்தின் சில பாகங்கள் பொருத்தப்பட்டதாக ஒரு தகவல் உண்டு. இது தவிர மயிலாசனத்தின் பாகங்கள் வேறு வேறு இடங்களில் இருப்பதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் உண்டு.

1635, மார்ச் 12 அன்று, செங்கோட்டையில் Diwan-i-Khas என்றழைக்கப்படும் அவையில் ஷாஜஹான் முதன் முதலாக மயிலாசனத்தில் அமர்ந்து மனம் மகிழ்ந்தார் என்று வரலாற்றுக் குறிப்புகள் சொல்கின்றன. அப்துல் ஹமிது லாஹுரி, ஷாஜஹான் காலத்து வரலாற்றாளர். ஷாஜஹானின் ஆட்சிக்காலத்தை 'பாட்ஷாநாமா' என்ற பெயரில் பதிவு செய்த இவர், மயிலாசனம் குறித்தும் விரிவாக எழுதியிருக்கிறார். 'ஷாஜஹான்நாமா' என்ற நூலை எழுதியிருக்கும் ஷாஜஹான கால வரலாற்றாளரான இணையத் கானின் பதிவுகளிலும் மயிலாசனக் குறிப்புகள் காணப்படுகின்றன.

ஷாஜஹான் ஆட்சிக்காலத்தில் இந்தியாவுக்கு வந்த பிரெஞ்சுப் பயணியும், நகை வியாபாரியுமான டேவர்னியர் (Jean-Baptiste Tavernier), மயிலாசனத்தில் பேரரசர் அமர்ந்திருந்த காட்சியையும், மயிலாசனத்தின் அழகையும் நேரில் கண்டு ரசித்து தன் குறிப்புகளில் எழுதியிருக்கிறார். இன்னொரு பிரெஞ்சுப்பயணியான பிரான்கோஸிஸ் பெர்னியரின் பயணக் குறிப்புகளிலும் மயிலாசனம் மின்னுகிறது.

இந்த நால்வரின் குறிப்புகளிலுமே மயிலாசனத்தின் தோற்றம், அமைப்பு, அளவுகள் குறித்த வேறுபாடுகள் இருக்கின்றன. செய்திகளில் முரண்பாடுகள் இருக்கின்றன. மயிலாசனத்தைக் காட்சிப்படுத்தும் பழைய இந்திய, ஐரோப்பிய, பாரசீக ஓவியங்கள் உண்டு. ஆனால்,

அவை எதுவும் அசல் மயிலாசனத்தைக் காட்சிப்ப டுத்துவதாக இல்லை என்பதே வரலாற்றாளர்களின் கருத்து.

ஷாஜஹான், நான்கு தூண்களும் மேற்கூரையில் இரண்டு மயில்களும் இருக்கும்படியான அரியணை ஒன்றில் அமர்ந்திருக்கும் பழைய ஓவியம் ஒன்று உண்டு. கி.பி. 1635-ம் ஆண்டில் ஷாஜஹான் ஆட்சிக்காலத் தில் வரையப்பட்ட ஓவியம்தான் என்றாலும், அதுதான் மயிலாசனம் என்று சொல்வதற்கில்லை. காரணம் பல ருடைய குறிப்புகளின்படி, மயிலாசனம் பன்னிரண்டு தூண்களைக் கொண்டது. பிற்காலத்தில் வரையப் பட்ட மயிலாசனத்தின் ஓவியங்கள் எல்லாம், விவரிக் கப்பட்ட மயிலாசனத்தின் அமைப்புகளிலிருந்து மாறு பட்டே காணப்படுகின்றன. ஆக, மயிலாசனத்தின் அசல் அமைப்பைத் தெளிவாக, முழுமையாகக் காட்சிப்படுத் தும் ஓவியம் ஒன்றுகூட கிட்டவில்லை என்பது வரலாற் றுச் சோகம்.

1999-ம் ஆண்டில் மயிலாசனத்தின் உத்தேச மதிப்பு 804 மில்லியன் டாலர்கள் என்று அறிவிக்கப்பட்டது. பிற்காலத்தில் வேறு சில ராஜ்ஜியங்களில் மயிலாச னத்தை மாதிரியாகக் கொண்ட அரியாசனங்கள் வடிவ மைக்கப்பட்டன. ஆனால், அவை எதுவும் மயிலாசனத் துக்கு ஈடாகாது என்பதே உண்மை. ஏனென்றால் மயி லாசனத்தை உருவாக்க ஷாஜஹான் செலவு செய்த தொகையானது, உலக அதிசயமான தாஜ்மஹாலைக் கட்டுவதற்கு அவர் செய்த செலவைவிட இரண்டு மடங்கு அதிகம்.

## 8. எத்தியோப்பியாவின் கிரீடம்!

ஆப்பிரிக்கக் கண்டத்தில் அமைந்த அபிசீனிய ராஜ்ஜியத்தின் மன்னராக, கி.பி. 1855-ம் ஆண்டில் பதவிக்கு வந்தவர் இரண்டாம் தியோடோர் (அவரது எத்தியோப்பியப் பெயர், டெவோடிராஸ். அபிசீனியப் பேரரசு என்பது இன்றைய எத்தியோப்பியாவின் ஒரு பகுதி.) தியோடோர் பதவிக்கு வந்தபோதே பல பிரச்னைகள் இருந்தன. அவரது ராஜ்ஜியத்துக்கு உட்பட்ட குறுநில மன்னர்கள், அருகிலுள்ள சிறு மன்னர்கள் எல்லாம் தியோடோருக்கு எதிராக நின்றனர். எல்லோரையும் அடக்கி, வீழ்த்தி எத்தியோப்பியாவை வலிமையான ராஜ்ஜியமாக மாற்ற வேண்டும், அதன் கடவுளாகத் தன்னை அறிவித்துக் கொள்ள வேண்டும் என்று தியோடோர் கனவு கண்டார். அதற்காகத் தொடர்ந்து போர்கள் செய்து கொண்டிருந்தார்.

தியோடோர் தன் லட்சியத்தை அடைய கூடுதலாகப் படைகளும் ஆயுதங்களும் தேவைப்பட்டன. பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம், ரஷ்ய சாம்ராஜ்ஜியம், பிரான்ஸ் சாம்ராஜ்ஜியம், ஆஸ்திரிய சாம்ராஜ்ஜியம் ஆகியவற்றுக்கெல்லாம் படை உதவி கேட்டு கடிதம் அனுப்பினார். பிரான்ஸிலிருந்து மட்டும் பதில் வந்தது. பிரிட்டிஷ் பேரரசியான

குயின் விக்டோரியா, வேறு சில அரசியல் காரணங்களினால் எத்தியோப்பியாவுக்கு உதவி செய்ய விரும்பவில்லை. ஆகவே, அந்தக் கடிதத்தைத் தூக்கி ஓரமாக வைத்துவிட்டார்.

பிரிட்டிஷிடமிருந்து எந்தவிதமான பதிலும் வராதது தியோடோருக்குக் கடும் கோபத்தை வரவழைத்தது. கிறிஸ்துவ மதத்தைப் பரப்பும் நோக்கில் அங்கே முகாமிட்டிருந்த மிஷனரி ஆள்களை எல்லாம் தியோடோர் சிறைபிடித்தார். பிரிட்டிஷ் தூதுவர்களையும் சிறையில் அடைத்தார். அவர்கள் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். தியோடோரின் இந்தச் செயலால் பிரிட்டிஷார் ஆத்திரமடைந்தனர். எத்தியோப்பியாவை நோக்கி ராபர்ட் நேப்பியர் என்பவரது தலைமையில் பிரிட்டிஷ் படைகள் அணிவகுத்தன. உடன், பிரிட்டிஷ்-இந்தியப் படைகளும் சேர்ந்துகொண்டன. வரலாற்றில் பதிவான அதிகப் பொருட்செலவு கொண்ட படையெடுப்புகளில் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகிறது.

1868-ம் ஆண்டில் பிரிட்டிஷ் மற்றும் பிரிட்டிஷ்-இந்தியப் படைகளை எதிர்கொள்ள முடியாத தியோடரின் படைகள் சரணடைந்தன. தியோடோரின் அரண்மனை அமைந்திருந்த மக்டாலா கோட்டையை பிரிட்டிஷார் கைப்பற்றினர். அவர்களிடம் போர்க்கைதியாகச் சிக்க விரும்பாத மன்னர் தியோடோர், துப்பாக்கியைக் கையில் எடுத்தார். தன் வாய்க்குள் தானே சுட்டுக்கொண்டு உயிரைவிட்டார்.



பிரிட்டிஷார், எத்தியோப்பியாவின் செல்வங்களை எல்லாம் நிதானமாகக் கொள்ளையடித்தனர். அதில் முக்கியமான பொருள் எத்தியோப்பியாவின் கிரீடம். இது தங்கம், வெள்ளி, செம்பால், அப்போஸ்தலர்களின் உருவம் பதித்து இழைக்கப்பட்ட மிக அழகான கிரீடம். (1740-ம் ஆண்டில் மெண்டெவ்வாப் என்ற அரசி, எத்தியோப்பிய மன்னராகப் பதவியேற்ற தன் மகன் இரண்டாம் இயாசுக்காகச் செய்து கொடுத்தது என்கிறார்கள்.) இன்னொரு பொருள் தங்கத்தாலான திராட்சை ரசம் அருந்தும் கிண்ணம். இவை தவிர நிறைய ஆபரணங்கள், பூஜைக்குரிய பொருள்கள், கலைப்பொருள்கள் மன்னர் குடும்பத்தினரது விலை உயர்ந்த ஆடைகள், பகட்டான திருமண ஆடை போன்றவை கொள்ளையடிக்கப்பட்டன.

பிரிட்டிஷார் தாம் கொள்ளையடித்தவற்றை 15 யானைகள், 200 கோவேறு கழுதைகள் மீது ஏற்றிச்சென்றனர். தியோடோரின் மகன் இளவரசன் அலேமேயேகு. அப்போது அவனுக்கு வயது ஏழு. அவனையும் பிரிட்டிஷார் தங்களோடு அழைத்துச் சென்றனர். எத்தியோப்பியாவின் கிரீடம், திராட்சை ரசக்கோப்பை உள்ளிட்ட பொக்கிஷங்கள் குயின் விக்டோரியாவிடம் சமர்ப்பிக்கப்பட்டன. பின் அவை லண்டனில் இருக்கும் விக்டோரியா & அல்பர்ட் அருங்காட்சியகத்தில் பத்திரப்படுத்தப்பட்டன. உலகின் மிகப்பெரிய கலைப்பொருள்கள் அருங்காட்சியகம் இதுதான். பிரிட்டன், தான் காலனி அமைத்த நாடுகளிலிருந்து எல்லாம் காலம் காலமாகக் கொள்ளை

யடித்த பல்வேறு பொக்கிஷங்களை இங்குதான் பாது காத்து வருகிறது.

இளவரசன் அலேமேயேகுவை குயின் விக்டோரியா வுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவனை அங்கே ஒரு மாளிகையில் வைத்து வளர்க்கச் சொன்னார். இளவர சனுக்கு அங்கே ரக்பி ஸ்கூலில் கல்வி வழங்கப்பட்டது. வேறு பல விஷயங்களும் கற்று வளர்ந்த எத்தியோப் பிய இளவரசனுக்கு ஆயுள் கம்மியாகத்தான் இருந்தது. தனது பத்தொன்பதாவது வயதில் அவன் இறந்துபோ னான். தன் வாழ்நாளில் அவன் மீண்டும் எத்தியோப்பி யாவைக் பார்க்கவே இல்லை. அவனது தலையில் அந் தக் கிரீடம் சூட்டப்படவே இல்லை.

இன்றைக்கு வரை அந்த எத்தியோப்பியாவின் கிரீடம், விக்டோரியா & அல்பர்ட் அருங்காட்சியகத்தில்தான் இருக்கிறது. இன்றைய எத்தியோப்பிய அரசாங்கம், தன் தேசத்தில் இருந்து பல்வேறு நாடுகள் கொள்ளையடித் துவிட்டுப்போன செல்வங்களை மீட்கும் முயற்சிகளை எடுத்து வருகிறது. அதன்படி பிரிட்டிஷ் அரசிடமும் எத் தியோப்பியக் கிரீடம், திராட்சை ரசக் கோப்பை உள் ளிட்ட பிற செல்வங்களைத் திருப்பித் தருமாறு பலமுறை கோரிக்கை வைத்திருக்கிறது.

2018-ம் ஆண்டில் விக்டோரியோ & அல்பர்ட் அருங் காட்சியகம், எத்தியோப்பியாவின் கிரீடம், திராட்சை ரசக் கோப்பை உள்ளிட்ட கலைப்பொருள்களைப் பொது மக்களின் பார்வைக்காகக் காட்சிப்படுத்தியது. 2019 ஜூன் வரை அருங்காட்சியகத்தில் அவை காட்சிக்கு வைக்கப்பட்டபோது, இவை எத்தியோப்பியாவுக்கே திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்று அருங்காட்சிய கத்துக்குப் பல்வேறு தரப்பினரும் அழுத்தம் கொடுத்த

னர். ‘எத்தியோப்பியா, இந்தப் பொக்கிஷங்களை மீட்ப தற்கான எளிய வழி ஒன்று இருக்கிறது. பொக்கிஷங்க ளுக்கான மதிப்புத் தொகையை, நீண்ட கால கடனாக எத்தியோப்பியா பிரிட்டனுக்குத் திருப்பிச் செலுத்தலாம்’ என்று அருங்காட்சியகத்தின் நிர்வாகி பேட்டி கொடுத் தார்.

‘கிரீடமும், மற்ற செல்வங்களும் எத்தியோப்பிய தேசத் தின் சொத்து. அதை பிரிட்டிஷார் கொள்ளையடித் துச் சென்றிருக்கிறார்கள். முறையாக மன்னிப்பு கேட்டு, அவற்றைத் திருப்பித் தர வேண்டியது குற்றவாளிகளான பிரிட்டிஷாரின் கடமை. பிரிட்டிஷாரின் எந்தச் செல்வத் தையும் ஆப்பிரிக்கர்கள் கொள்ளையடித்ததாக வரலாறு கிடையாது’ - என்று பெரும்பான்மையான எத்தியோப்பி யர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

1937-ம் ஆண்டில் முசோலினியின் இத்தாலியப் படை கள், எத்தியோப்பியாவில் இருந்து பெரிய ஸ்தூபி ஒன்றை (Obelisk of Axum) கொள்ளையடித்துச் சென் றன. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த, 160 டன் எடை யும், 79 மீ உயரமும் கொண்ட பழமையான ஸ்தூபி அது. 2005-ம் ஆண்டில் இத்தாலி அந்த ஸ்தூபியை எத்தியோப்பியாவுக்குத் திருப்பித்தர ஒப்புக் கொண்டது. ஸ்தூபி மீண்டும் எத்தியோப்பியாவில் நிறுவப்பட்டது. அதேபோல, பிரிட்டனும் எத்தியோப்பியாவின் கிரீடம், திராட்சை ரசக்கிண்ணம் உள்ளிட்ட அதன் பொக்கிஷங் கள் அனைத்தையும் எந்தவித நிபந்தனையுமின்றி பத் திரமாகத் திருப்பிக் கொடுக்குமா என்பதற்குக் காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

## 9. உலகின் பழைமையான தங்கம்!

1972-ம் ஆண்டில் ஒருநாள். பல்கேரியாவில் அமைந்த வர்னா அருங்காட்சியத்துக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. பேசியவர் முன்னாள் ஆசிரியர். 'புதை யல் கிடைத்திருக்கிறது. வந்து பாருங்கள்.' அருங்காட்சி யகத்துக்கு இப்படி அடிக்கடி அழைப்புகள் வரும். நிலத் தைத் தோண்டும்போது செப்புக்காசுகள் கிடைக்கும். அப்படிக் கிடைத்த காசுகள் அருங்காட்சியகத்தின் ஓர் அறை முழுக்கக் கிடந்தன. அன்றைக்கும் அப்படிப்பட்ட காசுகள்தான் கிடைத்திருக்கும் என்று அந்த ஆசிரிய ரைத் தேடி அவரது ஊருக்குப் போனார் அலெக்ஸாண் டர் மின்செவ். அவர் ஓர் அகழ்வாய்வாளர்.

ஆசிரியர் ஓர் அறையில் மேஜையில் சில பொருள்க ளைப் பரப்பி வைத்திருந்தார். அவற்றைப் பார்த்ததும் அலெக்ஸாண்டரின் கண்கள் ஆச்சரியத்தில் அகல மாக விரிந்தன. அனைத்தும் தங்கத்தினாலான சின்னச் சின்னக் கலைப்பொருள்கள், அணிகலன்கள். 'நிலத் தில் மின்சார வயர் புதைப்பதற்காக தோண்டும்போது இதேபோல சில பொருள்கள் கிடைத்தன' என்று இன்னொரு அட்டைப்பெட்டியையும் நீட்டினார். அந்தப் பெட்டி நிறைய பிரெஸ்லெட், உலோகங்களாலான சிறு கத்திகள், சிறிய அணிகலன்கள் போன்றவை மண் ஒட்

டிக் கிடந்தன. 'இது வரலாற்றின் மிக முக்கியமான கண்டுபிடிப்பு' என்று அலெக்ஸாண்டருக்குத் தோன்றியது.

அடுத்த சில நாள்களில் பல்கேரிய அகழ்வாராய்ச்சியாளர்கள் அந்தப் பகுதியை முற்றுகையிட்டனர். ஆசிரியர் தோண்டியது ஒரு கல்லறைப் பகுதி என்று தெரியவந்தது. அந்தப் பகுதியை மேலும் ஆராய்ந்தபோது மேலும் சில கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. அது மிகப்பெரிய சுடுகாடு, அங்கே இன்னும் பலருடைய உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன என்று கண்டறிந்தார்கள். வர்னாவில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் தீவிரமாக ஆரம்பமாயின.

அடுத்த சில கல்லறைகளை தோண்டியபோது, சில கலைப் பொருள்கள், பழைய மட்பாண்டங்கள், எலும்புக்கூடுகள், மண்டை ஓடுகள், களிமண் பொம்மைகள் கிடைத்தன. நாற்பத்தியிரண்டாவது கல்லறையைத் தோண்டும்வரை அவர்களது பணி அவ்வளவு சுவாரசியமில்லாமல்தான் சென்று கொண்டிருந்தது. நாற்பத்து மூன்றாவது கல்லறையில் அவர்கள் கண்ட விஷயம், ஐரோப்பியக் கண்டத்தின் வரலாற்றையே மாற்றி எழுதும்படியாக இருந்தது.

ஓர் ஆண் எலும்புக்கூடு. அதைச் சுற்றி ஏகப்பட்ட தங்க ஆபரணங்கள், அந்த எலும்புக்கூட்டின் கையில் தங்கத்தாலான ஒரு செங்கோல், அப்புறம் ஒரு கோடாரி போன்ற ஓர் ஆயுதம் என்று அந்தக் கல்லறை தனியே மிளிர்ந்தது. அந்தப் பகுதியில் வாழ்ந்த அரசன் அல்லது தலைவனுடைய கல்லறை அது. மிகவும் மரியாதையுடன் அவன் புதைக்கப்பட்டிருக்கிறான் என்று ஆய்வாளர்கள் புரிந்து கொண்டனர். 'வர்னா மனிதர்கள்' என்று அவர்களுக்குப் பெயரிடப்பட்டது.



சரி, அந்த வர்னா மனிதர்கள் வாழ்ந்த காலம் எப்போது?

கார்பன் டேட்டிங் வயது கணிப்புப்படி அந்தக் கல்லறைகள் கி.மு. 4569க்கும் கி.மு. 4340க்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவை. அதாவது சுமார் 6500 ஆண்டுகளுக்கு முந்தையவை. மனிதனின் பண்பாட்டு வளர்ச்சியில் உலோகத்தினால் செய்யப்பட்ட கருவிகளின் பயன்பாடு தொடங்கிய செப்புக்காலம் என்று இதைச் சொல்லலாம். அப்போதே அந்தப் பகுதியில் அமைந்த வர்னா ஏரிக்கரையை ஒட்டி அந்த மனிதர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

மனிதன் அறிந்த வரலாற்றில் இதுவரை மெசபடோமியா, எகிப்து, சிந்து சமவெளி போன்றவையே பண்பாடுமிக்க பண்டைய நாகரிகங்களாகக் கருதப்பட்டு வந்தன. நல்ல கட்டமைப்பு கொண்ட நகரம், சமூக அமைப்பு, கலாசாரம், நிர்வாகம் என்று மனிதன் நாகரிக வாழ்க்கைக்கு நகர்ந்தது இந்த நாகரிகங்களில்தாம் என்று ஆய்வாளர்கள் நம்பினர். ஆனால், சுமார் 7000 ஆண்டுகளுக்கும் முன்பே கருங்கடல் பகுதியில் பல்கேரியாவில் இப்படி ஒரு மனித நாகரிகம் தளைத்தோங்கியிருக்கிறது என்ற கண்டுபிடிப்பு பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

வர்னா மனிதர்கள் சுமார் 7000 ஆண்டுகளுக்கு முன்பே தங்கம், செம்பு உள்ளிட்ட உலோகங்களை மிக நேர்த்

தியாகக் கையாண்டு, அழகான ஆபரணங்களைச் செய் துள்ளனர். அற்புதமான கலைப் பொருள்களை வடித் துள்ளனர். அருமையான ஆயுதங்களை உருவாக்கியுள் ளனர். இவற்றையெல்லாம் கொண்டு பார்க்கும்போது, வர்னா மனிதர்களிடம் செழுமையான கலாசாரம் இருந் திருக்கிறது. வளமையான சடங்குகளைக் கடைபிடித் திருக்கிறார்கள். குறிப்பாக அவர்களது இறுதிச்சடங்கு களில் பல்வேறு நடைமுறைகளைக் கடைபிடித்திருக் கிறார்கள். ஆண்களை நேராகப் படுக்க வைத்துப் புதைத்திருக்கிறார்கள். பெண்களை தாயின் வயிற்றில் குழந்தை இருக்கும் நிலையில் வைத்துப் புதைத்திருக் கிறார்கள். அங்கே தோண்டப்பட்ட எல்லா கல்லறை களிலும் எலும்புக்கூடுகள் இல்லை. சிலவற்றில் சுட்ட மண்ணால் ஆன பொம்மைகளும், சிலவற்றில் களி மண்ணால் ஆன, ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட பொம்மைகளும், சிலவற்றில் மனிதனின் முகம் போன்ற உருவங்களும் காணப்பட்டன.

அந்த மனிதர்கள் வர்னா ஏரியைப் பயன்படுத்தி, கருங் கடல், மத்தியத்தரைக்கடல்கள் வழியாக செழிப்பாகக் கடல் வணிகமும் செய்திருக்கிறார்கள். ஒரு தலைவன், அவன் வகுத்த சட்டம், அதற்குக் கட்டுப்பட்ட வாழ்க்கை என்று முறையான சமூக அமைப்பில் வாழ்ந்து வரலாற் றில் காணாமல் போயிருக்கிறார்கள். உலகில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட தங்கங்களிலேயே மிகவும் பழை மையானது வர்னாவில் கண்டுபிடிக்கப்பட்டதே.

வர்னா அகழ்வாராய்ச்சியில் 1972 தொடங்கி இதுவரை 294 கல்லறைகள் தோண்டப்பட்டுள்ளன. இன்னும் 30% பகுதியில் அகழ்வாராய்ச்சி நடத்தப்பட வேண்டியதிருக் கிறது. 22,000-க்கும் மேற்பட்ட பழம்பொருள்கள் கிடைத் திருக்கின்றன. அவற்றில் சுமார் 3000 தங்கத்தாலான

பொருள்கள் (ஏறத்தாழ 6 கிலோ எடை) கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதிலும் அந்த 43வது கல்லறையில் கண்டெடுக்கப்பட்ட தங்கத்தின் அளவானது, வர்னா மனிதர்கள் வாழந்த காலத்தில் உலகத்தின் பிற பகுதிகளிலிருந்த தங்கத்தைக் காட்டிலும் அதிகமானது என்று கருதப்படுகிறது. இவற்றையெல்லாம் கொண்டு வரலாற்றாளர்கள் அழுத்தமாக ஒரு கருத்தை முன் வைக்கிறார்கள். 'ஐரோப்பியக் கண்டத்தில் நாகரித்தின் தொட்டில் என்பது பல்கேரியாவில் வாழ்ந்த வர்னா மனிதர்களிடமிருந்துதான் தோன்றியிருக்க வேண்டும்.'

வர்னா பொக்கிஷங்களின் கண்டுபிடிப்பால் பண்டைய மனிதனின் வரலாறே மாற்றி எழுதப்பட வேண்டியதிருக்கிறது.

## 10. மூன்று வைரங்களின் கதை

அவள் ஓர் அடிமை. பிரேசில் நாட்டைச் சேர்ந்தவள். பெயர் வரலாற்றில் பதியப்படவில்லை. தினமும் சூரியன் உதிக்கும்போதே பிரேசிலின் பாகாஜெம் என்ற சுரங்கத் துக்குச் சென்றுவிடுவாள். நாள் முழுக்க அங்கேதான் வேலை. சுரங்க அதிகாரிகள் கருணை காட்டினால் தான் தண்ணீர், உணவுகூட எடுத்துக்கொள்ள முடியும். இரவில்தான் வீடு திரும்ப முடியும்.

அன்று அவளுக்கு அதிர்ஷ்ட தினம். அவள் வாழ்வையே மாற்றிய தினம். வழக்கம்போல சுரங்கத்தைத் தோண் டிக் கொண்டிருந்த அவள் கண்களில் அந்தப் பொருள் மின்னியது. கையில் எடுத்துப் பார்த்தாள். சந்தேகமே இல்லை. வைரம். அதன் மதிப்பு அவளுக்குத் தெரியாது. அப்படியே தெரிந்திருந்தாலும், அவளால் அதைச் சுரங் கத்திலிருந்து வெளியே கொண்டு போய்விட முடியாது. மாட்டிக் கொண்டால் கொன்று விடுவார்கள்.

அந்த வைரத்தை, கண்காணிப்பாளர் களிமிரோ என்ப வரிடம் ஒப்படைத்தாள். களிமிரோவின் முகம் ஒளிர்ந் தது. அதுவரை அந்தச் சுரங்கத்தில் கண்டெடுக்கப்பட்ட மிகப்பெரிய வைரம் அதுவே. அந்தப் பெண்ணுக்கு பணம், உடைகள், தங்குவதற்கு வீடு கிடைத்தது.

கூடவே வாழ்நாள் பென்ஷன் தருவதாகவும் சொன்னார்கள். அந்த வைரம் அந்த அடிமைப்பெண்ணுக்கு விடுதலை பெற்றுத் தந்தது.

சற்றே தீட்டப்பட்ட அந்த வைரம் 3000 பவுண்டுகளுக்கு விற்கப்பட்டது. அதை வாங்கிய முதல் நபர், ரியோ டி ஜெனிரோவில் இன்னொரு நபருக்கு முப்பதாயிரம் டாலருக்கு விற்றார். அது ஆம்ஸ்டர்டாமில் மற்றொரு நபரிடம் முப்பத்தைந்தாயிரம் டாலருக்குக் கைமாறியது. பின்பு அழகாக வெட்டப்பட்டு, தலையணை போன்ற வடிவத்தில் பார்த்துப் பார்த்துச் செதுக்கப்பட்டது.

பாரிஸில் புகழ்பெற்ற வைர வியாபாரிகளான ஹால்ஃபென் நிறுவனத்தார், அதை வாங்கிக் கொண்டார்கள். அதற்கு The Star of the South என்று பெயர் சூட்டினார்கள். இந்தியாவில் நடந்த ஒரு வைரக் கண்காட்சியிலும் அந்த வைரம் மின்னியது. இந்தியாவின் பெரிய சமஸ்தானங்களில் ஒன்றான பரோடோவின் மகாராஜா மல்ஹர் ராவ் அதைப் பேரம் பேசி, 80000 பவுண்டுக்கு வாங்கினார். 'பரோடாவின் நட்சத்திரம்' என்ற பெயருடன் சமஸ்தானத்தின் கஜானாவில் சேர்ந்தது.

ஏற்கெனவே பரோடாவின் கஜானாவில் புகழ்பெற்ற இரண்டு வைரங்கள் மின்னிக் கொண்டிருந்தன. ஒன்று அக்பர் ஷா வைரம், இன்னொன்று பரோடாவின் நிலவு வைரம்.

அக்பர் ஷா - முகலாயப் பேரரசர் அக்பர் காலத்தில் ராஞ்சிக்கு அருகில் குக்ரா என்ற இடத்திலுள்ள ஒரு சுரங்கத்திலிருந்து தோண்டிய எடுக்கப்பட்டது. முகலாயப் பேரரசின் மீது படையெடுத்து வந்த பெர்சியாவின் நாதிர் ஷா, மயிலாசனம் உள்ளிட்ட பல்வேறு செல்வங்களைக் கொள்ளையடித்துவிட்டுச் சென்றபோது, அதில் அக்பர்

ஷாவும் பதிக்கப்பட்டிருந்தது. பின் நாதிர் ஷாவும் கொல் லப்பட்டார். மயிலாசனம் சிதைக்கப்பட்டது. அவர் அப கரித்துச் சென்ற செல்வங்கள், பலராலும் கொள்ளைய டிக்கப்பட்டன. அப்போது அக்பர் ஷா வைரம் எங்கே, யாரிடம் சென்றது என்ற பின் தொடரும் சரித்திரக் குறிப் புகள் எதுவும் இல்லை.

1860களில் துருக்கியில் நடைபெற்ற வைரக் கண் காட்சி ஒன்றில் அக்பர் ஷா, கண் சிமிட்டிக் கொண் டிருந்தது. 1866 பிப்ரவரியில் கான்ஸ்டாண்டிநோபிளில் நடைபெற்ற ஒரு கண்காட்சியில், ஜார்ஜ் ப்ளாக் என்ற லண்டனைச் சேர்ந்த வைர வியாபாரி, அக்பர் ஷாவை வாங்கினார். ஜார்ஜ் பிளாக் மூலமாக அக்பர் ஷா வைரம் மீண்டும் இந்தியாவுக்கு வந்தது.

1867-ம் ஆண்டில் பரோடாவின் மகராஜாவாக இருந்த கண்டே ராவ் (மல்ஹர் ராவின் தந்தை), அக்பர் ஷாவை வாங்கிக் கொண்டார். அது பரோடாவின் கஜானாவுக்கு இப்படியாக வந்து சேர்ந்தது.

பரோடாவின் நிலவு வைரம் எந்தச் சுரங்கத்தில் கண் டெடுக்கப்பட்டது, யாரிடமிருந்து எப்போது வாங்கப்பட் டது போன்ற வரலாற்று குறிப்புகள் எதுவும் இல்லை. பரோடாவின் கஜானாவிலிருந்த சீனியர் வைரம் அதுவே. பல நூறு வருடப் பாரம்பரியம் கொண்டது. பதி னெட்டாம் நூற்றாண்டில் பரோடா ராஜ குடும்பத்தினர், ஆஸ்திரிய நாட்டு மகாராணி மரிய தெரஸாவுக்கு பரோ டாவின் நிலவு வைரத்தைப் பரிசுப் பொருளாக அனுப்பி வைத்தார்கள். ஆனால், கடல் கடந்து வந்த வைரம் ராசி யில்லாதது என்று சொல்லி அதை அவர்கள் திருப்பி அனுப்பிவிட்டார்கள்.

1919. முதல் உலகப் போர் முடிவடைந்த சமயம். உலகமெங்கும் கடும் பொருளாதார நெருக்கடி. பரோடா சமஸ்தானத்தின் நிதி நெருக்கடியைத் தீர்ப்பதற்காக அப்போதைய மகாராஜாவான சாயாஜி ராவ், கஜானாவிலிருக்கும் வைரம் ஒன்றை விற்க முடிவு செய்தார்.



அக்பர் ஷா



பரோடாவின் நட்சத்திரம்



பரோடாவின் நிலவு

மூன்று வைரங்களில் எதை விற்கலாம்? பரோடாவின் நட்சத்திரம் மிகப்பெரியது. எனவே அது இருக்கட்டும். அக்பர் ஷா வைரம் சிறியது. அதை விற்றுவரும் பணம் நெருக்கடியைச் சமாளிக்கப் போதுமானதாக இருக்காது. எனவே பாரம்பரியப் பெருமை கொண்ட பரோடாவின் நிலவை விற்க முடிவெடுத்தார் சாயாஜி ராவ்.

அவர், பரோடாவின் நிலவை யாரிடம் விற்றார் என்பது பற்றிய தகவல்கள் இல்லை. ஆனால், ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு அந்த வைரம், லாஸ் ஏஞ்சல்ஸில் ஒரு கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தது. 1944-ம் ஆண்டில் அமெரிக்காவைச் சார்ந்த சாமுவேல் டெய்ட்சென், பரோடாவின் நிலவை வாங்கினார். அடுத்த ஆறு ஆண்டுகளில் டெட்ராய்ட் நகரத்தின் புகழ்பெற்ற மேயர் ஜுவல்லரியின் நிர்வாகியான ரோஸன்பௌமிடம் பரோடாவின் நிலவு கைமாறியது.

ரோஸன்பௌம், புகழ்பெற்ற சினிமா நட்சத்திரமான மர்லின் மன்றோவைச் சந்தித்தார். பரோடாவின் நிலவைக் காட்டி, 'நீங்கள் இதை அணிந்துகொண்டு நடித்தால், இந்த வைரத்துக்குப் பெருமை. எங்களது மேயர்

ஜுவல்லரிக்கும் கௌரவம்' என்றார். மர்லின் மன்றோ வும் பரோடா நிலவு வைரத்தைக் கழுத்தில் அணிந் துகொண்டு ஒரு படத்தின் பாடல் காட்சியில் நளினம் காட்டி, அபிநய சரஸ்வதியாக நடிக்க அதன் புகழ் உலக மெங்கும் பரவியது.

1990-ம் ஆண்டில் நியு யார்க் நகரில் பரோடா நிலவு வைரம் ஏலம் விடப்பட்டது. ஏலம் எடுக்கப்பட்ட தொகை 2,97,000 டாலர். யார் அதை ஏலம் எடுத்தார்கள், இப் போது யாரிடம் அந்த வைரம் இருக்கிறது என்பதெல் லாம் ரகசியமாகவே இருக்கிறது. 2008 ஏப்ரலில் பெல் ஜியத்தின் வைர நகரமான அண்ட்வெர்பில் 'உலகில் 51 தலைசிறந்த வைரங்கள்' என்ற கண்காட்சி நடந்தது. அதில் கோஹினூர், தி ஹோப், தி ஸ்டார் ஆஃப் ஆப்பி ரிக்கா, தி நிஜாம், தி நேபாள், தி கோல்டன் மெட்ராஸ் என்று பல உலகப்புகழ் வைரங்களோடு பரோடாவின் நிலவும் ஜொலித்தது.

அக்பர் ஷா இன்னும் பரோடாவில்தான் இருக்கிறதா அல்லது ராஜ குடும்பத்தினர் யாரிடமாவது விற்றுவிட் டார்களா என்று தெரியவில்லை. பிரேசிலில் ஓர் அடி மைப்பெண் கண்டெடுத்த அந்த நட்சத்திர வைரம் மட் டும் இன்னமும் ராஜ குடும்பத்தின் மீதமிருக்கும் செல் வங்களோடு உறங்கிக் கொண்டிருக்கிறது.

## 11. வோனொபாயோ புதையல்

சிப்டோ என்ற இந்தோனேஷியப் பெண்மணிக்குக் கொஞ்சம் நிலம் இருந்தது. அதில் வயல் இருந்தது. எல் லாம் கொஞ்சம் மேடான பகுதியில் இருந்ததால், கால் வாய் வழியாக வயலுக்கு நீர் பாய்ச்சுவதற்குச் சிரமமாக இருந்தது. எனவே, சிப்டோ கூலிக்குச் சில ஆள்களை நியமித்து, நிலத்தைத் தோண்டி, கால்வாய் வழியே நீர் பாய்வதற்கு வசதியாக வயலின் உயரத்தைக் குறைக்கச் சொன்னார். 1990, அக்டோபர் 17 அன்று அந்த வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அது இந்தோனேஷியா வின் மத்திய ஜாவா மாகாணத்திலிருக்கும் கிளாடென் என்ற பிரதேசத்தைச் சேர்ந்த வோனொபாயோ என்ற சிறிய கிராமம்.

மாலை நேரம். சுமார் இரண்டரை மீட்டர் அள வுக்கு வயலைத் தோண்டியிருந்தார்கள். விட்டோமொ ஹர்ஜோ என்பவர், அப்போது கடப்பாரையை நிலத்தில் பாய்ச்சினார். அது போதிய அளவு உள்ளே இறங்க வில்லை. நிலத்தினுள் பாறை தடுப்பதுபோல தோன் றியது. கையை வைத்து மண்ணை அகற்றினார். அது பாறை அல்ல என்று தெரிந்தது. என்னவாக இருக்கும்? அதை வெளியில் எடுக்கும்விதமாக பக்கவாட்டில் கவ

னமாகத் தோண்டினார். ஒரு ஜாடி கிடைத்தது. பழை மையான, பெரிய பீங்கான் ஜாடி.

அனைவரது இதயத்துடிப்பும் அதிகமானது. இது புதை யல்தானா? கவனமாக ஜாடியைத் திறந்தார்கள். உள்ளே மண் அப்பிக் கிடந்தது. அதை அப்புறப்படுத்தினார்கள். வெளியே இருள் சூழத் தொடங்கிய பொழுதில், ஜாடிக் குள்ளிருந்து எடுத்த பொருள்கள் பளபளப்புடன் ஒளிவீ சின. ஆ! அத்தனையும் தங்கம்!

உடனே ஊர்த்தலைவருக்குத் தகவல் சொல்லப்பட் டது. அவர், பிற அதிகாரிகளுக்குத் தகவல் சொன்னார். அன்று இரவோடு இரவாக சிப்டோவின் வயலை மேலும் தோண்டினார்கள். மேலும் சில ஜாடிகளும், வெண்கலத் தாலான ஒரு பெட்டியும் கிடைத்தன.

மொத்தம் 16.9 கிலோவில், 14.9 கிலோ தங்கம், மீதி வெள்ளி. அதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென் றால் அழகான வேலைப்பாடுகள் அமைந்த தங்கப் பாத் திரம் ஒன்று, தங்கத்தாலான ஆறு மூடிகள், தண்ணீர் குடிக்கும் பாத்திரங்கள் மூன்று, சில தட்டுகள், கத்தி ஒன்று, 97 கைக்காப்புகள், 22 சிறிய பாத்திரங்கள், கைக மூவும் பெரிய பாத்திரம் ஒன்று, சில ஜாடிகள், சில மோதி ரங்கள், ஒரு கைப்பை, அப்புறம் சுமார் 6000 நாணயங் கள். பெரும்பாலும் தங்கத்தாலும், சில வெள்ளியாலும் ஆனவை.

இந்தோனேசியாவின் வரலாறு மற்றும் கலாசாரத் துறை இயக்குநராக இருந்த உகா, பெரும் மகிழ்ச்சியில் ஆழ்ந்தார். 'எனது 37 வருட பணி அனுபவத்தில் இதைப்போன்ற பழைமையான பொக்கிஷம் கிடைத்தே இல்லை' என்றார். ஆம், சிப்டோவின் வயலில் கிடைத்த புதையல் பொருள்கள் ஒவ்வொன்றுமே பல நூற்றாண்

டுகள் பழைமையானவை. அவை 'வோனொபாயோ புதையல்' என்ற பெயரில் அழைக்கப்படலாயின.

அந்த பீங்கான் ஜாடிகள் ஒன்பதாம் நூற்றாண்டில் சீனாவை ஆண்ட தாங் வம்சத்தைச் சேர்ந்தவை. கண் டெடுக்கப்பட்ட தங்கப் பாத்திரங்கள் சிலவற்றில் ராமாய ணத்தின் காட்சிகள் காணக்கிடைத்தன. ராமன் மானை வேட்டையாடுவது, ராவணன் சீதையைக் கவர்ந்து செல்வது, அனுமன் ராமனுக்கு உதவுவது போன்ற காட் சிகள் தத்ரூபமாக அந்தப் பாத்திரங்களில் செதுக்கப்பட் டிருந்தன.

இதே போன்ற காட்சிகள் இந்தோனேஷியாவின் பிரம் பானான் கோயில் சிற்பங்களிலும் உண்டு என்று ஓர் ஆய்வாளர் தெரிவித்தார். பிரம்பானான் கோவில், ஒன் பதாம் நூற்றாண்டில் மத்திய ஜாவாவில் எழுப்பப்பட்ட இந்து ஆலயம். அந்தச் சமயத்தில் ஜாவாவில் சைலந் திர வம்சத்தால் புத்த மதம் தளைத்துக் கொண்டிருந் தது. சைவ சமயம் வீழ்ந்து கொண்டிருந்தது. அதை மீண்டும் தளைக்கச் செய்வதற்கென மத்திய ஜாவாவின் மாதாராம் ராஜ்ஜிய மன்னன், இந்தக் கோவிலைக் கட்டி யதாகச் சொல்லப்படுகிறது. முதலில் சிவக்கிரகம் என்ற பெயரில் சிவனுக்காகவே ஓர் ஆலயம் கட்டப்பட்டது. பிறகு திருமாலுக்கும் பிரம்மனுக்கும் தனித்தனி ஆல யங்கள் எழுப்பப்பட்டு, அது மும்மூர்த்திகள் ஆலயமாக மாறியது.

பிரம்பானான் கோயிலுக்கும், புதையல் கண்டெடுக்கப் பட்ட வோனொபாயோ கிராமத்துக்கும் இடையேயான தொலைவு வெறும் ஆறு கிலோமீட்டர்தான். தங்கப் பாத் திரங்களில் செதுக்கப்பட்டிருக்கும் ராமாயணக் காட்சி கள் போலவே, பிரம்பானான் கோவிலிலும் ராமாயணக்

காட்சிகள் கொண்ட சிற்பங்கள் இருப்பதால், வோனொ பாயோ புதையல் ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்றும், அது பிரம்பானான் கோவிலுக்குரிய செல்வத் தின் ஒரு பகுதியாக இருக்கலாம் என்றும் ஆய்வாளர்கள் எண்ணுகிறார்கள்.



கிழக்கு ஜாவாவின் சிலைகளில் அனுமன் உடையின் றிதான் இருப்பார். மத்திய ஜாவாவின் பழைய சிலைக ளில்தான் ஹனுமனுக்கு முழு உடை அணிவிக்கப்பட்டி ருக்கும். புதையல் பாத்திரங்களில் அனுமன் உடையோ டுதான் இருக்கிறார். எனவே வோனொபாயோ புதையல் என்பது மத்திய ஜாவாவைச் சேர்ந்த மாதாராம் ராஜ்ஜி யத்தின் செல்வங்களாக இருக்க வேண்டும் என்று சில ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

கண்டெடுக்கப்பட்ட தங்க நாணயங்களில் ta என்று பொறிக்கப்பட்டிருந்தது. அது அன்றைக்குப் பண்டைய ஜாவாவில் புழக்கத்திலிருந்த tahil என்ற நாணய முறை யைக் குறிப்பதாகும். ஒரு நாணத்தில் பண்டைய ஜாவா மொழியான Kawi-ல், Saragi Diah Bunga என்ற பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த நபர், அன்றைக்கு அங்கே வாழ்ந்த செல்வந்தராகவோ அல்லது ராஜ குடும்பத் தைச் சார்ந்தவராகவோ இருந்திருக்கலாம். எனவே வோனொபாயோ புதையல் கி.பி. 899 முதல் 911 வரை

ஆட்சி செய்த மாதாராம் ராஜ்ஜிய மன்னன் பாலிடங் ஸ்ரீ தர்மோதய மஹாசம்புவின் காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று சில ஆய்வாளர்கள் உறுதியாகச் சொல்கிறார்கள்.

வோனொபாயோ புதையலில் கண்டெடுக்கப்பட்ட பொருள்கள் தற்போது இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவின் தேசிய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அந்தப் பொருள்களின் மாதிரிகள், பிரம்பானான் கோவிலின் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தோனேஷிய வரலாற்றில், இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் கிடைத்த மிக முக்கியமான, பழைமையான பொக்கிஷம் வோனொபாயோ புதையல்தான்.

கி.பி. 930-ல் மாதாராம் ராஜ்ஜியம், கிழக்கு ஜாவாவுக்கு மாற்றப்பட்டது. அப்போது பிரம்பானன் கோவில் கவனிப்பாரின்றிக் கைவிடப்பட்டது. அந்தச் சூழலில் இந்தப் பொக்கிஷங்கள் இங்கே புதைக்கப்பட்டிருக்கலாம். யார், என்ன காரணத்துக்காக அதைப் புதைத்தார்கள் என்பது தெரியவில்லை. அதைக் கண்டுபிடிக்க டைம்-மிஷின்தான் வேண்டும்.

## 12. தோர் சுத்தியல்! வைகிங் வாள்!

வட ஐரோப்பாவின் டென்மார்க், நார்வே, ஸ்வீடன் - இந்த மூன்றும் நாடுகளும் சேர்ந்த பகுதிகளுக்குப் பெயர் ஸ்காண்டிநேவியா. இங்கே வாழ்ந்த பூர்வ குடிமக் கள், வைகிங்குகள் (Vikings). நார்ஸ்மேன் என்ற பெய ரும் இவர்களுக்கு உண்டு (வடக்கிலிருந்து வந்தவர்கள் என்பது பொருள்.)

அடிப்படையில் புல்வெளியும், புல்வெளி சார்ந்த வாழ்க் கையும் இவர்களுடையது. விவசாயமும் கால்நடைகள் வளர்ப்பதும் முக்கியத் தொழில். கடல் பயணங்கள் செய் வதில் அதிக ஆர்வமுடையவர்கள். அதற்கான படகுகள் கட்டுவதில் கைதேர்ந்தவர்கள். அவர்களது படகுகள் சுமார் 30 மீட்டர் நீளம் வரை இருந்தன. ஒரு பக்கத் துக்கு 16 வீதம் மொத்தம் 32 துடுப்புகள். மணிக்கு 32 கி.மீ. வரை செல்ல முடியும். படகின் முகப்பில் டிராகன் உருவம் தவறாது இடம்பெற்றிருக்கும். கடலில் செல் லும்போது துர்சக்திகள் எதுவும் படகை நெருங்கக்கூ டாது என்பதற்காக அது. படகின் பின் பகுதியில் கொசு வர்த்திச் சுருள்போல டிராகனின் வால். நீரில் மிதக் கும் பனிக்கட்டிகளை உடைத்துக் கொண்டு செல்லும்

வகையிலான படகுகளை முதலில் வடிவமைத்தவர்கள் வைகிங்குகள்தாம்.

எட்டாம் நூற்றாண்டு வரை ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டு அமைதியாகத்தான் வாழ்ந்தார்கள். மக்கள் தொகைப் பெருக்கத்தால் மேய்ச்சல் நிலங்கள் போது மானதாக இல்லை. எனவே வேறு தொழில் செய்ய வேண்டிய நிர்பந்தம். வைகிங்குகள், படகுகளுடன் கட லில் இறங்கி அக்கம் பக்கத்து நாடுகளுக்குச் சென்று கொள்ளையடித்துப் பிழைக்க ஆரம்பித்தார்கள்.

அப்படிக் கொள்ளையடிக்கும் நோக்கத்திலும், வாழ்வ தற்கான புதிய நிலப்பகுதியைக் கண்டுபிடிக்கும் நோக் கத்திலும் வைகிங்குகள் கண்டுபிடித்த புதிய தேசங்கள், ஐஸ்லாந்து மற்றும் கிரீன்லாந்து. பனிபடர்ந்த அந்தத் தேசங்களில் முதன் முதலில் குடியேற்றம் அமைத்தவர் களும் வைகிங்குகளே. கொலம்பஸ் அமெரிக்காவுக்குச் செல்வதற்கு சுமார் ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே அமெரிக்காவை அடைந்து அங்கு காலனி அமைத்தவர் கள் வைகிங்குகள். அவர்கள் கரையிறங்கிய பகுதி நியுஃ பவுண்ட்லேண்ட்.

இப்படிப் பல பெருமைகள் கொண்ட வைகிங் இன மக் கள் வணங்கிய கடவுள்களில் ஒருவர்தான் தோர். அறி முகம் தேவையில்லை. சுத்தியலோடு சூப்பர் ஹீரோஸ் படத்தில் வருபவர். அந்தச் சுத்தியலுக்கு ஒரு புரா ணக் கதை உண்டு. சர்வ வல்லமை படைத்த சுத்தியல் அது. கையில் இருந்தால் உலகத்தில் எந்த சக்தியை யும் தோற்கடிக்கலாம் என்பதால், தோர் அசந்து தூங்கிய ஒரு பொழுதில், அரக்கன் ஒருவன் அந்தச் சுத்தியலைத் திருடிவிட்டான்.




தன் சக்தியை எல்லாம் இழந்துநின்ற தோர், அரக்க னிடம் சுத்தியலைத் திருப்பிக் கேட்டார். 'உன் மனை வியை எனக்குத் திருமணம் செய்து வைத்தால் சுத் தியலைத் திருப்பித் தருகிறேன்' என்றான் அரக்கன் திமிருடன். தோரின் மனைவிதான் அழகின் கடவுளான ப்ரைஜா. அரக்கனை வீழ்த்த வேறு திட்டம் போட்டார் தோர். ப்ரைஜாவின் உருவத்தில் தோர் தன்னை மாற்றிக் கொண்டார். திருமணத்துக்குச் சம்மதம் என்று அரக்க னிடம் சென்றார். அதில் மயங்கிப் போன அரக்கன், திரு மண ஏற்பாடுகளைச் செய்தான். அவன் சற்றே அசந்த நேரத்தில், தோர் சுத்தியலை வெடுக்கெனப் பிடுங்கி னார். அரக்கனையும் அங்கிருந்த மற்ற அரக்கர்களையும் சுத்தியலால் தாக்கி சுக்கல் நூறாக்கினார். சுத்தியலை வெற்றிகரமாக மீட்டார் என்பது வைகிங் புராணக் கதை. எனவேதான் வைகிங்குகள் கழுத்தில் சுத்தியல் உரு வத்தை டாலர்போல அணிந்தபடி திரிந்தார்கள்.

வைகிங்குகள் செழிப்பாக, சிறப்பாக வாழ்ந்த காலம் என்பது கி.பி. எட்டாம் நூற்றாண்டு முதல் பதினொன் றாம் நூற்றாண்டு வரை. ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு வைகிங்குகள் கழுத்தில் அணிந்திருந்த சுத்தியல் டாலர்கள் ஆங்காங்கே பொக்கிஷங்களாக மீட்கப்படு கின்றன. அதில் 2010-ல் டென்மார்க்கில் மீட்கப்பட்ட சுத் தியல் டாலர் மிக முக்கியமானது. அங்கே லோலேண்ட் தீவின் கோபெலெவ் என்ற பகுதியில், தொல்பொருள் ஆய்வாளர்கள் வெண்கலத்தால் ஆன சுத்தியல் டாலர்

ஒன்றைக் கண்டெடுத்தார்கள். மேலே வெள்ளி முலாம் பூசப்பட்டு, Hmar X என்பதுபோல எழுதப்பட்ட டாலர் அது. அதற்கு This is a hammer என்று அர்த்தம். இது பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். இதன் மூலம் வைகிங்குகள் சுத்தியலைப் புனிதப் பொருளாக, சக்தி வாய்ந்த ஆயுதமாகக் கருதினார்கள் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

தெற்கு நார்வேவின் லெஸ்ஜா பகுதியில் ஒரு மலை. பாறைகளும் பனியும் நிறைந்த மனிதர்கள் அதிகம் புழங்காத மலைப்பகுதி அது. அங்கே, 2017 ஆகஸ்டில் கலைமான் வேட்டைக்காகச் சென்ற எய்னெர் அம்பாக் என்பவர், பாறைகளுக்கிடையில் இரும்புப் பொருள் ஒன்றைக் கண்டார். கையில் எடுத்துப் பார்த்தபோது அது வாள் என்று தெரிந்தது. பின்பு, தொல்பொருள் ஆய்வாளர்கள் அதை ஆராய்ந்து பார்த்து விளக்கமும் கொடுத்தனர்.

'இது, சுமார் 1100 வருடங்களுக்கும் முற்பட்ட வைகிங்குகள் பயன்படுத்திய இரும்பு வாள். கடல் மட்டத்திலிருந்து 5381 அடி உயரத்தில் கண்டெடுக்கப்பட்ட வைகிங் பொக்கிஷம் இது மட்டுமே. ஆயிரம் வருடங்களுக்கு மேல், பனியிலும் மழையிலும் பல்வேறு காலநிலையிலும் கிடந்த இந்த வாள் இப்போதுதான் கிடந்திருக்கிறது. ஆனால், அதிகம் துருப்பிடிக்காமல், சிதையாமல் இருக்கிறதென்றால், வைகிங்குகள் எவ்வளவு வளமான இரும்பில், சிறப்பாக வாள் செய்திருக்கிறார்கள் என்று புரிந்து கொள்ளலாம்.'



நிச்சயம் ஆச்சரியமான பொக்கிஷம்தான் அந்த வாள். இதைவிட ஆச்சரியமூட்டும் பொக்கிஷங்கள் 1840-லேயே கிடைத்திருக்கின்றன. அந்த ஆண்டின் மே 15 அன்று இங்கிலாந்தின் லங்காஷயர் மாகாணம், க்யூர் டேல் பகுதியில் ஓடும் ரிப்பிள் நதியின் கரையில் தடுப்பணை ஒன்றைப் பழுது பார்க்கும் பணி நடந்தது. அப்போது பணியாளர்கள் சிலர், ஓர் உலோகப் பெட்டியைக் கண்டெடுத்தார்கள். அதைத் திறந்து பார்த்தார்கள். உள்ளே சில பழைய நாணயங்கள் உள்பட, வெள்ளியால் ஆன பல பொருள்கள் இருந்தன. சில நாணயங்களை மட்டும் தங்களுக்கென எடுத்து வைத்துக்கொண்ட பணியாளர்கள், மீதியை உரிய அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். அவை அனைத்துமே கி.பி. எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த வைகிங் இன மக்கள் உபயோகித்த வெள்ளியினாலான பொருள்கள். மொத்தம் 8600 பொருள்கள் இருந்தன. உலகில் கண்டெடுக்கப்பட்ட வைகிங் கால பொக்கிஷங்களில் மிகப்பெரியது இதுதான். இதன் மதிப்பு $3.2 மில்லியன். இவை இப்போது லண்டனின் பிரிட்டிஷ் மியுஸியத்தில் வைக்கப்பட்டுள்ளன.

## 13. ஒரு புத்தரின் கதை!

அந்த புத்தரின் சிலை பல ஆண்டுகளாகக் கவனிப் பாரற்றுத்தான் கிடந்தது. சாதாரணமாகக் கூரை வேயப் பட்ட கட்டடம் ஒன்றில், அழுக்கும் தூசியும் படிந்து, அமைதியாக அரைக்கண் மூடிய நிலையில், சம்மண மிட்டுத் தியானத்தில் கிடந்தார் அந்த புத்தர். ஒரு வகை மணலும், அதைப் பிணைக்கும் ஒருவகையான திரவ மும் நீரும் கலந்து உருவாக்கப்பட்ட சாந்து கொண்டு திறமையாக அந்தச் சிலையை வடிவமைத்திருந்தார் கள்.

தாய்லாந்தில் ஏகப்பட்ட புத்தக் கோயில்கள் உண்டு. இப்படிக் கவனிப்பே இல்லாமல் கிடக்கும் புத்தர் சிலை களும் நிறையவே உண்டு. இந்தச் சிலை சுமார் பத்து அடி உயரத்தில் இருந்தது. பெரிய கோயில்களில் அப் போது இதை வைக்கும் அளவுக்கு இடம் இல்லாததால் வாட் டிரைமிட் என்ற இடத்தில் சும்மா போட்டு வைத் திருந்தார்கள். தியானத்திலிருக்கும் புத்தருக்கென்ன! எல்லா இடமும் ஒன்றுதானே!

1950-களில் அங்கே புதிய கோயில் ஒன்று எழுப்பப்பட் டது. அந்தக் கோயிலில் ஓரிடத்தில் இந்த புத்தர் சிலை யைத் தூக்கி வைக்க முடிவு செய்தார்கள். புத்தர் சிலை

யானது தூசி தட்டப்பட்டது. அங்கிருந்து எடுத்துச் செல்வதற்காகத் தடித்த கயிறுகள் கொண்டு சிலையைக் கட்டித் தூக்கினார்கள். அவர்கள் நினைத்ததைவிட, சிலை அதிக எடையுடன் இருந்தது. கோயிலின் வாசலை நோக்கிச் சிலையைத் தடுமாற்றத்துடன் எடுத்துச் சென்றார்கள். கட்டப்பட்டிருந்த கயிறு ஒன்று அறுந்தது. சிலை பெரும் சத்தத்துடன் தரையில் விழுந்தது. புத்தர் மொத்தமாக நொறுங்கியிருப்பாரோ என்று எல்லோரும் அதிர்ச்சியுடன் பார்த்தனர். பெரிய அளவில் சேதாரமின்றிக் கீழே கிடந்தார் புத்தர். சிலையின் ஒரு பகுதியில் மட்டும் சேதாரம். அந்தப் பகுதியை உற்றுநோக்கியபோது, உள்ளே ஏதோ பொன்மஞ்சள் நிறத்தில் பளபளப்பாகத் தெரிந்தது. அனைவரது கண்களும் ஆச்சரியத்தில் விரிந்தன. தங்கம் போலத் தெரிகிறதே? சந்தேகப்பட்டார்கள். ஆராய்ந்து பார்த்தார்கள். ஆம், தங்கமேதான்.

புத்தர் சிலைக்குள் தங்கள் பதுக்கப்பட்டிருக்கிறதா? சிலையின் மேற்பூச்சு மேலும் கொஞ்சம் உடைத்து எடுக்கப்பட்டது. உள்ளே இன்னும் அதிகமாகக் கெட்டித்தங்கம் தென்பட்டது. மேலும் மேலும் ஆசை பொங்க கவனமாக உடைத்தார்கள். அப்போதுதான் புரிந்தது. உள்ளே தங்கத்தாலான புத்தர் ஒருவர் பதுங்கி இருக்கிறார் என்று.

அந்த மேற்பூச்சை முற்றிலும் உடைத்தார்கள். பளபளவென தங்கத்தாலான புத்தர் ஒருவர், ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்று சொல்லாமல் சொல்லியபடி வெளிப்பட்டார். முட்டை வடிவத் தலை. சுருள் சுருளாக முடியும் கொண்டையும். வில்லென வளைந்த புருவங்கள். பாதி மூடியிருந்தாலும் கருணையும் சாந்தமும் நிறைந்து ததும்பும் கண்கள். தொங்கும் காதுகள். எடுப்பான நாடி. கூரிய நாசி. அமைதியான உதடுகள்.

விரிந்த தோள்கள். நிமிர்ந்த நெஞ்சுடன், சம்மணமிட்டு உட்கார்ந்த நிலையில் 5.5 டன் எடையுடன், 9.8 அடி உய ரத்துடன் தங்க புத்தர், தாய்லாந்து தேசத்தையே சந் தோஷத்தில் ஆழ்த்தினார்.



சரி, எங்கிருந்து வந்தார் இந்த தங்க புத்தர்? யார் இந்தச் சிலையைச் செய்தார்கள்? இந்த புத்தர் சிலையின் வயது என்ன? தங்க புத்தர் மேல் சாந்து கொண்டு பூசி, அவ ரைச் சாதாரண புத்தராக ஏன் பதுக்கி வைத்திருந்தார் கள்?

இந்தக் கேள்விகளுக்கான துல்லியமான பதில்கள் இதுவரை தெரியவில்லை. ஏதோ கொஞ்சம் வரலாறு கிடைத்திருக்கிறது. பதின்மூன்றாம் நூற்றாண்டில் தாய் லாந்தின் ஒரு பகுதியில் சுகோத்தாய் என்ற ராஜ்ஜி யம் அமைந்திருந்தது. அதனை ஆண்ட மன்னர்களே, இதுபோன்ற முட்டை வடிவத்தில் தலை கொண்ட புத்தர் சிலைகளை உருவாக்கும் வழக்கம் கொண்டி ருந்தார்கள். எனவே சுகோத்தாய் ராஜ்ஜியத்தில்தான் இந்தச் சிலையும் செய்யப்பட்டிருக்கலாம் என்று ஒரு கருத்து உண்டு. பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பதி

ளெட்டாம் நூற்றாண்டு வரை தாய்லாந்தில் வலிமை யாக விளங்கிய இன்னொரு ராஜ்ஜியம், அயூத்தயா. சுகோத்தாய் ராஜ்ஜியத்திலிருந்து கி.பி. 1400-க்குப் பிறகு, இந்த தங்க புத்தர் சிலை அயூத்தயா ராஜ்ஜியத்துக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகி றது.

கி.பி. 1767-ம் ஆண்டில் பர்மியர்கள், அயூத்தயா மீது படையெடுத்தார்கள். அப்போது அந்த ராஜ்ஜியம் வீழ்ந் தது. பர்மியர்கள், தங்க புத்தர் சிலையைக் கொள்ளைய டித்து விடக்கூடாது என்பதற்காகவே அதன் மீது சாந்து கொண்டு பூசி, அதனைச் சாதாரண புத்தர் சிலைபோல மாற்றினார்கள். எனவே பர்மியர்கள் அந்தச் சிலையைக் கண்டுகொள்ளவில்லை. சிதைந்துபோன அயூத்தயா ராஜ்ஜியத்தில் புத்தர் சிலையும் கேட்பாரின்றிக் கிடந் தது.

கி.பி. 1782-ம் ஆண்டில் தாய்லாந்தில் அரசர் முதலாம் ராமாவின் ஆட்சி வந்தது. பாங்காங்கைத் தனது தலை நகராக அறிவித்த ராமா, அங்கே பல புதிய புத்தக் கோயில்களைக் கட்டச் சொன்னார். அயோத்தயா ராஜ் ஜியத்து பழைய புத்தர் சிலைகள் பலவற்றையும் அந் தக் கோயில்களில் வைக்கச் சொன்னார். அப்படி, ஒரு கோயிலில் இந்த புத்தர் சிலையும் வைக்கப்பட்டது. அதற்குப் பின் ஆட்சிக்கு வந்த இரண்டாம் ராமா என்ற அரசர், பாங்காங்கின் வாட் சோட்டாநரம் என்ற புத்தக் கோயிலில் இந்த புத்தர் சிலையை நிறுவினார். அங்கே சாதாரண புத்தருக்குள் தங்க புத்தர் இருக்கிறார் என்ற ரகசியம் தெரியாமலேயே மக்கள் வழிபாடு நடத்திக் கொண்டிருந்தார்கள்.

இருபதாம் நூற்றாண்டில் வாட் சோட்டாநரம் கோயில் கைவிடப்பட்டது. யாரும் அதைப் பழுது பார்க்க வில்லை. பாழடைந்த கோயிலுக்குள் அழுக்கடைந்த புத்தர் அமைதியாகக் கிடந்தார். கி.பி. 1935-ம் ஆண்டில் இந்த புத்தர் சிலை, வாட் டிரைமிட் என்ற ஊருக்குக் கொண்டு வரப்பட்டது. தகரக் கொட்டகைக்குள் அக்க டாவெனப் போடப்பட்டது. பின்புதான் மேலே சொன்ன படி, சாதாரண புத்தர் தங்க புத்தராக வெளிவந்தார்.

Phra Phuttha Maha Suwana Patimakon என்பது தங்க புத்தருக்கு வைக்கப்பட்டுள்ள பெயர். கி.பி. 2010-ம் ஆண்டில் வாட் டிரைமிட்டில் இந்த புத்தர் சிலைக் கென அழகான பெரிய கோயில் ஒன்று கட்டப்பட்டது. புத்தர் சிலையின் உண்மையான வயதைக் கண்டறிய முடியவில்லை. சிலையை 18 காரட் தங்கத்தில் உரு வாக்கியிருக்கிறார்கள். புத்தரின் உடலில் 40% சுத்தத் தங்கம் கலந்திருக்கிறது. முகத்தில் 80% சுத்தத் தங்கம் கலந்திருக்கிறது. முடியும் கொண்டையும் 99% சுத்தத் தங்கத்தால் செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சிலையின் இன்றைய உத்தேச மதிப்பு 250 மில்லியன் அமெரிக்க டாலர்கள்.

உலகில் இருக்கும் மிகப்பெரிய தங்க புத்தர், இந்த தாய் லாந்து புத்தர்தான்.

## 14. காணாமல் போன முகம்!

இத்தாலியின் ஃப்ளோரன்ஸ் ராஜ்ஜியம். கி.பி. 1489. சிறுவன் ஒருவன் சிறிதும் கவனம் பிசகாமல் ஒரு சிலையைச் செதுக்கிக் கொண்டிருந்தான். மார்பிள் கல்லில், அவன் கையிலிருக்கும் உளி லாகவமாக விளையாட முகம் ஒன்று உயிர் பெற்றுக் கொண்டிருந்தது. சிலர் அங்கே நின்று அவன் செதுக்குவதை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். 'இவனுக்கு பதினைந்து அல்லது பதினாறு வயது இருக்குமா? இப்போதே இவன் இவ்வளவு அருமையாகச் செதுக்குகிறானே!' - அங்கே நின்று கொண்டிருந்த பெரியவர் ஒருவர் ஆச்சரியத்தில் வாய்பிளந்தார். அவன் செதுக்கிக் கொண்டிருந்த முகத்தின் வாயும் புன்னகையுடன் பிளந்தபடிதான் இருந்தது.

அது ரோமானியப் புராணக் கதைகளில் வரும் ஒரு கடவுளின் முகம். மரங்களையும் கிராமங்களையும் காக்கும் அந்தக் கடவுளின் பெயர் ஃபான் (Faun). ஆட்டின் கண்கள், மான்களுக்கு இருப்பது போன்ற கொம்புகள், நீண்ட மனிதக் காதுகள், அகலமான மூக்கு, மூடியிருக்கும் வாய், அடர்த்தியான புருவம், தொங்கும் மீசை - தாடி, கழுத்திலிருந்து இடுப்பு வரை மனித உடம்பு, அதற்குக்

கீழ் புசுபுசுவென ரோமம் கொண்ட ஆட்டின் உடம்பு. இதுதான் ஃபானின் கற்பனை உருவ அமைப்பு.

அந்தச் சிறுவன் பழைய ஃபானின் சிலை ஒன்றைப் பார்த்துப் பார்த்து, புதிதாக ஃபானின் முகத்தை மட்டும் அப்போது செதுக்கிக் கொண்டிருந்தான். கடவுள் ஃபான் இளமையானவர். சிறுவன் செதுக்கிய ஃபானின் முகம், வயதான கிழவருடையது போன்றிருந்தது. கடவுள் ஃபானின் வாய் மூடியே இருக்கும். சிறுவனோ வாய் பிளந்த புன்னகையுடன், நிறைய பற்களுடன் அந்த முகம் இருப்பதுபோலச் செதுக்கி முடித்தான். அப்போது அங்கே அந்த ஃப்ளோரன்ஸ் ராஜ்ஜியத்தின் அரசர் லொரென்ஸோ டி' மெடிஸி வந்தார். அவர் கலைகள் மீது அதிக ஆர்வம் கொண்டவர். கலைஞர்களை ஆதரித்தவரும்கூட.

அந்தச் சிறுவன் செதுக்கிய ஃபானின் முகம், அரசர் லொரென்ஸோவைக் கவர்ந்தது. அவரது புருவங்கள் அனிச்சையாக உயர்ந்தன. 'பழைய சிலையைப் பார்த்து அப்படியே செதுக்காமல், தன் கற்பனையையும் கலந்து செதுக்கியிருக்கிறான். ஃபானை கிழவனாக, புன்னகை நிறைந்த முகத்துடன் படைத்திருப்பது அவ்வளவு அருமையாக இருக்கிறது!' லொரென்ஸோ, அசந்து நின்றார். அதே சமயம் அவருக்குள் ஒரு கேள்வியும் எழுந்தது. அந்தக் கேள்வியைச் சிறுவனிடம் கேட்டார். 'தம்பி, இந்தக் கிழட்டு ஃபானுக்கு எப்படி இத்தனைப் பற்கள் இருக்கின்றன?' அந்தச் சிறுவன் யோசிக்கவே இல்லை. தன் உளியைக் கொண்டு அந்த சிலை முகத்தின் மேல் தாடைப் பல் ஒன்றைத் தட்டி எடுத்தான். இப்போது பொக்கை வாய்ச் சிரிப்புடன் அந்தச் சிலை மேலும் அழகாக, அர்த்தத்துடன் தெரிந்தது. லொரென்ஸோ,

அந்தச் சிறுவனுக்குள் மாபெரும் கலைஞன் ஒருவன் இருக்கிறான் என்பதை உணர்ந்து கொண்டார்.



கி.பி. 1475-ம் ஆண்டில் இத்தாலியில் பிறந்த அந் தச் சிறுவனின் பெயர் மைக்கலாஞ்சலோ. அவன் செதுக்கிய முதல் சிலை அது. சான் மார்கோ என்பது லொரென்ஸோ உருவாக்கிய கலைப்பள்ளி. அங்கே சேர்ந்து படிப்பது சாதாரண விஷயமல்ல. அதில் மைக்கலாஞ்சலோ படிப்பதற்கான ஏற்பாடு களை லொரென்ஸோ செய்தார். மைக்கலாஞ்சலோ மேன்மேலும் தன் திறமையைக் கூர்தீட்டிக் கொள்ள பல உதவிகளைச் செய்தார். பின்பு, இத்தாலியின் மிகச் சிறந்த சிற்பியாக, ஓவியராக, கட்டடக்கலை நிபுணராக, கவிஞராக மைக்கலாஞ்சலோ புகழ்பெற்றார்.

லியோனார்டா டா வின்சியும் மைக்கலாஞ்சலோவும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள். இவர்கள் இருவ ரும் இணைந்து இத்தாலியக் கலைப்படைப்புகளில் புதுமையைப் புகுத்தி மறுமலர்ச்சியை உண்டாக்கி னர். அதில் மைக்கலாஞ்சலோவின் படைப்புகளான பியேட்டா சிலை, டேவிட் சிலை, சிஸ்டின் சேப்பல் மேற் கூரை ஓவியங்கள், சிஸ்டின் மண்டபத்தில் பலிபீடத்தில்

கடைசித் தீர்ப்பு சுவரோவியம் போன்றவை இன்றைக்கும் உலகப்புகழுடன் திகழ்கின்றன.

மைக்கலாஞ்சலோ தனது முதல் ஓவியத்தை வரையத் தொடங்குவற்கு முன்பாக, சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் மனிதனின் உடற்கூறு இயல் (Anatomy) குறித்துப் படித்தார். அதனால்தான், இவரது ஓவியங்களில் மனிதனின் எலும்பு, தசை, தோலின் நிறம் உள்ளிட்ட ஒவ்வொன்றும் அவ்வளவு நேர்த்தியாக, இயற்கைத்தன்மை மாறாமல் அமைந்திருக்கின்றன. மைக்கலாஞ்சலோ செய்த சிற்பங்கள், வரைந்த ஓவியங்கள் உள்ளிட்ட பெரும்பாலான படைப்புகள் இன்றைக்கும் பத்திரமாகப் பாதுகாக்கப்படுகின்றன. ஆனால், அந்த ஒன்று மட்டும் எங்கே போனது என்று யாருக்கும் தெரியவில்லை. எந்த ஒன்று?

மைக்கலாஞ்சாலொ முதன் முதலில் செதுக்கிய ஃபானின் பொக்கைவாய் முகம்தான். பல காலமாக புளோரன்ஸ் நகரத்தின் பார்கெல்லோ அருங்காட்சியகத்தில் தான் அது காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. இரண்டாம் உலகப்போர் காலத்தில் நாஜிக்கள் பல தேசங்களிலும் புகுந்து கலைச்செல்வங்களைக் கொள்ளையடித்தனர். அப்போது பார்கெல்லோ அருங்காட்சியத்திலிருந்த பல்வேறு கலைப்பொருள்களை, இத்தாலியின் போப்பி நகரத்தின் கோட்டைக்கு இடம் மாற்றி வைத்தனர். இருந்தாலும் நாஜிப்படையினர், போப்பி கோட்டையையும் விட்டு வைக்கவில்லை. அங்கிருந்தும் கலைப்பொருள்கள் பலவற்றையும் கொள்ளையடித்துச் சென்றனர். அதில் ஃபானின் முகம், பத்தாவது எண் கொண்ட டிரக்கில் ஏற்றப்பட்டது. இத்தாலியின் ஃபோர்லி நகரத்துக்கு அந்த டிரக் சென்றது. பின்பு அந்த டிரக்கிலிருந்த கலைப்பொருள்கள் என்னவாயின, மைக்கலாஞ்சலோ

செதுக்கிய ஃபானின் முகம் என்னவாயிற்று என்பதைக் கண்டறியக் கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பெரிய அளவில் விசாரணைகள் நடத்தப்பட்டன. கண்டறியவே முடியவில்லை.

மைக்கலாஞ்சலோ, ஃபான் முகத்தைச் செதுக்குவது போன்ற சிலை ஒன்றை பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஸோச்சி என்ற சிற்பி உருவாக்கினார். அது ஃப்ளோரன்ஸ் நகரத்தின் இன்னொரு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. தவிர, மைக்கலாஞ்சலோ செதுக்கிய ஃபான் முகத்தின் நகல் ஒன்று பார்கெலோ அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

அசல் ஃபான் கிழவர் பொக்கை வாயுடன் எங்கே சிரித்துக் கொண்டிருக்கிறார் என்பது மட்டும் இப்போது வரை தெரியவில்லை.

## 15. பாதாள நூலகம்

ரஷ்யாவின் பேரரசராக இருந்த நான்காம் இவானைப் பற்றி ஒரே வரியில் சொல்ல வேண்டுமென்றால், 'உல கில் வாழ்ந்து மறைந்த மிக மிக மிகக் கெட்டவர்களில் ஒருவர்!' ஓர் உதாரணம் சொல்லலாம். சிறுவயதில் இவா னுக்கு பூனைகளை, நாய்களை உயரத்திலிருந்து கீழே போட்டுக் கொல்வதுதான் பிடித்தமான விளையாட்டாக இருந்தது. இளவரசராக இருந்தபோது ஐந்தறிவு உயிரி னங்கள். பேரரசராகப் பதவியேற்ற பின் ஆறறிவு உயிரி னங்கள் அவரால் கணக்கு வழக்கின்றிக் கொல்லப்பட் டன.

இந்தக் கேடுகெட்டவருக்கும் ஒரே ஒரு நல்ல பழக் கம் இருந்தது. நான்காம் இவான், அரிய புத்தகங்கள் கொண்ட பெரிய நூலகம் ஒன்றைப் பாதுகாத்து வந் தார். எப்படி உருவானது அந்த நூலகம்? அதன் வரலாறு என்ன?

பதினைந்தாம் நூற்றாண்டில் கான்ஸ்டாண்டிநோபி ளைத் துருக்கியர்கள் கைப்பற்றினார்கள். அதுவரை அதனை ஆண்ட பைசாந்தியர்கள், அங்கிருந்து ஓட் டம் பிடித்தனர். கடைசி பைசாந்தியப் பேரரசரான பதி னொன்றாம் கான்ஸ்டண்டைன், ரோமில் அடைக்கலம்

புகுந்தார். அப்போது அவர், கான்ஸ்டாண்டிநோபிளின் நூலகத்தையே காலி செய்து தன்னுடன் எடுத்துச் சென்றார்.

பதினொன்றாம் கான்ஸ்டண்டைனின் உறவுக்காரப் பெண்ணான சோஃபியாவை, ரஷ்யப் பேரரசரான மூன்றாம் இவான் திருமணம் செய்து கொண்டார். அந்த நூல்களை எல்லாம் தனது திருமணச் சீராக மாஸ்கோவுக்கு எடுத்துச் செல்ல சோஃபியா முடிவெடுத்தார். ரோம் வழியாக மாஸ்கோவுக்கு சுமார் நூறு வண்டிகளில் அந்த நூல்கள் பயணமாயின. அவற்றில் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பியக் கண்டங்களில் சேகரிக்கப்பட்ட, ஹீப்ரு, கிரேக்கம், லத்தீன், எகிப்தியன், அரபு மொழிகளில் அமைந்த பல்வேறு பொக்கிஷ நூல்கள் இடம்பெற்றிருந்தன. பண்டைய கிரேக்கக் கவிஞர்களான பிண்டர் மற்றும் கல்வோஸின் கவிதைகள் இருந்தன. பண்டைய கிரேக்க வரலாற்றாளர் பாலிபியஸின் நூல்கள் இருந்தன. பண்டைய ரோமானிய வரலாற்றாளரான டாசிடெஸின் நூல்கள் இருந்தன. கல்வோஸின் கவிதைகள், ரோமானிய வரலாற்றாளர் சியுடோனியஸின் Lives of the Twelve Caesars, ரோமின் கவிஞர் விர்ஜிலின் படைப்புகள் என்று எண்ணற்ற பொக்கிஷங்கள் இடம்பெற்றிருந்தன. இந்தச் சேகரிப்பில் பல நூல்கள் ஆசிரியர்களின் கைகளாலேயே எழுதப்பட்டவை. பல நூல்களின் அட்டைகளும் பக்கங்களும் விலையுயர்ந்த உலோகங்களாலும் கற்களாலும் இழைத்து இழைத்துச் செதுக்கப்பட்டவை. அந்த நூல்களின் இன்றைய மதிப்பு என்பது அளவிடவே முடியாதது.

அன்றைக்கு மாஸ்கோவில் தீவிபத்து என்பது மிகவும் சகஜமானது. மரத்தால் கட்டப்பட்ட கிரெம்லின் அரண்மனை அடிக்கடி தீவிபத்தில் சிக்கிக் கொண்டிருந்தது.

எனவே மூன்றாம் இவான் கிரெம்லின் அரண்மனையைப் பிரமாண்ட கல் கட்டடமாக மாற்றிக் கட்டும் பணிகளை மேற்கொண்டார். 'நம்மிடம் இருக்கும் அரிய நூல்களைப் பாதுகாக்கும்விதமாக பலமான நூலகக் கட்டடம் ஒன்றையும் கட்டித் தாருங்கள்' என்று பேரரசி சோஃபியா கோரிக்கை வைத்தாள். அதனை ஏற்றுக்கொண்ட மூன்றாம் இவான், அடித்தளத்தில் கற்சுவர்களால் ஆன சுரங்க அறைகள் அமைத்தார். அந்த நூல்களைப் பத்திரமாகப் பாதுகாக்கும்படியான பெட்டகங்களை அமைத்தார்.

மூன்றாம் இவானின் காலத்துக்குப் பிறகு நான்காம் இவான் என்ற Ivan the terrible ஆட்சிக்கு வந்தார். அவர் அந்த நூலகத்தை நன்றாகவே பராமரித்தார். பல்வேறு மொழிகளில் இருந்த நூல்களை, அறிஞர்களைக் கொண்டு ரஷ்ய மொழியில் மொழிமாற்றம் செய்யும் பெரும்பணியை மேற்கொண்டார். இவானின் காலத்தில்தாம், ரஷ்யாவின் முதல் அச்சுப் புத்தகம், The Apostle வெளியானது. எதிரிகள் யாரும் பாதாள நூலகத்தை நெருங்கிவிடாதபடி அதற்குக் கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. சொல்லப்போனால், பிரமாண்ட கிரெம்லின் அரண்மனையில் அந்தப் பாதாள நூலகம் இருந்த இடமே வெகு சிலருக்குத்தான் தெரியும் என்றும் செய்தி உண்டு. யாராவது எதிரிகள் அந்த நூலகத்தைக் கண்டுபிடித்து நெருங்கினால் அவர்களது கண் பார்வை பறிபோய்விடும்படி நான்காம் இவான் ஏற்பாடு செய்திருந்தார் என்றும் கதைகள் உண்டு.

கி.பி.1547-ம் ஆண்டில், அதாவது நான்காம் இவான் ஆட்சிக்கு வந்த வருடத்தில், கிரெம்லினின் அருகே மிகப்பெரிய தீவிபத்து ஒன்று ஏற்பட்டது. ஒரு தேவாலயம், பல நூறு வீடுகள், கருவூலம், நூலகம், ஆயுதக்கி

டங்கு போன்ற பலவும் அதில் நாசமாகின. வெடிமருந்துக் கிடங்கு ஒன்று பலத்தச் சத்தத்துடன் வெடித்துச் சிதறியதால் சேதாரம் அதிகம். அதில் அந்த பாதாள நூலகமும் அழிந்துவிட்டது என்கிறார்கள். இல்லை, நான்காம் இவான் தனது இறுதிக் காலம் வரை அந்த நூலகத்தைப் பாதுகாத்தார் என்றும் சொல்கிறார்கள். சிலரோ, அப்படி ஒரு பாதாள நூலகம் இருந்ததற்கு ஆதாரமே கிடையாது என்கிறார்கள்.

ஓர் உறுதியான ஆதாரம் உண்டு. பத்தொன்பதாம் நூற்றாண்டில் எஸ்டோனியாவின் டோர்பட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் டேப்லோவ் என்பவர், பார்னு நகரத்தின் ஆவணக் காப்பகத்தில் 'Manuscripts Held by the Tsar' என்ற ஆவணத்தைக் கண்டெடுத்தார். அதாவது ரஷ்ய மன்னர்கள் அந்த நூலகத்தில் வைத்திருந்த புத்தகங்கள் எவை எவை என்று சொல்லும் ஆவணம் அது. அதை அங்கேயே பத்திரமாக வைத்த டேப்லோவ், வெளியே சென்று வேறு சில ஆய்வாளர்களை அழைத்து வந்தார். மீண்டும் வந்த பார்த்தபோது அந்த ஆவணம் மர்மமாகக் காணாமல் போயிருந்தது. திரும்பக் கிடைக்கவே இல்லை. முதல் முறை அந்த ஆவணத்தைப் பார்த்தபோது, டேப்லோவ் அதிலிருந்து எடுத்த சில குறிப்புகள் மட்டுமே அந்த நூலகம் இருந்ததற்கான ஒரே சான்று.

பதினேழாம் நூற்றாண்டில் ரஷ்யப் பேரரசராகத் திகழ்ந்த பீட்டர் தி கிரேட், பத்தொன்பதாம் நூற்றாண்டில் ரஷ்யாவின் மீது படையெடுத்த நெப்போலியன் உள்ளிட்ட பலரும் அந்தப் பாதாள நூலகத்தைத் தேடி அலைந்தது வரலாறு. சென்ற நூற்றாண்டில் ரஷ்ய அதிபராகப் பொறுப்பேற்ற ஸ்டாலினும் அந்த நூலகத்தின் ரகசிய இடத்தைக் கண்டுபிடிக்கப் பெரும் முயற்சிகளை மேற்

கொண்டார் என்று செய்திகள் உண்டு. இன்னும் அந்த முயற்சிகள் தொடர்கின்றன. நானூறு ஆண்டுகளுக்கும் மேலாக, பல்வேறு வரலாற்றாளர்கள், ஆய்வாளர்கள், ஆட்சியாளர்கள் பாதாள நூலகத்தைத் தேடியபடியே இருக்கிறார்கள். அப்படி ஒருவேளை நூலகம் கண்டுபிடிக்கப்பட்டாலும் அதில் நூல்களெல்லாம் சிதையாமல் இருக்குமா என்பது கேள்விக்குறியே.

## 16. தம்மாஸேதி மணி!

ஹந்தாவாடி - பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து பதினாறாம் நூற்றாண்டில் பாதி வரை மியான்மரில் (பர்மா) அமைந்திருந்த ஒரு ராஜ்ஜியம். அதன் பதினாறாவது அரசராக கி.பி. 1471-ம் ஆண்டில் அரியணை ஏறியவர் தம்மாஸேதி. ஹந்தாவாடி ராஜ்ஜியத்தின் மிகச்சிறந்த அரசர், இவரது ஆட்சிக்காலம் மியான்மரின் பொற்காலம் என்றெல்லாம் இவரை வரலாறு பதிவு செய்து வைத்துள்ளது.

அரசர் தம்மாஸேதி, தனது ராஜ்ஜியத்தில் எத்தனை மக்கள் வசிக்கிறார்கள் என்று கணக்கெடுத்து வரச்சொல்லி அதிகாரிகள் குழு ஒன்றை அனுப்பினார். அந்த அதிகாரிகள் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பணியை மட்டும் மேற்கொள்ளாமல், அந்த மக்களுக்கு வரிகள் விதித்தனர். அவர்களிடமிருந்து உலோகப் பொருள்களையும் வசூலித்து வந்தனர். அதிகாரிகளின் இந்தச் செயல் அரசருக்குக் கடும்கோபத்தைக் கொடுத்தது. அரசர் எதுவும் தண்டனை விதித்துவிடுவாரோ என்று பயந்த அதிகாரிகள், அவரது கோபத்தைத் தணிக்கும் விதமாக யோசனை ஒன்றை முன்வைத்தனர்.

‘இந்த உலோகத்தை எல்லாம் வைத்து புத்தர் ஆல யத்துக்கு மணி ஒன்றைத் தயார் செய்யலாம். அது நம் ராஜ்ஜிய மக்களின் பங்களிப்புடன் செய்த தெய்வீகச் சின்னமாக விளங்கும்’ என்று அவர்கள் சொன்ன யோச னையை அரசர் ஏற்றுக் கொண்டார்.

சுமார் 300 டன் அளவில் செம்பு உலோகத்தினாலான பொருள்கள் மக்களிடம் இருந்து வசூலிக்கப்பட்டிருந் தன. அதனுடன் சில டன்கள் வெள்ளி, தங்கம், தகரம் போன்ற உலோகங்களையும் சேர்த்து மிகப்பெரிய மணி ஒன்றை கலை அம்சத்துடன் உருவாக்கினார்கள். அந்த மணியை மரகதக்கற்கள், நீலமணிக்கற்கள் கொண்டு அலங்கரித்தார்கள். அதற்கு ‘தம்மாஸேதி மணி’ என்று அரசரின் பெயரே வைக்கப்பட்டது. 294 டன் எடை, சுமார் 18 அடி உயரம், 12 அடி அகலத்துடன் அந்த மணி பிரமாண்டமாக செய்யப்பட்டிருந்தது. மியான்மரின் டாகோன் நகரத்தில் (ரங்கூன், இன்றைய பெயர் யங் கோன்) அமைந்திருந்த உலகின் மிகப்பழைமையான புத்த ஆலயங்களில் ஒன்றான சவேடகன் ஸ்தூபியின் வளாகத்தில் அந்த மணியை நிர்மாணிக்க அரசர் முடிவு செய்தார். ஆலயம், சிங்கட்டாரா மலைக்குன்று மீது அமைந்திருந்தது.

கி.பி. 1484-ம் ஆண்டில் அந்த மணியை நிர்மாணம் செய் வதற்கான தேதி குறிக்கப்பட்டது. ஆனால், ஜோதிடர் ஒருவர், ‘இப்போது காலம் சரியில்லை. இந்த மணியிலி ருந்து ஓசை வராது’ என்று சொன்னார். அந்த ஆண்டி லேயே தம்மாஸேதி மணி அங்கே நிர்மாணம் செய்யப் பட்டது. மணியை அடித்தார்கள். ஆனால், அதிலிருந்து எழும்பிய ஒலி இனிமையானதாக இல்லை.



கி.பி. 1583-ம் ஆண்டில் சவேடகன் ஸ்தூபியைக் காண காஸ்பரோ பால்பி என்ற வெனீசியாவைச் சேர்ந்த வணிகர் ஒருவர் வந்தார். அவர் தனது பயணக்குறிப்பில், தம்மாஸேதி மணியைக் கண்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

'நான் அங்கே மிகப்பெரிய அறை ஒன்றில் பிரமாண்டமான மணியைக் கண்டேன். அந்த மணியில் ஒன்றை ஒன்று ஒட்டினாற்போல பெரிய எழுத்துக்கள் மேலிருந்து கீழ் நோக்கி பொறிக்கப்பட்டிருந்தன. அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.'

சவேடகன் ஸ்தூபிக்கு வெளியே நிர்மாணிக்கப்பட்ட தம்மாஸேதி மணியை, அங்கே உள்ளே ஓர் அறையில் கண்டதாக காஸ்பரோ பால்பி குறிப்பிட்டிருக்கிறார். இடைப்பட்ட நூறு ஆண்டுகளில் அந்த மாற்றம் நடந்திருக்கலாம். கி.பி. 1552-ம் ஆண்டில் ஹந்தாவாடி ராஜ்ஜியம் முடிவுக்கு வந்தது. அதே சமயத்தில் மியான்மரில் ஐரோப்பியர்களின் ஆதிக்கம் மெதுமெதுவாகப் படர ஆரம்பித்தது.

ஃபிலிப் டி பிரிட்டோ இ நிகோட் என்பவர் போர்த்துக்கீசிய தளபதி. கி.பி. 1599-ம் ஆண்டில் மியான்மரின் சில பகுதிகள் மீது படையெடுத்து வென்றார். பர்மிய மன்னர்கள் சிலரைத் தோற்கடித்தார். மியான்மரின் போர்த்துக்கீசிய ராஜ்ஜியம் அமைந்ததாக அறிவித்தார்.

கி.பி. 1608-ம் ஆண்டில் ஃபிலிப் டி பிரிட்டோவின் கண், தம்மாஸேதி மணியின் மீது விழுந்தது. 'இங்கே எதற்கு அநாவசியமாக இவ்வளவு பெரிய மணி? இந்த மணியை உருக்கினால் அந்த உலோகத்தைக் கொண்டு நிறைய பீரங்கிகள், ஆயுதங்கள் செய்யலாமே. ம், இதைக் கழட்டுங்கள்!' - ஃபிலிப் டி பிரிட்டோ கட்டளையிட்டார். சிங்கட்டாரா மலைக்குன்றிலிருந்து, தம்மாஸேதி மணியைக் கஷ்டப்பட்டு உருட்டிக் கீழே கொண்டு வந்தனர். யானைகள் கட்டி இழுக்கும் மரத்தாலான வாகனம் ஒன்றில் மணி ஏற்றப்பட்டது. பாகோ நதியை நோக்கி அதை இழுத்துச் சென்றனர். பாகோ நதியில் ஃபிலிப் டி பிரிட்டோவின் பெரிய படகு காத்திருந்தது. அதனுடன் மிகப் பெரிய மிதக்கும் மரக்கலன் ஒன்று இணைக்கப்பட்டிருந்தது. அதில் மணியை ஏற்றினார்கள்.

படகு கிளம்பியது. நீரின் வேகமான ஓட்டத்தில் மணியைச் சிரமப்பட்டுதான் கொண்டு சென்றார்கள். பாகோ நதி, யாங்கோன் நதி சங்கமித்து ஓடும் நீர்ப்பரப்பில் படகு தடுமாறியது. அதிக எடையைத் தாங்க இயலாது மரக்கலன் சரிந்தது. அதனுடன் படகும் கவிழ்ந்தது. ஆற்றின் நீருக்குள் மணி மூழ்கிப் போனது. உயிர்ச் சேதாரமெல்லாம் இல்லை. ஆனால், ஃபிலிப் டி பிரிட்டோவால் மணியை மீட்க முடியவில்லை. உலகின் மிகப்பெரிய மணியை, பாகோ நதி விழுங்கிக் கொண்டது.

அடுத்த சில ஆண்டுகளிலேயே பர்மிய அரசரான அனாவுக்பெட்லுன் என்பவர் தலையெடுத்தார். ஃபிலிப் டி பிரிட்டோவைப் போரில் வீழ்த்தி, அவரது தலையை எடுத்தார். அவராலும், அவருக்குப் பின் வந்தவர்களாலும் மணியை ஆற்றுக்குள்ளிலிருந்து மீட்டெடுக்க முடியவில்லை.

பர்மாவின் அதிசயமாக விளங்கிய தம்மாஸேதி மணியை, நானூறு ஆண்டுகள் கடந்த நிலையி லும், இன்றைக்கு வரை யாராலும் மீட்டெடுக்க முடி யவில்லை. அது எங்கே விழுந்து காணாமல் போனது என்ற இடத்தைக்கூட கண்டுபிடிக்க முடியவில்லை.

அப்படி ஒரு மணியே செய்யப்படவில்லை. அது பொய். அதனால்தான் அந்த மணியை இத்தனை ஆண்டுக ளாகியும் கண்டுபிடிக்க முடியவில்லை என்பது சிலரது கருத்தாக இருக்கிறது. இல்லவே இல்லை. இந்த நிகழ் வுகள் எல்லாம் ஃபிலிப் டி பிரிட்டோ மணியை அவம தித்ததால் உண்டான சாபம்தான். உலகின் அதிக எடை கொண்ட அந்த தம்மாஸேதி மணியை எப்படியாவது கண்டுபிடித்து, மீண்டும் சவேடகன் ஸ்தூபி வளாகத்தி லேயே நிர்மாணிக்க வேண்டும் என்பது புத்தர் மீது பற்று கொண்ட பெரும்பாலான பர்மியர்களின் ஆசை. அதற் காகவே எக்கச்சக்கமாகச் செலவு செய்து இன்றைக்கும் தேடிக்கொண்டு இருக்கிறார்கள்.

கி.பி. 1810-ம் ஆண்டில் பர்மாவின் மிங்குன் என்ற இடத் தில் அமைந்த புத்த ஸ்தூபியில் உலோக மணி ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. மிங்குன் மணியே, உலகின் அதிக எடை கொண்ட மணியாக இப்போது வரை இருக்கிறது.

## 17. உலகின் மிகப்பெரிய முத்து!

அவர் ஆழ்கடலில் குதித்து முத்துக்குளிக்கும் நபர்தான். ஆனால், அன்றைக்கு என்னவோ தவறாகிவிட்டது. கட லுக்குள் மாட்டிக் கொண்டார். மிகப்பெரிய சிப்பி வகை யான Tridacna என்ற ராட்சஷச் சிப்பிக்குள் அவரது கால் ஒன்று வசமாக சிக்கிக் கொண்டது. மீள முடியவில்லை. நீண்ட நேரம் கழித்து உடன் சென்ற சகாக்கள், அவரது உயிரற்ற உடலை மீட்டுக் கரைக்குக் கொண்டு வந்தார் கள். அவரது காலை அந்தப் பெரிய சிப்பி இறுகக் கவ்வி யிருந்தது.

அது பிலிப்பைன்ஸின் பலாவான் என்ற தீவிலிருக்கும் ப்ரூக்'ஸ் பாயிண்ட் கடல் பகுதி. அந்தத் தீவில் வாழும் பழங்குடி மக்களின் தலைவர், அந்தச் சிப்பியை அகற் றினார். அதை அகலத் திறந்தார். அதனுள் இருக்கும் சதைப்பகுதி எல்லாம் வெட்டி எடுக்கப்பட்டது. உள்ளே பளபளக்கும் வெண்ணிற முத்து ஒன்றைக் கண்டார். அவரது வாய் ஆச்சரியத்தில் சிப்பியைவிட அகலமாகத் திறந்தது. மிகப்பெரிய முத்து. அவ்வளவு பெரிய முத்தை அவர்கள் யாரும் அதுவரை கண்டதில்லை.

அந்த மக்கள் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றியவர்கள். அந்த முத்தின் வளைவிலும் நெளிவிலும் இறைத்தூத

ரான முகம்மது நபியின் முகம் தெரிவதுபோல பழங்குடித் தலைவர் உணர்ந்தார். எனவே அந்த முத்தைப் பத்திர மாகப் பாதுகாக்கத் தொடங்கினார்.

1934. பிலிப்பினோ-அமெரிக்கரான வில்பர்ன் கோப் என்பவர், பெரிய முத்து ஒன்று பலாவான் பழங்குடித் தலைவரிடம் இருக்கிறது என்று கேள்விப்பட்டார். தேடி வந்தார். முத்தைப் பார்த்தார். ஆச்சரியப்பட்டார். நல்ல தொகை சொல்லி விலைக்குக் கேட்டார். 'இது இறை வன் அளித்த முத்து. தியாகத்தின் அடையாளம். இறை வனின் பொருளை ஒருபோதும் பணத்தால் வாங்க முடி யாது' என்று பழங்குடித் தலைவர் மறுத்துவிட்டார்.

சில மாதங்கள் கடந்திருக்கும். பழங்குடித் தலைவ ரது மகன் மலேரியாவால் பாதிக்கப்பட்டான். வில் பர்ன் கோப், அந்தச் சிறுவனுக்கு மருந்துகள் அளித்து மலேரியாவிலிருந்து மீட்டார். நன்றிக்கடனாக பழங்குடித் தலைவர், கோப்புக்கு முத்தைப் பரிசாகக் கொடுத்தார். கோப், மகிழ்ச்சியுடன் அதை எடுத்துக் கொண்டு அமெ ரிக்காவின் நியு யார்க் நகரத்துக்குத் திரும்பினார். இந் தத் தகவல்களை எல்லாம் 1939-ம் ஆண்டில் Natual History என்ற இதழில் எழுதிய ஒரு கட்டுரையில் கோப் குறிப்பிட்டிருக்கிறார். Pearl of Allah என்று பெயரிட்டு அந்த முத்தை, சில காலம் காட்சிக்கும் வைத்திருந்தார். அது 'உலகின் மிகப்பெரிய முத்து' என்று அழைக்கப்பட் டது.

1969-ம் ஆண்டில் Mensa என்ற அமைப்புக்குரிய இத ழில் கோப் இன்னொரு கட்டுரை எழுதினார். அதில் அல்லாவின் முத்து குறித்த கூடுதல் தகவல்களுடன், சீன தேசத்துக் கதை ஒன்றும் புதிதாகச் சேர்ந்திருந்தது. அதென்ன கதை?

சீன தேசத்து செல்வந்தரான லீ என்பவர், நியு யார்க் கண்காட்சியில் அல்லாவின் முத்தைக் கண்டார். துள்ளிக் குதித்தார். விழுந்து வணங்கினார். தன்னிலை இழந்து கண்ணீரும் விட்டார். 'இது அல்லாவின் முத்து' என்றார் கோப். 'இல்லை, இது தொலைந்துபோன லாவோவின் முத்து!' என்றார் லீ.

லாவோ சீ, சீனாவின் முக்கியமான மெய்யியலாளர். கி.மு. 604-ம் ஆண்டில் பிறந்தவர். இவரது தத்துவங்கள் தாவோயிஸம் என்றழைக்கப்படுகிறது. தாவோயிஸக் கோட்பாட்டின் முதன்மையான கடவுளாக லாவோ வணங்கப்படுகிறார். லாவோ, தான் வாழ்ந்த காலத்தில் சிறிய வெண்மை நிற முத்து ஒன்றைக் கண்டெடுத்தார். அதில் புத்தர், கன்பூசியஸ் முகங்களுடன் தனது முகத்தையும் செதுக்கினார். அதை மோதிரம் ஒன்றில் பொருத்தி, 'மூன்று நண்பர்கள்' என்று பெயரிட்டார். பின் லாவோ, அந்த முத்து மேலும் வளர வேண்டும் என்பதற்காக அதைச் சிப்பி ஒன்றில் வைத்து மூடினார். அந்த முத்து வளர வளர வேறு பெரிய சிப்பிகளுக்கு மாற்றிக் கொண்டே இருந்தார்கள். பல நூற்றாண்டுகளுக்குப் பின் மிகப்பெரியதாக வளர்ந்திருந்த அந்த முத்தை, Tridacna வகை ராட்சஷச் சிப்பிக்குள் மாற்றி வைத்து பாதுகாத்தார்கள். அந்த மிகப்பெரிய முத்தை அபகரிக்கும் நோக்குடன் வெவ்வேறு காலகட்டங்களில் போர்களும் நடந்திருக்கின்றன.

லீயின் முன்னோர்கள் லாவோவின் வழியின் வந்தவர்கள். அவர்கள் அந்த முத்துக்கு Pearl of Lao Tzu என்று பெயரிட்டுப் பாதுகாத்து வந்தார்கள். கி.பி. 1750. எதிரிகள் அந்த முத்தை அபகரிக்கத் திட்டமிட்டபோது, லாவோவின் முத்தை சீனாவிலிருந்து கப்பல் ஒன்றில்

ஏற்றி பிலிப்பைன்ஸுக்கு அனுப்பி வைத்தனர். அந்தக் கப்பல் புயலில் சிக்கிக் கடலில் கவிழ்ந்தது.



பலாவான் பழங்குடியினர் அந்த முத்தை ஆழ்கடலில் கண்டெடுக்க, பின் அது கோப் வசம் செல்ல, நியு யார்க்கில் அதை லீ பார்க்க என்று அந்தக் கதைக்கு ஒரு வடிவம் உண்டானது. '$3.5 மில்லியன் தருகிறேன். லாவோ முத்தைத் தந்துவிடுங்கள்' என்று லீ கேட்டதாகவும், கோப் மறுத்ததாகவும் சொல்லப்படுகிறது. பின் அந்த லீ என்ன ஆனார் என்பது தெரியவில்லை.

1979-ம் ஆண்டில் கோப் இறந்து போனார். பீட்டர் ஹாஃப்மேன், விக்டர் பார்பிஷ் என்ற இருவர் லாவோ முத்தை $200000 கொடுத்து வாங்கினர். இதற்காக விக்டர் பார்பிஷ், ஜோசப் போனிசெல்லி என்பவரிடம் குறிப்பிட்ட தொகை கடனும் வாங்கியிருந்தார். அதை ஒழுங்காகத் திருப்பிச் செலுத்தாததால் ஜோசப், விக்டர் மீது வழக்கு பதிவு செய்தார். பல்வேறு இழுபறிகளுக்குப் பிறகு ஒரு முடிவு எட்டப்பட்டது. அதன்படி லாவோவின் முத்தில் பீட்டர் ஹாஃப்மேன், விக்டர் பார்பிஷ் மற்றும் ஜோசப் போனிசெல்லி குடும்பத்தினர் ஆகிய மூவருக்கும் சம உரிமை உண்டு என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சரி, இன்றைக்கும் அல்லாவின் (அ) லாவோவின் முத்து தான் உலகின் மிகப்பெரிய முத்தா?

இல்லை. அது 24 செமீ சுற்றளவும் 6.4 கிலோ எடையும் கொண்டது. 2005 அல்லது 2006 இருக்கலாம். அதே பலாவான் தீவில் ஒரு மீனவர், ஆழ்கடலில் மிகப்பெரிய வெள்ளைக்கல் ஒன்றைக் கண்டெடுத்தார். அது அதிர்ஷ்டக்கல் என்று கருதி தன் வீட்டில் வைத்து சுமார் பத்து வருடங்கள் பாதுகாத்தார். அடிக்கடி வீடு மாற்றிக் கொண்டிருந்த காரணத்தில், அதற்கு மேல் கல்லை வைத்திருக்க வேண்டாமென்று முடிவுசெய்து 2016-ம் ஆண்டில் அந்தக்கல்லை சுற்றுலாத்துறையில் பணியாற்றிய தன் உறவுக்காரப் பெண்ணிடம் கொடுத்தார்.

சிந்தியா என்ற அந்தப்பெண் அது வெள்ளைக்கல் அல்ல. முத்து என்று கண்டுகொண்டார். 34 கிலோ எடை கொண்ட அந்த முத்தின் தோராய மதிப்பு $130 மில்லியன். Pearl of Puerto என்று பெயரிடப்பட்ட அதுவே இன்றைக்கு உலகின் மிகப்பெரிய முத்து.

## 18. மூன்று ஓவியங்கள்!

1992. கலிஃபோர்னியாவின் சான் பெர்னார்டினோ நகரம். டெரி ஹோர்டன் என்ற பெண்மணி பழைய கலைப்பொருள்கள் விற்கும் கடை ஒன்றுக்குச் சென்றார். தன் தோழிக்குப் பிறந்தநாளுக்கு பரிசு ஒன்று வாங்கிக் கொடுக்க நினைத்த அவர், பழைய ஓவியம் ஒன்றைக் கண்டார். அளவில் பெரியதாக இருந்தது. வண்ணங்களால் நிறைந்திருந்தது.

$8 என்று கடைக்காரர் சொல்ல, டெரி பேரம் பேசினார். இறுதியாக அந்த ஓவியத்தை $5 கொடுத்து வாங்கி வந்தார். தன் தோழிக்குப் பரிசளித்தார். தோழிக்கு ஓவியம் மிகவும் பிடித்திருந்தாலும், 'மன்னித்துக் கொள். என் வீட்டுச் சுவற்றில் இவ்வளவு பெரிய ஓவியத்தை மாட்ட இடமில்லை. எனவே நீயே இதை வைத்துக் கொள்' என்று சொல்லி டெரியிடமே திருப்பியளித்துவிட்டார்.

டெரியும் அந்த ஓவியத்தை தன் வீட்டில் ஒரு மூலையில் போட்டு வைத்துவிட்டார். ஒருநாள் ஓவிய ஆசிரியர் ஒருவர் டெரியின் வீட்டுக்கு வந்தார். அந்த பழைய ஓவியத்தைப் பார்த்தார். 'ஜாக்சன் போலாக் ஓவியமா இது?' என்று அவர் கேட்க, டெரிக்கு ஒன்றும் புரியவில்லை.

ஜாக்சன் போலாக், இருபதாம் நூற்றாண்டில் அமெரிக்காவில் வாழ்ந்து மறைந்த மிக முக்கியமான ஓவியர். வண்ணங்களை விசிறியடித்து ஓவியங்களைத் தீட்டுவதில் வல்லுநர். அவருடைய ஓவியங்கள் பலவும் பல மில்லியன் டாலர்களுக்கு விலை போயிருக்கின்றன.

‘இதன் மதிப்பு நிச்சயம் 50 மில்லியன் டாலராவது இருக்கும்’ என்று அந்த ஓவிய ஆசிரியர் சொன்னபோது, டெரி ஆச்சரியத்தில் வாய்பிளந்தார். ஓவியங்களை ஆராய்ந்து அவை அசல்தானா என்று நிரூபிக்கும் வல்லுநர் ஒருவரை டெரி வரவழைத்தார். அந்த வல்லுநர் ஓவியத்தில் ஜாக்சன் போலாக்கின் விரல் ரேகைப் பதிவு இருப்பதை உறுதி செய்தார். விஷயம் வெளியில் தெரிந்ததும், இரண்டு மில்லியன் தருகிறேன், ஐந்து மில்லியன் தருகிறேன் என்று கலை ஆர்வலர்கள் ஓவியத்தை விலைக்குக் கேட்டு வந்தார்கள்.

டெரி ஒப்புக்கொள்ளவே இல்லை. ஐந்து டாலருக்குத் தான் வாங்கிய ஓவியத்தை ஐம்பது மில்லியன் டாலருக்குக் குறைவாக விற்கவே மாட்டேன் என்று தன்னுடனேயே வைத்துக் கொண்டார்.

*

அன்றைக்கு அந்த அமெரிக்கர், மாஸ்டர்பீஸ் என்ற போர்ட் கேம் விளையாடிக் கொண்டிருந்தார். ஓவியங்களை ஏலம் கேட்பது, ஏலம் விடுவது என்பது அந்த விளையாட்டின் அடிப்படை. அப்போது ஒரு கார்டில் ஓர் ஓவியத்தைக் கண்டார். பொன்னிற வெல்வெட் துணி ஒன்றில், வெள்ளை நிற மேக்னோலியா மலர்கள் வைக்கப்பட்டிருப்பது போன்ற ஓவியம். இதை எங்கேயோ பார்த்திருக்கிறேனே என்று யோசித்தபோது, பளிச்சென

தனது வீட்டில்தான் அதே போன்ற ஓவியம் தொங்க விடப்பட்டிருப்பது நினைவுக்கு வந்தது.

வீட்டுச் சுவரில் ஓட்டை விழுந்திருந்தது. அதைச் சரி செய்ய அதிகம் செலவு செய்ய வேண்டியதிருக்கும் என்று யோசித்த அந்த அமெரிக்கர், பழைய பொருள் கள் விற்கும் கடை ஒன்றில் $29 விலையில் அந்த மேக்னோலியா மலர்கள் ஓவியத்தை வாங்கித் தொங்க விட்டிருந்தார். பல வருடங்களாக வீட்டுச் சுவரின் ஓட் டையை அந்த ஓவியம் மறைத்துக் கொண்டிருந்தது.

'இது என்ன ஓவியம்?' என்று கேட்டார் அவர். உடன் விளையாடிக் கொண்டிருந்த விவரமறிந்த நண்பர், Magnolias on Gold Velvet Cloth என்றார். பத்தொன்ப தாம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற அமெரிக்க ஓவி யரான மார்ட்டின் ஜான்ஸன் ஹெடெ என்பவர் வரைந் தது. அவர், பல்வேறு விதமான பூக்களைத் தத்ரூபமாக வரைவதில் கில்லாடி.

தன் வீட்டில் இருப்பது அசல் மேக்னோலியா மலர்கள் ஓவியமா என்று அறிய மான்ஹட்டன் நகரத்திலிருக்கும் கென்னடி அருங்காட்சியகத்துக்கு ஓவியத்தின் புகைப் படங்களை மெயிலில் அனுப்பினார் அந்த அமெரிக்கர். அது அசல் ஓவியம் என்று நிரூபிக்கப்பட்டது. ஹவுஸ் டன் நகரத்திலிருக்கும் அருங்காட்சியத்தைச் சேர்ந்த வர்கள், அந்த மேக்னோலியா மலர்கள் ஓவியத்தை வாங்கிக் கொண்டார்கள்.



பழைய கடையில் $29 விலையில் வாங்கப்பட்ட அந்த ஓவியம், பல ஆண்டுகள் வெறுமனே சுவற்றின் ஓட்டையை மறைக்கப் பயன்படுத்தப்பட்ட அந்த ஓவியம், இறுதியில் $1.25 மில்லியனுக்கு விலைபோனது. அந்த நபர், அந்தப் பணத்தைக் கொண்டு வீட்டின் சுவர் ஓட்டையைச் சரிசெய்து கொண்டார்.

*

1911, ஆகஸ்ட் 12 அன்று, ஓவியரான லூயிஸ் பிரவுட் என்பவர் பாரிஸின் லூவர் அருங்காட்சியத்துக்குச் சென்றார். லியானார்டோ டா வின்சியால் வரையப்பட்ட உலகப்புகழ்பெற்ற ஓவியமான மோனா லிசா அங்குதான் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. அன்றைக்கு லூயிஸ் சென்று பார்த்தபோது ஓவியம் தொங்கிக் கொண்டிருந்த இடத்தில் வெறும் ஆணிகளே இருந்தன. மோனா லிசா ஆகஸ்ட் 11 அன்றே திருடப்பட்டிருந்தது.

அன்றைக்கு ஓவியத்தைப் புகைப்படம் எடுக்க சிலர் வந்து போயிருந்தார்கள். அவர்கள் திருடியிருப்பார்களோ என்ற சந்தேகம் எழுந்தது. ஒரு கவிஞர், இன்னொரு ஓவியர் என்று பலர் மீதும் சந்தேக வலை வீசப்பட்டது. ஆனால், அவர்கள் யாருமே திருடவில்லை என்று போலீஸ் விசாரணையில் தெரிய வந்தது. அருங்காட்சியகம் தாற்காலிகமாக மூடப்பட்டது. சந்தேகத்தின் பெயரில் பலரும் விசாரிக்கப்பட்டனர்.

இரண்டாண்டுகள் தேடலில் மோனா லிசா சிக்க வில்லை. இனி மோனா லிசா கிடைக்கவே மாட்டாள் என்று பிரெஞ்சு மக்கள் பெரும் துக்கத்தில் இருந்தனர். அப்போது பிரான்ஸின் இன்னொரு அருங்காட்சியகத் தில் மோனா லிசா ஓவியத்தை ரகசியமாக விலைபேசி விற்க வந்த வின்செஸோ என்பவர் பிடிபட்டார். அவர், லூவர் அருங்காட்சியத்தில் துப்புரவுத் தொழிலாளியாகப் பணியாற்றியவர். ஓவியத்தைத் திருடி, அதைப் பெரும் தொகைக்கு விற்பனை செய்ய இயலாமல், தன் வீட் டிலேயே இரண்டாண்டுகள் மறைத்து வைத்திருந்தார். பொறுமை இழந்து அதை விற்க முற்பட்டபோது மாட்டிக் கொண்டார்.

வின்செஸோவிற்கு ஆறு மாதங்கள் கடுங்காவல் தண் டனை விதிக்கப்பட்டது. இத்தாலியிலும் பிரான்ஸிலும் சில இடங்களில் காட்சிக்கு வைக்கப்பட்ட மோனா லிசா ஓவியம், 1913-ல் மீண்டும் லூவர் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டது.

இன்றைக்கும் அதே அருங்காட்சியகத்தில், குண்டு துளைக்காத கண்ணாடிப் பெட்டிக்குள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் அசல் மோனா லிசாவை, வருடந் தோறும் சுமார் 60 லட்சம் பேர் பார்வையிட்டுச் செல்கின் றனர். சுமார் 500 ஆண்டுகள் பழைமையான இந்த ஓவி யம் பிரான்ஸ் அரசுக்குச் சொந்தமானது. இதன் விலை மதிப்பிட முடியாதது.

## 19. துட்டன்காமனின் கத்தி!

ஹோவர்ட் கார்டெர், பிரிட்டனைச் சேர்ந்த தொல்பொருள் ஆய்வாளர். அவரது வாழ்வில் பெரும்பாலான ஆராய்ச்சிகளை எகிப்தில் மேற்கொண்டவர். 1922-ம் ஆண்டில் எகிப்தின் நைல் நதியோரம் இருக்கும் தீப்ஸ் பகுதியில் ஹோவர்ட் தனது ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருந்தார். சில வாரங்கள் தேடலில் எதையும் கண்டறிய இயலவில்லை. அங்கிருந்து கிளம்பலாம் என்று முடிவெடுத்தார்கள். தங்குவதற்காகப் போடப்பட்டிருந்த கூடாரங்களை எல்லாம் கலைத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கே தண்ணீர் சுமந்து வந்த எகிப்தியச் சிறுவன் ஒருவன், கல் ஒன்று தட்டிக் கீழே விழுந்தான்.

என்ன கல் இது என்று குழுவினர் அந்தப் பகுதியைக் கொஞ்சம் தோண்டினர். அது வெறும் கல் அல்ல. கீழிறங்கிச் செல்லும் படிக்கட்டின் ஒரு பகுதி என்பதைக் கண்டுகொண்டனர். அந்தப் படிக்கட்டுகளை மேலும் தோண்டச் செய்த ஹோவர்ட், பழைமையான எகிப்திய ஓவிய எழுத்துக்கள் கொண்ட கல்வெட்டு ஒன்றைக் கண்டார். நிச்சயம் இது ஓர் அரசரின் கல்லறையாகத்தான் இருக்க வேண்டும் என்று உணர்ந்த ஹோவர்ட்,

லார்ட் கார்னர்வோனுக்கு இதுகுறித்துத் தகவல் அனுப் பினார்.

கார்னர்வோன் பிரிட்டனின் பெரும் பணக்காரர். ஹோவர்டின் ஆராய்ச்சிக்கு நிதி உதவி செய்து கொண் டிருந்தார். அவர் இரண்டு வாரங்களுக்குப் பிறகு அங்கே வந்து சேர்ந்தார். ஹோவர்ட், கார்னர்வோன் தலைமை யில் அவர்களது குழுவினர் அந்தப் பகுதியைத் தோண்ட ஆரம்பித்தனர். கதவு ஒன்று புலப்பட்டது. அதைத் திறந்து உள்ளே செல்ல பயந்தார்கள். காரணம், 'இந்தக் கல்லறையைத் திறந்து செல்பவர்கள், சிங்கம், முதலை, நைல் நதியில் வாழும் குதிரையால் மரணமடைவார் கள்' என்று அங்கே மிரட்டலான ஒரு குறிப்பு எழுதப் பட்டிருந்தது. எகிப்தியச் சிறுவன் ஒருவனை உள்ளே அனுப்பினார்கள். தள்ளினார்கள் என்று சொன்னாலும் தப்பில்லை. நடுக்கத்துடன் உள்ளே சென்ற அவன், உயிரோடு திரும்பி வந்தான். பின்பு, ஹோவர்ட், கார்னர் வோன் குழுவினர் தைரியத்தை அந்தச் சிறுவனிடமி ருந்து கடன் வாங்கிக் கொண்டு உள்ளே சென்றார்கள். அது ஏராளமான புதையல்களைக் கொண்டிருந்த ஓர் எகிப்திய அரசரின் கல்லறையே. அந்த அரசரின் பெயர், துட்டன்காமன்.

கி.மு. 1333 முதல் 1324 வரை ஆட்சி செய்த எகிப் தின் பதினெட்டாவது வம்ச அரசன், துட்டன்காமன். தனது ஒன்பதாவது வயதிலேயே பதவியேற்ற அவன், 19வது வயதில் இறந்து போனான். மோசமான எலும்பு முறிவு, கடுமையான மலேரியா என்று இறப்புக்குச் சில காரணங்கள் முன் வைக்கப்படுகின்றன. எகிப்திய மக் கள், தங்கள் அரசர்களைக் கடவுளாக வழிபடும் நம் பிக்கை கொண்டவர்கள். இறப்புக்குப் பிறகு அந்த அர சர்கள் தங்களது 'மறுவாழ்வில்' சகல வசதிகளுடனும்

வாழ வேண்டும் என்பதற்காக ஏராளமான செல்வங்களையும் நகைகளையும் பொருள்களையும் கல்லறைக்குள் வைத்து புதைக்கும் வழக்கம் வைத்திருந்தார்கள். அப்படித்தான் துட்டன்காமனின் உடலும் நீண்ட காலம் கெட்டுப்போகாதபடி 'மம்மி' ஆக்கப்பட்டது. ஏராளமான செல்வங்களுடன் அவரது உடல் புதைக்கப்பட்டு அந்தப் பிரமிடு உருவாக்கப்பட்டது.

பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளில் எகிப்தில் ஏராளமான தொல்பொருள் ஆய்வாளர்களும், புதையல் வேட்டைக்காரர்களும் பிரமிடுகளைத் தேடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். ஏனென்றால் கிடைக்கும் செல்வத்தில் பாதியை, அதைக் கண்டெடுப்பவர்களே வைத்துக் கொள்ளலாம் என்று அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இன்னொரு பக்கம், கொள்ளையர்களும் பிரமிடுகளைக் கண்டறிந்து சூறையாடிக் கொண்டிருந்தனர். இப்படிப்பட்ட சூழலில்தான் சுமார் 3200 வருடப் பழைமையான, துட்டன்காமனின் கல்லறை, ஹோவர்டால் கண்டுபிடிக்கப்பட்டுத் திறக்கப்பட்டது. எகிப்தில் கண்டறியப்பட்டதிலேயே முழுமையான, முக்கியமான கல்லறை இது.

சரி, துட்டன்காமனின் கல்லறையில் கண்டெடுக்கப்பட்ட செல்வங்கள் என்னென்ன?

துட்டன்காமனின் கல்லறை முகமூடி. அதாவது புதைக்கப்படும் எகிப்து அரசர்களின் முகங்களை உலோகத்தில் அழகான முகமூடியாகச் செதுக்கி, மம்மியின் மீது வைத்துப் பொருத்தி, சவப்பெட்டியை மூடிவிடுவார்கள். துட்டன்காமனின் முகமூடி முழுவதும் தங்கத்தால் ஆனது.

குள்ளநரியின் முகம் கொண்ட அனுபிஸ் என்ற கடவுள் சிலை. கல்லறைகளை இந்தக் கடவுளே பாதுகாப்பார் என்பது எகிப்தியர்களின் நம்பிக்கை. துட்டன்காமனின் முக வடிவம் கொண்ட நான்கு ஜாடிகள். இவை ஒவ் வொன்றிலும் அரசரது உள்ளுறுப்புகள் பத்திரப்பட்டன. மறுபிறவியில் அரசர் அந்த உறுப்புகளைப் பொருத்திக் கொள்வார் என்பது அவர்களது நம்பிக்கை.



எகிப்து வெப்பம் நிறைந்த தேசமல்லவா. கல்லறைக் குள்ளும் வியர்க்குமல்லவா. எனவே தங்கத்தாலான, கலைநயமிக்க விசிறி ஒன்றும் அங்கே வைக்கப்பட்டி ருந்தது. செனட் என்ற சதுரங்கம் போன்ற விளையாட் டுப் பலகையும், அதற்கான காய்களும் வைக்கப்பட்டி ருந்தன. எகிப்தியர்கள் வலிமையின் அடையாளமாகக் கருதியதும், எகிப்திய அரசர்கள் விரும்பி வளர்த்த செல் லப்பிராணியும் சிறுத்தைதான். துட்டன்காமனின் கல் லறையில் தங்கத்தாலான சிறுத்தையின் தலை ஒன்று வைக்கப்பட்டிருந்தது.

பூமராங் போன்ற வளைந்த கம்புகளை ஒன்றை பற வைகளை வேட்டையாட எகிப்தியர்கள் பயன்படுத்தி னர். அவையும் கல்லறையில் இருந்தன. இந்தப் பிர பஞ்சத்தை, இந்த உலகத்தை, உயிர்களை, மனித இனத்தை எல்லாம் படைத்ததாக எகிப்தியர்கள் வழிப டும் நீலத்தொப்பி அணிந்த ப்டா என்ற கடவுளின் சிலை

அங்கே இருந்தது. வேறு சில கடவுள்களின் சிலைகளும் இருந்தன. அரசர் அமர்வதற்குத் தங்கத்தாலான அரியணை ஒன்றும், நகர்வலம் செல்ல தங்கத்தாலான ரதம் ஒன்றும் வைக்கப்பட்டிருந்தன.

பளிங்குக்கல்லில் செதுக்கப்பட்ட அலங்கார வேலைப்பாடுகள் அமைந்த நறுமணத் திரவியம் நிரப்பும் ஜாடி ஒன்றும் இருந்தது. துட்டன்காமனின் தங்கத்தாலான காலணி அங்கே வைக்கப்பட்டிருந்தது. தவிர, அவனது கால் விரல்கள் ஒவ்வொன்றின் மீதும் தங்கத்தாலான அச்சுகள் பொருத்தப்பட்டிருந்தன.

இவை தவிர ஓவியங்கள், கலைப்பொருள்கள், ஏராளமான நகைகள், ஆயுதங்கள் போன்றவை கல்லறையில் கண்டெடுக்கப்பட்டன. ஆயுதங்களில் அலங்கார வேலைப்பாடுகள் அமைந்த இரண்டு கத்திகள் இருந்தன. அதில் துட்டன்காமனின் சவப்பெட்டியில் வைக்கப்பட்டிருந்த ஒரு கத்தி தனித்துவமாகத் தெரிந்தது. 35 செ.மீ. நீளம் கொண்டிருந்த அந்தக் கத்தி நிக்கல், கோபால்ட் போன்ற உலோகங்களைக் கொண்டிருந்தது. விண்கல்லின் துண்டிலிருந்து அந்தக் கத்தி செய்யப்பட்டிருப்பதாக ஆய்வாளர்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு கண்டுபிடித்துள்ளனர். இதை நிரூபிக்கும்விதமாக 'வானத்திலிருந்து உலோகம் வந்தது' என்று எகிப்தியர்களின் பண்டைய நூல் ஒன்றில் குறிப்பும் காணப்படுகிறது. இத்தனை ஆயிரம் ஆண்டுகள் ஆகியும் துட்டன்காமனின் விண்கல் கத்தி துருப்பிடிக்கவில்லை. அப்போதே உலோகத்தை வார்க்கும் தொழில்நுட்பத்தில் எகிப்தியர்கள் சிறந்து விளங்கியதை இந்தக் கத்தி உறுதி செய்கிறது.

துட்டன்காமன் கல்லறையில் எடுக்கப்பட்ட பொக்கிஷங்கள் பலவும் கெய்ரோ நகர அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. சரி, உங்களுக்கு ஏலியன்கள் பிடிக்குமென்றால் இறுதியாக ஒரு தகவல். நிரூபிக்கப்படாத தகவல்தான்.

எகிப்தியர்களுக்கும் ஏலியன்களுக்கும் தொடர்பு இருந்தது. வேற்றுக்கிரகத்திலிருந்து எகிப்துக்கு வந்த ஏலியன்களே, அரசர் துட்டன்காமனுக்கு அந்தக் கத்தியைப் பரிசாக வழங்கினார்கள்.

## 20. மெர்ச்செண்ட் ராயல்!

அவள் பெயர் மெர்ச்செண்ட் ராயல். இங்கே 'அவள்' என்றால் கப்பல். நதிகளுக்கும் புயல்களுக்கும் பெண் பெயர்களைச் சூட்டுவதுபோல, கப்பல்களையும் பெண்பாலாகத்தான் கருதினார்கள். மெர்ச்செண்ட் ராயல், பிரிட்டனின் வணிகக்கப்பல். லண்டனில் டெப்ட்ஃபோர்ட் டாக்யார்ட் என்ற நிறுவனத்தால் கி.பி. 1627-ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. பெருங்கடல்களைக் கடந்து சென்று தங்கத்தையும் வெள்ளியையும், பிற செல்வங்களையும் அள்ளி வருவதற்காகவே உருவாக்கப்பட்ட கப்பல் என்பதாலேயே 'மெர்ச்செண்ட் ராயல்' என்று மதிப்புடன் பெயரிட்டார்கள்.

ஐரோப்பிய தேசங்கள் ஒவ்வொன்றும் 'யார் பெரியவன்?' என்ற கர்வத்துடன் ஒன்றுக்கொன்று மூர்க்கத்துடன் அடித்துக் கொண்டிருந்த காலகட்டம் அது. குறிப்பாக, கடல் கடந்து கப்பல்களை அனுப்பி பிற கண்டங்களில் புதிய காலனிகளை அமைப்பதிலும், அங்கிருந்து செல்வங்களைக் கொள்ளையடித்து வருவதிலும் கரடுமுரடாகப் போட்டிப் போட்டுக் கொண்டிருந்தன. பிரிட்டனுக்கும் ஸ்பெயினுக்கும் அந்தப் போட்டியும், அது சார்ந்த அரசியல் பகையும் நிறையவே உண்டு. ஆனால், அவை

இரண்டும் 1630-களில் நட்பு நாடாக இருந்தன. பிரிட்டன் காலனி அமைத்திருந்த பகுதிகளில் ஸ்பெயின் வணிகம் செய்தது. ஸ்பெயினின் காலனி நாடுகளில் பிரிட்டன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டது.

அப்படிப்பட்ட ஒரு சுமுகமான சூழலில்தான், அதாவது கி.பி. 1637-ல் மெர்ச்செண்ட் ராயல், மேற்கு இந்தியத் தீவுகளில் வணிக நோக்கில் நங்கூரமிட்டிருந்தது. அப்போது அந்தத் தீவுகள் ஸ்பெயினின் கட்டுப்பாட்டில் இருந்தன. 1640-ம் ஆண்டில் மெர்ச்செண்ட் ராயல் கிளம்பத் தயாரானது. அதில் ஏகப்பட்ட செல்வங்கள் (தங்கக்கட்டிகள் மற்றும் வெள்ளிக்கட்டிகள், நாணயங்கள்) ஏற்றப்பட்டன. அது லண்டனை நோக்கிக் கிளம்பியது. உடன் அதன் தங்கைக் கப்பலாக டோவர் மெர்ச்செண்ட் என்ற சிறிய கப்பலும் சென்றது.

வட அட்லாண்டிக் பெருங்கடலில் பயணம். காற்று, புயல், மழை, மோசமான வானிலை அனைத்தையும் தாங்கிக் கொண்டு இலக்கை வெற்றிகரமாக அடைய வேண்டும். ஆனால், ஆங்காங்கே கசிவுகள் இருந்ததால், மெர்ச்செண்ட் ராயல் கொஞ்சம் பலவீனமாகத்தான் இருந்தது. கேப்டன் லிம்ப்ரே, அதைப்பற்றி பெரிதாகக் கவலைப்படாமல், கசிவுகளைத் தாற்காலிகமாகப் பழுது பார்த்து விட்டுக் கிளம்பியிருந்தார்.

சில மாதங்கள் பயணம் செய்து வட அட்லாண்டிக் பெருங்கடலை மெர்ச்செண்ட் ராயலும், அதன் தங்கை டோவர் மெர்ச்செண்டும் கடந்தன. ஸ்பெயினின் காடிஸ் துறைமுகத்தில் சில நாள்கள் இளைப்பாறின. அடுத்தகட்டப் பயணத்துக்கான உணவு, நீர் போன்றவற்றை நிரப்பிக் கொண்டிருந்தார்கள். முந்தைய கடினமான பயணத்தால் மெர்ச்செண்ட் ராயலில் கசிவுகள் அதிகமாயி

ருந்தன. கேப்டன் லிம்ப்ரே அப்போதும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. பெருங்கடலையே கடந்த அவள், லண்டனையும் சிரமமின்றி அடைந்துவிடுவாள் என்று நம்பினார்.

அப்போது கேடிஸ் துறைமுகத்தில் நின்று கொண்டிருந்த ஸ்பெயினின் கப்பல் ஒன்று திடீரென தீ விபத்துக்கு உள்ளானது. கேப்டன் லிம்ப்ரேவை, ஸ்பெயின் அதிகாரிகள் அணுகினர். 'கேப்டன், பெல்ஜியத்தின் ஃப்ளாண்டர்ஸ் நகரத்தில் சுமார் 30,000 ஸ்பானிய வீரர்கள் பணியில் இருக்கிறார்கள். அவர்களுக்கான சம்பளத்தை நாங்கள் அனுப்புவதாக இருந்த கப்பல் தீக்கிரையாகிவிட்டது. தாங்கள் அந்த நாணயங்களையும், வேறு சில சரக்குகளையும் பெல்ஜியத்தின் அண்ட்வெர்ப் துறைமுகத்தில் சேர்த்துவிட முடியுமா?'

கேப்டன் லிம்ப்ரே பெருந்தன்மையுடன் ஒப்புக்கொண்டார். காரணம், அந்தச் சரக்குகளை ஏற்றிச் செல்வதற்கு ஸ்பெயின் நல்ல வாடகை கொடுக்கும். வந்தவரைக்கும் தன் ராஜ்ஜியத்துக்கு லாபம்தானே!

700 டன் வரைக்கும் சரக்கு ஏற்றும் வலிமை கொண்டது மெர்ச்செண்ட் ராயல். கேடிஸில் ஸ்பெயினின் சரக்குகளையும் ஏற்றியபிறகு, அதைவிட அதிக எடையுடன் இருந்ததா என்பது தெரியவில்லை. கேடிஸில் இருந்து மெர்ச்செண்ட் ராயலும், டோவர் மெர்ச்செண்டும் கிளம்பின. இங்கிலாந்தின் தென்முனையான கார்ன்வெல் கடல்பகுதியை அடைந்தன.

கி.பி. 1641, செப்டெம்பர் 23. கார்ன்வெல்லின் மேற்குப்பகுதியான லேண்ட்'ஸ் எண்ட் கடல் பகுதி. மிக மோசமான வானிலை. கடல் கொந்தளிப்பு. தத்தளித்த மெர்ச்செண்ட் ராயலில் கடல் நீர் கட்டுப்பாடின்றிப் புக

ஆரம்பித்தது. சில பாகங்கள் உடைய ஆரம்பித்தன. அதிலுள்ள சரக்குகளை உடனே டோவர் மெர்ச்சென் டுக்கும் மாற்றவெல்லாம் கொஞ்சமும் அவகாசம் இருக் கவில்லை. மெர்ச்செண்ட் ராயல் மூழ்க ஆரம்பித்தது. கேப்டன் லிம்ப்ரே வேறு வழியின்றிக் கப்பலைக் கைவி டச் சொன்னார். ஒரு சிறு படகு மெர்ச்செண்ட் ராயலில் இருந்து கடலுக்குள் இறக்கப்பட்டது. கேப்டன் உள்பட பலரும் வேகவேகமாக அதில் ஏறினார்கள். அந்தப் படகு தள்ளாட்டத்துடன் டோவர் மெர்ச்சென்டை நோக்கி நகர்ந்தது. கேப்டன் லிம்ப்ரேவின் கண் முன்னாலேயே ஏகப்பட்ட செல்வங்கள் நிரம்பிய மெர்ச்செண்ட் ராயல் கடலுக்குள் மூழ்கியது.

கேப்டனுடன் 40 பேர் உயிர் பிழைத்திருக்க, குழு வின் மீதி 18 பேர் நீரில் மூழ்கி இறந்து போயிருந் தார்கள். வெறும் கையுடன் லண்டனுக்கு வந்து சேர்ந் தார் லிம்ப்ரே. அப்போதைய இங்கிலாந்து அரசர் முத லாம் சார்லஸின் குறிப்புகளைக் கொண்டு மெர்ச்செண்ட் ராயலில் எவ்வளவு செல்வங்கள் இருந்தன என்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

ஒரு லட்சம் பவுண்ட் தங்கம். அதன் இன்றைய மதிப்பு அமெரிக்க டாலரில் 1.5 பில்லியன். 400 மெக்ஸிகன் வெள்ளிக் கட்டிகள். இன்றைய மதிப்பு அமெரிக்க டால ரில் ஒரு மில்லியன். அப்புறம் கேடிஸில் ஏற்றப்பட்ட ஐந்து லட்சம் pieces of eight என்றழைக்கப்பட்ட ஸ்பெயின் ராஜ்ஜியத்தின் வெள்ளி நாணயங்கள். கொஞ்சம் தங்க நாணயங்கள். இதெல்லாம் சேர்த்து வைத்துப் பார்க்கும் போது உலக வரலாற்றில் இதுவரை கடலில் மூழ்கிய கப்பல்களில் மெர்ச்செண்ட் ராயலின் இருந்த செல்வங்க ளின் மதிப்புதான் மிக மிக அதிகம்.

ஆனால், இப்போது வரை மெர்ச்செண்ட் ராயல் மூழ்கிய இடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்பது வரலாற்றுச் சோகம். பல நூற்றாண்டுகளாகப் பல்வேறு நபர்கள் கார்ன்வெல் கடல்பகுதியில் மெர்ச்செண்ட் ராயலைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். தேடிக்கொண்டே இருக்கிறார்கள். இரண்டு குறிப்பிட்ட சம்பவங்களைச் சொல்லலாம்.

2007-ம் ஆண்டில் ஒடிஸி மெரைன் எக்ஸ்ப்ளோரேசன் என்ற அமெரிக்க நிறுவனத்தினர் Black Swan Project என்ற பெயரில் 500 மில்லியன் அமெரிக்க டாலர்களைச் செலவு செய்து கார்ன்வெல் கடல் பகுதியில் பிரமாண்ட தேடலை மேற்கொண்டனர். ஆழ்கடலில் ஒரு கப்பலைக் கண்டறிந்தனர். அது மெர்ச்செண்ட் ராயல் தான் என்று நம்பினர். அந்தக் கப்பலின் சிதிலங்களில் இருந்து ஏகப்பட்ட வெள்ளி மற்றும் தங்க நாணயங்களை மீட்டெடுத்தனர். பின்புதான் அது கி.பி. 1804-ல் மூழ்கிப் போன ஸ்பெயின் கப்பலான Nuestra Señora de las Mercedes என்பது தெரிய வந்தது. 2009-ம் ஆண்டில் டிஸ்கவரி சேனலும் Treasure Quest என்ற நிகழ்ச்சிக்காக மெர்ச்செண்ட் ராயலைத் தேடும் கடும் முயற்சியை மேற்கொண்டு தோல்வியைச் சந்தித்தது.

2019, மார்ச்சில் கார்ன்வெல் கடல்பகுதியில் ஒரு மீன்பிடிக் கப்பலின் வலையில் நங்கூரம் ஒன்று சிக்கியது. அதை வெளியே எடுத்தார்கள். ஆய்வு செய்து பார்த்ததில் அது நிச்சயம் பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கப்பலின் நங்கூரம்தான் என்று கண்டறியப்பட்டது. அதன் வடிவத்தை வைத்து மெர்ச்செண்ட் ராயலின் நங்கூரமாக இருக்க அதிக வாய்ப்புகள் இருக்கிறதென ஆய்வாளர்கள் உறுதியாக நம்புகின்றனர்.

இப்போதைக்கும் நங்கூரம் மட்டும் கிடைத்திருக்கிறது.

## 21. டெரகோட்டா வீரர்கள்!

அந்தக் காலத்தில் வாழ்ந்த சீன மன்னர்களும் அவரது குடும்பத்தினரும், இறப்புக்குப் பிறகான வாழ்க்கை குறித்து மிகவும் கவலைப்பட்டிருக்கிறார்கள். உயிரோடு இருக்கும்போது, வாழ்ந்த சுகபோக வாழ்க்கைக்கு, இறந்த பின்பு இம்மியளவும் பங்கம் வந்துவிடக்கூடாது என்று அதிகம் யோசித்திருக்கிறார்கள். எனவே சீன மன்னர்கள், மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், அமைச்சர்கள் எல்லாம் உயிருடன் இருக்கும்போதே, தங்கள் மேற்பார்வையிலேயே தக்க வசதிகளுடன் தங்களுக்கான கல்லறைகளைக் கட்டிக் கொண்டார்கள். அவற்றைக் 'கல்லறை' என்று சொல்லாமல் 'இறப்புக்குப் பிறகு வாழும் அரண்மனை' என்றுதான் சொல்ல வேண்டும். ஒவ்வொன்றுமே பிரம்மாண்டமானவை.

உதாரணத்துக்கு, சீனாவின் சாங் பேரரசை ஆண்ட பல்வேறு மன்னர்களின் கல்லறைகளை எட்டிப் பார்ப்போம். ஒவ்வொரு கல்லறையும் சில ஏக்கர்கள் பரப்பளவு கொண்டவை. நிலத்துக்கு மேலாக ஓர் அரண்மனை, நிலத்துக்குள் ஒரு பாதாள அரண்மனை என்று உருவாக்கப்பட்டவை. பூமிக்கு மேலும் கீழும் தலா பத்தடி உயரத்தில் எழுப்பப்பட்ட வலிமையான சுவர்கள். நான்கு

பக்கத்திலும் நான்கு 'தெய்வீக' வாசல்கள். அவற்றைப் பாதுகாக்கும் கற்சிலை சிங்கங்கள். தீய சக்திகளை சிங் கங்கள் விரட்டியடிக்கின்றன என்பது சீனர்களது நம் பிக்கை. அந்தப் பகுதியெங்கும் பைன் மரங்கள். அந்த மரங்கள் ஆயுளை அதிகரிக்கும் சக்தியுடையவை என்று நம்பினார்கள்.

அந்தப் பாதாள உலகில் மன்னர், நகர்வலம், வாக்கிங், ஜாக்கிங் போவதற்கு எல்லாம் தனித்தனிப் பாதைகள் பக்காவாக அமைக்கப்பட்டிருந்தன. தவிர, ஓய்யாரமாக அமர்ந்து ஆட்சி செய்யும் அரசவை, உல்லாசமாகப் படுத்துத் தூங்கும் படுக்கையறை முதல் உச்சா - கக்கா போவதற்கான அறைகள் வரை எல்லாமே தனித்தனி யாகக் கட்டப்பட்டிருந்தன. நிலத்தினுள் சுமார் 30 மீட் டர் ஆழத்தில் நீல நிறச் செங்கற்களால் மன்னருக்கான கல்லறை கட்டப்பட்டிருந்தது. அருகிலேயே அரசிக்கான கல்லறை. மன்னர் குடும்பத்தினருக்குத் தனியே. மந் திரிகளுக்குத் தனியே. அழுகி மக்கிப் போகும் உட லோடு சேர்த்து ஏராளமான செல்வங்களைச் சேர்த்து தான் புதைத்தார்கள்.

இத்தனை காஸ்ட்லியான கல்லறைகளைக் கொள் ளையர்கள் நேசித்தார்கள். 'ஒரு கல்லறையை உருப் படியாகக் கொள்ளையடித்தால், வாழ்க்கை முழுவ தும் உட்கார்ந்து சாப்பிடலாம். உல்லாசமாக வாழ லாம்' என்று திட்டம் போட்டுக் கொள்ளையடித்தார்கள். அது ஒன்றும் சாதாரண விஷயமல்ல. குத்துமதிப்பாகத் தோண்டிப் பார்த்தால், கொத்துக் கொத்தாக அள்ள லாம் என்றெல்லாம் தப்புக் கணக்குப் போட முடியாது. அகழ்வாராய்ச்சி செய்வதென்றால் நிறுத்தி நிதானமாகத் தோண்டலாம்; இவர்கள் கொள்ளையர்கள் அல்லவா. அத்தனை ஏக்கர் பரப்பளவில், அன்னாருடைய உடல்

எங்கே புதைக்கப்பட்டிருக்கும் என்று கணக்கிட்டு, கன்னம் வைத்து, சமயம் பார்த்து, தோண்டி, இறங்கி, செல்வத்தைக் கொள்ளையடிப்பதற்குள்... ஸ்ஸப்பா!

மன்னர்களுக்கும் இந்தக் கொள்ளையர்கள்தாம் பெரிய சவாலாக இருந்தார்கள். பார்த்துப் பார்த்துச் செதுக்கும் கல்லறையை, யாரோ கொள்ளையர்கள் வந்து தோண்டி கொள்ளையடித்து விட்டுப் போனால் அது எவ்வளவு பெரிய அவமானம். மன்னரது ஒட்டுமொத்த புகழையே குழிபறிக்கும் செயல் அல்லவா. தவிர, அவர்களது நம்பிக்கையின்படி, இறப்புக்குப் பிறகான வாழ்க்கையையும் பாதிக்கப்படுமே. எனவேதான் சீன மன்னர்கள் தங்கள் கல்லறையை 'ஏகப்பட்ட ரகசியங்களுடன்' யாருமே எளிதில் அணுக முடியாதபடி அமைத்துக் கொண்டார்கள்.

1974. சீனாவின் சென்ஷி மாகாணத்தில் ஷியான் நகருக்கு 30 கிமீ வெளியே, யாங் ஷிஃபா என்பவரும், அவரது சகோதரர்களும் கிணறு வெட்ட நிலத்தைத் தோண்டினார்கள். அந்தப் பகுதிக்குச் சற்று தள்ளிதான் மன்னர் குன் ஷி ஹுவாங்கின் (Qin shi huang) கல்லறை அமைந்திருந்தது. குன் ஷி ஹுவாங், கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் சீனாவின் குன் மாகாணத்தை ஆட்சி செய்தவர். சிதறிக் கிடந்த சீன மாகாணங்களை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து பேரரசாக உருவாக்கியவரும் இவரே. சீனாவின் முதல் பேரரசராக கி.மு. 221லிருந்து கி.மு. 210 வரை ஆட்சி செய்தார். சீனப் பெருஞ்சுவர் இவர் காலத்தில்தான் கட்டப்பட்ட ஆரம்பிக்கப்பட்டது என்பது கூடுதல் தகவல்.

அந்த விவசாயிகள், நிலத்தைத் தோண்டத் தோண்ட சில மீட்டர்கள் ஆழத்தில், சுட்ட செங்கல்கள் கிடைத்

தன. சில பழைய அம்புகள் கிடைத்தன. சுட்ட செங்கல் களை ஊர் மக்கள் தலைக்கு வைத்துப் படுக்க எடுத்து சென்றார்கள். பழைய அம்புகளை அந்தச் சகோதரர்கள் ஓரிடத்தில் கொடுத்து விற்றுக் காசாக்கிக் கொண்டார் கள். விஷயம் அங்கும் இங்கும் பரவியது. தொல்பொருள் துறையினர் அந்த அம்புகளையும் சுட்ட செங்கல்களை யும் பார்த்துவிட்டு, தேடி வந்தார்கள்.

அந்த இடத்தைக் கவனமாகத் தோண்ட ஆரம்பித் தார்கள். சில அடிகள் ஆழத்தில் டெரகோட்டாவிலான மனித உருவம் ஒன்று கிடைத்தது. அருகிலேயே இன் னும் சில உருவங்கள் கிடைக்கத் தொடங்கின. தோண் டும் பணி தொடர்ந்தது. சுமார் 8000 டெரகோட்டா மனித பொம்மைகளோடு, பல வரலாற்று உண்மைக ளும் வெளிவந்தன.



மன்னர் குன் ஷி ஹுவாங்குக்குத் தன் கல்லறை குறித்த கனவுகள் சிறுவயதிலேயே ஆரம்பித்துவிட்டன. தனது பதின்மூன்றாவது வயதில் குயின் மாகாணத்தின் மன்ன ராகப் பொறுப்பேற்ற குன் ஷி ஹுவாங், அப்போது முதலே தனக்கான சிறப்பான, பிரம்மாண்டமான கல்லறையைக் கட்டும் வேலையை ஆரம்பித்துவிட்டார்.

நிபுணர்கள் குழு மாய்ந்து மாய்ந்து திட்டம் போட்டது. நிலத்தின்மேல் மன்னர் எப்படிப்பட்ட வசதிகளை அனு

பவிக்கிறாரோ அதெல்லாம் நிலத்தின் கீழ் அமைக்கப்படும் அரண்மனையிலும் இருக்கும்படியாகக் கட்டமைத்தார்கள். மன்னர் யார் யாருடன் வாழுகிறாரோ, யாரெல்லாம் மன்னரைச் சார்ந்து இருக்கிறார்களோ அவர்கள் எல்லாருமே நிலத்துக்கு அடியிலும் தம் சேவைகளைத் தொடரும்படியாக வசதி செய்தார்கள்.

அதெப்படி? மன்னரைச் சார்ந்தவர்கள், மந்திரிகள், படைவீரர்கள் எல்லோருமே அவர்களது அச்சு அசல் உருவத்திலேயே டெரகோட்டா பொம்மைகளாக உருவாக்கப்பட்டனர். அவர்கள் என்ன உயரத்தில் இருக்கிறார்களோ, அதே உயரத்திலேயே அவர்களது பொம்மைகளும் உருவாக்கப்பட்டன. அதாவது மன்னர் செத்தபிறகு, வேறு உலகத்துக்குச் சென்று அந்த ராஜ்ஜியத்தை ஆள ஆரம்பித்த பின்னர் அந்த உருவங்களெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக உயிர் பெற்றுவிடும் என்பது அவர்களது நம்பிக்கை. அது எப்படி என்று பல கேள்விகள் எழலாம். மூட நம்பிக்கைக்கு எதற்கு லாஜிக்?

அந்தக் கல்லறையின் அமைவிடத்தைச் சுற்றிலும் ஆயுதமேந்திய வீரர்களின், தளபதிகளின் பொம்மைகள் நிறுத்தி வைக்கப்பட்டன. அதாவது கொள்ளையர்களோ, எதிரிகளோ மன்னரது கல்லறையைத் தாக்க வந்தால் அந்த களிமண் வீரர்கள் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்துக் கொள்வார்கள் என்றும் நம்பினார்கள்.

இந்த கல்லறை கட்டுவதற்கான ஒட்டுமொத்தப் பணிகள் முடிய 36 வருடங்கள் பிடித்தன. கட்டுமானப் பணியில் மொத்தம் ஏழு லட்சம் கைதிகள், அடிமைகள் ஈடுபடுத்தப்பட்டார்கள். உலகின் மிகப்பெரிய கல்லறைகளில் இதுவும் ஒன்று. ஏனென்றால் அது வெறும் கல்லறை அல்ல. குன் ஷி ஹுவாங் ஆண்ட தலைநகரமான

ஸியான்யங்கின் மாதிரி நகரமே மண்ணுக்குள் புதைக் கப்பட்டிருக்கிறது என்பது அகழ்வாராய்ச்சியில் கண்டு பிடிக்கப்பட்டது. அதுவும் உள்நகரம் (சுமார் 2.5 கிமீ பரப் பளவு), வெளிநகரம் (சுமார் 6.3 கிமீ பரப்பளவு) என்று விரிந்து காணப்படுகிறது. உள்நகரத்தின் தென்மேற்கில் அரசரின் கல்லறை அமைக்கப்பட்டுள்ளது.

டெரகோட்டா மனிதர்கள் மட்டுமன்றி, குதிரைகள், அவை பூட்டப்பட்ட ரதங்கள், ஆயுதங்கள், கலைப்பொ ருள்கள் இப்படிப் பலவும் அகழ்வாய்வில் கிடைத்திருக் கின்றன. இதுவரை குன் ஸி ஹுவாங்கின் கல்லறை நகரம் முழுமையாகத் தோண்டியெடுக்கப்படவில்லை. இன்னமும் பூமிக்குள் அதிசயங்களும் மர்மங்களும் நிறைந்திருக்க நிறைய வாய்ப்புகளுண்டு.

இதுவரை உலகில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுக ளில் குன் ஸி ஹுவாங் கல்லறை நகரக் கண்டுபிடிப்பு என்பது மிகப்பெரிய ஒன்று. தோண்டத் தோண்ட தீராத பொக்கிஷமும்கூட!

## 22. ஆர்லவ் வைரம்

‘ஸ்ரீரங்கம் கோயிலில் இருக்கும் அந்தக் கடவுள் சிலையின் இரண்டு கண்களிலும் இரண்டு வைரங்கள் பதிக்கப்பட்டுள்ளன.’ அப்படி ஒரு விஷயத்தைக் கேள்விப்பட்டதிலிருந்து அந்த பிரெஞ்சு வீரனுக்குத் தூக்கமே வரவில்லை. எப்படியாவது அந்தக் கண்களை, அதாவது வைரங்களைப் பறித்துவிட வேண்டுமென்று திட்டம் போட்டான்.

அது பதினெட்டாம் நூற்றாண்டில் மத்தி. கர்நாடகப் பகுதியிலிருந்த பல்வேறு ராஜ்ஜியங்கள் பிரெஞ்சு கிழக்கு இந்திய கம்பெனிக்கு எதிராகவும், பிரிட்டிஷ் கிழக்கு இந்திய கம்பெனிக்கு எதிராகவும் போர்கள் நடத்திக் கொண்டிருந்தன. ஒட்டுமொத்தமாக அவை ‘கர்நாடகப் போர்கள்’ என்றழைக்கப்பட்டன. அந்தச் சமயத்தில் தென்னிந்தியாவில் முகாமிட்டிருந்த ‘பெயர் தெரியாத’ பிரெஞ்சு வீரன் ஒருவன்தான், வைரத்தைக் குறி வைத்திருந்தான்.

அதற்காகவே அவன் கி.பி. 1747-ம் ஆண்டில் ஸ்ரீரங்கத்தில் முகாமிட்டிருந்தான். ஸ்ரீரங்கம் கோயிலுக்குள் செல்வதற்காகவே இந்து மதத்துக்கு மாறினான். அங்கிருந்த அர்ச்சகர்களிடம் நட்பை வளர்த்துக் கொண்

டான். தகுந்த சமயத்துக்காகப் பொறுமையாகக் காத் திருந்தான். ஒருநாள் இரவில் கடும் மழையும் புயலும் அடித்துக் கொண்டிருந்தது. அப்போது யாரும் கவனிக்க மாட்டார்கள் என்று திட்டமிட்டு கோயிலுக்குள் புகுந் தான் அந்த பிரெஞ்சு வீரன். வைரம் பதிக்கப்பட்டிருந்த பிரம்மாவின் சிலையை நோக்கிச் சென்றான். அதன் ஒரு கண்ணிலிருக்கும் வைரத்தைப் பிடுங்கினான். பதிலுக்கு அவன் தயாராக வைத்திருந்த போலி கல் ஒன்றை அந்தக் கண்ணில் பதித்தான். இன்னொரு கண்ணை யும் பிடுங்குவதற்குள் உடல் நடுங்கியது. பயம் கவ்வி யது. எனவே, உடனடியாகக் கோயிலிலிருந்து வெளி யேறினான். ஸ்ரீரங்கத்திலிருந்து கிளம்பி வைரத்துடன் மெட்ராஸை அடைந்தான். அங்கே ஆங்கிலேய கேப் டன் ஒருவரிடம் 2000 பவுண்ட்களுக்கு அந்த வைரத்தை விலைபேசி விற்றான் என்கிறது ஒரு கதை.



ஆங்கிலேய கேப் டனிடமிருந்து சில கைகளுக்கு மாறிய அந்த வைரம், பின் நெதர்லாந்தின் ஆம்ஸ்டெர்டாமுக்கு விற்பனைக்கு வந்து சேர்ந்தது. ஈரானைச் சேர்ந்த பெரும் செல்வந் தரான ஷஃப்ராஸ் என்பவர், அந்த வைரத்தை நல்ல விலைக்கு வாங்கினார். பதினெட்டாம் நூற்றாண்டில் ரஷ்யாவின் பிரபுக்களில் ஒருவரான கிரிகோரி ஆர்லவ் என்பவர், ஷஃப்ராஸிடமிருந்து அந்த வைரத்தை விலை கொடுத்து வாங்கினார் என்று சொல்லப்படுகிறது.

சில ஆய்வாளர்கள், ஸ்ரீரங்கம் கதையிலெல்லாம் நிஜமே இல்லை என்று உறுதியாகச் சொல்கிறார்கள். ஸ்ரீரங்கம் கோயில் குறித்த பதிவேடுகளில் இப்படி ஒரு வைரம் இருந்ததாகவோ, அது பதினெட்டாம் நூற்றாண்டில் காணாமல் போனதாகவோ குறிப்புகள் இல்லை என்கி றார்கள். வைரத்தை அதிக விலை வைத்து விற்பதற்கா கவும், அதன் மதிப்பை உயர்த்துவதற்காகவும் வியாபாரி களால் கற்பனையில் நெய்யப்பட்ட விஷயங்களே இவை என்றும் அடித்துச் சொல்கிறார்கள்.

பதினேழாம் நூற்றாண்டில் கோல்காண்டாவின் கொல் லூர் சுரங்கத்தில் கண்டெடுக்கப்பட்ட மிகப்பெரிய வைரம் இது என்று சில வரலாற்றாளர்கள் குறிப்பிடு கிறார்கள். அந்த நூற்றாண்டில் முகலாய இந்தியாவுக்கு வந்த மிக முக்கியமான பயணிகளுள் ஒருவர், பிரான் ஸைச் சேர்ந்த தாவர்னியர். அவர் நகை மற்றும் கற்கள் விற்பனை செய்த வணிகரும்கூட. அப்போது இந்தியா வின் பல பகுதிகளுக்கும் பயணம் செய்த தாவர்னி யர், பல்வேறு வரலாற்றுக் குறிப்புகளை எழுதி வைத் துள்ளார். அதில் இந்த வைரம் பற்றிய குறிப்புகளும் அடக்கம். தாவர்னியர், இந்த வைரத்தின் வடிவத்தையும் வரைந்து வைத்துள்ளார்.

மிர் ஜும்லா, கோல்கொண்டாவைச் சேர்ந்த வைர வியாபாரி. கி.பி. 1656-ம் ஆண்டில் முகலாயப் பேரரசர் ஷாஜஹானைச் சந்திக்கும் வாய்ப்பு மிர் ஜும்லாவுக்குக் கிடைத்தது. அப்போது அவர், பேரரசர் ஷாஜஹானுக் குப் பல்வேறு வைரங்களைப் பரிசாகக் கொடுத்தார். அதில் இந்த கோல்கொண்டா வைரமும் அடக்கம். 787 காரட் எடை கொண்ட கோல்கொண்டா வைரத்துக்கு 'Great Mughal Diamond' என்ற பெயர் வைக்கப்பட்டது. இந்த வைரத்தைக் கொடுத்ததற்குப் பரிசாக கோல்

கொண்டாவின் பிரதம மந்திரி பதவியை மிர் ஜும்லா பெற்றுக் கொண்டார் என்று தாவர்னியர் குறிப்பிட்டுள் ளார்.

முகலாயப் பேரரசராக ஔரங்கசீப் இருந்தபோது, கிரேட் முகல் வைரத்தைச் செதுக்கி, அழகிய வடிவில் மாற் றும் பணியை ஆர்டென்சியோ போர்கியோ என்பவரி டம் ஒப்படைத்தார். அவர், வெனீஸ் நகரத்திலிருந்து டெல்லிக்கு வந்திருந்த வைர நகை வடிவமைப்பா ளர். கவனமே இன்றி அந்தப் பணியை மேற்கொண்ட போர்கியோ, கிரேட் முகல் வைரத்தின் வடிவத்தையே சிதைத்தார். 787 காரட் வைரம், வெறும் 280 காரட்டுக் குச் சுருங்கிப் போனது. கடும் கோபமடைந்த ஔரங்கசீப், போர்கியா கையிலிருந்த செல்வங்களை எல்லாம் பிடுங் கச் சொன்னார். சவுக்கடி தண்டனைக்கும் ஆளான போர்கியோ, உயிர் தப்பித்தால் போதுமென டெல்லியை விட்டே ஓடிப்போனார்.

முகலாயர்களின் கஜானாவில் பத்திரப்படுத்தப்பட்ட அந்த கிரேட் முகல் வைரம், கி.பி. 1739-ம் ஆண்டில் பெர் ஷியப் பேரரசர் நாதிர் ஷா டெல்லி மீது படையெடுத்த போது, அவரால் கொள்ளையடிக்கப்பட்டது. கி.பி. 1747-ம் ஆண்டில் நாதிர் ஷா படுகொலை செய்யப்பட்டார். அவரால் கொள்ளையடிக்கப்பட்ட செல்வங்களைப் பல ரும் பறித்துக் கொண்டு சென்றனர். அதில் அந்த வைர மானது ஆப்கன் வீரர் ஒருவரது கையில் சிக்கியது. அவர், அதை பாஸ்ராவுக்கு (இன்றைய ஈரான்) எடுத்துச் சென்றார். அப்போது ஆசியக் கண்டம் முழுவதிலும் அர் மேனியர்கள் கல் வியாபாரத்தில் சிறந்து விளங்கினார் கள். அந்த ஆப்கன் வீரர், வைரத்தை அர்மேனிய வியா பாரி சஃப்ராஸ் என்பவரிடம் விற்றார்.

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ரஷ்யாவின் ஜார் வம்சப் பேரரசி கேத்தரினுக்கு வைரங்கள் வாங்கிச் சேர்ப்பதில் அளவற்ற ஆர்வம் இருந்தது. தன் அவையில் இருந்த அர்மேனிய வைர வியாபாரி மூலமாக சஃப் ராஸ் கையிலிருந்த வைரம் பற்றி கேத்தரின் அறிந்தார். ஆனால், அவர் கேட்ட விலைக்கு வைரம் கிடைக்க வில்லை. அதே ராஜ்ஜியத்தின் பிரபுக்களில் ஒருவரான கிரிகோரி ஆர்லவ், அந்த வைரத்தை வாங்கினார். பேர ரசி கேத்தரினுக்குப் பரிசாக வழங்கினார். அதன் மூலம் கேத்தரினின் நம்பிக்கையைப் பெற்ற கிரிகோரி ஆர் லவ், பின்பு ரஷ்யப் பேரரசர் மூன்றாம் பீட்டரை பதவியிலி ருந்து தூக்கியெறியவும் உதவினார் என்பதெல்லாம் உப வரலாறு.

ரஷ்யப் பேரரசி கேத்தரினின் கஜானாவில் சேர்ந்த அந்த வைரத்துக்கு ‘ஆர்லவ் வைரம்’ என்ற பெயர் நிலைத்தது. அரை முட்டை வடிவிலான அது, ரஷ்யப் பேரரசின் செங் கோலில் பதிக்கப்பட்டது. 1917 ரஷ்யப்புரட்சிக்குப் பிறகு, அது அரசாங்கத்தின் சொத்தாக மாறியது.

ஸ்ரீரங்கம் கோயிலில் பிரம்மாவின் கண்களில் இருந்து பறிக்கப்பட்டதுதான் இந்த ஆர்லவ் வைரமா அல்லது கிரேட் முகல் வைரம்தான் இந்த ஆர்லவ் வைரமா என் பதில் குழப்பங்கள் உண்டு. சுமார் 190 எடை கொண்ட ஆர்லவ் வைரம், தற்போது ரஷ்யாவின் மாஸ்கோ கிரெம் லின் கோட்டையில் பாதுகாப்பாக இருக்கிறது.

## 23. மெட்டல் டிடெக்டர் புதையல்கள்

இந்தக் கட்டுரையில் மூன்று புதையல்கள் குறித்து பார்க்கப்போகிறோம். மூன்றுமே வெவ்வேறு ஆண்டு களில் கண்டெடுக்கப்பட்டவை. வெவ்வேறு காலங்க ளைச் சேர்ந்தவை. ஆனால், மூன்று புதையல்களுக் குமே இரண்டு ஒற்றுமைகள் உண்டு. அவை பிரிட்டனில் கண்டெடுக்கப்பட்டவை. மெட்டர் டிடெக்டர் கொண்டு கண்டுபிடிக்கப்பட்டவை.

*

மார்க் ஹாம்பிள்டன், ஜோ கனியா - இருவரும் பொழுது போக வேண்டுமென்றால் மெட்டல் டிடெக்டரைத் தூக் கிக் கொண்டு கிளம்பிவிடுவார்கள். ஏதாவது ஒரு பகுதி யைக் குறித்து வைத்துக் கொள்வார்கள். அங்கே நிலப் பகுதியில் மெட்டல் டிடெக்டரைக் கொண்டு அலசுவார் கள். டிடெக்டர் ஏதாவது சமிக்ஞை கொடுக்கும் இடத் தில் தோண்டிப் பார்ப்பார்கள். பெரும்பாலும் ஏதாவது பழைய, வேண்டாத உலோகப் பொருள்கள் கிடைக்கும்.

2016, டிசம்பர். மார்க்கும் ஜோவும் இங்கிலாந்தின் ஸ்டாஃபோர்ட்ஷைரில் இருக்கும் லீக்ஃப்ரித் திருச்ச பைக்குச் சொந்தமான நிலத்தில் மெட்டல் டிடெக்ட

ருடன் மேய்ந்து கொண்டிருந்தார்கள். அங்கே ஓரிடத்தில் டிடெக்டர் சிணுங்கியது. நம்பிக்கையுடன் அந்த இடத்தைத் தோண்டினார்கள். அன்றைக்கு அவர்களுக்கு அதிர்ஷ்ட தினம். தங்க நகைகள் கிடைத்தன. மூன்று நெக்லெஸ். ஒரு பிரெஸ்லெட். ஆய்வாளர்கள் அந்த நகைகள் எந்தக் காலத்தைச் சேர்ந்தவை என்று ஆராய்ச்சி செய்து பார்த்தார்கள். கிடைத்த பதில் பிரிட்டனையே குதூகலம் கொள்ளச் செய்தது. அவை இரும்பு யுகத்தைச் சேர்ந்தவை. அதாவது சுமார் 2400 ஆண்டுகள் பழைமையானவை. கி.மு. 400-க்கும் கி.மு. 250-க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த ஏதோ ஒரு பணக்காரப் பெண்ணின் நகைகள் என்று தெரிய வந்தன. யார் அந்தப் பெண், அவள் எப்படி இருந்திருப்பாள், ஏன் அவள் இந்த நகைகளைப் புதைத்து வைத்தாள் அல்லது தவறவிட்டு விட்டாளா என்பதற்கெல்லாம் நம் கற்பனையில்தான் பதில்களைத் தேட வேண்டும்.

'லீக்ஃப்ரித் இரும்பு யுக ஆபரணங்கள்' என்று பெயரிடப்பட்ட அவை, இப்போது பிரிட்டனின் மிகப் பழமையான பொக்கிஷக் கண்டுபிடிப்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. அவை ஹான்லே நகரத்தின் Potteries Museum & Art Gallery-ல் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

*

2009 ஜூலை 5-ல் அதே ஸ்டாஃபோர்ட்ஷைர், ஹாமர்விச் பகுதியில் ஒரு பண்ணை நிலத்தில் டெர்ரி ஹெர்பெர்ட் என்பவரும் ஏதாவது கிடைக்குமா என்று மெட்டல் டிடெக்டருடன் உலாவிக் கொண்டிருந்தார். அன்றைக்கு அவரது டிடெக்டர் சிலிர்ப்புடன் சிணுங்கியது. அடுத்த ஐந்து நாள்களுக்கு பலமுறை சிணுங்கிக் கொண்டே இருந்தது. அந்த நிலத்தில் டெர்ரி கண்டெ

டுத்தது 244 பொருள்கள். அத்தனையும் சிறு சிறு தங்க நகைகள் மற்றும் தங்கத்தினாலான சிறிய பொருள்கள்.



டெர்ரி கொடுத்த தகவலின் அடிப்படையில் அப்போது தொடங்கி 2012 வரை அந்தப் பகுதியில் தொல்லியல் ஆய்வுகள் நடத்தப்பட்டன. மொத்தம் சுமார் 3500 பொருள்கள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் 5.1 கிலோ தங்கத்திலானவை. 1.4 கிலோ வெள்ளியினாலானவை. தவிர, கலைவேலைப்பாடுகள் கொண்ட பாத்திரங்களும் அதில் உண்டு. அந்தப் பொக்கிஷங்களுக்கு வைக்கப்பட்ட பெயர், 'ஸ்டாஃபோர்ட்ஷைர் புதையல்'. அந்தப் பொருள்களை, நகைகளை ஆய்வுகளுக்கு உட்படுத்தினார்கள். அவை ஆறாம், ஏழாம் நூற்றாண்டில் பிரிட்டனில் அமைந்திருந்த ஆங்கிலோ-சாக்ஸன் ராஜ்ஜியத்தைச் சேர்ந்தவை என்று கண்டறிந்தார்கள். அந்தச் சிறு தங்க நகைகளில் பெரும்பாலானவை, ஆயுதங்களை அலங்கரிக்கப் பயன்படுத்தப்பட்டவை. அந்தக் காலத்தில் போரிடப் பயன்படுத்தும் ஆயுதங்களைக் கூட, அவர்கள் எவ்வளவு கலைநயத்துடன் அலங்கரித்திருக்கிறார்கள் என்று இவற்றின் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

பிரிட்டனின் பிர்மிங்ஹாம் அருங்காட்சியகம், இந்த ஆங்கிலோ-சாக்ஸன் பொக்கிஷங்களை £3.285 மில்லியன்

விலை கொடுத்து வாங்கியது. இப்போது அங்கே இவை காணக்கிடைக்கின்றன.

*

1992. நவம்பர் 16. பிரிட்டனின் சஃபோல்க் கவுண்டியிலிருக்கும் ஹாக்ஸ்னா என்ற கிராமம். அங்கே தன் பண்ணை நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்த பீட்டர் வாட்லிங் என்பவர், தனது சுத்தியலைத் தொலைத்துவிட்டார். அந்தச் சுத்தியல் இல்லாவிட்டால் தலை சுற்றிவிடும் அவருக்கு. தன் நண்பரான எரிக் லாவெஸ் என்பவரை அழைத்தார். எரிக்கிடம் மெட்டல் டிடெக்டர் இருந்தது.

எரிக்கின் டிடெக்டர் வயலை கிழக்கும் மேற்கும் வடக்கும் தெற்குமாக வலம் வந்தது. சுத்தியல் அகப்படவில்லை. ஆனால், ஓரிடத்தில் சற்று பலமாகவே சமிக்ஞை அதிர்ந்தது. எரிக் சுத்தியல் தேடுவதை விட்டுவிட்டு, அந்த இடத்தைத் தோண்ட ஆரம்பித்தார். அவரது நம்பிக்கை வீண் போகவில்லை. அங்கே சில மரப்பெட்டிகள் புதைத்து வைக்கப்பட்டிருந்தன. ஓக் மரத்தினாலான பழைய பெட்டிகள். திறந்தார்கள். புதையலேதான். உரிய அதிகாரிகளுக்குத் தகவல் சொல்லப்பட்டது.

அந்தப் புதையலில் அதிகம் கண்டெடுக்கப்பட்டவை நாணயங்கள். மொத்தம் 14,865 - தங்கம், வெள்ளி, வெண்கல நாணயங்கள். எல்லாம் கி.பி. 407 காலத்துக்குப் பிறகான நாணயங்கள். பெரும்பாலும் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. ரோமானியப் பேரரசின் நாணயங்கள். அவை போக 200 பொருள்களும் அந்தப் பெட்டிகளில் இருந்தன. அவை வெள்ளியினாலான கலைப் பொருள்கள் மற்றும் தங்க நகைகள்.

ஐந்தாம் நூற்றாண்டு என்பது பிரிட்டன் பகுதியில் ரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக் காலம். ரோமானியர்களின் ஆதிக்கம் அப்போது அங்கே முடிவுக்கு வந்திருந்தது. அந்தச் சமயத்தில் ஏதோ ஒரு குடும்பத்தினர், இந்தச் செல்வங்களை எல்லாம் சில பெட்டிகளில் போட்டு புதைத்து வைத்திருக்கிறார்கள். யார் அந்தக் குடும்பத்தினர்? என்ன சூழலில் அவர்கள் இந்தச் செல்வங்களை இங்கே புதைத்தார்கள்? இவையெல்லாம் விடை கண்டறிய முடியாத கேள்விகள்.

ரோமானியர்கள் மிளகை மிகவும் உயர்வான, விலை மதிப்புமிகுந்த பொருளாகக் கருதினார்கள். எனவே மிளகை கலைவேலைப்பாடுகள் கொண்ட பாத்திரங்களில் பத்திரப்படுத்தி வைத்தார்கள். இந்தப் புதையலிலும் மிளகுப் பாத்திரங்கள் சில கிடைத்தன. அதில் வெள்ளியினாலான ராணியின் உருவம் கொண்ட மிளகுப் பாத்திரம் ஒன்று இருந்தது. இந்தப் பாத்திரத்தின் அடிப்பாகத்தைத் திருகித் திருகி மிளகைப் பொடி செய்து கொள்ளலாம் என்ற வசதியும் இருந்தது.

பல பாத்திரங்களில், கலைப்பொருள்களில் பெண் புலியின் உருவங்கள் செதுக்கப்பட்டிருந்தன. ஒரு பாத்திரத்தின் கைப்பிடியாகவே பாயும் பெண் புலி அழகாக வடிவமைக்கப்பட்டிருந்தது. கரண்டிகள், பாத்திரங்கள் பலவற்றிலும் ரோமானியப் பேரரசைக் குறிக்கும் சிலுவையின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. உடலின் குறுக்காக அணியும் கற்கள் பதிக்கப்பட்ட தங்கச் சங்கிலி இந்தப் புதையலில் கண்டெடுக்கப்பட்ட முக்கியமான ஆபரணம்.

'ஹாக்ஸ்னா புதையல்' என்று பெயரிடப்பட்ட இந்தப் பொக்கிஷங்களின் இன்றைய மதிப்பு தோராயமாக £3.5

மில்லியன். லண்டன், பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தின் அறை எண் 49-ல் இந்தப் பொக்கிஷங்கள் இப்போது காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

எல்லாம் சரி. அந்தச் சுத்தியல் கண்டுபிடிக்கப்பட்டதா? ஆம். அந்தச் சுத்தியலும் இந்தப் புதையலைக் கண்ட டைய உதவியதன் நினைவாக அதே அருட்காட்சியத் தில்தான் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

## 24. ஒரு கவிதை! ஒரு புதையல்!

இது காணாமல் போன புதையலோ அல்லது அந்தக் காலத்தில் அரசர்களாலோ, மற்றவர்களாலோ புதைத்து வைக்கப்பட்ட பொக்கிஷமோ அல்ல. அமெரிக்கர் ஒருவர் பெட்டி நிறைய செல்வங்களை நிரப்பி, வேண்டுமென்றே ரகசிய இடத்தில் புதைத்துவிட்டு 'முடிந்தால் கண்டுபிடித்து எடுத்துக் கொள்ளுங்கள்!' என்று இந்த உலகத்துக்கே சவால் விட்டுள்ளார். யார் அவர்? அந்தப் பெட்டியில் என்னென்ன பொக்கிஷங்கள் இருக்கின்றன? அந்தப் புதையல் கண்டுபிடிக்கப்பட்டதா?

ஃபாரஸ்ட் ஃபென் என்பது அவரது பெயர். மேஜராக அமெரிக்க விமானப்படையில் பணியாற்றியவர். வியட்நாம் யுத்தத்தில் பெரும்பங்கு வகித்தவர். அமெரிக்க விமானப்படை வீரருக்கான மூன்றாவது மிகப்பெரிய அங்கீகாரமான 'சில்வர் ஸ்டார்' வாங்கியவர். இருபது வருடங்கள் பணியாற்றிவிட்டு விமானப்படையிலிருந்து ஓய்வு பெற்றார். அடுத்து என்ன செய்யலாம் என்று யோசித்த ஃபென் தன் நண்பரான ரெக்ஸ் அரோஸ்மித் என்பவரிடம் கலைப்பொருள்கள் வணிகம் செய்யும் தொழிலைக் கற்றுக்கொண்டார். இருவரும் சேர்ந்து, நியு மெக்ஸிகோவின் சாண்டா ஃபே நகரில் 'அரோஸ்

மித் - ஃபென் கேலரி' என்ற கடையை ஆரம்பித்தனர். பின்பு அரோஸ்மித் விலகிக் கொண்டார். ஃபென்னுடன் அவரது மனைவி பெக்கி இணைந்து கொண்டார். வணி கத்தில் நல்ல லாபம். ஃபென் செழிப்பாகவே இருந்தார்.

1988. ஃபென்னுக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது. மருத்துவர்கள் பரிசோதனைகளைச் செய்து விட்டு 'சிறுநீரகத்தில் கேன்சர்' என்றார்கள். ஃபென் னின் மனத்தில் கவலை சூழ்ந்தது. இன்னும் எத்தனை நாள்கள் வாழப்போகிறோமோ என்ற விரக்தி அவரை ஆட்கொண்டது. இந்த உலகத்துக்கு, இந்த மக்க ளுக்கு ஏதாவது கொடுத்துவிட்டுச் செல்லலாமே என்று அவரது மனம் நினைத்தது. என்ன செய்யலாம் என்று நிதானமாக யோசித்தார்.

பன்னிரண்டாம் நூற்றாண்டு ரோமானியப் பேரரசைச் சேர்ந்த கலை அம்சங்கள் நிறைந்த மரப்பெட்டி ஒன்றை வாங்கினார். அது பத்துக்கு பத்து அளவு கொண் டது. அந்தப் பெட்டி நிறைய செல்வங்களை நிரப்பினார். கோழி முட்டை அளவிலான தங்கக்கட்டிகள், பழை மையான, அரிய நாணயங்கள், தங்க நாணயங்கள், சில நகைகள், மரகதக்கற்கள், வைரக்கற்கள், சிலைகள் போன்ற கலைப்பொருள்கள். இவையே அந்தப் பொக் கிஷப் பெட்டியில் நிரப்பப்பட்டவை.

நோய் முற்றி தான் இன்னும் கொஞ்ச நாள்களில் இறந்துபோய் விடுவோம் என்று தோன்றினால், அந்தப் பொக்கிஷப் பெட்டியை இழுத்துக் கொண்டு மலைப் பிரதேசத்துக்குச் செல்ல வேண்டும். அப்படியே அதன் அருகிலேயே விழுந்து சாக வேண்டும். யார் தன் உட லைக் கண்டுபிடிக்கிறார்களோ அவர்கள் அந்தப் பொக் கிஷத்தை எல்லாம் எடுத்துக் கொள்ளட்டும் என்று

ஃபென் திட்டமிட்டார். அதற்காகத் தன்னைத் தயார்ப்ப டுத்தியும் கொண்டார்.

தொடர் மருத்துவ சிகிச்சையின் பலனாக, ஃபென் கேன்சரை வென்றார். உற்சாகமாக வாழ்க்கையைத் தொடர்ந்தார். தயார் செய்த அந்தப் பொக்கிஷப் பெட்டி அவரிடமே பத்திரமாக இருந்தது.

2007-ம் ஆண்டின் இறுதியில் அமெரிக்காவில் பொரு ளாதார மந்தநிலை தொடங்கியது. பலர் வேலை இழந்த னர். அதன் பாதிப்பு அடுத்த சில ஆண்டுகளுக்கு நீடித் தது. அந்தச் சூழலில் ஃபென், தன் வசமிருந்த பொக் கிஷப் பெட்டியைப் பார்த்தார். அவருக்கு அமெரிக்கர் களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் தோன்றி யது. அதற்காகப் பொக்கிஷங்களை அப்படியே தூக்கிக் கொடுக்கவும் அவர் நினைக்கவில்லை. சவாலான ஒரு திட்டத்தை உருவாக்கினார்.

‘நான் இந்தப் பொக்கிஷப் பெட்டியை ஓரிடத்தில் புதைத்து வைப்பேன். அந்த இடம் குறித்த துப்புகளைக் கொடுப்பேன். யார் கண்டுபிடிக்கிறார்களோ அவர் கள் புதையல் முழுவதையும் எடுத்துக் கொள்ளலாம்.’ ஃபென் அறிவித்தார். The Thrill of the Chase என்ற பெயரில் தனது சுயசரிதைப் புத்தகம் ஒன்றை எழுதி 2010-ம் ஆண்டில் வெளியிட்டார். அந்தப் புத்தகத்தின் ஒரு பிரதியை ஆலிவ் ஜார் ஒன்றில் போட்டு பொக்கிஷப் பெட்டிக்குள் வைத்தார்.

வட அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் ராக்கி மலைத் தொடர்கள் அமைந்திருக்கின்றன. மிக நீண்ட இந்த மலைத்தொடரின் நியு மெக்ஸிகோவின் சாண்டா ஃபே வுக்கும், கனடா தேசத்தின் எல்லைக்கும் உள்ளிட்ட ஒரு பகுதியில் ஃபென் அந்தப் பொக்கிஷப் பெட்டியை

மறைத்து வைத்தார். அது குறித்த வரைபடம் அவரது சுயசரிதைப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டது. தவிர, 24 வரிகளில் ஒரு கவிதையும் எழுதினார். As I have gone alone in there என்று ஆரம்பிக்கும் அந்தக் கவிதையில் ஒன்பது இடங்களில் புதையல் மறைத்து வைக்கப்பட்ட இடம் குறித்த துப்புகள் கொடுக்கப்பட்டிருப்பதாக அறிவித்தார். தவிர, ஃபென் எப்படிப்பட்டவர், அவரது திறமைகள் என்னென்ன, அவருக்குப் பிடித்தமானவை எவை என்று விளக்கிய அந்தச் சுயசரிதைப் புத்தகமும் அவர் எங்கே அந்தப் புதையலை மறைத்து வைத்திருக்கக்கூடும் என்பது குறித்த மறைமுகக் குறிப்புகளைக் கொடுத்தது. அந்தக் கவிதை இதுதான்.

As I have gone alone in there
And with my treasures bold,
I can keep my secret where,
And hint of riches new and old.

Begin it where warm waters halt
And take it in the canyon down,
Not far, but too far to walk.
Put in below the home of Brown.

From there it's no place for the meek,
The end is ever drawing nigh;
There'll be no paddle up your creek,
Just heavy loads and water high.

If you've been wise and found the blaze,
Look quickly down, your quest to cease,
But tarry scant with marvel gaze,
Just take the chest and go in peace.

So why is it that I must go
And leave my trove for all to seek?
The answers I already know,
I've done it tired, and now I'm weak.

So hear me all and listen good,
Your effort will be worth the cold.
If you are brave and in the wood
I give you title to the gold.

2010-ம் ஆண்டில் ஃபென் தன் புதையல் குறித்து அறிவித்ததுமே அவரது புத்தகம் பெரும் பரபரப்புடன் விற்பனையானது. பலரும் அந்தப் புதையலைத் தேடி ராக்கி மலைத்தொடர்களில் திரிய ஆரம்பித்தனர். இதுவரை லட்சக்கணக்கானோர் தன்னுடைய புதையலைத் தேடியிருப்பதாக ஃபென் கணக்கு சொல்லியிருக்கிறார். இது குறித்து தினமும் அவருக்கு சுமார் நூறு இமெயில்களாவது வருவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். 'புதையல் இருக்கும் இடத்தைச் சொல்லாவிட்டால் உன்னைக் கொன்று விடுவேன்' என்பதாகச் சில மிரட்டல்களையும் ஃபென் கடந்து வந்திருக்கிறார்.

யாருமே தன்னிடம் அந்த ஒன்பது குறிப்புகளைச் சரியான வரிசையில் சொல்லவில்லை என்று புதையலுக்கான வலைத்தளத்தில் (dalneitzel.com) ஃபென் சொல்லியிருக்கிறார். இன்னொரு சோகமும் உண்டு. இதுவரை புதையலைத் தேடிச் சென்றவர்களில் ஐந்து பேர் மலையிலிருந்து விழுந்தோ, வேறு வகையில் விபத்துகளைச் சந்தித்தோ மரணம் அடைந்திருக்கிறார்கள். ஐந்தாவது மரணம் 2020, மார்ச்சில் நடந்திருக்கிறது. எல்லோரும் இவ்வளவு ரிஸ்க் எடுக்கிறார்களே என்று வருத்தப்பட்ட ஃபென், புதையல் மறைத்து வைக்கப்பட்

டிருக்கும் இடம் குறித்து அவ்வப்போது கூடுதல் துப்புக ளைக் கொடுத்தார். தேடுதல் வேட்டை தொடர்ந்தது.

‘ஃபென் பொய் சொல்கிறார். அப்படி ஒரு புதையலே கிடையாது’ என்று சிலர் சொன்னார்கள். அவர்களுக்கு ஃபென் சொன்ன பதில், ‘நான் இந்தப் புதையலை மறைத்து வைக்கும்போது எனக்கு வயது 80. இருமுறை அந்த இடத்துக்குத் தனியாகச் சென்று வந்திருக்கி றேன் என்பதை நினைவில் வைத்துக்கொண்டு தேடுங் கள். நாளைக்கேகூட புதையல் கண்டுபிடிக்கப்படலாம் அல்லது இன்னும் ஆயிரம் ஆண்டுகள்கூட ஆகலாம். யாருக்குத் தெரியும்?’

முக்கியமான விஷயம் என்னவென்றால், ஃபென்னைத் தவிர வேறு யாருக்கும் அந்த ரகசிய இடம் தெரியாது. அவரது மனைவி பெக்கிக்குக்கூடத் தெரியாது. ‘ஒரு வேளை புதையல் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பே நான் இறந்துபோனால், என்னுடனேயே சேர்த்து புதை யல் ரகசியமும் புதைக்கப்படும்’ என்று ஒருமுறை தனது வருத்தத்தையும் பகிர்ந்திருந்தார் ஃபென்.



2020, ஜூன் 6. உலகமே கோவிட் 19-ஆல் லாக் ஆகிக் கிடந்த சூழலில், அந்த அன்-லாக் செய்தியை புதையல் குறித்த தனது வலைத்தளத்தில் ஃபென் வெளியிட்டார்.

‘யாரோ ஒருவர் அந்தப் புதையலைக் கண்டெடுத்து விட்டார்கள். அது பசுமையான ஓரிடத்தில் நட்சத்திரங்களுக்குக் கீழான வெட்டவெளியில், பத்து வருடங்களுக்கு முன்பு நான் புதைத்துவைத்த அதே இடத்தில்தான் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. புதையலை அடைந்த நபர் யார் என்று தெரியவில்லை. அவருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள். எனது கவிதைதான் புதையலை நோக்கிய இடத்தை நோக்கி அவருக்கு வழிகாட்டியிருக்கிறது. புதையலைத் தேடி அலைந்த மற்றவர்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேடல் முடிவுக்கு வந்துவிட்டது!’

அடுத்த சில நாள்களில், ‘அமெரிக்காவின் கிழக்கு பகுதியைச் சேர்ந்த ஒருவர் புதையலைக் கண்டெடுத்திருக்கிறார். அவர் தனது விவரங்களை வெளியிட விரும்பவில்லை’ என்று ஃபென் தெரிவித்தார். புதையல் மறைத்து வைக்கப்பட்ட பகுதிக்கு ஃபென் மீண்டும் சென்றது, புதையல் நிரம்பிய பெட்டியைத் திறந்து அதிலிருப்பவற்றை ஃபென் சரிபார்ப்பது உள்ளிட்ட சில புகைப்படங்கள், ஜூன் 16, 2020 அன்று வெளியானது. அதன் மூலம் ஃபென் புதையல் உண்மைதான் என்பதும், அது கண்டுபிடிக்கப்பட்ட செய்தியும் உறுதியானது.

தன் வாழ்வின் நோக்கம் நிறைவேறிவிட்ட திருப்தியாக இருக்கலாம். ஃபென், செப்டெம்பர் 7, 2020 அன்று இயற்கை எய்தினார்.

## 25. நீரோவின் தங்க மாளிகை!

ரோமாபுரியை ஆண்ட கொடுங்கோல் மன்னன் என்றதும் முதலில் நினைவுக்கு வரும் பெயர் நீரோ. அவரது கொடூரத்தனத்துக்கு ஓர் உதாரணம் பார்க்கலாம். முன் குறிப்பு : இது மிகவும் மென்மையான உதாரணம் மட்டுமே. இதைக் கொண்டு நீரோவைக் குறைத்து எடை போட்டு விடாதீர்கள்.

மன்னன் நீரோவுக்கு மக்கள் நலப்பணிகளைவிட, எக்ஸ்ட்ரா-கரிகுலர் ஆக்டிவிட்டீஸில் அநியாயத்துக்கு ஆர்வம் இருந்தது. அவர் பாடல்கள் எழுதுவார். பாடுவார். இசைப்பார். ஆடுவார். நடிப்பார். வரைவார். செதுக்குவார். ‘நான் ஒரு மாபெரும் கலைஞன்!’ என்று அவரே சொல்லிக் கொண்டார்.

ரோமாபுரியில் உள்ள கலை அரங்குகளில் ‘நீரோனியா’ என்ற பெயரில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும். அதாவது நீரோவே சிந்தித்து வடிவம் கொடுத்த பாடல்களோ, இசை நாடகமோ மேடையில் அரங்கேறும். காவலாளிகள் மக்களை அரங்கத்துக்குள் வலுக்கட்டாயமாக அடைத்து வைப்பார்கள். சூப்பர் சிங்கர் நீரோவின் குரல்

கர்ண கொடூரமாக இருந்தாலும், அவர் மீட்டும் இசை நாராசமாக ஒலித்தாலும், அவரது நடிப்பு சகிக்கவே முடியாததாகத் தெரிந்தாலும் ஆர்ப்பரித்து ரசிக்க வேண்டியது ஆடியன்ஸின் கடமை. ஆம், அப்படிச் செய்தால் மட்டுமே பூட்டி வைக்கப்பட்ட அரங்கத்தின் கதவுகள் திறக்கப்படும். இல்லையென்றால் ரசிகர்களுக்கு நீரோவின் நடிப்பை, பாடலை ரசிப்பதைவிட பெரிய தண்டனைகள் வழங்கப்படும். அது மரண தண்டனையாகக்கூட இருக்கலாம்.

நீரோவைப் பற்றி பலரும் சொல்லும் ஒரு சம்பவம், அவர் ரோம் நகரமே பற்றி எரியும்போது உட்கார்ந்து பிடில் வாசித்தார் என்று. ஆனால், அதில் உண்மை இல்லை. என்ன நடந்தது?

கி.பி. 64, ஜூலை 18 இரவில் ரோமின் மேக்ஸிமஸ் என்ற குதிரைப் பந்தய மைதானத்தில் தீ விபத்து ஏற்பட்டது. எளிதில் தீப்பற்றக்கூடிய பொருள்களை விற்பனை செய்யும் கடைகளின் நோக்கி நெருப்பு பரவியது. அப்போது காற்றும் அதிகமாக வீச, வீடுகள், விடுதிகள், கடைகள், கோயில்கள், அரண்மனையின் ஒரு பகுதி என பலவும் தீக்கிரையாயின. அந்த நெருப்பை முற்றிலும் கட்டுப்படுத்த சுமார் ஒரு வாரம் ஆனது என்கிறார்கள்.

அன்றைக்கு ரோம் நகரத்துக்குத் தீயை வைத்ததே நீரோதான். நகரைப் புதிதாக நிர்மாணிக்கத் திட்டமிட்டிருந்த நீரோ, தன் ஆள்கள் மூலம் இரவோடு இரவாக நெருப்பைப் பற்றவைத்துவிட்டு, அந்த அனலின் மத்தியில் ஒரு கோபுரம் மீதேறி நின்று ஏகாந்தமாக பிடில் இசைக்கருவியை வாசித்துக் கொண்டிருந்தான் என்று சில வரலாற்றாளர்கள் சொல்கிறார்கள். இதெல்லாம்

நீரோ மீது நிரந்தர வெறுப்பு கொண்ட பிற்கால கிறிஸ்துவ வரலாற்றாளர்கள் உருவாக்கிய கட்டுக்கதைகள் என்று சில ஆய்வாளர்கள் அழுத்தமாக மறுக்கிறார்கள்.

டெசிடெஸ் என்ற நீரோவின் சமகால ரோமானிய வர லாற்றாளரது பதிவுகள் முக்கியமானவை. தீவிபத்து நடந்த சமயத்தில் நீரோ ரோமிலேயே இல்லை. அண்ட் டியம் நகரில் இருந்தார். விஷயம் கேள்விப்பட்டு உடனே ரோமுக்கு விரைந்த பேரரசர், தீயை அணைக்கும் பணிகளை முடுக்கிவிட்டு, தானும் களப்பணி ஆற்றி னார். பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்கு அரண்மனை யைத் திறந்துவிட்டார். மக்களுக்கு உணவும், நிவாரணப் பொருள்களும் வழங்கப்பட்டன. இதெற்கெல்லாம் நீரோ தன் சொந்தப் பணத்திலேயே செலவு செய்தார் என்கி றார் டெசிடெஸ்.

நெருப்பால் சிதைந்த ரோமை, உரிய பாதுகாப்பு அம்சங் களுடன் புதிதாகக் கட்டுவதற்குத் திட்டமிட்டார் நீரோ. வலுவான கல் கட்டடங்கள், அகலமான தெருக்கள், அப்புறம் சுமார் 300 ஏக்கர் பரப்பளவில் Domus Aurea (லத்தீன் மொழியில் 'தங்க மாளிகை') என்ற புதிய அரண்மனையும், மாபெரும் வளாகமும் அதில் அடக் கம். அரண்மனை என்றால் பிரமாண்டமான, ஆடம்ப ரமான, எக்கச்சக்கமான அறைகள் கொண்ட சொகுசு மாளிகை. இதற்கெல்லாம் பணம்? சாம்ராஜ்ஜியமெங் கும் இருக்கும் செல்வந்தர்களும், மாபெரும் வணி கர்களும் நீரோவின் காலடியில் வந்து பணத்தைக் கொட்ட வேண்டுமென்பது கட்டளை. கொட்டினார்கள். செல்வங்கள் அடித்தும் பிடுங்கப்பட்டன. கூடுதலாகத் தேவைப்பட்டபோது, ரோமானிய சாம்ராஜ்ஜிய வரலாற் றிலேயே முதன் முறையாக நீரோ 'பணமதிப்பிழப்பு' நடவடிக்கையை மேற்கொண்டார். வெள்ளி நாணயங்க

ளில் எடையும், வெள்ளியின் தூய்மையும் குறைக்கப்பட்டன.

அருகருகில் அமைந்திருந்த பாலடின், எஸ்குலைன், ஆப்பியன், காய்லியன் ஆகிய நான்கு மலைகளின் சரிவுப் பகுதியில் புதிய அரண்மனை வளாகம் கட்டப்பட்டது. அதன் மத்தியில் மார்ஷை பள்ளத்தாக்குப் பகுதியில் செயற்கை ஏரி உருவாக்கப்பட்டது. அதன் அருகிலேயே சுமார் 103 அடி உயரத்தில் நீரோவின் மாபெரும் வெண்கலச்சிலை பப்பி ஷேம் கோலத்தில் நிற்க வைக்கப்பட்டது. அந்தச் சிலையை அனைவரும் வழிபட வேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டது. இந்தக் கலைவெறியும் கொலைவெறியும் நீரோவின் ஆட்சிக்கு உலை வைத்தன.

புதிய அரண்மனை வளாகக் கட்டுமானத் திட்டத்தால் எக்கச்சக்க அநாவசியச் செலவு. ரோமானிய மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர், அதற்கென அடிமையாக வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். தவிர, நீரோ கிறிஸ்தவ மதத்தை வெறுத்தார். கிறிஸ்தவர்களுக்கு விதவிதமாக மரண தண்டனைகளை நிறைவேற்றினார். பிற மக்கள் மீது ஏகப்பட்ட வரிகளைத் திணித்தார். இப்படிப் பல்வேறு காரணங்களினால் நீரோவுக்கான எதிர்ப்பு அதிகரித்தது. கி.பி. 68, ஜூன் 9 அன்று அரசியல் சதியால் நீரோ கொல்லப்பட்டார்.

*

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் ஒருநாள். ரோமைச் சேர்ந்த ஒரு இளைஞன் எஸ்குலைன் என்ற மலைப்பகுதியில் வெட்டியாகத் திரிந்து கொண்டிருந்தான். அப்போது கால் இடறிக் கீழே விழுந்தான். பிளவுபட்ட நிலப்பகுதியில் விழுந்த அவன், அங்கே குகை

போல ஒரு பகுதி நீண்டு செல்வதைக் கண்டான். தைரியமாக உள்ளே நுழைந்தான். அதன் சுவர்களில் சில ஓவியங்கள் வரையப்பட்டிருப்பதையும் கண்ட இளைஞன், உரியவர்களிடம் தகவலைச் சொன்னான். விஷயம் தீபோல பரவியது. அடுத்தடுத்த நாள்களில் இத்தாலியின் புகழ்பெற்ற ஓவியர்கள் பலரும் அந்த இடத்தை ஆராயத் தொடங்கினார்கள். கொஞ்சம் கொஞ்சமாக தோண்டிப்பார்த்தபோது அது Domus Aurea - நீரோ காலத்து தங்க மாளிகை என்று தெரிய வந்தது.

நீரோ கொல்லப்பட்ட பிறகு, அவரது எதிரிகள் அவர் காலத்தில் உருவாக்கப்பட்ட கலைப்படைப்புகளைச் சிதைத்தனர். அவர் கட்டிய கட்டடங்களை உடைத்தனர். நீரோ உருவாக்கிய புதிய அரண்மனை வளாகத்தையும் சிதைத்து மொத்தமாக மண் மூடிப்போகுமாறு செய்தனர். அப்படிப் பல நூற்றாண்டுகளாக புதைந்து கிடந்த தங்க மாளிகைதான், பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த மாளிகை 300 பெரிய அறைகள் கொண்டது. அனைத்து அறைகளின் தரைகளும் சுவர்களும் கூரைகளும் பளபள மார்பிள்களால் ஆனவை. காற்றும் வெளிச்சமும் புகும்படி கட்டப்பட்டவை. அழகுச் சிலைகளாலும், அற்புத ஓவியங்களாலும் அலங்கரிக்கப்பட்டவை. சுவர்களில் யானைத் தந்தங்கள் பதிக்கப்பட்டிருந்ததாகவும், உணவருந்தும் இடத்தில் விருந்தினர்கள் மீது ரோஜாப்பூவும் வாசனைத் திரவியமும் தூவுவதற்கு வசதிகள் செய்யப்பட்டிருந்ததாகவும் தகவல்கள் உண்டு.



பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற இத்தாலிய ஓவியர்களான மைக்கலாஞ்சலோ, ராபேல் போன்றோர் நீரோவின் தங்க மாளிகைக்குச் சென்று அங்கிருக்கும் ஓவியங்களை ஆராய்ந்து மகிழ்ந்திருக்கின்றனர். அந்தச் சுவர்களில் தங்கள் பெயர்களையும் செதுக்கி வைத்துள்ளனர். இன்னும் கண்டுபிடிக்கப்படாத நீரோ காலத்து கட்டடங்கள் இருக்கின்றன என்றும் ஆய்வாளர்கள் சொல்கின்றனர்.

சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்ட நீரோவின் மாளிகை, இடைப்பட்ட காலத்தில் மழை, சூறாவளி போன்ற இயற்கை இடர்களாலும், மனிதர்களாலும் ஏராளமான சேதாரங்களைச் சந்தித்துள்ளது. கடந்த 80 வருடங்களில் இத்தாலிய அரசால் மாளிகை செப்பனிடப்பட்டு, பாதுகாக்கப்பட்டாலும் சுமார் 2000 வருடப் பழைமை வாய்ந்தது என்பதால் அதன் நிலை கவலைக்கிடமாகத்தான் உள்ளது. வார இறுதியில் மட்டும் நீரோவின் மாளிகையைச் சுற்றிப் பார்க்க பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். நீரோவின் தங்க மாளிகை - எஞ்சியிருக்கும் உலகின் பழைமையான கட்டடங்களில் மிக முக்கியமானது.

இறுதியாக ஒரு செய்தி. மாளிகை முழுவதுமாகக் கட்டி முடிக்கப்பட்ட பிறகு, அங்கே வந்த நீரோ மனமகிழ்வு

டன் சொன்ன வார்த்தைகள், ‘இறுதியாக... நானும் மனிதனைப்போல வாழ ஆரம்பித்துவிட்டேன்!’

## 26. ரைடன் கோப்பைகள்!

1954. இரானின் தென்மேற்குப் பகுதியில் ஃப்ளெட்செர் ஃபண்ட் என்பவர் அந்தப் பொருளைக் கண்டெடுத்தார். அது பளபளவென மின்னியது. ஆம். சுத்தமான தங்கத் தால் செய்யப்பட்டதுதான். மிகவும் அழகான கலைப் பொருளாகத் தெரிந்தது. வாய்பிளந்து கர்ஜிக்கும் ஒரு சிங்கத்தின் முகம். கூரிய நகங்களுடன் சிங்கத்தின் முன் னங்கால்கள். சிங்கத்தின் உடல் முழுமையாக இல் லாமல், ஒரு கூம்பு வடிவக்கோப்பையாக மேல்நோக்கி விரிவதாக அந்தக் கலைப்பொருள் மிளிர்ந்தது. மேற் கொண்டு அதை ஆய்வு செய்தபோது தன் கையில் கிடைத்திருப்பது மிகவும் பழமையான 'ரைடன்' என்று ஃப்ளெட்சர் புரிந்து கொண்டார்.

'ரைடன்' (Rhyton) என்றால்?

பானங்கள் அருந்தப் பயன்படும் கூம்பு வடிவக் கோப்பை என்று சொல்லலாம். ஐரோப்பியக் கண்டமும், ஆசியக் கண்டமும் சேர்ந்ததாக அழைக்கப்படும் யுரேசியாவில் இந்த வகைக் கோப்பைகள் கிறிஸ்துவுக்கு முந்தைய காலத்திலேயே புழக்கத்தில் இருந்திருக்கின்றன. குறிப் பாக பால்கன் நாடுகளிலும், இரான் என்றழைக்கப்படும்

அன்றைய பெர்ஸியாவிலும் இந்த வகைக் கோப்பைகள் அதிக அளவில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

நீண்ட கொம்புகளை, பானங்கள் அருந்தும் கோப் பைகளாக உபயோகிக்கும் முறை பண்டைக் காலத் தில் இருந்தது. அதன் தொடர்ச்சியாக கலை அம்சம் நிறைந்த 'ரைடன்' கோப்பைகள் வடிவமைக்கப்பட்டி ருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் கருத்து. Rhein என்ற பண்டைய கிரேக்கச் சொல்லுக்கு 'வழிந்தோ டும்' என்று பொருள். பெரும்பாலான ரைடன்களில் விலங்குகளின் முகமே பிரதானம். அதுவும் குறிப்பாக ஆடு, மாடு, மான், காட்டுப்பன்றி, சிங்கம், சிறுத்தை, குதிரை, நாய், பூனை போன்ற விலங்குகளின் முகத் தோடு ரைடன்களை வடிவமைத்திருக்கிறார்கள். சில ரைடன்களில் சிங்கம், குதிரை போன்ற விலங்குகளை யும் கொம்புகளோடு உருவாக்கியிருக்கிறார்கள். தங்கம், வெள்ளி, பித்தளை போன்ற உலோகங்களால் மட்டு மன்றி மரத்தாலும் கற்களாலும் இந்த ரைடன்கள் வடி வமைக்கப்பட்டிருக்கின்றன. மட்பாண்டம் போல மண் ணைச் சுட்டும் தயாரித்திருக்கிறார்கள். விலங்குகளின் வாய்ப்பகுதியில், மனிதர்கள் வாய்வைத்துப் பானங்க ளைப் பருகும்படி துளையிருக்குமாறு சில ரைடன்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பல ரைடன்களில் அப் படிப்பட்ட துளை எதுவும் கிடையாது. கோப்பையின் மேற்பகுதியில்தான் வாய் வைத்துப் பருக வேண்டும். ஆனால், பெரும்பாலான ரைடன்களை பானங்களால் நிரப்பியபின் கீழே வைக்க முடியாது. ஏனெனில் தட்டை யான அடிப்பாகம் இன்றித்தான் அவை வடிவமைக்கப் பட்டிருந்தன.

சரி, ஃப்ளெட்சர் கண்டெடுத்த ரைடனுக்கு வருவோம். அது, முதல் பெர்ஸியப் பேரரசு என்றழைக்கப்படும்

அகாமனிசியப் பேரரசின் காலத்தைச் சார்ந்தது. அதாவது கி.மு. 550-க்கும் கி.மு. 330-க்கும் இடைப்பட்டது. அதன் வயது சுமார் 2500 ஆண்டுகள். அகாமனிசியப் பேரரசின் காலத்தில்தாம், ரைடன்களில் கோப்பைப் பகுதி வளைந்ததுபோல் அல்லாமல், 90 டிகிரியில் செங்குத்தாக வடிவமைக்கப்பட்டது. தவிர, ரைடன்களைத் தரையில் நிற்க வைக்க வசதியாக தட்டையான அடிப்பாகம் கொண்டதாகவும் தயாரித்தார்கள். இந்த சிங்க முக ரைடன் 17 செ.மீ. உயரம் கொண்டது. பல்வேறு பாகங்கள் தனித்தனியே செதுக்கப்பட்டு, ஒன்றாக இணைக்கப்பட்டிருந்தாலும், அதெல்லாம் வெளியில் தெரியாத அளவுக்கு செய்நேர்த்தி கொண்டதாக உருவாக்கப்பட்டிருந்தது.

இப்போது சிங்க முக ரைடன், நியு யார்க் நகரின் மெட்ரோபாலிடன் அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது. உலகில் கண்டெடுக்கப்பட்ட மிகப்பழைமையான ரைடன்களில் இதுவும் ஒன்று. கி.மு. 500-ஐச் சேர்ந்த மற்றொரு சிங்க முக ரைடன் ஒன்று இரானின் தேசிய அருங்காட்சியகத்திலும் வைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தங்கச் சிங்கத்துக்கு சிறகுகள் உண்டு.

உலகின் மிகப்பழைமையான ரைடன் அமெரிக்காவின் கிளீவ்லேண்ட் அருங்காட்சியகத்தில் காணக்கிடைக்கிறது. மண்பானை உருவமும், கழுத்துப்பகுதியில் சிறு குதிரையின் வடிவமும் கொண்ட ரைடன் இது. இரானின் அம்லேஷ் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட இந்த டெரகோட்டா ரைடன், கி.மு. 11 - கி.மு. 9-ம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்டதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. சுமார் 3000 ஆண்டுகள் பழைமையான ரைடன் இது.



பண்டைய கிரேக்கத்திலும் ரைடன்களின் புழக்கம் அதிகம் இருந்திருக்கிறது. பல்கேரியாவின் தேசிய அருங்காட்சியகத்தில் பழைமையான ரைடன் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. மாட்டின் முகம் கொண்ட வெள்ளி ரைடன். வேறு சிற்பங்களும் செதுக்கப்பட்ட அந்த கலைநயம் வாய்ந்த ரைடன், கி.மு. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கிரேக்கத் தலைமைக் கடவுளான ஜீயஸின் மகன் டயோனிஸஸ். மிகவும் ஜாலியான பேர்வழியான இவர்தான் திராட்சைகளின் கடவுள் என்றும், திராட்சை ரசத்தைக் கண்டுபிடித்தவர் என்றும் கிரேக்கர்களால் கொண்டாடப்பட்டார். ஆகவே டயோனிஸஸின் ஓவியங்கள், சிலைகள் அனைத்துமே அவர் கையில் திராட்சையோ அல்லது ரைடனோ இருப்பது போலவே அமைந்திருக்கும். பண்டைய கிரேக்கத்தில் வடிவமைக்கப்பட்ட ரைடன்கள் பலவற்றிலும் டயோனிஸஸின் உருவமோ, ஓவியமோ இடம்பெற்றிருப்பதையும் பார்க்கலாம். கனடாவின் Tamoikin அருங்காட்சியகத்தில் கி.மு. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த ரைடன் ஒன்று உள்ளது. தங்கத்தாலும் வெண்கலத்தாலும் உருவாக்கப்பட்ட இந்த ரைடனில் விலங்குகளின் முகத்துக்குப் பதிலாக டயோனிஸஸின் முகம் செதுக்கப்பட்டிருப்பது அபூர்வமானது.

இதுவரை இரானில்தான் அதிக அளவில் ரைடன்கள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. பண்டைய இரா

னின் பார்த்தியப் பேரரசில் யானைத் தந்தத்தில் ரைடன்களைச் செதுக்கியிருக்கிறார்கள். கி.மு. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த தந்தத்தினாலான ரைடன்கள் சிலவும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. மனித முகம் கொண்ட ரைடன்கள் சிலவும் ஆங்காங்கே அரிதாகக் கிடைத்திருக்கின்றன. சீனாவில் ஒரு சில ரைடன்கள் கிடைத்திருக்கின்றன. தற்போது கனடாவின் ராயல் ஆண்டரியோ அருங்காட்சியகத்தில் சீன ரைடன் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. அது பீங்கானாலானாது. முறைத்துப் பார்க்கும் எருது ஒன்றின் முகத்துடன் அகலமான கோப்பையையும் கொண்டது. இந்த சீன ரைடன், கி.பி. ஏழாம் நூற்றாண்டின் சீனாவில் இருந்த தாங் பேரரசு காலத்தைச் சார்ந்தது.

சரி, அந்தக் காலத்தில் பாரசீகர்களும் கிரேக்கர்களும் எதற்கு இவ்வளவு அழகழகான, கலைநயமிக்க ரைடன்களை உருவாக்கினார்கள்?

இந்த ரைடன்களை திராட்சை ரசம் உள்ளிட்ட பானங்கள் அருந்தப் பயன்படுத்தினார்கள். ரைடன்களில் பானங்களை நிரப்பிப் பூஜைகளில், சடங்குகளில் பயன்படுத்தினார்கள். பலி கொடுக்கப்பட்ட விலங்குகளின் ரத்தமும் ரைடன்களில் நிரப்பப்பட்டன. புனித நீரை ரைடன்களில் ஊற்றி அபிஷேகம் செய்யும் வழக்கமும் இருந்தது.

தவிர, ரைடன்களில் ஊற்றப்பட்ட பானத்தை ஒரு மிடறு அருந்தினால் ‘சூப்பர் பவர்’ கிடைக்கும் என்று அவர்கள் நம்பினார்கள். ஆம், அபூர்வ சக்திகள் பெற ரைடன்களில் பானங்களை ஊற்றி ஊற்றிக் குடித்திருக்கிறார்கள். இந்த விஷயம் நம் காலத்து சூப்பர் ஹீரோக்களுக்குத் தெரியுமா?

## 27. சீனாவின் ராஜமுத்திரை!

கி.மு. 722.

சீனாவின் சு மாகாணம். அங்கே அமைந்திருந்த மலைப் பகுதியில் பயான் ஹி என்பவர் உலவிக் கொண்டிருந் தார். அப்போது தங்க நிற பீனிக்ஸ் பறவை ஒன்று ஸிவ்வ்வ்வ்வெனப் பறந்து வந்தது. ஹியும் அது பறந்த திசையிலேயே ஓடினார். அது மலையின் ஒரு பகுதி யில் கல் ஒன்றின் மேல் அமர்ந்தது. சில நிமிடங்களில் மீண்டும் பறந்து சென்றது. பீனிக்ஸ் பறவை எப்போதும் பச்சை மாணிக்கக்கல் (Jade) மீது மட்டும்தான் அம ரும் என்று ஹி செய்தி ஒன்றைக் கேள்விப்பட்டிருந்தார். ஓடிச்சென்று அந்தக் கல்லை எடுத்துப் பார்த்தார். சாதா ரண கல் போலத்தான் தெரிந்தது. 'இல்லை, இதனுள் பச்சை மாணிக்கக்கல் இருக்கும்!' - ஹி ஆழமாக நம்பி னார்.

சு மாகாணத்தின் அரசராக லி என்பவர் இருந்தார். ஹி அந்தக் கல்லுடன் அரசரிடம் சென்றார். 'அரசே! இது பச்சை மாணிக்கக்கல்! உங்களுக்காகத்தான் எடுத்து வந்தேன்' என்றார். அரசர் அங்கிருந்த கொல்லரி டம் கல்லைக் கொடுத்துப் பரிசோதிக்கச் சொன்னார். அதைச் சரியாகச் சோதனை செய்யாத கொல்லர்,

'இவன் ஏமாற்றுகிறான். இது வெறும் கல்தான்' என்றார். அரசர் லிக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. 'இவனது கால் ஒன்றை வெட்டுங்கள்!' - கட்டளையிட் டார். ஹியின் இடது கால் வெட்டப்பட்டது.

கொஞ்ச காலத்தில் அரசர் லி இறந்துபோக, அவரது மகன் வு பதவிக்கு வந்தார். ஹி, ஒரு காலால் நொண் டியபடியே வுவைப் பார்க்கச் சென்றார். அதே கல்லை நீட்டினார். 'அரசே! இது பச்சை மாணிக்கக்கல்' என்றார். வுவும் அதைச் சரியாகப் பரிசோதிக்கவில்லை. 'என் னை ஏமாற்ற நினைக்கும் இந்தப் பித்தலாட்டக்காரனின் இன்னொரு காலையும் வெட்டுங்கள்' - என்று ஆவேச மாகக் கட்டளையிட்டார். ஹியின் வலது காலும் வெட் டப்பட்டது.

அரசர் வு இறந்துபோன பின், அவரது மகன் வென் ஆட் சிக்கு வந்தார். இந்தமுறை ஹி, புதிய அரசரிடம் செல்ல வில்லை. தான் கல்லைக் கண்டெடுத்த அந்த மலைப் பகுதிக்குச் சிரமப்பட்டுத் தவழ்ந்தே ஏறிச் சென்றார். பாதையெங்கும் ரத்தம். அங்கே இருந்தபடி கதறிக் கதறி அழுதார். 'ஹி என்ற மனிதன், மலைப்பகுதியில் கடந்த மூன்று நாள்களாக அழுதுகொண்டே இருக்கிறானாம்' - அரசர் வென்னுக்குத் தகவல் சென்றது. அரசர், தன் அரண்மனையிலிருந்து ஆள் அனுப்பினார்.

உடலிருந்து ரத்தம் அதிகமாக வெளியேறிய நிலையில் ஹி சோர்ந்து, சுருண்டு கிடக்க, அரசர் அனுப்பிய ஆள் அங்கே வந்தார். 'நீ உன் கால்களை இழந்ததற்காகக் கதறி அழுகிறாயா?' என்று கேட்டார். 'இழந்த என் கால் களுக்காக நான் அழவில்லை' என்று சொன்ன ஹி, அந்தக் கல்லை நீட்டினார். 'விலைமதிப்புமிக்க இந்த பச்சை மாணிக்கக்கல்லை சாதாரணக் கல் என்கிறார்

கள். உண்மையைச் சொல்லும் என்னை பொய்யன் என்று குற்றம் சாட்டுகிறார்கள்!' என்று கதறினார்.

அரசர் வென்னுக்குத் தகவல் சென்றது. ஹி, அரண்மனைக்கு வரவழைக்கப்பட்டார். வென், அந்தக் கல்லை நிதானமாக ஆராயச் சொன்னார். அந்தக் கல் கொஞ்சம் கொஞ்சமாகச் செதுக்கப்பட்டது. உள்ளிருந்து பச்சை மாணிக்கக்கல் ஒளிர்ந்தது. 'தான் பொய்யன் இல்லை' என்று நிரூபணமான மகிழ்ச்சியில் ஹியின் முகமும் பிரகாசமானது. வென், ஹியிடம் மன்னிப்புக் கேட்டார். 'இது ஹி கண்டெடுத்த பச்சை மாணிக்கக்கல்', அதாவது ஹிஷிபி (Heshibi) என்று அதற்குப் பெயர் சூட்டி கௌரவப்படுத்தினார்.

சீன நாடோடிக் கதையில் சொல்லப்படும் இந்த ஹிஷிபி பச்சை மாணிக்கக்கல்தான் பின்பு சீனப் பேரரசுகளின் ராஜமுத்திரையாக மாறியது. இந்தக் கல் கண்டெடுக்கப்பட்ட கதை கி.மு. எட்டாம் நூற்றாண்டிலிருந்து தொடங்கினாலும், ராஜமுத்திரையாக மாறிய வரலாறு என்பது கி.மு. மூன்றாம் நூற்றாண்டெனக் கருதப்படுகிறது.

கி.மு. 221-ம் ஆண்டில் குன் ராஜ்ஜியத்தின் முதல் பேரரசராக ஷி ஹுவாங் பதவிக்கு வந்தார். பகையுடன் மோதிக் கொண்டிருந்த பல்வேறு சிறு ராஜ்ஜியங்களை ஒன்றிணைத்து குன் பேரரசை அவர் உருவாக்கியிருந்தார். அதில் ஸாவோ என்று சிறு ராஜ்ஜியமும் அடக்கம். ஸாவோ ராஜ்ஜியத்தில்தான் அந்த ஹிஷிபி பச்சை மாணிக்கக்கல்லும் இருந்தது. சீனர்கள் பச்சை மாணிக்கக்கல்லை மிகவும் உயர்வானதாகக் கருதினார்கள். 'இது மிகவும் அருமையான, உயர்வான கல். இதை நம் பேரரசின் ராஜமுத்திரையாகச் செதுக்குங்கள்' என்று பேரரசர் ஷி ஹுவாங் கட்டளையிட்டார்.

Having received the Mandate from Heaven, may (the emperor) lead a long and prosperous life! அதாவது, 'சொர்க்கத்திலிருந்து பெறப்பட்ட கட்டளை! பேரரசரா னவர் நீண்ட ஆயுளோடும் வளமோடும் வாழ வேண்டும்!' என்ற அர்த்தம் கொண்ட சீன எழுத்துகள் அந்த முத் திரையில் செதுக்கப்பட்டன. செதுக்கியவர் ஸன் ஸோ என்ற கலைஞர்.




குன் பேரரசர்களிடம் இருந்தவரை அந்த ராஜமுத்திரை பத்திரமாகவே இருந்தது. மூன்றாவது பேரரசர் ஸியிங் காலத்தின் குன் பேரரசு முடிவுக்கு வந்தது. அடுத்து அந்த முத்திரை ஹன் ராஜ்ஜியத்தின் வசமானது. ஹன் ராஜமுத்திரையாகப் பயன்படுத்தப்பட்டது. கி.பி. 9-ம் ஆண்டில் ஹிஷிபி முத்திரை மேற்கு ஹன் ராஜ்ஜிய அர சரான வாங் மேங் வசம் சென்றது. ஒருமுறை வாங் மேங் குக்கும், அவரது அரசிகளில் ஒருத்திக்கும் சண்டை. வழக்கமான புருஷன் - பொஞ்சாதி பிரச்னையாக இருந் திருக்கலாம். கோபத்தில் அந்தப் பொஞ்சாதி ஹிஷிபி ராஜமுத்திரையைத் தரையில் தூக்கி எறிந்தாள். அதன் ஒரு முனை சேதாரமானது. பதறிய வாங் மேங், உடைந்த அந்த முனையை தங்கத்தைக் கொண்டு நிரப்பிச் சரி செய்தார். தன் பொஞ்சாதியைச் சரி செய்தாரா என்பது குறித்த பதிவுகள் இல்லை.

சீனாவில் புதிய ராஜ்ஜியங்கள் எழுந்தன. விழுந்தன. புதிய அரசர்களும் பேரரசர்களும் பதவிக்கு வந்தார்கள். காணாமல் போனார்கள். வெய் ராஜ்ஜியம், ஜின் ராஜ்ஜியம், பதினாறு ராஜ்ஜியங்களின் காலம், தெற்கு - வடக்கு ராஜ்ஜியங்களின் காலம், ஷுய் ராஜ்ஜியம், டாங் ராஜ்ஜியம் என்று காலச்சக்கரம் சுழன்றது. அந்தச் சுழற்சியில் ஹிஷிபி ராஜமுத்திரையும் கைமாறிக் கொண்டே வந்தது வரலாற்றில் பதிவாகியிருக்கிறது.

கி.பி. 907 முதல் 979 வரையிலான காலம் சீன வரலாற்றில் 'ஐந்து சமஸ்தானங்கள் மற்றும் பத்து ராஜ்ஜியங்களின் காலம்' என்றழைக்கப்படுகிறது. அந்தக் காலகட்டத்தில்தான், ஹிஷிபி ராஜமுத்திரை குறித்த வரலாற்றுக் குறிப்புகள் கடைசியாகக் கிடைத்திருக்கின்றன. அந்த அரசர்கள் தங்கள் ராஜ்ஜியங்களை இழந்தபோது ஹிஷிபி ராஜமுத்திரையையும் தொலைத்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

டாங் பேரரசின் கடைசி அரசர், தன்னைத் தானே எரித்துக் கொண்டு இறந்து போனார். அப்போதே ஹிஷிபி ராஜமுத்திரையும் எரிந்து போயிருக்கலாம் என்று சில வரலாற்றாளர்கள் குறிப்பிடுகிறார்கள். கி.பி. 1368-ம் ஆண்டில் மிங் பேரரசு சீனாவில் வலிமையாகக் காலூன்றியது. அந்தப் பேரரசின் பல ராஜமுத்திரைகள் வரலாற்றில் பதிவாகியுள்ளன. அதிலும் ஹிஷிபி ராஜமுத்திரை இல்லை.

சென்ற நூற்றாண்டில் சீனாவில் நடத்தப்பட்ட அகழ்வாய்வில் பல்வேறு ராஜமுத்திரைகள் கண்டெடுக்கப்பட்டன. 1955-ம் ஆண்டில் ஷான்ங்ஷி நகரில் 13 வயதுச் சிறுவன் ஒருவன் மிங் மற்றும் குவிங் பேரரசுகளைச் சேர்ந்த பல ராஜமுத்திரைகளைக் கண்டெடுத்தான்.

ஆனால், அதிலும் ஹிஷிபி ராஜமுத்திரை இருந்ததாகத் தெரியவில்லை.

சர்ச்சை ஒன்றும் உண்டு. 1948. சீனப்புரட்சிக்கு முந்தைய வருடம். அரசியல் நெருக்கடி மிகுந்த காலகட்டம். சீனாவின் தேசியவாதிகள், கம்யூனிஸ்ட்டுகளிடமிருந்து தேசத்தின் பழமையான பொக்கிஷங்களைப் பாதுகாக்க நினைத்தனர். கப்பல் ஒன்றில் பொக்கிஷங்கள் பலவற்றையும் ஏற்றி அனுப்பினர். அந்தக் கப்பல் பொஹாய் கடலில் மூழ்கிப்போனது. இன்று வரை அந்தக் கடல் பகுதியில் தேடல் நடத்தப்படவில்லை. அந்தப் பொக்கிஷங்களுடன் ஹிஷிபி ராஜமுத்திரையும் கடலில் புதைந்து கிடக்கலாம் என்றும்கூட நம்பப்படுகிறது.

தங்க நிற பீனிக்ஸ் பறவை மீண்டும் பறந்து வந்து தேடிக் கொடுத்தால் உண்டு.

## 28. தாராவின் சிலை

புத்த மதம், போதி நிலையில் வாழ்பவர்களை 'போதிசத்துவர்கள்' என்றழைக்கிறது. மஹாயானம் என்பது புத்த மதத்தில் ஒரு பிரிவு. 'போதிசத்துவர்கள் என்போர், மக்கள் நலனுக்காக, அவர்கள் வீடுபேறு அடைய உதவுவதற்காக தாம் 'போதி' நிலையை அடைவதையே தாமதப்படுத்துபவர்கள்' என்று மஹாயானம் விளக்கம் சொல்கிறது. அப்படிப்பட்ட ஒரு போதிசத்துவர்தான், அவலோகிதர். கருணையின் வடிவமாகக் கருதப்படுபவர். உலக மக்களின் துன்பங்களைக் கண்டு அவலோகிதர் கண்ணீர் வடித்தார். அந்தக் கண்ணீர்த்துளியே ஒரு பெண்ணாக உருவெடுத்தது. அந்தப் பெண் போதிசத்துவரின் பெயர், தாரா. அவலோகிதரின் பெண் வடிவமே தாரா என்றொரு விளக்கமும் உண்டு.

தாராவின் பல்வேறு வடிவங்களும் புத்த மதத்தில் விளக்கப்படுகிறது. மஞ்சள் தாரா - செல்வச்செழிப்புடன் தொடர்புடையவள். பச்சை தாரா - உயர்வான செயல்களின் அதிபதி. வெள்ளை தாரா - கருணையும் அமைதியும் கொண்டவள். நீண்ட ஆயுளை வழங்குபவள். கருப்பு தாரா - ஆற்றல் தருபவள். நீல தாரா - கோபத்துடன்

தொடர்புடையவள். இப்படியாக திபெத்திய பௌத்தர்கள் 22 வகை தாராக்களை வணங்குகிறார்கள்.

இலங்கையின் வரலாற்று ஆவணமாகக் கருதப்படும் பழைமையான நூல், மகாவம்சம். இந்த நூல் கூறும் செய்தியின்படி, கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் மத்தியில், மகிந்தர் என்பவரால் இலங்கையில் புத்த மதம் அறிமுகப்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. மகிந்தர், மகதப்பேரரசரான அசோகரின் மூத்த மகன். அப்போது, இலங்கையின் அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிப் புரிந்துக்கொண்டிருந்த அரசன், தேவநம்பியதீசன். இலங்கைக்கு வந்த மகிந்தரின் வழிகாட்டுதலில் தேவநம்பியதீசன் புத்த மதத்தைத் தழுவினான். அவனால், இலங்கை எங்கும் புத்த மதம் பரவ வழிவகை செய்யப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலம். இலங்கையின் கிழக்குக் கடற்கரை நகரங்களான திரிகோணமலைக்கும் மட்டக்களப்புக்கும் இடையில் அமைந்த ஒரு சிற்றூர். வயல் ஒன்றில் வேலைக்காகத் தோண்டும்போது 'டங்ங்' என்று சத்தம் கேட்டது. ஆர்வமாகத் தோண்டினார்கள். அபூர்வமான சிலை ஒன்று தென்பட்டது. கவனமாக அதை வெளியில் எடுத்தார்கள். ஏதோ ஒரு பெண்ணின் சிலை என்று தெரிந்தது. அதுவும் கிட்டத்தட்ட ஓர் ஆள் உயரத்துக்கான பெரிய சிலை. பின்பே அது பெண் போதிசத்துவரான 'தாரா'வின் சிலை. சுமார் பத்து நூற்றாண்டுகள் பழைமையானது போன்ற விவரங்கள் கண்டறியப்பட்டன.

அந்தச் சிலை அங்கே புதைக்கப்பட்ட காரணம் என்னவாக இருக்கலாம்? பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோழர்கள், இலங்கை மீது படையெடுப்பு நடத்தி

யபோது தாரா சிலை புதைக்கப்பட்டிருக்கலாம் என்பது ஓர் அனுமானம். புத்த மதத்தைப் பின்பற்றிய இலங்கை மக்கள், இந்து மதத்தைச் சேர்ந்த எதிரிகளிடம் தங்க ளது பொக்கிஷங்கள் சிக்கிவிடக்கூடாது என்பதற்காக அவற்றைப் புதைத்து வைத்தனர். அப்படித்தான் ஏதோ ஒரு புத்தக் கோயிலில் வழிபாட்டுக்கு வைக்கப்பட்டி ருந்த இந்தத் தாராவின் சிலையும் பாதுகாப்பு கரு திப் புதைக்கப்பட்டிருக்கலாம். அதைப் புதைத்தவர்கள் எதிரிகளால் கொல்லப்பட்டிருக்கலாம். அல்லது அவர் களால் அதற்குப் பிறகு இந்தச் சிலையை மீட்க இயலாம லேயே போயிருக்கலாம். பிற்காலத்தில் கண்டறியப்பட்ட பல்வேறு பழைமையான பொக்கிஷங்களின் முன் கதை இப்படியாகத்தான் இருந்திருக்கிறது. தாரா சிலையின் கதையும் இதுவாகவே இருக்கக்கூடும்.

பல நூற்றாண்டுகள் மண்ணில் புதைந்திருந்தாலும் தாரா சிலை சிதையாமல், உருக்குலையாமல், தகதகப்பு குறையாமல் கண்டெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. வெண்கலத்தால் செய்யப்பட்டு தங்க முலாம் பூசப்பட்ட கெட்டியான சிலை. அதன் கிரீடத்தில் மர கதம் அல்லது மாணிக்கக்கற்கள் பதிக்கப்பட்டிருந்தி ருக்கலாம். தோண்டியெடுக்கப்படும்போது தலைக்கிரீ டத்தின் முன்பகுதியில் வெறும் துளை மட்டுமே இருந் தது. தொங்கும் காதுகள். மூடிய கண்கள். வரதமுத்ரா செய்யும் வலக்கை. தாமரையை ஏந்துவது போன்ற இடக்கை. மண்ணுக்குள் இருந்து கண்டெடுக்கப்பட்ட இந்தச் சிலையானது இலங்கையின் கண்டி ராஜ்ஜி யத்தை ஆண்ட அரசனான ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனிடம் ஒப்படைக்கப்பட்டதாக ஒரு தகவல் உண்டு.



இலங்கையில் ஆரம்பத்தில் தளைத்தோங்கியது புத்த மதத்தின் மஹாயானப் பிரிவு. பிறகு தேரவாதம் தலை யெடுத்தது. இன்று வரை தேரவாதமே இலங்கையில் கடைபிடிக்கப்படுகிறது. தேரவாத பௌத்தர்கள், பத் தொன்பதாம் நூற்றாண்டில் கண்டெடுக்கப்பட்ட மஹா யான போதிசத்துவரான தாராவின் சிலையைப் பெரி தாக எடுத்துக் கொள்ளவில்லை. பெரும்பாலோனோர் அது இலங்கையின் இந்துமதப் பெண் கடவுளாக வணங்கப்படும் பத்தினி தெய்வத்தின் சிலை (நம் ஊரில் கண்ணகி) என்றே நினைத்தனர்.

கி.பி. 1813-ம் ஆண்டில் இலங்கையின் பிரிட்டிஷ் கவர் னராக நியமிக்கப்பட்டவர் ராபர்ட் பிரௌன்ரிக். கண்டி ராஜ்ஜியத்தில் நிலவிய குழப்பமான சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாக பயன்படுத்திய கவர்னர் ராபர்ட், விக்கிரம ராஜசிங்கனுடன் போரிட்டு அவனைத் தோற் கடித்தார். கண்டி ராஜ்ஜியத்தைக் கைப்பற்றினார். பல்

வேறு பொக்கிஷங்களுடன், தாரா சிலையும் ராபர்ட் வசம் சென்றது.

தாரா சிலையின் பழம்பெருமையும், சரித்திர அருமை யும் ராபர்ட்டுக்குப் புரியவில்லை. அது புத்த மதத்துடன் தொடர்புடையது, புத்த பெண் தெய்வம் என்பதெல்லாம் அவருக்குத் தெரியவில்லை. அழகான சிலை என்று நினைத்தார். அவரது மனைவி சோபியாவுக்கும் அந்தச் சிலை பிடித்திருந்தது. இலங்கையின் கவர்னர் பதவிக் காலம் முடிந்து பிரிட்டனுக்குத் திரும்பிச் செல்லும்போது (கி.பி. 1822), ராபர்ட் பல செல்வங்களை அங்கிருந்து அள்ளிச் சென்றார். அதில் தாரா சிலையும் இருந்தது. ஆறு மாதங்கள் பயணம் செய்து தாரா, கடல்கள் தாண்டி, கண்டங்கள் தாண்டி பிரிட்டனில் கால் பதித்தாள்.

ராபர்ட்டும் சோபியாவும் தங்கள் மாளிகையின் வரவேற் பறையில் தாராவின் சிலையை வைத்தார்கள். அவர்க ளது வீட்டுக்கு விருந்துக்கு வருபவர்கள் எல்லாம் அந் தச் சிலையின் அழகில் வாய்பிளந்து நின்றார்கள். அந் தச் சிலை தங்களுக்குக் கிடைத்த கதையை மற்றவர் களிடம் சொல்லி பெருமையடித்துக் கொள்வது சொல் வது ராபர்ட், சோபியாவின் வழக்கமாகவே இருந்தது.

இப்படியாகப் பத்து வருடங்கள் கழிந்தன. சோபியாவுக்கு மேலாடையில்லாத அந்தச் சிலையைப் பார்த்து பார்த் துச் சலிப்பு வந்திருக்க வேண்டும். 'நாம் இதை அருங் காட்சியத்துக்கு அனுப்பிவிடலாமா?' என்று ராபர்ட்டிடம் கேட்டார். அவரும் ஒப்புக்கொண்டார். 'அருங்காட்சிய கத்தில் எவ்வளவோ மதிப்புமிகுந்த பொருள்கள் இருக் கின்றன. நாங்கள் இந்தச் சாதாரண வெண்கலச்சிலை யைத்தான் அனுப்பி வைக்கிறோம். ஏற்றுக்கொள்வீர் களா?' என்ற தொனியில் தயக்கத்துடனேயே சோபியா,

அருங்காட்சியகத்துக் கடிதம் எழுதியிருக்கிறார். ஆம், அவர்களுக்கு நிஜமாகவே தாரா சிலையின் மதிப்பு தெரியவில்லை.

1830-களில் தாரா சிலை பிரிட்டிஷ் அருங்காட்சியகத் துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அங்கும் பல ஆண் டுகள் சிலை மக்களுக்கான காட்சிக்கு வைக்கப்ப டவில்லை. காரணம் அதன் கவர்ச்சியான தோற்றம். பின்பே இந்த தாரா சிலையானது ஏழு அல்லது எட் டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது, கலைநயமிக்க பழமை யான சிலை, புத்த மதத்தைச் சேர்ந்த பெண் கடவு ளினுடையது போன்ற அருமை பெருமைகள் எல்லாம் அறியப்பட்டன. தற்போது பிரிட்டிஷ் அருங்காட்சியகத் தின் ஆசியப் பிரிவின் வாயிலிலேயே தாராவின் சிலை வைக்கப்பட்டுள்ளது. அங்கே தாரா தெய்வத்தின் வேறு பல சிலைகளும் உள்ளன. அவை புத்த மதத்தைப் பின்பற்றும் பல்வேறு நாடுகளிலிருந்து கொண்டு வரப் பட்டவை (கொள்ளையடிக்கப்பட்டவை என்றே சொல் லலாம்). ஆனால், நின்ற கோலத்திலிருக்கும் இந்தத் தாரா சிலைதான் மிகப்பழைமையானதும், மிக உயர மானதும் (143 செ.மீ.) ஆகும். இந்தத் தாரா சிலையின் மாதிரி ஒன்று, கொழும்பின் தேசிய அருங்காட்சியத்தி லும் வைக்கப்பட்டிருக்கிறது.

இறுதியாக ஒரு குறிப்பு. தாரா தெய்வமானது, இந்து தெய்வங்களான லட்சுமி, பார்வதி போன்ற பெண் தெய் வங்களை அடிப்படையாகக் கொண்டே வடிவமைக்கப் பட்டிருக்கிறது. பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்பு வரை தமிழகத்தில் புத்த மதம் செல்வாக்குடன் இருந் திருக்கிறது. அதற்குப் பிறகான காலத்தில் பல புத் தக் கோயில்கள் இந்துக் கோயில்களாக மாற்றப்பட்டன. தாரா தேவி கோயில்கள், இந்து அம்மன் கோயில்களாக

மாற்றப்பட்டன. இன்று நாம் காணும் பல்வேறு திரௌபதி அம்மன் கோயில்கள், அன்று தாரா தேவி கோயில்களாக இருந்திருக்கலாம் என்று வரலாற்றாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

## 29. வாசிக்க முடியாத புத்தகம்!

ஒரு மர்மமான விஷயத்துக்கான விடை கண்டுபிடிக்கவே இயலவில்லை என்றால், இறுதியாக அதற்கு இப்படியாக ஒரு தீர்ப்பு வழங்கப்படும். 'இதெல்லாமே ஏலியன்களின் வேலை' என்று. இந்த 'வாய்னிச் புத்தகத்தின்' விஷயத்திலும் அப்படித்தான். 'யாராலுமே வாசிக்க முடியாத புத்தகமாக அல்லவா இருக்கிறது. இது இந்த உலகத்தில் இருந்த அல்லது இருக்கும் மொழிகளால் எழுதப்பட்ட புத்தகமே அல்ல. ஏலியன்களின் விநோத மொழியில் எழுதப்பட்ட புத்தகம். வேற்றுக்கிரகத்திலிருந்து வந்த யாரோ ஓர் ஏலியன் இதை இங்கே விட்டுச் சென்றிருக்கலாம்.'

கேட்பதற்குச் சுவாரசியமாக இருக்கலாம். ஆனால், ஏலியன் எழுதிய புத்தகம் என்பது உண்மை இல்லை. எனில், எது உண்மை? வாய்னிச் (Voynich) புத்தகத்தின் வரலாறு என்ன?

கி.பி. 1585-ம் ஆண்டில் பிறந்த, பிரேக் நகரத்தைச் சேர்ந்த (இன்றைய செக் குடியரசின் தலைநகரம்) ஜார்ஜ் பரேஸ்ச் என்பவர்தாம் இந்த வாசிக்க முடியாத புத்தகத்தை முதன் முதலில் வாங்கி வைத்திருந்ததாக வரலாறு ஆரம்பிக்கிறது. ஆனால், ஜார்ஜுக்கு முன்பு யாரிட

மெல்லாம் புத்தகம் இருந்தது என்று சொல்லும் தகவல்களும் இருக்கின்றன.

ஜார்ஜ், பழைமையான பொருள்களைச் சேகரிப்பதிலும், அவற்றை ஆய்வு செய்வதிலும் ஆர்வம் கொண்டவராக இருந்தார். புனித ரோமப் பேரரசில் வாழ்ந்த அதானாசியஸ் கிர்செர் என்பவர், பண்டைய மொழிகளைப் புரிந்து கொண்டு மொழிமாற்றுவதில் வல்லவர் என்பதை ஜார்ஜ் கேள்விப்பட்டார். தன்னிடமிருந்த புத்தகத்தின் சில பக்கங்களின் பிரதியை மட்டும் கிர்செருக்கு அனுப்பி வைத்தார். 'என்னால் கண்டறிய முடியவில்லை. ஆனால், முழுப் புத்தகத்தைப் பார்க்க விரும்புகிறேன்' என்று கிர்செர் பதில் அனுப்பினார். ஜார்ஜ், புத்தகத்தை அனுப்ப விரும்பவில்லை.

ஜார்ஜின் இறப்புக்குப் பிறகு, அவரது நண்பரும், பிரேக் நகரத்தின் சார்லஸ் பல்கலைக்கழகப் பேராசிரியருமான ஜோவன்னஸ் மார்களிடம் இந்தப் புத்தகம் சென்றது. கிர்செர் அவருக்கும் மியுச்சுவல் நண்பர்தான். எனவே மார்கஸ், கிர்செருக்கு முழு புத்தகத்தையும் அனுப்பி வைத்தார். அதில் லத்தின் மொழியில் எழுதப்பட்ட ஒரு கடிதமும் இணைக்கப்பட்டிருந்தது. கடிதம் சில செய்திகளைச் சொன்னது. இந்தப் புத்தகம் புனித ரோமப் பேரரசின் பேரரசராக இருந்த இரண்டாம் ருடோல்ப் வசம் கொஞ்ச காலம் இருந்தது. அவர் இதனை 600 தங்க நாணயங்கள் கொடுத்து வாங்கியிருக்கிறார். பதின்மூன்றாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வாழ்ந்த தத்துவவியலாளரான ரோஜர் பகான் என்பவரே இந்த நூலின் ஆசிரியர் என்பது பேரரசர் ருடோல்பின் கணிப்பு. பின்பு இந்தப் புத்தகம், ருடோல்பின் மருத்துவராகவும், அவரது தோட்டங்களைக் கவனித்துக் கொண்ட தாவரவியலாளராகவும் பணியாற்றிய ஜேக்கபஸ் ஹார்கிக்கி என்பவ

ரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவை மார்கெஸ் எழுதிய கடிதத்திலுள்ள செய்திகள். கடிதத்திலிருக்கும் தேதி, 19 ஆகஸ்ட், 1665.

அடுத்த இருநூறு ஆண்டுகளுக்கு இந்தப் புத்தகம் என்ன ஆனது, யாரிடமிருந்தது என்பது குறித்த செய்திகள் கிடையாது. அது கிர்செரின் நூலகத்தில் இருந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. பின்பு பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்பாதியில் இத்தாலியில் சிதறிக்கிடந்த ராஜ்ஜியங்களை ஒன்றிணைக்க, இரண்டாம் விக்டர் இமானுவேல் என்ற அரசர் போர்களை நடத்தினார். அவரால் ஏகப்பட்ட செல்வங்கள் பல இடங்களில் இருந்து எடுத்துக் கொண்டார். அதில் இந்தப் புத்தகமும் இருந்திருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

1912-ம் ஆண்டில் சொசைட்டி ஆஃப் ஜீஸஸ் என்ற அமைப்பு நிதி திரட்டுவதற்காக பழம்பொருள்கள் சிலவற்றை ஏலம்விட்டது. வில்ஃப்ரிட் வாய்னிச் என்ற போலந்து தேசத்துக்காரர், 30 புத்தகங்களை வாங்கினார். அதில் இந்த வாசிக்க முடியாத பழைய புத்தகமும் இருந்தது. அதிலிருந்து அந்தப் புத்தகம், 'வாய்னிச் புத்தகம்' என்ற பெயராலேயே அடையாளப்படுத்தப்பட்டது. வாய்னிச்சின் தொழிலே, பழைமையான அரிதான புத்தகங்களை உலகமெங்குமிருந்து சேகரிப்பதுதான். வாய்னிச்சும் இந்தப் புத்தகம் என்ன மொழியில் எழுதப்பட்டிருக்கிறது, எதைப் பற்றிப் பேசுகிறது என்று ஆய்வுகளில் ஈடுபட்டார். அவருக்கும் ஒன்றும் புரியவில்லை. அவரது காலத்துக்குப் பின் வாய்னிச்சின் மனைவி, மகள், மகளது தோழி என்று புத்தகம் கைமாறியது. அந்தத் தோழியான அன்னே, 1969-ம் ஆண்டில் வாய்னிச்சின் புத்தகத்தை, அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகத்துக்குக் கொடுத்துவிட்டார். 'இதை வைத்து ஒன்றும்

பண்ண முடியாது' என்பது அவரது மைண்ட் வாய்ஸாக இருந்திருக்கலாம். இப்போதும் யேல் பல்கலைக்கழகத்தில்தான் வாய்னிச் புத்தகம் காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது. இன்னமும் இந்தப் புத்தகம் குறித்த ஆராய்ச்சிகள் தொடர்கின்றன.



கார்பன் டேட்டிங் வயதுக் கணிப்பின்படி வாய்னிச் புத்தகம், பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பாதியில் எழுதப்பட்டிருக்கலாம் அல்லது அதற்கு முன்பே எழுதப்பட்டிருக்கலாம் என்று தெரிய வருகிறது. இந்தப் புத்தகத்தின் பூர்விகம் இத்தாலியாக இருக்கலாம். இது எழுதப்பட்டிருப்பது எந்த மொழியில் என்று உறுதியாகச் சொல்ல இயலவில்லை. ஆங்காங்கே சில லத்தின் வார்த்தைகள் தென்படுகின்றன. பண்டைய ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டிருக்கலாம் என்று சிலர் கருதுகிறார்கள். இது புழக்கத்திலிருந்த எந்த மொழியிலும் எழுதப்பட்டதல்லை. யாரோ ஒருவரால் உருவாக்கப்பட்ட புதிய விநோத மொழியில் எழுதப்பட்டிருக்கிறது என்று சில ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பதப்படுத்தப்பட்ட, மெல்லிய விலங்குத்தோலால் வாய்னிச் புத்தகத்தின் பக்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதிலுள்ள எழுத்துகள் இடமிருந்து வலமாக எழுதப்பட்டுள்ளன. இறகில் மை தொட்டுத் தொட்டு புத்தகத்தில் எழுத்துகள் எழுதப்பட்டிருக்கின்றன. படங்களும்

அவ்விதமே வரையப்பட்டிருக்கின்றன. Iron gall ink எனப்படும் இரும்பு உப்புக்கள், தாவரங்களின் சாறுகள் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட மையே இதில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. புத்தகத்தில் இடம்பெற்றுள்ள சில படங் களில் வண்ணமானது பிற்காலத்தில் தீட்டப்பட்டிருக்க லாம் என்று கருதப்படுகிறது.

புத்தகத்தின் மொத்தப் பக்கங்கள் 272 என்று நம்பப்ப டுகிறது. சில பக்கங்கள் தொலைந்ததுபோக, இப்போது 240 பக்கங்கள் மட்டும் இருக்கின்றன. பெரும்பாலான பக்கங்களில் வண்ண ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. சில பெரிய ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன. அந்தப் பக் கங்கள் இரண்டாகவோ, மூன்றாகவோ மடிக்கப்பட்டி ருக்கின்றன. இது முழுக்க கைகளாலேயே எழுதப்பட்ட, வரையப்பட்ட புத்தகம். அட்டையில் தலைப்போ, புத்த கம் எழுதியவர் பெயரோ இல்லை.

இதில் வரையப்பட்டிருக்கும் படங்களை வைத்து இந்தப் புத்தகம் என்னென்ன பிரிவுகளில் எல்லாம் பேசுகிறது என்று யூகிக்க முடிகிறது. உயிரியல், தாவரவியல், வான வியல், அண்டவியல், மருத்துவவியல் போன்ற பிரிவுகள் இதில் இடம்பெற்றிருக்கின்றன. எனவே சில ஆய்வா ளர்கள் இது ‘பசுமைப் புரட்சிக்கான மாபெரும் புத்தகம்’ என்று சொல்கிறார்கள். சிலர் ‘மாபெரும் வாழ்க்கைத் தத்துவங்களை இந்தப் புத்தகம் பேசுகிறது’ என்கிறார் கள். சிலர் மருத்துவப் புத்தகம் என்கிறார்கள். அதுவும் பெண்களின் படம் நிறைய இருக்கிறது. ஆகவே, பெண் களுக்கான மருத்துவம் குறித்த புத்தகம் என்கிறார்கள். இன்னும் சிலர், இது யாரோ பைத்தியக்காரத்தனமாகக் கிறுக்கி வைத்தது. இதில் உள்ள எதற்குமே அர்த்தம் கிடையாது. இந்தப் புத்தகமே மதிப்பற்றது. இதை ஆய்வு செய்வதே வெட்டி வேலை என்று ஒரேடியாக ஒதுக்கி

யும் வைக்கிறார்கள். இதுவரைக்கும் நூற்றுக்கணக்கானோர் இந்தப் புத்தகத்தை வைத்து ஆய்வு செய்திருக்கிறார்கள். முதல் மற்றும் இரண்டாம் உலகப்போர்களில் களத்தில் பணியாற்றிய நூற்றுக்கும் மேற்பட்ட குறியாக்கவியலாளர்கள் (Cryptographers), வாய்னிச் புத்தகத்தை ஆராய்ந்து, எதுவும் புரிந்துகொள்ள இயலாமல், மண்டை சூடாகி, சீச்சீ என்று விலகிப் போயிருக்கிறார்கள்.

வாய்னிச் புத்தகத்தின் நோக்கம் இதுதான் என்று சில ஆய்வாளர்கள் தம் கருத்தை அழுத்தமாக முன்வைத்தாலும் எதுவும் முழுமையாக ஒப்புக்கொள்ளப்படவில்லை. விநோத முகம் கொண்ட மனிதர்கள், விதவிதமான தாவரங்கள், யாருமே கண்டிராத பூக்கள், அதிசய விலங்குகள், ஆளைக்குழப்பும் வரைபடங்கள், தலை சுற்றச் செய்யும் எழுத்துகள் என்று நிரம்பிக் கிடைக்கும் இந்தப் புத்தகம் குறித்த முழு உண்மை எப்போது வெளிப்படும் என்று தெரியவில்லை. சுமார் 500 வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட இந்தப் புத்தகம், இன்றும் பலராலும் புரிந்து கொள்ளப்படாத பொக்கிஷமாகத்தான் பார்க்கப்படுகிறது.

அதிஅவசியமான பின்குறிப்பு : வாய்னிச் புத்தகம் pdf-ஆகக் கிடைக்கிறது.

## 30. நாஜி தங்க ரயில்கள்

முதலில் சிறு விளக்கம் ஒன்று. தங்க ரயில்கள் என்றால் தங்கத்தினால் செய்யப்பட்ட ரயில்கள் அல்ல. தண்ணீர் சுமந்து வரும் லாரியை 'தண்ணீர் லாரி' என்கிறோம் அல்லவா. இவை தங்கம் சுமந்து சென்ற ரயில்கள் - 'தங்க ரயில்கள்'. எப்போது, எங்கே சுமந்து சென்றன? இரண்டாம் உலகப்போரின் இறுதிக் கட்டத்தில் நடந்த சம்பவங்கள் இவை.

1939-ம் ஆண்டில் அசுர பலத்தோடு இரண்டாம் உலகப் போரைத் துவக்கி வைத்த ஹிட்லரின் ஜெர்மனி, 1944-ம் ஆண்டில் வீழ்ந்து கொண்டிருந்தது. புறமுதுகைக் காட்டி ஓடிக் கொண்டிருந்தது. அப்போதும் ஹிட்லர் அசராமல் அடுத்தடுத்த ஆபரேஷன்களுக்குத் திட்டமிட்டுக் கொண்டுதான் இருந்தார். 1944, மார்ச் 12 அன்று ஹிட்லரிடமிருந்து 'ஆபரேஷன் மார்கரெத்' குறித்த கட்டளை வந்தது. அதாவது, நாஜிப்படைகள், ஹங்கேரியைக் கைப்பற்றுவதற்கான ராணுவ நடவடிக்கை. அதேசமயம் ஜெர்மனிக்கு எதிரான சோவியத் படைகளும் ஹங்கேரியை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தன.

யூத இனம் என்றாலே ஹிட்லருக்கு ஆகாது அல்லவா. ஹங்கேரிய யூதர்கள், நாஜிப்படையினரால் கடும்

துன்பத்துக்கு ஆளானார்கள். ஹிட்லருக்கு ஆதரவு கொடுத்த ஹங்கேரி அரசாங்கம், தனது குடிமக்களாக இருந்த சுமார் எட்டு லட்சம் யூதர்களை, நாஜிப்படை களிடம் ஒப்படைத்தது. அவர்கள் அனைவருமே வதை முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அதற்குமுன் யூதர்களது உடைமைகள், சொத்துக்கள் எல்லாமே நாஜிக்களால் பறிக்கப்பட்டன. அதில் தங்க நகைகள், மதிப்புமிக்கக் கற்கள், வைரங்கள், முத்துகள், அழகிய ஓவியங்கள், கலைப்பொருள்கள், பீங்கான் பாத்திரங் கள், வெள்ளிப் பொருள்கள், நாணயங்கள், பணம், அரிய தபால்தலைகள் எல்லாம் அடக்கம். யூதர்களின் விரல்களிலிருந்து பிடுங்கப்பட்ட திருமண மோதிரங்கள் மட்டுமே பல பெட்டிகளில் நிறைத்து வைக்கப்பட்டன.

1944-ம் ஆண்டின் இறுதி. சோவியத் படைகள் ஹங்கே ரிக்குள் நுழைந்தன. அதன் தலைநகரான புடாபெஸ்ட், சோவியத் வசமானது. அதுவரை அங்கே கொள்ளைய டித்த செல்வங்களை எல்லாம் நாஜிப்படை காப்பாற்றிக் கொள்ள நினைத்தது. நாஜிக்களின் துணை ராணுவ மான SS-ன் தளபதி அர்பேட் டுல்டியிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. டுல்டி, ஹங்கேரி யூதர்க ளிடமிருந்து கொள்ளையடித்த செல்வங்களை எல்லாம் மரப்பெட்டிகளிலும், பெரிய பைகளிலும் நிரப்பச் சொன் னார். 42 ரயில் பெட்டிகள் கொண்ட பிரத்யேக நாஜி ரயில் ஒன்று தயாராக இருந்தது. அதில் அந்தச் செல்வங்கள் எல்லாம் பத்திரமாக ஏற்றப்பட்டன. 1945-ம் ஆண்டில் ஹங்கேரி அரசும், யூத அமைப்பு ஒன்றும் வெளியிட்ட அந்த செல்வங்களின் உத்தேச மதிப்பு $350 மில்லியன். இப்போது அதன் மதிப்பு $4 பில்லியனுக்கும் அதிகம்.



ஆயுதம் தாங்கிய வீரர்களுடன் ஜெர்மனி நோக்கிய அந்தத் தங்க ரயிலின் பயணம் ஆரம்பமானது. ஹங்கேரியின் பல ஊர்களைத் தாண்டி, ஆஸ்திரியாவுக்குள் நுழைந்தது. ஆங்காங்கே பாதுகாப்புக் காரணங்களுக்காக ரயில் நிறுத்தப்பட்டது. சில இடங்களில் சில டிரக்குகள் ரயிலை நோக்கி வந்தன. சில டிரக்குகளில் கொஞ்சம் மரப்பெட்டிகள் ஏற்றப்பட்டன. அவை கிளம்பிச் சென்றன. ஆஸ்திரியாவின் பல்வேறு ஊர்களைத் தாண்டிச் சென்றது தங்க ரயில். 1945, மே. வெர்ஃபென் என்ற நகரத்தில் ஜெர்மனியின் எதிரியான பிரான்ஸின் படைகளால் நாஜி தங்க ரயில் சூழப்பட்டது. பின்பு அமெரிக்கப் படைகள் ரயிலைக் கைப்பற்றின.

இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு பல்வேறு தேசங்களும் மக்களும், தாங்கள் எதிரிகளிடம் இழந்த செல்வங்களை மீட்பதற்காகப் போராடினர். அதற்கென சில சர்வதேச அமைப்புகளும் விதிகளும் உருவாக்கப்பட்டன. ஹங்கேரியிலிருந்து வதைமுகாம்களுக்கு அனுப்பப்பட்ட பெரும்பாலான யூதர்கள், கொல்லப்பட்டிருந்தனர். எனவே அவர்களது செல்வங்கள் கேட்பாரற்றுப் போயின. ஓவியங்களோ, கலைப்பொருள்களோ எந்த தேசத்தில் கொள்ளையடிக்கப்பட்டனவோ, அந்தத் தேசத்துக்கே திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் என்ற சர்வதேச விதி ஒன்றும் இருந்தது. ஆனால், ஹங்கேரி யூதர்களின் செல்வங்கள் எவையும் அவர்களிடம் திருப்பி அளிக்கப்படவில்லை. அமெரிக்க ராணுவத்

தளபதிகளும் வீரர்களுமே அவற்றைப் பங்கு போட்டுக் கொண்டதாகச் சொல்லப்படுவதுண்டு. கொஞ்சம் நகைகள், பொருள்கள் அமெரிக்காவில் ஏலம் விடப்பட்டன. ஹங்கேரி அரசு தம் நாட்டின் செல்வங்களைத் திருப்பியளிக்குமாறு அமெரிக்கா அரசுக்கு பலமுறை கோரிக்கை வைத்தது. வெள்ளை மாளிகை கண்டு கொள்ளவில்லை.

நாஜிக்கள், ரயிலிலிருந்து டிரக்குகளில் கொஞ்சம் செல்வங்களை மாற்றி எடுத்துச் சென்றதாகப் பார்த்தோம் அல்லவா. அந்த டிரக்குகள் என்னவாயின, அதிலிருந்த செல்வங்கள் எல்லாம் யார் கைக்குப் போயின என்ற தகவலும் கிடையாது. இந்த நூற்றாண்டில் சில யூத அமைப்புகள் இதுகுறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தன. அமெரிக்கா, குறிப்பிட்ட அளவு பணம் நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று தீர்ப்பு வெளிவந்தது. 2012-ம் ஆண்டில் அந்தத் தொகை ஹங்கேரி, ஸ்வீடன், ஆஸ்திரியாவிலிருக்கும் சில யூத அமைப்புகளுக்கு வழங்கப்பட்டதாகச் செய்திகள் உண்டு. இப்படியாக ஹங்கேரியிலிருந்து கிளம்பிய தங்க ரயிலின் கதை முடித்து வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இன்னொரு தங்க ரயிலின் பயணம் இன்னும் முடிவின்றி நீண்டு கொண்டே செல்கிறது.

இரண்டாம் உலகப் போரின் இறுதி நாள்கள். ஹிட்லரின் கட்டளைப்படி நாஜிக்கள் அதுவரை கொள்ளையடித்த செல்வங்களை எல்லாம் பாதுகாக்க நினைத்தனர். பதுக்கத் திட்டமிட்டனர். தங்கமும் வைரமும் வெள்ளியும் முத்துக்களும், இன்னபிற மதிப்புமிக்கக் கற்களும் பெட்டி பெட்டியாக நாஜி ரயில் ஒன்றின் பெட்டிகளில் ஏற்றப்பட்டன. ஔல் மலைப்பகுதியின் அடிவாரங்களில் ஹிட்லர் அமைத்துக் கொண்டிருந்த ரகசிய பாதாள நக

ரத்தின் பெயர் Project Riese. 1943-ம் ஆண்டில் ஆரம் பிக்கப்பட்ட அதற்கான வேலைகள் 1945-ம் ஆண்டில் அரைகுறையாகத்தான் நிறைவேறியிருந்தன. அங்கே ஓரிடத்தின் ரகசியச் சுரங்கப் பகுதியில் தங்க ரயிலை மறைத்து வைக்கலாம் என்பது நாஜிக்களின் திட்டம்.

அன்றைய ஜெர்மனியின் பிரெஸ்லா என்ற நகரத்திலி ருந்து (இன்றைக்கு அது போலந்தின் Wroclaw நகரம்) தங்க ரயில் கிளம்பியது. சில மைல்கள் பயணம் செய்து ஔல் மலைப்பகுதியை அடைந்தது. அங்கே Walbrzych நகரத்தின் வெளியே அமைந்த ரகசியக் குகை ஒன் றில் பதுக்கி வைக்கப்பட்டது என்பது பலரும் சொல்லும் செய்தி அல்லது கதை.

Walbrzych என்பது அன்றைக்கு தென்கிழக்கு ஜெர்ம னியாக இருந்தது. இன்றைக்கு தென்மேற்கு போலந் தின் ஒரு நகரம். 70 ஆண்டுகளுக்கும் மேலாக அந்த நாஜி தங்க ரயிலைப் பலரும் தேடிக் கொண்டேதான் இருக்கிறார்கள். போலந்து அரசும் தேடிக் களைத்து விட்டது. போலந்தின் கோபெர் என்பவரும், ஜெர்மனி யின் ரிட்செர் என்பவரும் இரண்டாம் உலகப் போர் காலத்து ஆள்கள். இரண்டு பெரியவர்களும் 2015-ம் ஆண்டில் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள்.

'எங்களுக்கு நாஜி தங்க ரயில் இருக்குமிடம் தெரியும். எங்கள் காலம் முடிவதற்கு முன்பாகவே அதைக் கண்டு பிடித்துக் கொடுக்க விரும்புகிறோம்' என்றார்கள். கண் டுபிடித்துக் கொடுத்தால், கிடைக்கும் செல்வத்தில் 10% தங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்றும் அரசுடன் ஒப்பந்தம் பேசிக் கொண்டார்கள்.

கோபெர், ரிட்செர் பேச்சை நம்பி போலந்து அரசும் மீண்டும் களத்தில் இறங்கியது. Wroclaw - Walbryzch

நகரங்களுக்கு இடைப்பட்ட பழைய ரயில் பாதையில் 65வது கிலோமீட்டரின் அடியில் ஓரிடத்தில் நாஜி தங்க ரயில் புதைக்கப்பட்டிருக்கிறது என்று அவர்கள் துப்பு கொடுத்தார்கள். அங்கே தீவிரமான தேடுதல் வேட்டை 2018 வரை நடந்தது. சந்தேகத்துக்குரிய குகைகள், பழைய ரயில் தண்டவாளங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால், நாஜி தங்க ரயில் இதுவரை கண்டுபிடிக் கப்படவில்லை. ரிட்செர் தேடுதலிலிருந்து பின்வாங்கிக் கொண்டார். கோபெர் மட்டும் இன்னும் தேடிக் கொண் டிருக்கிறார்.

நாஜிக்கள் கொள்ளையடித்த பல செல்வங்கள், அவர் களால் பதுக்கப்பட்ட பல பொக்கிஷங்கள் உலகின் பல பகுதிகளில் இன்றும் கிடைத்துக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், நாஜி தங்க ரயில் எப்போது கிடைக்கும் அல்லது கிடைக்குமா என்பதற்கான பதில் இல்லை. சில வரலாற்று ஆய்வாளர்கள் உறுதியாகச் சொல்கிறார்கள்.

'நாஜி தங்க ரயில் என்ற ஒன்றே இல்லை. அது கற் பனை!'

# 31. சதுரங்கப் பொக்கிஷங்கள்

சதுரங்க விளையாட்டின் வயது ஆயிரத்து ஐநூறுக்கும் மேல். கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்பே இந்தியாவில் சதுரங்கம் விளையாடப்பட்டதாகச் சரித்திரம் சொல்கிறது. ஆம், சதுரங்கத்தின் தாயகம் நம் தேசம் தான். இங்கே இருந்துதான் சதுரங்கம் ஆசியாவின் பிற தேசங்களுக்குப் பரவியது. மங்கோலியா வழியாக ரஷ்யாவுக்குச் சென்றது. பாரசீகத்துக்கும், பாரசீக மன்னர்களின் படையெடுப்புகள் மூலமாக இஸ்லாமிய ராஜ்ஜியங்கள் பலவற்றுக்கும் கொண்டு செல்லப்பட்டது. இப்படியாக பத்தாம் நூற்றாண்டில் ஐரோப்பியக் கண்டத்தில் ஸ்பெயினில் சதுரங்கம் அறிமுகமானது. பின்பு ஐரோப்பியர்கள் தாங்கள் காலனி அமைக்கச் சென்ற பிற தேசங்களில் சதுரங்கத்தைப் பரப்பினார்கள். பதினைந்தாம் நூற்றாண்டில் சதுரங்கத்தில் காய்களை நகர்த்துவதற்கான சில முக்கியமான வரைமுறைகள் இத்தாலியில் உருவாக்கப்பட்டன. ராணிக்கான கூடுதல் நகர்வுகள் அனுமதிக்கப்பட்டது. அதன் மூலம் ராணியின் வலிமை அதிகரிக்கப்பட்டது.

இந்தியாதான் தாயகம் என்றாலும் இன்றைய சதுரங்கத்தின் பல்வேறு விதிமுறைகளைக் கொண்டு வந்ததும், சதுரங்கக் காய்களைப் பொதுத்தன்மையுடன் வடிவமைத்ததும் ஐரோப்பிய நாடுகளே. சரி, உலகின் பழைமையான சதுரங்கக் காய்கள் எவை எவை?

பத்ரோட்டம் என்ற பட்ரிண்ட். பண்டைய கிரேக்க நகரம். பின்பு ரோமானியப் பேரரசிலும் இருந்தது. இன்றைய தெற்கு அல்பேனியாவில் அமைந்துள்ளது. அங்கே 2002 ஜூலையில் நடத்தப்பட்ட அகழ்வாய்வில், சதுரங்கக் காய் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. 2 இன்ச் உயரத்தில் தந்தத்தால் செய்யப்பட்ட, தலைப்பகுதியில் சிலுவை அடையாளம் கொண்ட காய். அது ராணியாக இருக்கலாம். அதன் காலம் கி.பி. 465 என்று கண்டறியப்பட்டுள்ளது. பண்டைய பைசாந்தியப் பேரரசு அல்லது ரோமானியப் பேரரசில் பயன்படுத்தப்பட்ட சதுரங்கக் காயாக அது இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. உலகின் பழைமையான இந்த சதுரங்கக் காயின் கண்டுபிடிப்பு, சதுரங்கத்தின் வயதை, இந்தியாவிலிருந்து சதுரங்கம் பரவிய சரித்திரத்தை மேலும் பின்னோக்கி நகர்த்துகிறது.

1977-ம் ஆண்டில் உஸ்பெகிஸ்தானின் சாமர்கண்ட் அருகே அஃப்ரஸியப் என்ற ஊரில், வரலாற்றாளரான பர்ஜாகோவ் என்பவர் ஏழு பழைமையான சதுரங்கக் காய்களைக் கண்டுபிடித்தார். கைகளில் குறுவாள், கேடயத்துடன் இரண்டு சிப்பாய்கள், ஆயுதம் தாங்கிய குதிரை வீரர்கள் இருவர், போர் யானை மீது ஒரு கவசமணிந்த ஒரு வீரர், இரண்டு குதிரைகள் பூட்டிய ரதத்தில் மந்திரி, மூன்று குதிரைகளுடனான ரதத்தில் ராஜா. அவை கி.பி. 760 காலத்தைச் சேர்ந்தவை. தந்தத்தால் செய்யப்பட்டவை. கி.பி. 761-ஐச் சேர்ந்த நாணயம் ஒன்

றும் இந்தச் சதுரங்கக் காய்களுடன் கண்டெடுக்கப்பட்டது. இவை சாமர்கண்ட் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இதே அஃப்ரஸியப் பகுதியில் மேலும் சில சதுரங்கக் காய்களும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் டெரகோட்டாவால் செய்யப்பட்ட குதிரை வீரன் காய் முக்கியமானது. இது ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. வட இந்தியாவில் அல்லது ஆப்கனிஸ்தானில் பயன்படுத்தப்பட்டதாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

1932-ம் ஆண்டில் இத்தாலியின் வெனாஃப்ரோ நகருக்கு அருகில் ஒரு கல்லறை கண்டுபிடிக்கப்பட்டது. பத்தாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தைச் சேர்ந்த ரோமானிய சாம்ராஜ்ஜியக் கல்லறையான அதனுள் சில சதுரங்கக் காய்களும் கண்டெடுக்கப்பட்டன. எலும்புத்துண்டுகளால் செய்யப்பட்டு யானைத் தந்தத்தால் அலங்கரிக்கப்பட்ட காய்களான அவை, அரேபிய கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வடிவத்தில் இருந்தன. ரோமானிய சாம்ராஜ்ஜியக் கல்லறையில், அரேபிய சதுரங்கக் காய்கள் எப்படி இருக்கும்? இவை ரோமானியர்கள் காலத்தைச் சேர்ந்தவைதானா? இப்படி சர்ச்சையும் அப்போது எழுந்தது.

ஐரோப்பியக் கண்டத்தில் கிடைத்ததிலேயே மிகவும் பழைமையான, அழகான சதுரங்கக் காய்கள் என்றால் அது ஸ்காட்லாந்தின் லூயிஸ் தீவில் கண்டெடுக்கப்பட்டவையே. அங்கே 1831-ம் ஆண்டில் கடற்கரைப் பகுதி ஒன்றில், ஒருவர் பெட்டி நிறைய சதுரங்கக் காய்களைக் கண்டெடுத்தார். பெட்டிக்குள் வேறு சில விளையாட்டுகளுக்கான காய்களும் வைக்கப்பட்டிருந்தன. வால்ராஸ் என்றழைக்கப்படும் கடற்பசுவுக்கு தந்தம் போன்ற நீண்ட பற்கள் உண்டல்லவா. அந்தப் பற்களில்தாம் இந்

தக் காய்களைச் செதுக்கியிருந்தார்கள். சில காய்களை மட்டும் திமிங்கலத்தின் பற்களில் செதுக்கியிருந்தார் கள்.

Lewis Chessmen என்று பெயரிடப்பட்ட இந்தச் சதுரங் கக் காய்கள் அனைத்துமே பன்னிரண்டாம் நூற்றாண் டைச் சார்ந்தவை. அப்போது நார்வேயின் பிடியில் லூயிஸ் தீவு இருந்தது. நார்வேயின் ஆளுகைக்குட் பட்ட ஏதோ ஒரு பகுதியில் செதுக்கப்பட்ட சது ரங்கக் காய்களாக இவை இருக்கலாம் என்று நம் பப்படுகிறது. சில வரலாற்றாளர்கள், லூயிஸ் சதுரங் கக் காய்கள் எல்லாமே நார்வேயின் டிரான்டெய்ம் (Trondheim) நகரத்தில் செதுக்கப்பட்டவை என்று உறு தியாகக் கூறுகிறார்கள். டிரான்டெய்ம் நகரத்தில்தாம், இப்படிப்பட்ட கைதேர்ந்த சிற்பிகள் இருந்தார்கள். சது ரங்கக் காய்களின் கைகளில் இருக்கும் கேடயங்களின் வடிவத்திலேயே டிரான்டெய்மிலும் பழைய கேடயங்கள் இருக்கின்றன. இதேபோல ஒரு சில சதுரங்கக் காய் கள், டிரான்டெய்மிலும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன என்று வரலாற்றாளர்கள் ஆதாரங்களை அடுக்குகிறார் கள்.



மொத்தம் 78 லூயிஸ் சதுரங்கக் காய்களில், 8 அரசர் கள், 8 அரசிகள், 16 பதினாறு அமைச்சர்கள், 15 குதிரை

வீரர்கள், 12 கோட்டைகள் அல்லது யானைகள், 19 சிப்பாய்கள் அடக்கம். சிப்பாய்க் காய்களின் உயரம் 3.5 செமீ முதல் 5.8 செமீ வரை வேறுபடுகிறது. இப்படியாக ஐந்துவிதமான உயரங்களில் சிப்பாய்க் காய்கள் இருப் பதைக் கொண்டு, இவை ஐந்து வெவ்வேறு சதுரங்கப் பலகைகளைச் சேர்ந்த காய்களாக இருக்கலாம் என்று கணிக்கப்படுகிறது. சிப்பாய்க் காய்களைத் தவிர, மற்ற அனைத்துமே மனித உருவம் கொண்டவை. குதிரை வீரர்கள் கைகளில் ஈட்டியையும் கேடயத்தையும் பிடித் திருக்கின்றனர். குதிரைகள் சிறியவையாக இருக்கின் றன. சில காய்களில் சிவப்பு நிறத் தடங்கள் காணப்படு கின்றன. இப்போது கருப்பு - வெள்ளைக் காய்களைப் பயன்படுத்துவதுபோல, அப்போது அவர்கள் சிவப்பு - வெள்ளைக் காய்களைப் பயன்படுத்தியிருக்கலாம்.

லூயிஸ் தீவில் கண்டெடுக்கப்பட்ட இந்தச் சதுரங்கக் காய்கள், வேறு சிலரது கைகளுக்கு மாறின. பின்பு அதில் பெரும்பாலான காய்களை பிரிட்டிஷ் அருங்காட் சியகம் வாங்கியது. 11 காய்கள் மட்டும் சுவிட்சர்லாந்து தேசிய அருங்காட்சியகத்தில் உள்ளது.

பாரிஸின் தேசிய நூலகத்தில் ‘சார்லெமேன் சதுரங்கக் காய்கள்’ என்ற உலகின் மிக அழகான, பழைமையான சதுரங்கக் காய்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்த சார்லெ மென் சதுரங்கக் காய்கள், பதினொன்றாம் நூற்றாண் டில் இத்தாலியில் உருவாக்கப்பட்டவையாக இருக்க லாம். இவையும் யானைத் தந்தத்தில் கலைநயத்துடன் செதுக்கப்பட்டவையே. பதின்மூன்றாம் நூற்றாண்டில் இந்தச் சதுரங்கக் காய்கள் பாரிஸின் செயின்ட் டெனிஸ் தேவாலயத்தில் இருந்ததாக வரலாற்றுக் குறிப்பு சொல் கிறது. சினம் கொண்ட யானை சில வீரர்களைத் தனது தும்பிக்கையால் பந்தாடுவது போன்றும், அந்த யானை

மேல் ஒருவர் கம்பீரமாக அமர்ந்திருப்பது போன்றும், உடன் இரண்டு குதிரை வீரர்கள் வருவது போன்றும் சதுரங்கக் காய் ஒன்று உள்ளது. இது இந்தியாவில் பத்தாம் நூற்றாண்டில் செதுக்கப்பட்ட சதுரங்கக் காயாகத்தான் இருக்க வேண்டும் என்று ஆய்வாளர்கள் உறுதியாகச் சொல்கிறார்கள். இது சதுரங்கத்தில் பயன்படுத்தப்படும் காயே அல்ல என்பது வேறு சிலரது கருத்து.

அரேபிய பாணியிலான யானை வீரர்களின் சதுரங்கக் காய்களும் இதில் இடம்பெற்றுள்ளன. ராஜாவும் ராணியும் சேவகர்கள் உடன் மாடத்தில் நிற்பது போன்று காய்கள் செதுக்கப்பட்டுள்ளன. குதிரை வீரர்களும், காலாட்படை வீரர்களும் கைகளில் வாளும் கேடயமும் வைத்திருக்கிறார்கள். நான்கு குதிரை பூட்டிய ரதத்தில் வரும் மந்திரிகளும் உண்டு.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் நிகழ்ந்த பிரெஞ்சுப் புரட்சியின்போது சார்லெமென் சதுரங்கக் காய்களில் பாதி காணாமல் போயின. எஞ்சியிருக்கும் 2 ராஜாக்கள், 2 ராணிகள், 3 யானைகள், 4 குதிரைகள், 3 ரதங்கள், 1 சிப்பாய் மட்டும் இப்போது பாரிஸின் தேசிய நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

சரி, யார் இந்த சார்லெமென்? Charlemagne என்பவர் கி.பி. 800-ம் ஆண்டில் நிறுவப்பட்ட புனித ரோமப் பேரரசின் முதலாம் பேரரசர். பல போர்களைக் கண்டவர். வலிமையானவர். நிர்வாகத்தில் திறமையானவர். சார்லெமென் காலத்தில் அங்கே சதுரங்கம் அறிமுகமாகவில்லை. பாக்தாத்தைத் தலைநகரமாகக் கொண்ட அப்பாஸிய ராஜ்ஜியத்தின் ஐந்தாவது கலீபாவான ஹாருன் அல்-ரஷீத், சார்லெமெனைப் பெருமைப்படுத்தும் விதமாக இந்தச் சதுரங்கத்தைப் பரிசாகக் கொடுத்

திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. எனவே, சார்லெ மென் சதுரங்கக் காய்கள் என இது பெயர் பெற் றது. ஆனால், சார்லெமெனுக்கு சதுரங்கம் விளையாடத் தெரியுமா என்பதற்கான விடை நமக்குத் தெரியாது.

## 32. சாஃபோவின் கவிதைகள்

ஒரு நொடிதான், ஒரே ஒரு நொடிதான்
உன்னை வெறித்துப் பார்க்கிறேன்.
என்னால் பேச இயலவில்லை.
என் நாக்குகூட முறிந்து போகிறது.
என் தசைகளுக்குள் மெல்லிய பிழம்பொன்று
கிளம்பி என்னைக் களவாடிப் போகிறது.
என் கண்கள் பார்க்கும் திறனை இழக்கின்றன.
என் காதுகளில் ரீங்காரம் ஒலிக்கிறது
நான் வியர்வையில் மூழ்குகிறேன்.
நடுக்கத்தில் உறைகிறேன்.
புல்லைவிடவும் பச்சையாகிப் போனதாக உணர்கிறேன்.
ஆம், நான் மரணத்தின் நுனியில் நிற்பதாக நம்புகிறேன்.

கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்த பெண் ஒருவர் எழுதிய கவிதையின் ஒரு பகுதி இது. 2600 ஆண்டுகள் கடந்தும் அந்தப் பெண்ணின் கவிதைகள், உலகின் தலைசிறந்த படைப்புகளுள் ஒன்றாகக் கொண்டாடப்படுகின்றன. ஆனால், அந்தப் பெண் எழுதிய அனைத்துக் கவிதைகளும் இப்போது இல்லை என்பதும் உண்மை. யார் அந்தப் பெண் கவிஞர்?

சாஃபோ (Sappho). பண்டைய கிரேக்கத்தில் செல்வச் செழிப்பு நிரம்பிய குடும்பத்தில் பிறந்த ஒரு பெண். கி.மு. 630-க்கும் கி.மு. 612-க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில், சாஃபோ, கிரேக்கத்தின் லெஸ்போஸ் என்ற தீவின் மிட்டிலீன் நகரத்தில் பிறந்திருக்கக்கூடும் என்று நம்பப் படுகிறது. சில வரலாற்றாளர்கள் லெஸ்போஸ் தீவின் எர்சோஸ் நகரத்தில் பிறந்ததாகச் சொல்கிறார்கள். சாஃ போவின் தந்தை, அவளது ஏழாவது வயதில் இறந் துபோனார். அவரது பெயர் தெரியவில்லை. ஆனால், சாஃபோ எழுதிய ஒரு கவிதை வரியிலிருந்து அவரது தந்தையின் பெயர் 'ஸ்காமாண்ட்ரோனிமஸ்' என்பதாக இருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது. சாஃபோவின் தாயின் பெயர் கிளேயிஸ்.

சாஃபோவின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் பெரும் பாலும் அவரது கவிதைகள் மூலமாக மட்டுமே கிடைக் கப் பெறுகின்றன. கற்பனை நிறைந்த கவிதை வரிகளில் கிடைக்கும் செய்திகளை வரலாறாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று சில சரித்திர ஆசிரியர்கள் மறுக் கின்றனர். கிடைத்திருக்கும் ஒரு சில செய்திகளைக் கொண்டு சாஃபோ வாழ்க்கையில் நடந்த சில சம்பவங் கள் மட்டும் நமக்குத் தெரிய வருகின்றன.

பல சகோதரர்களுடன் வசதியான குடும்பத்தில் பிறந்த பெண் சாஃபோ. மொழிப்புலமையும், இசை மீதான ஆர் வமும் அவருக்கு இயல்பாகவே இருந்தது. சாஃபோ, தனது ஊரில் வசித்த செர்ஸைலஸ் என்ற செல்வந்த ரைத் திருமணம் செய்து கொண்டார். பிறகு தனது மக ளுக்கு கிளேயிஸ் என்ற தனது தாயின் பெயரையே சூட் டினார். திருமணமாகாத இளம் பெண்களுக்கென கல் விச்சாலை ஒன்றை நடத்திய சாஃபோ, அங்கே கலை யும் இலக்கியமும் கற்றுக்கொடுத்தார். திருமண வாழ்க்

கைக்குத் தேவையான விஷயங்களையும் சொல்லிக் கொடுத்தார். சிறந்த ஆசிரியையாகத் திகழ்ந்தார்.

சாஃபோவின் கவிதைகள் எத்தகையவை?

இதை Lyric Poetry என்கிறார்கள். நமக்கு முன் ஒரு நபரை அமர வைத்து, அவர் குறித்து நேரடியாகக் கவிதைகள் பாடுவது. அந்த நபர் குறித்து நல்லவித மாகவோ அல்லது எதிர்மறையாகவோ நம் மனத்தில் தோன்றும் உணர்வுகள் எதையும் மறைக்காமல் அப் படியே கவிதைகளில் வெளிப்படுத்துவது. Lyre (யாழ்) என்ற கம்பிக்கருவியை மீட்டியபடியே, கவிதைகள் பாடும் வழக்கம் அப்போது இருந்திருக்கிறது.

Lyric Poetry என்ற வகையில் கவிதைகள் பாடிய பண் டைய கிரேக்கத்தின் முதல் பெண் என்ற பெருமை சாஃ போவுக்கு உண்டு. சாஃபோ ஒரு பேரழகி என்று பலரும் தெரிவித்திருக்கிறார்கள். என்றாலும், தன் கண் முன் இருக்கும் பெண்களின் அழகை ஆராதிக்கும் கவிதை மனம் சாஃபோவிடம் இருந்திருக்கிறது. அவரது கவி தைகள் பெரும்பாலும் பெண்கள் மீது ஈர்ப்பு கொண் டவையாக இருந்திருக்கின்றன. இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் வரிகள்கூட, ஒரு பெண்ணின் பேரழகால் சாஃபோவின் மனத்தில் உண் டான பாதிப்பைச் சொல்வதே. எதிரிலிருக்கும் நபரின் கண்களைப் பார்த்துக் கொண்டே, யாழை மீட்டியபடியே உள்ளத்திலிருந்து உணர்வுகளைத் திரட்டி வளமான வார்த்தைகளால், மளமளவெனக் கவிதை பாடும் இயற் கையான ஆற்றல் சாஃபோவுக்கு இருந்திருக்கிறது.



அன்றைய கிரேக்கச் சமூகத்தில் பெண்களுக்கான சுதந்தரம் என்பது வரையறுக்கப்பட்டதாகத்தான் இருந்தது. ஒரு பெண், தன் உணர்வுகளை எல்லாம் வெளிப்படையாகக் கொட்டி, கவிதை பாடுவது என்பதுகூட குற்றமாகத்தான் கருதப்பட்டது. அத்தனையையும் மீறி, எதைப்பற்றியும் கவலைப்படாமல் சாஃபோ தன் கவிதைகளால் புரட்சி செய்தார். அந்த வரிகளில் காதலும் காமமும் பிணைந்து கிடந்தன. அவை சர்ச்சையைக் கிளப்பின.

காரணம், கிரேக்கத் தத்துவமேதை சாக்ரடீஸ்போல சாஃபோவும் ஓரினச்சேர்க்கை ஆதரவாளராக இருந்தார். கிரின்னா, அத்திஸ், அனக்டோரியா ஆகிய மூன்று பெண்களும் சாஃபோவின் காதலிகளாகக் கருதப்படுகின்றனர். அந்த மூவரது பெயர்களும் சாஃபோவின் காதல் ரசம் சொட்டும் கவிதைகளில் இடம்பெற்றுள்ளன. பெண், பெண்ணையே காதலிக்கலாமா? சமுதாயத்தின் ஒழுக்கம் என்னாவது? கலாசாரக் காவலர்களால் சாஃபோவுக்குக் கடும் நெருக்கடி உண்டானது. ஆட்சியாளர்கள், கி.மு. 600 சமயத்தில் சாஃபோவை லெஸ்போஸ் தீவிலிருந்து துரத்தி விட்டனர். அவர், சிசிலித் தீவின் சிராகுஸ் நகரத்துக்கு இடம்பெயர்ந்தார்.

இடம் மாறியதே தவிர, கவிதை மனம் மாறவில்லை. அங்கும் கவிதாயினியாகப் புகழ்பெற்ற சாஃபோவுக்கு, அந்த மக்கள் சிலை வைத்துக் கொண்டாடினார்கள். சாஃபோவின் காலத்துக்குப் பிறகு சிராகுஸ் நகர மக்கள், அவர் நினைவாகக் கோயில் ஒன்றை எழுப்பி வணங்கியதாகவும் சரித்திரக் குறிப்பு உண்டு.

சிராகுஸ் நகரத்தில் அல்கேயஸ் என்ற ஆண் கவிஞரை சாஃபோ காதலித்ததாகச் சொல்கிறார்கள். சாஃபோவும் அல்கேயஸும் உட்கார்ந்து யாழை மீட்டியபடி கவிதைகள் பாடுவதுபோல பிற்கால ஓவியங்கள் காணக்கிடைக்கின்றன. ‘சாஃபோ, கருநீல முடி கொண்ட அழகி. தூய தேன் போன்று இனிய புன்னகை சிந்தும் பேரழகி’ என்று அல்கேயஸ் வருணிப்பதாகக் குறிப்பு ஒன்று காணப்படுகிறது. சாஃபோ, கி.மு. 570-ல் இறந்ததாகக் கருதப்படுகிறது. அது இயற்கையான மரணம் அல்ல, தற்கொலை என்று ஒரு கதை உண்டு.

சாஃபோ, பௌன் என்ற படகோட்டியைக் காதலித்தார். இருவருக்குள்ளும் நல்ல அன்பு இருந்தது. ஒரு கட்டத்தில் பௌன், சாஃபோவை வெறுத்து ஒதுக்கினார். மனமுடைந்த சாஃபோ, குன்றின் மீது ஏறிக் குதித்து தற்கொலை செய்து கொண்டார். இது ஆதாரபூர்வ வரலாறு அல்ல. புராணக்கதை போலச் சொல்லப்படுவது.

பண்டைய கிரேக்க மொழியில் மிகச்சிறந்த கவிதாயினியாக சாஃபோ திகழ்ந்திருக்கிறார். ஒன்பது தலைசிறந்த கிரேக்க முதுமொழிக் கவிஞர்களுள் ஒருவராகவும் போற்றப்பட்டிருக்கிறார். தத்துவஞானியான பிளேட்டோ, கிரேக்கத்தின் தலைசிறந்த பத்து அறிவாளிகளில் சாஃபோவும் ஒருவர் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சாஃபோவின் காலத்திலேயே அவரது கவிதைகள் புத்தகங்களாக வெளியிடப்பட்டனவா என்று தெரிய வில்லை. கி.மு. இரண்டாம் அல்லது மூன்றாம் நூற் றாண்டில் சாஃபோவின் கவிதைகள் ஒன்பது தொகுப் புகளாகப் புத்தகங்களாக வெளியிடப்பட்டன. புத்தகங் கள் என்றால், பாபிரஸ் என்ற தாவரத்திலிருந்து தயாரிக் கப்பட்ட காகிதம் போன்ற பொருளில் உருவாக்கப்பட் டவை. அதாவது காகிதத்துக்கு முந்தைய வடிவம் என்று சொல்லலாம்.

அதற்குப் பிறகு வேறு எப்போதெல்லாம் சாஃபோவின் கவிதைகள் வெளியிடப்பட்டன என்பதற்குத் தெளி வான ஆதாரங்கள் கிடையாது. காலப்போக்கின் பாபி ரஸ் புத்தகங்கள் சிதைந்து, சாஃபோவின் கவிதைப் பொக்கிஷங்கள் பலவும் காணாமல் போய்விட்டன. கி.பி. எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டுகளில் பல்வேறு படைப்புகளில் சாஃபோவின் கவிதைகள் மேற்கோளா கக் காட்டப்பட்டிருக்கின்றன. கி.பி. பதினொன்றாம் நூற் றாண்டில் போப்பாக இருந்த ஏழாம் கிரகோரி, சாஃ போவின் கவிதைகளை வெறுத்தார். கலாசாரச் சீரழிவு என்று கருதி அவற்றை நெருப்பிட்டுக் கொளுத்திய தாகக் குறிப்புகள் உண்டு. இப்படிச் சில சம்பவங்க ளாலும் அந்தக் கவிதைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. சாஃபோவின் கிரேக்கச் செம்மொழி வழக்கை, பிற்கால அறிஞர்களால் புரிந்துகொள்ள இயலவில்லை. எனவே அவை அடுத்தடுத்த நூற்றாண்டுகளில் வேறு மொழிக ளில் பதியப்படாமல் விடுபட்டுப் போயின. இதனாலும் பல கவிதைகள் இழக்கப்பட்டிருக்கின்றன.

சாஃபோ, தன் வாழ்நாளில் சுமார் பத்தாயிரம் வரிகள் கவிதைகளாகப் பாடியிருக்கலாம் என்று கருதப்படுகி றது. அவற்றில் பெரும்பான்மையான கவிதைகள் இப்ப

டியாக இல்லாமல் போய்விட்டன. இப்போது அதில் பாபிரஸ் துண்டுகளாகவும் துணுக்குகளாகவும் எஞ்சியிருப்பது சுமார் 650 கவிதை வரிகள், அதாவது இருநூறு கவிதைகள் மட்டுமே. அதில் முழுமையான கவிதைகளாக இருப்பதுவும் வெகு சொற்பமே. எஞ்சியிருப்பவற்றைக் கொண்டு சாஃபோவின் கவிதைகளும், அவை குறித்த ஆய்வு நூல்களும் ஏராளமாக வெளிவந்துள்ளன.

சாஃபோவின் கவிதைப் பொக்கிஷங்கள் முழுமையாகக் கிடைப்பதற்கான வாய்ப்பு எப்போதுமே இல்லை என்பது கசப்பான உண்மை.

பின் பெண் குறிப்பு : 'லெஸ்போஸ் தீவைச் சேர்ந்த சாஃபோ' என்பதை அடிப்படையாகக் கொண்டே பெண் ஓரினச்சேர்க்கையைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் Lesbo, Lesbian, Lesbianism, Sapphio, Sappism போன்ற சொற்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் புழக்கத்தில் வந்தன.

## 33. நாஸக் வைரம்

உலகின் தலைசிறந்த, மதிப்புமிக்க, அரிய வைரங்களில் இதுவும் ஒன்று. இதுவரை கண்டெடுக்கப்பட்டதிலேயே மிக அழகான நீல நிற வைரம் இதுதான் என்றும் புகழ் கிறார்கள். ஒளி ஊருவும்போது நீல நிறமாகக் காட்சிய ளிப்பதால் இதை நீலமும் வெண்மையும் கலந்த வைரம் என்று சொல்லலாம். இதன் தற்போதைய எடை 43.38 காரட், அதாவது 8.676 கிராம். இதன் உத்தேச மதிப்பு அமெரிக்க டாலரில் 3.23 மில்லியன். எமரால்ட் வடிவத் தில் செதுக்கப்பட்டுள்ள இந்த நாஸக் வைரத்துக்கு, சுமார் 500 வருட வரலாறு இருக்கிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் தென் ஆப்பிரிக்காவிலும் வைரம் கிடைக்கிறது என்ற உண் மையை உலகம் அறிந்துகொண்டது. அதற்கு முன் புவரை இந்தியாவின் கோல்கொண்டாதான் உலகின் நம்பர் 1 வைரச்சுரங்கம். கோஹினூர், தி ஹோப், ஷா, கிரேட் முகல், நிஜாம் உள்ளிட்ட உலகப்புகழ்பெற்ற வைரங்கள் ஒவ்வொன்றையும் கோல்கொண்டாதான் பிரசவித்துக் கொண்டிருந்தது. அப்படி பதினைந்தாம் நூற்றாண்டில் கோல்கொண்டாவின் கொல்லூர் சுரங்கம் அல்லது அமரகிரி சுரங்கத்தில் இருந்து எடுக்கப்பட்டது

தான் நாஸக் (Nassak) வைரம். மண்ணில் இருந்து எடுக்கப்படும் செல்வங்களெல்லாம் ஆட்சியாளர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதுதானே விதி. கோல்கொண்டா சுல்தான்களின் கஜானாவில் நாஸக் வைரம் சேர்க்கப்பட்டது.

கி.பி. 1687. பேரரசர் ஔரங்கசீப் தலைமையில் முகலாயப் படைகள், கோல்கொண்டாவை முற்றுகையிட்டன. எட்டு மாதப் போராட்டத்துக்குப் பிறகு, கோல்கொண்டா சுல்தான் அபுல் ஹசன் வீழ்ந்தார். கோல்கொண்டாவின் செல்வங்கள் பலவும் முகலாயர்கள் வசம் சென்றன. அதில் நாஸக் வைரமும் அடக்கம். ஔரங்கசீபின் காலத்துக்குப் பிறகு, முகலாயப் பேரரசு வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. ஒரு பக்கம் மராத்தியர்களின் கை ஓங்கியது. முகலாயர்கள் சேர்த்து வைத்திருந்த செல்வங்களில் கொஞ்சம், மராத்தியர்களின் கைகளுக்கு மாறின. அப்படியாக நாஸக் வைரமும் மராத்திய ஆட்சியாளர்களிடம் வந்து சேர்ந்தது.

நாஸிக், மகாராஷ்டிராவில் அமைந்திருக்கும் நகரம். அங்கிருந்து சுமார் 28 கி.மீ. தொலைவில் திரிம்பகேஸ்வரர் என்ற சிவன் கோயில் அமைந்துள்ளது. இந்தியாவின் பன்னிரண்டு ஜோதிர்லிங்க ஸ்தலங்களில் இதுவும் ஒன்று. மராத்திய ஆட்சியாளர்கள் பலரும் பயபக்தியுடன் வழிபட்ட கோயில். கி.பி. 1720-ம் ஆண்டில் மராத்தியப் பேரரசின் பேஷ்வா (தளபதி) பொறுப்பேற்றவர் முதலாம் பாஜி ராவ். கி.பி. 1725-ம் ஆண்டில் திரிம்பகேஸ்வரர் கோட்டையை முற்றுகையிட்ட அவர், ‘இதை வெல்ல நீ உதவினால் நான் ஏராளமான செல்வங்களை வழங்குகிறேன்’ என்று சிவனிடம் வேண்டிக் கொண்டார். வென்றார். திரிம்பகேஸ்வரருக்கு ஏராளமான நகைகளை வழங்கினார். அதில் வைரம், மரகதம் போன்ற

மதிப்புமிக்கக் கற்கள் பதிக்கப்பட்ட கிரீடமும் உண்டு. பிரம்மா, விஷ்ணு, சிவன் என மும்மூர்த்திகளின் முகங்களும் கொண்ட தங்கச் சிலைக்கு அந்தக் கிரீடம் சூட்டப்பட்டது. நாஸக் வைரமானது சிவனது நெற்றிக்கண் போல ஜொலித்ததால் 'சிவனின் கண்' என்ற சிறப்புப் பெயர் அதற்கு அமைந்தது. நாஸிக் பகுதியில் அமைந்த திரிம்பகேஸ்வரர் கோயில் இந்த வைரம் பல காலமாக இருந்ததால் 'நாஸக் வைரம்' என்னும் பெயர் அமைந்திருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

கி.பி. 1796-ம் ஆண்டில் மராத்தியப் பேரரசின் கடைசி பேஷ்வாகப் பதவியேற்றவர் இரண்டாம் பாஜி ராவ். இவரது வீழ்ச்சிக்குப் பிறகுதான் நாஸக் வைரம் கிழக்கு இந்திய கம்பெனியின் வசம் சென்றது. எப்படி என்பதற்கு இரண்டு கோணங்கள் உண்டு. இரண்டாம் பாஜி ராவ், திரிம்பகேஸ்வரர் கிரீடத்திலிருந்த நாஸக் வைரத்தைத் தனது கிரீடத்தில் பதித்துக் கொண்டார். கி.பி. 1817-ம் ஆண்டில் கிழக்கு இந்திய கம்பெனி படைகளுக்கும், மராத்தியப் படைகளுக்கும் இடையே மூன்றாம் ஆங்கிலேய - மராத்தியப் போர் நடந்தது. இரண்டாம் பாஜி ராவ் தோற்கடிக்கப்பட்டார். சுமார் ஆறு மாதங்கள் தலைமறைவாக இருந்த அவர், பின்பு பிரிட்டிஷாரிடம் சரணடைந்தார். அவரது செல்வங்கள் பிரிட்டிஷார் வசம் சென்றன. அதில் நாஸக் வைரமும் உண்டு என்பது ஒரு கோணம்.

இரண்டாம் பாஜி ராவ் காலத்திலும் திரிம்பகேஸ்வரர் கோயிலில்தான் நாஸக் வைரம் இருந்தது. அவரது வீழ்ச்சிக்குக்குப் பிறகு, பிரிட்டிஷார் கோயிலிலிருந்துதான் வைரத்தைக் கொள்ளையடித்தனர் என்பது இன்னொரு கோணம். மொத்தத்தில் கி.பி. 1818-ம் ஆண்டில் நாஸக் வைரம் பிரிட்டிஷார் கைகளுக்குச் சென்றது.



கர்னல் பிரிக்ஸ் என்பவர், தான் அபகரித்த நாஸக் வைரத்தை, இந்தியாவின் அப்போதைய பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரல் பிரான்ஸில் ராடன் ஹேஸ்டிங்ஸிடம் ஒப்படைத்தார். நாஸக் வைரம் தனது தாய் மண்ணிலிருந்து கிளம்பியது. பெருங்கடல்களைக் கடந்தது. லண்டனை அடைந்தது. போரினால் சேதமும் அழுக்கும் அடைந்திருந்த 89 காரட் நாஸக் வைரம், லண்டன் வியாபாரிகளைக் கவரவில்லை. ரண்டெல் & பிரிட்ஜ் என்ற பிரிட்டிஷ் நகைக்கடைக்காரர்கள், நாஸக் வைரத்தை சுமார் 3000 பவுண்ட் (தற்போதைய மதிப்புக்கு £215,000) கொடுத்து வாங்கினார்கள். அடுத்த 13 வருடங்களுக்கு அவர்கள் வசமே நாஸக் வைரம் இருந்தது. தன் எடையை சுமார் 78 காரட்டுக்குக் குறைத்துக் கொண்டு வடிவத்தில் பொலிவு பெற்றது.

கி.பி. 1831-ம் ஆண்டில் இமானுவேல் சகோதரர்கள் வைரத்தைச் சொந்தமாக்கிக் கொண்டார்கள். ஆறு வருடங்கள் கழித்து அவர்கள், வெஸ்ட்மின்ஸ்டரின் ராபர்ட் கிராஸ்வெனெரிடம் வைரத்தை விற்றார்கள். அந்த நகரத்தின் மார்க்வெஸ் (பிரபுவைவிட உயர்ந்தவர்) ஆக இருந்த ராபர்ட், தனது உடைவாளின் கைப்பிடியில் நாஸக் வைரத்தை பதித்துக் கொண்டு பீடுநடை போட்டார். கி.பி. 1886-ம் ஆண்டில் நாஸக் வைரத்தின் மதிப்பு சுமார் 40000 பவுண்டுகள் (இன்றைய மதிப்பில் £4,280,000) என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கி.பி. 1927, மார்ச். ராபர்ட்டின் குடும்பத்தினர் நாஸக் வைரத்தை, சில அமெரிக்க வியாபாரிகள் மூலமாக ஜார்ஜ் மௌபௌஸைன் என்ற பார்சிய நகை வியா பாரியிடம் விற்றனர். ஜார்ஜ், அப்போது அமெரிக்காவில் வசித்து வந்தார். அங்கே நியு யார்க்கில் நகை வணிகம் செய்து கொண்டிருந்தார். கி.பி. 1929-ம் ஆண்டில் நாஸக் வைரத்தைக் குறிவைத்து கொள்ளைக் கும்பல் ஒன்று களம் இறங்கியது. நியு யார்க்கில் ஜார்ஜின் நகைக்க டையில் சாதாரண தபால் கவரில் வைக்கப்பட்டிருந்த நாஸக் வைரத்தை, கொள்ளையர்கள் தவறவிட்டனர். அடுத்த ஆண்டும் அதே கொள்ளைக் கும்பல் மீண் டும் நாஸக் வைரத்தைக் குறிவைத்துக் களமிறங்கியது. இந்த முறையும் அவர்கள் கண்ணில் வைரம் சிக்க வில்லை.

1933, சிகாகோவில் நடந்த உலக வர்த்தகக் கண்காட்சி யில் நாஸக் வைரம் காட்சிக்கு வைக்கப்பட்டது. 1940-ம் ஆண்டில் நாஸக் வைரத்தை வாங்கிய அமெரிக்க நகை வியாபாரி, ஹாரி வின்ஸ்டன் அதை மேலும் பட்டை தீட்டினார். 43.38 காரட் எடையில் எமரால்ட் வடிவத் துக்கு அது மாறியது. ஹாரியிடமிருந்து அடுத்த முப்பது ஆண்டுகளில் மேலும் சில அமெரிக்கர்களின் கைக ளுக்கு நாஸக் வைரம் கை மாறியது. 1970-ம் ஆண்டில் உலகின் தலைசிறந்த 30 வைரங்களில் ஒன்று என்று அறிவிக்கப்பட்டது. அதே ஆண்டின் ஏப்ரல் 16 அன்று, $500000 தொகைக்கு கிரீன்விச்சைச் சேர்ந்த எட்வர்ட் ஹேண்ட் என்பவரால் ஏலம் எடுக்கப்பட்டது. அன்றைய நிலவரப்படி, உலகில் இரண்டாவது அதிக விலைக்கு ஏலம் எடுக்கப்பட்ட வைரமாக நாஸக் சாதனை படைத் தது. இப்போது நாஸக் வைரம், லெபனானின் பெரும் பணக்காரர் ராபர்ட் மௌவாட் என்பவருக்குச் சொந்த

மாக இருக்கிறது. லெபனானில் ராபார்ட்டுக்குச் சொந் தமான அருங்காட்சியகத்தில் தனியே, தன்னந்தனியே ஒளிர்ந்து கொண்டிருக்கிறது.

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிலிருந்து கொண்டு செல்லப்பட்ட நாஸக் வைரம், மீண்டும் நம் மண்ணுக்கு வரவே இல்லை. இது திரிம்பகேஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான வைரம். இங்கிருந்து அப கரிக்கப்பட்ட வைரத்தை மீட்டுத் தர வேண்டும் என்று திரிம்பகேஸ்வரர் தேவஸ்தானத்தைச் சேர்ந்த சிலர், இப்போது சட்டரீதியாகப் போராடி வருகின்றனர்.

வைரங்களுக்கான தலைவிதி அல்லது வரலாறு என்பது எப்போதும் இப்படித்தான் இருக்கிறது.

## 34. திப்பு சுல்தானின் வாள்!

புலி என்றால் திப்பு சுல்தானுக்கு அவ்வளவு பிடிக்கும்! புலியின் வீரம், சாதுர்யமாகப் பதுங்கி, சாமர்த்தியமாகத் தாக்கும் அதன் ஆக்ரோஷம், வேட்டையாடும் திறன், தனக்கென ஓர் எல்லை வகுத்துக் கொண்டு வாழும் அதன் தன்மை என்று புலி குறித்த ஒவ்வொரு விஷயத்தையுமே திப்பு சுல்தான் நுணுக்கமாக அறிந்து வைத்திருந்தார். தனது ஸ்ரீரங்கப்பட்டணத்தின் கோட்டையில் ஆறு புலிகள் வளர்த்தும் வந்தார்.

திப்புவின் அரியணையில் புலியின் சிலை ஒன்று கர்ஜித்துக் கொண்டிருந்தது. அவர் பயன்படுத்திய வாள்களின் கைப்பிடிப் பகுதியில் உறுமும் புலியின் தலை செதுக்கப்பட்டிருந்தது. துப்பாக்கியிலும் புலியின் உருவம் இணைக்கப்பட்டிருந்தது. அவரது அரண்மனையின் பல பகுதிகளில் புலிகளின் ஓவியம், புலியின் சிலைகள், சிற்பங்கள் நிறுவப்பட்டிருந்தன. அவர் பயன்படுத்திய பல்வேறு பொருள்களிலும் கலைப்பொருள்களிலும் புலியின் உருவமோ, தலையோ, அதன் உடலில் காணப்படும் வரிகளோ காணப்பட்டன. அவர் பயன்படுத்திய சில கொடிகள், அவரது ராஜ்ஜியத்தின் சின்னம், படை வீரர்களின் உடைகள் என்ற பலவற்றிலும் புலி நீக்க

மற நிறைந்திருந்தது. திப்பு சுல்தானின் செல்லப்பெயரே 'மைசூரின் புலி' என்பதுதான். எப்படி அந்தப் பெயர் வந்தது? ஒரு சம்பவம் சொல்லப்படுவதுண்டு.

ஒருமுறை திப்பு சுல்தானும், அவரது நண்பரான பிரெஞ்சுக்காரர் ஒருவரும் காட்டுக்கு வேட்டைக்குச் சென்றனர். எதிர்பாராத நேரத்தில் பிரெஞ்சுக்காரர் மீது புலி பாய்ந்தது. அவரை அடித்து வீழ்த்தியது. திப்பு சுல்தானின் கையிலிருந்த துப்பாக்கி அப்போது இயங்கவில்லை. அடுத்ததாக புலி, திப்புவை நோக்கி ஆக்ரோஷத்துடன் பாய்ந்தது. புலியின் முகமும் திப்புவின் முகமும் அருகருகே இருந்த கணத்தில், தன் இடையில் வைத்திருந்த குறுவாளை விருட்டென உருவி, புலியின் கழுத்தில் இறக்கினார். புலி காலி! 'மைசூரின் புலி' என்ற பட்டப்பெயர் திப்புவோடு ஒட்டிக் கொண்டது. தன் இறுதிப்போரில், எதிரிகளின் படை வலிமையாக உள்ளது என்று அறிந்த நிலையில் திப்பு சொன்ன வார்த்தைகளிலும் புலிதான் பிரதானம். 'இந்த உலகத்தில் இரண்டு நாள்கள் வாழ்வது என்றாலும் ஒரு புலி போலவே இருக்க விரும்புகிறேன். இருநூறு வருடங்கள் என்றாலும் ஓர் ஆடாக வாழ என்னால் இயலாது!'

திப்புவின் புலிப்பாசத்தை பழைய பொம்மை ஒன்றின் மூலமாகவும் அறியலாம். கிழக்கு இந்திய கம்பெனி வீரன் ஒருவன் தரையில் வீழ்ந்து கிடக்க, புலி ஒன்று அவன் மீது நின்றபடி கழுத்தை கவ்வியிருப்பதாக மரத்தால் வடிவமைக்கப்பட்ட தானியங்கி பொம்மை அது. கி.பி. 1795-ம் ஆண்டில் திப்பு சுல்தானின் கட்டளையின் பெயரில் இது உருவாக்கப்பட்டிருக்கிறது. மைசூரின் ராஜ்ஜியத்துக்கும், பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனிப் படைகளுக்கும் இடையே நான்கு போர்கள் நடந்தன. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் நடந்த இந்தப் போர்கள், 'ஆங்

கிலேயே - மைசூர் போர்கள்' என்றழைக்கப்படுகின்றன. இரண்டாவது ஆங்கிலேய - மைசூர் போரில் திப்புவுக்குப் பெரும் சவாலாக விளங்கியவர் ஆங்கிலேயத் தளபதி ஹெக்டர் மன்ரோ. கி.பி. 1792 டிசம்பரில், ஹெக்டரின் மகனான ஹூக் மன்ரோவை புலி ஒன்று தாக்கிக் கொன்றது. தன்னைப் புலியாக உருவகப்படுத்தியும், ஹூக் மன்ரோவை ஒட்டுமொத்த கிழக்கிந்திய கம்பெனியின் படைகளாக உருவகப்படுத்தியும் திப்பு சுல்தான் அந்த மரப்பொம்மையை உருவாக்கியதாக வரலாற்றாளர்கள் சொல்கின்றனர்.

புலி பொம்மையின் உடலோடு கைகளால் சுற்றப்படும் இயக்கி ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. அதைச் சுற்றுவதன் மூலமாக பொம்மையின் பல்வேறு பாகங்கள் இயங்குகின்றன. சுற்றும்போது, ஆங்கிலேய வீரனின் இடது உள்ளங்கையானது, அவன் வாயில் அடித்துக் கொள்வதுபோல மேலும் கீழும் அசைகிறது. வீரனின் தொண்டைப் பகுதியில் ஒரு குழாய் வழியே காற்று வெளியேறுகிறது. இதனால் புலியால் தாக்கப்படும் வீரன், மரண பயத்தில் ஓலமிடுவதுபோல ஓசை எழும்புகிறது. புலியின் தலைப் பகுதிக்குள்ளும் காற்றை வெளியேற்றும் குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதனால், அந்த ஓலத்துடன் சேர்த்து புலி உறுமும் சத்தமும் வெளிப்படுகிறது. புலியின் உடலின் ஒரு பகுதியில் தந்தத்தால் ஆன, 18 கட்டைகள் கொண்ட இசை விசைப்பலகை மறைவாகப் பொருத்தப்பட்டுள்ளது. அந்த விசைப்பலகையைத் திறந்து இயக்கினால், ஆர்கன் குழாய்கள் வழியே காற்று வெளியேறி, இனிமையான இசையை உருவாக்குகிறது.

மர பொம்மையும், அதன் வண்ணப்பூச்சும் இந்திய ஓவியப் பாணியைப் பிரதிபலிக்கின்றன. இதில் இருக்கும் பித்தளைப் பாகங்கள் இந்தியக் கைவினைக் கலைஞர்

களின் பங்களிப்பை உறுதி செய்கிறது. பொம்மைக்குள் கீபோர்ட் போன்ற இசை தொழில்நுட்பத்தை உருவாக்குவதில் பிரெஞ்சுக்காரரர்களின் பங்களிப்பு இருந்திருக்கலாம். இதில் வீழ்ந்து கிடக்கும் ஆங்கிலேய வீரனின் உயரம் ஐந்தரை அடிக்கும் மேல். 71.2 செமீ உயரமும், 172 செமீ நீளமும் கொண்ட ஆளுயர, புலி உயரப் பொம்மைதான் இது.

கி.பி. 1799-ம் ஆண்டில், நான்காவது ஆங்கிலேயே - மைசூர்ப் போரில் திப்பு சுல்தான் வீழ்த்தப்பட்டார். அவரது ஸ்ரீரங்கப்பட்டணம் கோட்டை, கம்பெனியினர் வசமானது. அவரது செல்வங்கள் பலவும் ஆங்கிலேயரால் அபகரிக்கப்பட்டன. அப்போது கோட்டைக்குள் இருந்த இந்தப் புலி பொம்மையைக் கண்ட துணை அதிகாரி ஒருவர், இவ்விதம் பதிவு செய்து வைத்திருக்கிறார். ‘ஆங்கிலேயர்கள் மீது திப்பு கொண்டிருந்த கடும் வெறுப்பின் அடையாளம்தான் இந்த புலி பொம்மை. புலியின் உறுமலும், அதனுடன் எழும் ஐரோப்பியனின் ஓலமும் ஆங்கிலேயர்களின் கையாலாகத்தனத்தைச் சித்தரிப்பதாக வடிவமைத்திருக்கிறார்கள். திப்புவின் கொடூரத்தையும் திமிர்த்தனத்தையும் காட்டும் நினைவுப்பொருள் இது.’

கோபத்தில் ஆங்கிலேயர்கள் அந்த மரப்புலி பொம்மையை அடித்து உடைக்கவில்லை. பத்திரமாக லண்டனுக்கு எடுத்துச் சென்றுவிட்டனர். இப்போதுவரை லண்டனின் விக்டோரியா - அல்பர்ட் அருங்காட்சியத்தில் இந்தப் புலி பொம்மை பொக்கிஷமாகக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. விசையைக் கையால் சுற்றினால், புலியின் உறுமலாக திப்புவின் உறுமல் 220 ஆண்டுகளுக்குப் பிறகும் கேட்டுக் கொண்டேதான் இருக்கிறது.

திப்பு சுல்தான் பயன்படுத்திய வாள் ஒன்று, டெல்லி தேசிய அருங்காட்சியகத்தில் காணக்கிடைக்கிறது. வளைவான, கூர்மையான வாள். தங்க முலாம் பூசப்பட்ட வாளின் கைப்பிடி. மரத்தால் செய்யப்பட்டு, மெரூன் நிற வெல்வெட்டால் மூடப்பட்ட வாளின் உறை. குர்-ஆனின் வரிகளுடன் செதுக்கப்பட்ட திப்பு சுல்தானின் பெயர் என்று கலை அம்சத்துடன் இந்த வாள் காணப்படுகிறது.

கி.பி. 1789-ம் ஆண்டில் திப்பு சுல்தான், திருவிதாங்கூரின் நெடும்கோட்டா பகுதியில் நடந்த மூன்றாவது ஆங்கிலேய - மைசூர் போரில் பின்னடைவைச் சந்தித்தார். அப்போது களத்தில் அவரது வாள் ஒன்று கைப்பற்றப்பட்டு, பின்னர் பிரிட்டனுக்குக் கொண்டு செல்லப்பட்டது. 2004-ம் ஆண்டில் ஏலத்துக்கு வந்த அந்த திப்புவின் வாளை, இந்தியாவின் தொழிலதிபரான விஜய் மல்லையா சுமார் 1.5 கோடி கொடுத்து வாங்கினார். இந்தியாவுக்குக் கொண்டு வந்தார். ‘கர்நாடகாவின் பொக்கிஷத்தை மீண்டும் மீட்டு வந்திருக்கிறேன்’ என்று பெருமையுடன் அறிவித்தார் மல்லையா. ஏகப்பட்ட கடன்களுக்குச் சொந்தக்காரராக, தற்போது லண்டனில் பதுங்கியிருக்கும் மல்லையாவின் சரிவுக்குக் காரணம் திப்புவின் வாள்தான் என்று பேச்சு கிளம்பியது. துரதிர்ஷ்டம் பிடித்த திப்புவின் வாளை, 2016-ம் ஆண்டிலேயே மல்லையா விற்றுவிட்டார் என்று அவரது தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வாள் இப்போது எங்கே, யாரிடம் இருக்கிறது என்ற தகவல் வெளியிடப்படவில்லை.



ஒரு சில வருடங்களுக்கு முன்பு, இங்கிலாந்தின் பெர்க்ஷையரைச் சேர்ந்த ஒரு தம்பதியினர், தங்கள் வீட்டில் மேற்கூரைப் பகுதியிலிருந்த அறைக்குச் சென்றனர். பல காலமாக உபயோகப்படுத்தப்படாமல் இருந்த அந்த அறையில், வேண்டாத பொருள்கள் போட்டு வைக்கப்பட்டிருந்தன. அந்தத் தம்பதியினர் அந்த அறையைச் சுத்தம் செய்யும்போது, அவர்கள் கையில் பொக்கிஷமாகச் சில பொருள்கள் சிக்கின.

திப்பு சுல்தானின் தந்தையின் பெயரான 'ஹைதர்' என்று பொறிக்கப்பட்ட வாள். புலியின் உடம்பிலுள்ள வரிகள் பொறிக்கப்பட்ட, கைப்பிடியில் தங்க முலாம் பூசப்பட்ட ஒரு வாள். மேலும் சில வாள்கள். வெள்ளித் தகடுகள் பதிக்கப்பட்ட ஒரு துப்பாக்கி. உலோகத்தினாலான, கலை வேலைப்பாடுகள் அமைந்த பாக்கு வைக்கும் பெட்டி ஒன்று. தங்கத்தினாலான முத்திரை மோதிரம் ஒன்று. உலோகத்தினாலான கேடயம் ஒன்று.

அந்தத் தம்பதி, ஆண்டனி கிரிப் என்ற ஏல நிறுவனத்தை அணுகினர், அந்தப் பொருள்களை எல்லாம் ஒப்படைத்தனர். அவை எல்லாமே ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தானின் காலத்தைச் சேர்ந்தவை என்று ஏல நிறுவனத்தினர் உறுதி செய்தனர். 'இந்தப் பொருள்கள் எல்லாம் எப்போது, யார் மூலமாக எங்கள் வீட்டுக்கு

வந்தது என்று எங்களுக்கு நிச்சயம் தெரியாது. இவற்றை விற்று பணம் பார்க்கும் ஆசை எங்களுக்கு இல்லை. திப்பு சுல்தானின் பொருள்கள் எல்லாம் இந்தியாவுக்கே திரும்பிச் செல்ல வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்' என்று அந்தத் தம்பதி பேட்டி கொடுத்தார்கள்.

இந்திய அரசும், India Pride Project என்ற அமைப்பினரும் இந்தப் பொருள்களை எல்லாம் ஏலம் விடக்கூடாது என்றும், இந்தியாவிடம் திருப்பி அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். ஆனால், 2019 மார்ச்சில் திப்பு சுல்தானின் அந்தப் பொக்கிஷங்கள் எல்லாம் ஏலம் விடப்பட்டன. நினைத்ததைவிட பல மடங்கு விலைக்கு பலரால் ஏலம் எடுக்கப்பட்டன.

திப்புவின் எந்த ஒரு பொக்கிஷமும் இந்தியாவுக்குத் திரும்பி வரவில்லை.

## 35. நெப்போலியனின் தங்கப்புதையல்

ஸ்வீடன் நாட்டு மன்னர் பன்னிரண்டாம் சார்லஸ், கி.பி. 1708-ம் ஆண்டில் சுமார் 40000 வீரர்களுடன் ரஷ்யா மீது படையெடுத்துச் சென்று தோல்வியுடனேயே நாடு திரும்பினார். பிரான்ஸ் சக்கரவர்த்தி நெப்போலியன், கி.பி.1812-ம் ஆண்டில் ரஷ்யா மீது படையெடுத்துச் சென்று, பல களங்களில் வென்று, இறுதியில் பெரும் உயிர்ச் சேதத்துடனேயே சொந்த மண்ணுக்குத் திரும் பினார். அடால்ஃப் ஹிட்லர், இரண்டாம் உலகப்போரில் 'ஆபரேஷன் பார்பரோஸா' என்ற பெயரில் ரஷ்யாவை வீழ்த்த நாஜிப் படைகளை அனுப்பினார். ஆரம்பத்தில் ஜெர்மனிக்குப் பல வெற்றிகள் கிட்டினாலும் இறுதியில் அது தோல்விமுகத்துடன் புறமுதுகிட்டு ஓடித்தான் வந்தது.

இந்த மூன்று முக்கியமான போர்களிலும் ரஷ்யா வீழா மல் காத்தது அதன் படைபலம் அல்ல. பனிபலம். ஆம், அந்த நாட்டின் கோரமான குளிர்தான் எதிரிகளின் உயிரை உறையவைத்து ஓட ஓட விரட்டியது என்பது மறுக்கவியலாத உண்மை.

1812-ம் ஆண்டில் நெப்போலியன், ரஷ்யாவுக்குப் படை யெடுக்கும் முன் தெளிவாகத்தான் திட்டமிட்டிருந்தார்.

ஜெனரல் ராபர்ட் தாமஸ் வில்சன் (ரஷ்ய ஜார் மன்ன ருக்கு ராணுவ ஆலோசகராக இருந்தவர்) எழுதிய ரஷ்ய ராணுவம் குறித்த புத்தகம் ஒன்றையும், ரஷ்யாவின் வரலாறு குறித்த புத்தகங்களையும் மீண்டும் மீண்டும் வாசித்து அறிவை விரிவாக்கிக் கொண்டார். ஸ்வீடன் மன்னர் சார்லஸின் ரஷ்ய யுத்தக் குறிப்புகளை எல்லாம் படித்து, அவர் சறுக்கிய இடங்கள் எவை என்பதை யும் ஆராய்ந்தார். லட்சம் பிரான்ஸ் வீரர்களை புதிதாகப் படையில் சேர்த்தார். ப்ரஷ்யா, இத்தாலி, ஆஸ்திரியாவு டன் ரகசிய ஒப்பந்தங்கள் போட்டுக் கொண்டு உணவு மற்றும் படை உதவிகளைப் பெற்றுக் கொண்டார்.

'இப்போது ஜூன். ரஷ்யாவில் கடும்குளிர் காலம் ஆரம் பிக்க இன்னும் நான்கு மாதங்கள் இருக்கின்றன. ரஷ் யாவுக்குள் புகுந்து மாஸ்கோ வரை முன்னேறி அதனை நசுக்க மூன்று மாதங்கள் போதும். மீதமிருக்கும் ஒரு மாதத்தில், அதாவது அக்டோபரின் இறுதிக்குள் வெற்றி நடை நடந்து வீடு வந்து சேரலாம்' என்று நெப்போலியன் கணக்குப் போட்டார். 1812 ஜூன் 24-ல் படைகளுடன் ரஷ்யா நோக்கிக் கிளம்பினார்.

ஆரம்பம் முதலே களத்தில் பிரான்ஸின் ஆதிக்கமே. ரஷ்யப் படைகள் எதிர்நின்று போரிடாமல் உள் நோக்கி ஓடிக்கொண்டே இருந்தன. செப்டெம்பர் 14 அன்று பிரெஞ்சுப் படைகள் மாஸ்கோவுக்குள் நுழைந் தன. கடும் எதிர்ப்பு இருக்கும். பெரும் போராட்டம் இருக்கும் என்று நினைத்த நெப்போலியன் அதிர்ந்து நின்றார். ஏனென்றால், மாஸ்கோ நகரமே தீப் பற்றி எரிந்து கொண்டிருந்தது. 'எதிரிகளுக்குக் குடிக்க நீரோ, உணவோ எதுவும் கிடைக்கக்கூடாது. தீயிட் டுக் கொளுத்துங்கள்' என்று ரஷ்ய மன்னர் முதலாம் அலெக்ஸாண்டர் கட்டளையிட்டதன் விளைவு அது.

ரஷ்ய மன்னரோ, வீரர்களோ, பொதுமக்களோ எதிர்ப்ப தற்கு யாரும் அங்கே இல்லை. சுமார் ஒரு மாதம் நெப் போலியன் மாஸ்கோவில் முகாமிட்டிருந்தார். அங்கே கிடைத்த செல்வங்களை எல்லாம் பிரெஞ்சுப் படை கள் கொள்ளையடித்தன. ஆனால், போதுமான உண வும் நீரும் இல்லை. பனி பெய்யத் தொடங்கியிருந்தது. வேறுவழியின்றி பிரான்ஸுக்குத் திரும்ப முடிவெடுத்தார் நெப்போலியன்.

கொள்ளையடித்த செல்வங்களில் தங்கம் அதிகம். ‘தங் கத்தினாலான ஆபரணங்கள், பொருள்கள் அனைத் தையும் உருக்கி தங்கக்கட்டிகளாக மாற்றுங்கள்’ என நெப்போலியன் கட்டளையிட்டார். சுமார் 80 டன் தங்கக் கட்டிகள் உருவாக்கப்பட்டன. அவற்றைப் பிரான்ஸுக் குக் கொண்டு வருவதற்கென ஏறத்தாழ இருநூறுக் கும் மேற்பட்ட வண்டிகள் (400 என்றும் சொல்லப்படு வதுண்டு) தயார் செய்யப்பட்டன. பிரான்ஸை நோக்கிக் கிளம்பினார்கள். பனி பெய்து கொண்டே இருந்தது.

மாஸ்கோவிலிருந்து மேற்கே சுமார் 300 கி.மீ. பயணம் செய்து செம்லெவோ என்ற கிராமத்தை அடைந்த போது, பிரெஞ்சுப் படைகளின் நிலைமை கவலைக்கிட மாக இருந்தது. உயிர்க்கொல்லி குளிரினால் ஆயிரக்க ணக்கான வீரர்களும் குதிரைகளும் இறந்து போயிருக்க, தங்கம் சுமந்த வண்டிகளைத் தள்ள ஆளில்லை. வருத் தப்பட்டு பாரம் சுமந்தால் மீதி இருக்கும் உயிர்களை யும் காப்பாற்ற இயலாது என்பதால் நெப்போலியன் ஒரு முடிவெடுத்தார். ‘செம்லேவ் ஏரியில் இந்தத் தங்கத்தை எல்லாம் ரகசியமாகப் புதைத்துவிடுங்கள். காலம் கனி யும்போது வந்து மீட்டெடுத்துக் கொள்ளலாம்’ என்று கட்டளையிட்டார். அப்படியே செய்தார்கள். சுமார் ஆறு லட்சம் வீரர்களுடன் ரஷ்யா நோக்கிக் கிளம்பிய நெப்

போலியன், சில ஆயிரம் வீரர்களுடன் சின்னாபின்னா கிப் பிரான்ஸுக்கு வந்து சேர்ந்தார். மீண்டும் அவர் ரஷ் யாவுக்குச் செல்லும் வாய்ப்பே அமையவில்லை.

1820-களில் செம்லெவோ ஏரிக்கரைப் பகுதிகளில் பிரான்ஸ் படைகள் கைவிட்டுச் சென்ற ஆயுதங்களை யும் வெடிமருந்துகளையும் ரஷ்யர்கள் கண்டெடுத்தி ருக்கிறார்கள். 1830 முதலே செம்லோவ் ஏரியில் நெப் போலியன் புதைத்த தங்கத்தைத் தேடும் பணி ஆரம்ப மாகிவிட்டது. சோவியத் அரசாங்கம் பலமுறைத் தேடிச் சலித்துப் போனது. ராணுவ வீரர்கள், ஆய்வாளர்கள், புதையல் கண்டுபிடிப்பாளர்கள், அரசாங்கப் படையினர் என்று வெவ்வேறு காலகட்டங்களில் பல்வேறு தரப்பின ரும் அதைத் தேடிக் கொண்டேதான் இருக்கிறார்கள். ஏரிப்பகுதிகளில் வெடிவைத்துத் தகர்த்துக்கூடப் பார்த் துவிட்டார்கள். இதுவரையிலும் இத்தனூண்டு தங்கம் கூட கிடைக்கவில்லை.

எனில், நெப்போலியன் நிஜமாகவே தங்கத்தை செம் லோவ் ஏரியினுள்தான் புதைத்தாரா? என்ன ஆதாரம்? ரஷ்யப் போரில் பங்கேற்ற நெப்போலியனின் தளபதிக ளில் ஒருவரான ஃபிலிப்பே பவுல் தி ஸெகூர் என்பவரது டைரிக் குறிப்பில் தங்கப்புதையல் செம்லோவ் ஏரியில் புதைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்காட் லாந்தைச் சேர்ந்த நாவலாசிரியரான சர் வால்டர் ஸ்காட், 1825-ம் ஆண்டில் எழுதிய நெப்போலியன் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்திலும் இந்தப் புதையல் குறித்த செய்திகள் உள்ளன.

அந்தக் குளிரில், பனி பொழியும் நாள்களில் ஏரியி னுள் பெரும் பள்ளம் தோண்டி, எட்டு டன் தங்கத்தைப் புதைப்பதெல்லாம் இயலவே இயலாத காரியம். இந்தத்

தங்கப்புதையல் விஷயமே பொய்தான் என்று சில வர லாற்றாளர்கள் வாதிடுகிறார்கள். ரஷ்யாவில் இப்போது வாழும் வரலாற்றாளரான ரைஸ்கொவ் (Viacheslav Ryzhkov) என்பவர், 2019-ம் ஆண்டின் ஆரம்பத்தில் புதிய தகவல் ஒன்றை முன்வைத்தார்.

செம்லொவ் ஏரியில் நெப்போலியனின் தங்கப்புதையல் புதைக்கப்படவே இல்லை. பிரெஞ்சுப் படைகளை ரக சியமாகப் பின் தொடர்ந்து வந்த ரஷ்ய ஒற்றர்களைத் திசைதிருப்பவே செம்லோவில் புதையல் மறைக்கப்பட் டதாக நெப்போலியன் நாடகம் ஆடினார். ஃபிலிப்பே வின் டைரிக்குறிப்பும் புதையலைப் பாதுகாக்கச் சொல் லப்பட்ட பொய்யே. உண்மையில் அந்தத் தங்கப்புதை யல் அங்கிருந்து 40 மைல்கள் தள்ளியிருக்கும் ருட்னியா என்ற ஊரில் அமைந்த Bolshaya Rutavech என்ற ஏரி யில்தான் புதைக்கப்பட்டிருக்கிறது என்று ரைஸ்கொவ் வாதிடுகிறார். ருட்னியா அவரது சொந்த ஊரும்கூட. ரைஸ்கோவ் இன்னும் தன் வாதத்தை முறையாக நிரூ பிக்கவில்லை.

பிரெஞ்சுப் படைகள் மாஸ்கோவைக் கொள்ளையடித் தது நிஜம். செல்வங்களை நெப்போலியன் பிரான்ஸுக் குக் கொண்டு வர நினைத்ததும் உண்மை. அது பிரான் ஸுக்கும் வந்து சேரவில்லை. ரஷ்யர்களும் கண்டெடுக் கவில்லை. எனில் எங்கே போனது நெப்போலியனின் தங்கப்புதையல் என்பது இன்றுவரை மர்மமே.

## 36. கொள்ளை போன ஓவியங்கள்!

1990, மார்ச் 18. ஞாயிறு. அமெரிக்காவின் பாஸ்டன் நகரம். நள்ளிரவு நேரம். இஸபெல்லா ஸ்டீவர்ட் கார்ட்னெர் அருங்காட்சியகம் அருகில் சிவப்பு நிற டாட்ஸ் டேடோனா கார் ஒன்று வந்து நின்றது. அதிகாலை மணி 1. காரிலிருந்து போலீஸ் சீருடையில் இரண்டு திருடர்கள் இறங்கினார்கள். அருங்காட்சியகத்தின் காவலாளியை நோக்கிச் சென்றார்கள்.

'உள்ளே இருந்து ஏதோ சத்தம் வருவதாக புகார் வந்திருக்கிறது' என்று அதிகார தொனியில் ஒருவன் மிரட்டினான். இன்னொருவன், அரெஸ்ட் வாரண்ட் போல ஒன்றைக் காட்டி, காவலாளியின் கையில் விலங்கை மாட்டினான். அவர்களை போலீஸ் என்றே நம்பிவிட்டார் அந்தக் காவலாளி. ஏதோ தவறாகப் புரிந்துகொண்டு தன்னைக் கைது செய்கிறார்கள் என்று நினைத்தார். அதற்குள் அங்கிருந்த இன்னொரு காவலாளியும் வரவே, அவரது கையிலும் விலங்கு பூட்டப்பட்டது. இருவரையும் இழுத்துக்கொண்டு கட்டடத்தின் அடித்தளத்துக்கு வந்தார்கள். அங்கே ஓரிடத்தில் கட்டிப்போட்டார்கள். போலீஸாக வந்த ஒருவனது முகத்தில் இருப்பது ஒட்டுமீசை என்று காவலாளி ஒருவர் கண்டுகொண்

டார். சத்தமெழுப்ப முயன்றபோது, அவர்களது வாயில் டேப் ஒட்டப்பட்டது.

'நாங்கள் உங்களைக் கைது செய்யவில்லை. இங்கே கொள்ளையடிக்க வந்திருக்கிறோம்.' அழுத்தந்திருத்தமாகச் சொன்னான் ஒரு திருடன். இருவரும் அருங்காட்சியகத்துக்குள் புகுந்தனர்.

அது அரசு அருங்காட்சியகம் அல்ல. கி.பி. 1840-ம் ஆண்டில் பிறந்த இஸபெல்லா ஸ்டீவர்ட் கார்ட்னெர் என்ற அமெரிக்கப் பெண் உருவாக்கியது. கலைப்பொருள்களை, அரிய ஓவியங்களை, பண்டைக்காலச் சிற்பங்களை எல்லாம் சேகரிப்பதில் இஸபெல்லா ஸ்டீவர்டும், அவரது கணவரான கார்ட்னெரும் பெரும் ஆர்வம் கொண்டிருந்தனர். தங்கள் வாழ்நாளில் சுமார் பத்து வருடங்கள் அவர்கள் அமெரிக்காவிலேயே இல்லை. கலைப் பொக்கிஷங்களைச் சேகரிப்பதற்காகவே இருவரும் ஐரோப்பிய நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள், ஆசிய நாடுகள் என்று சுற்றிக் கொண்டே இருந்தார்கள்.

தாங்கள் சேகரித்த கலைப்பொக்கிஷங்களை எல்லாம் அருங்காட்சியகம் ஒன்றை உருவாக்கி காட்சிப்படுத்த வேண்டுமென்பது இருவரது பெருங்கனவு. 1898-ம் ஆண்டில் கார்ட்னெர் இறந்துபோனார். தன் கணவரது ஆசையை நிறைவேற்றும்விதமாக பாஸ்டனில் நிலம் ஒன்றை வாங்கினார் இஸபெல்லா. விலார்ட் சீஸ் என்ற கட்டட நிபுணரின் வடிவமைப்பில், இத்தாலியின் வெனிஸ் அரண்மனையைப் போன்று அருங்காட்சியகத்தின் கட்டடம் உருவாக்கப்பட்டது. நான்கு தளங்கள் கொண்ட மாளிகை. முற்றத்தில் கண்ணாடியால் சூழப்பட்ட தோட்டம். எங்கே, எந்தெந்த ஓவியங்கள், சிலைகள், கலைப்பொருள்கள் காட்சிப்படுத்த வேண்டும்

என்று திட்டமிட்டு அடுக்குவதற்காக மட்டுமே ஒரு வருடம் செலவிட்டார் இஸபெல்லா. 1903, ஜனவரி 1 அன்று, 'இஸபெல்லா ஸ்டீவர்ட் கார்ட்னெட் அருங்காட்சியகம்' திறந்து வைக்கப்பட்டது. நான்காவது தளத்தில் தங்கி, அருங்காட்சியகத்தை நிர்வகித்து வந்த இஸபெல்லா, 1924-ம் ஆண்டில் தனது 84வது வயதில் இறந்துபோனார். அதற்குப் பிறகும் திறமையான நிர்வாகிகள் அருங்காட்சியகத்தை நடத்தி வந்தனர்.

1990, மார்ச் 18. உள்ளே புகுந்து சுமார் 81 நிமிடங்கள் கழித்துதான் திருடர்கள் இருவரும் அருங்காட்சியகத்தை விட்டு வெளியே வந்தனர். தாங்கள் கொள்ளையடித்த கலைப்பொருள்களை இரண்டு தவணைகளாக காரில் ஏற்றினர். சிவப்பு நிற கார் கிளம்பி மறைந்தது. நிஜ போலீஸ் வந்து காவலாளிகளை விடுவிக்கும்போது காலை மணி எட்டைக் கடந்திருந்தது.

அப்போது கண்காணிப்பு கேமரா கிடையாது. அருங்காட்சியகத்தின் ஒவ்வொரு தளத்திலும் 'மோஷன் டிடெக்டர்' எனப்படும் மனிதர்களின் நடமாட்டத்தைக் கண்டறிய உதவும் கருவிகள்தாம் பொருத்தப்பட்டிருந்தன. எனவே திருடர்கள் யார் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. காவலாளிகள் சொன்ன அடையாளங்களைக் கொண்டு திருடர்களின் உத்தேச உருவங்களை மட்டுமே வரைய முடிந்தது. வேறு முக்கியமான தடயங்களும் கிடைக்கவில்லை.

மொத்தமாக சுமார் $500 மில்லியன் மதிப்புள்ள 13 கலைப்பொருள்கள் திருடு போயிருந்தன. ஜோஹன்னஸ் வெர்மியர், பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற டச்சு ஓவியர். அவர் வரைந்த 43 ஓவியங்களில் ஒன்றான The Concert, இஸபெல்லா அருங்காட்

சியகத்தில் வைக்கப்பட்டிருந்தது. திருடப்பட்ட ஓவியங்களில் மிக முக்கியமான அதன் மதிப்பு மட்டும் $200 மில்லியன். அதே காலத்தில் வாழ்ந்த இன்னொரு ஓவியரான ரெம்பிராண்ட் வரைந்த The Storm on the Sea of Galilee மற்றும் A Lady and Gentleman in Black ஆகிய ஓவியங்கள் திருடப்பட்டிருந்தன. ரெம்பிராண்ட் தன்னைத்தானே வரைந்த ஓர் ஓவியம், Edgar Degas என்ற பிரெஞ்சுக் கலைஞரின் ஐந்து ஓவியங்கள், கோவெர்ட் என்ற டச்சு ஓவியர் வரைந்த Landscape with an Obelisk, எடௌவர்ட் மேனெட் என்ற பிரெஞ்சு ஓவியர் வரைந்த Chez Tortoni ஆகியன திருடுபோன பட்டியலில் அடக்கம். தவிர, சுமார் 2500 ஆண்டுகள் பழைமையான சீன வெண்கலப் பாத்திரத்தையும், பிரெஞ்சுப் பேரரசர் நெப்போலியன் பயன்படுத்திய கழுகுச் சின்னத்தையும் திருடர்கள் தூக்கிச் சென்றிருந்தார்கள்.

பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த இத்தாலியின் புகழ்பெற்ற ஓவியரான Titian ஓவியங்களும் இஸபெல்லா அருங்காட்சியகத்தில் இருந்தன. அவைதாம் அங்கிருந்த ஓவியங்களிலேயே மிகவும் விலைமதிப்பு கொண்டவை. திருடர்கள் அவற்றை எடுத்துச் செல்லவில்லை. எனவே, ஓவியங்கள் குறித்த எந்தவித அறிவும் திருடர்களுக்கு இல்லை என்றே சொல்லலாம். தவிர, அவர்கள் கைக்குக் கிடைத்த கலைப்பொருள்களை, அவற்றின் மதிப்பெல்லாம் தெரியாமல்தான் திருடியிருக்கிறார்கள் என்பதும் உறுதியானது.

திருடு போன சமயத்திலேயே அமெரிக்கப் புலனாய்வு நிறுவனமான எஃப்.பி.ஐ. (FBI) தேடும் பணியை மேற்கொள்ள ஆரம்பித்தது. ஆனால், சுமார் முப்பது வருடங்களாகத் தேடிக் கொண்டேதான் இருக்கிறது. காணாமல் போன 13 கலைப்பொருள்களில் இதுவரை ஒன்

றைக்கூட கண்டுபிடிக்கவில்லை. உள்ளூர் திருடர்கள் முதல் உலக மாஃபியாக்கள் வரை இவர்களாக இருக்குமோ என்ற சந்தேகப்பட்டியல் எஃப்.பி.ஐயிடம் உண்டு. அதில் பலர் இப்போது இறந்தே விட்டார்கள். திருடு போன கலைப்பொருள்களில் ஏதாவது ஒன்றாவது எங்கேயாவது விற்பனைக்கு வந்தால் அதன் வழியே நூல் பிடித்து திருடர்களை அமுக்கி விடலாம் என்ற எஃப்.பி.ஐயின் திட்டமும் இதுவரை கைகூடவில்லை. திருடு போன கலைப்பொருள்கள் குறித்து உருப்படியான துப்பு கொடுத்தால் இஸபெல்லா அருங்காட்சியம் சார்பாக $1 மில்லியன் பரிசு என்று முதலில் அறிவித்தார்கள். அடுத்து $5 மில்லியன் என்று பரிசுத்தொகையை ஏற்றினார்கள். $10 மில்லியன் என்றும் அறிவித்துப் பார்த்தார்கள். ஒரு தகவல்கூட உருப்படியாகக் கிடைக்கவில்லை.

ஓர் அருங்காட்சியத்தில் இருந்து திருடப்பட்ட வகையில், அதிக மதிப்புள்ள கலைப்பொக்கிஷங்கள் இவையே. இன்றைக்கும் இஸபெல்லா அருங்காட்சியகத்தில் திருடுபோன ஓவியங்களின் சட்டகங்கள் அப்படியே வெறுமையாகக் காத்திருக்கின்றன, களவுபோன ஓவியங்கள் என்றாவது ஒருநாள் மீட்கப்படும் என்ற நம்பிக்கையுடன்!

## 37. பெங்காஸி பொக்கிஷம்

கிரேக்கப் பேரரசரான மாவீரர் அலெக்ஸாண்டரின் காலத்தில் நாணயங்கள் எப்படி இருந்தன? பெரும்பா லான நாணயங்களின் முன்புறம் அலெக்ஸாண்டரின் வலதுபக்க முகம் செதுக்கப்பட்டிருந்தது. இன்னொருபு றம், கிரேக்கக் கடவுள்களுக்கெல்லாம் அரசரான ஜீய ஸின் உருவம் செதுக்கப்பட்டிருந்தது. வலது கையில் செங்கோலுடனும், இடது கையில் கழுகுடனும் ஜீயஸ் அரியணையில் அமர்ந்திருந்தார். ALEXANDROU அல் லது ALEXANDROU BASILEWS என்று நாணயங்களில் செதுக்கப்பட்டிருந்தது. அதன் பொருள் 'அலெக்ஸாண் டரின் நாணயம்' அல்லது 'பேரரசர் அலெக்ஸாண்டரின் நாணயம்.' அலெக்ஸாண்டர் வாழ்ந்த காலம் கி.மு. 356 முதல் 323 வரை.

வட ஆப்பிரிக்க நாடான லிபியா கி.மு.வில் சில நூற் றாண்டுகள் கிரேக்கப் பேரரசின் ஒரு பகுதியாக இருந் தது. இருபதாம் நூற்றாண்டில் (கி.பி. 1910 முதல் 1947 வரை) இத்தாலியின் காலனியாகவும் இருந்தது. அப் போது இத்தாலிய ஆய்வாளர்கள் லிபியாவின் பல இடங் களில் தொல்பொருள் ஆய்வை மேற்கொண்டனர்.

அதில் பல்வேறு கிரேக்கப் பொக்கிஷங்கள் கண்டெடுக்கப்பட்டன. அதில் அலெக்ஸாண்டர் காலத்து நாணயங்களும் கலைப்பொருள்களும் உண்டு.

சைரெனைகா - லிபியாவின் பழைமையான கடற்கரை நகரம். அது கிரேக்க ராஜ்ஜியத்தின் ஆளுகையில் இருந்தபோது, அங்கே கிரேக்கக் கடவுளான ஆர்தேமிஸுக்குக் கோயில் எழுப்பப்பட்டது. அதே கோயிலில் 1917-ம் ஆண்டில் இத்தாலிய தொல்பொருள் ஆய்வாளர்கள் அகழ்வாய்வை மேற்கொண்டார்கள். கி.மு. ஆறு மற்றும் ஐந்தாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த தங்கக் காதணிகள், கலைப்பொருள்கள், நாணயங்கள், தட்டுகள் போன்ற கிரேக்கப் பொக்கிஷங்களைக் கண்டெடுத்தார்கள். கி.பி. 1937 முதல் 1942 வரை இத்தாலிய ஆய்வாளர்கள், சைரெனைகாவின் Ptolemais அரண்மனையில் அகழ்வாராய்ச்சி மேற்கொண்டனர். அப்போதும் பல்வேறு கிரேக்கப் பொக்கிஷங்கள் கிடைக்கப்பெற்றன. தவிர, ஏஞ்சலோ மெலியு என்ற நாணய ஆய்வாளர், சுமார் 2000-க்கும் மேற்பட்ட பழங்கால நாணயங்களைச் சேகரித்திருந்தார். இவை அனைத்துமே இத்தாலிய தொல்லியல் ஆய்வாளர்கள் பொறுப்பிலேயே இருந்தன.

இரண்டாம் உலகப் போர் சமயம். ஹிட்லருக்கு ஆதரவாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த இத்தாலி, 1942-ம் ஆண்டில் தன் பலத்தை இழந்தது. அதன் எதிரியான பிரிட்டிஷ் படைகள் லிபியாவை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தன. எனவே, இத்தாலிய ஆய்வாளர்கள் தம் வசம் இருந்த கிரேக்கப் பொக்கிஷங்கள் அனைத்தையும் ராணுவத்தினர் உபயோகப்படுத்தும் பெரிய மரப்பெட்டிகளில் வைத்துப் பூட்டினர். அவை பத்திரமாக வட இத்தாலிய நகரமான கிரெமோனாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. பின்பு வேறு சில ரகசிய இடங்களில்

வைத்துப் பாதுகாக்கப்பட்டன. இரண்டாம் உலகப்போ ரின் முடிவில் பத்திரமாக ரோமுக்கு எடுத்துச் செல்லப் பட்டன.



லிபியாவின் விடுதலைக்குப் பிறகு, அங்கே அரசராகப் பொறுப்பேற்றவர் முதலாம் இட்ரிஸ். லிபியாவிலிருந்து எடுத்துச் சென்ற கிரேக்கப் பொக்கிஷங்களை எல் லாம் திருப்பியளிக்குமாறு இட்ரிஸ், இத்தாலிய அரசிடம் கோரிக்கை வைத்தார். கி.பி. 1961-ம் ஆண்டில் அந் தப் பொக்கிஷங்கள் எல்லாம் லிபியாவின் பெங்காஸி (Benghazi) நகரத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அப் போது முதல் அவை 'பெங்காஸி பொக்கிஷங்கள்' என்ற பெயரில் அழைக்கப்பட்டன. (ஆர்தேமிஸ் கோயில் பொக்கிஷங்கள், Ptolemais அரண்மனைப் பொக்கி ஷங்கள், ஏஞ்சலோ மெலியு சேகரித்த நாணயங்கள் ஆகியவை இதில் அடக்கம்.) பெங்காஸி நகரத்தில் ஓர் அருங்காட்சியகம் கட்டி, அவற்றில் இந்தப் பொக்கிஷங் களை எல்லாம் காட்சிக்கு வைக்க வேண்டுமென்பது அரசர் இட்ரிஸின் திட்டமாக இருந்தது. ஆனால், அவ ரால் அதைக் கடைசி வரை செய்ய இயலவில்லை.

பெங்காஸி பொக்கிஷங்களில் இன்னென்ன பொருள் கள் இருக்கின்றன என்ற முறையான ஆவணப்பதிவுக ளும் மேற்கொள்ளப்படவில்லை. சில நாணயங்கள், சில கலைப்பொருள்கள் மட்டும் புகைப்படங்களாகப் பதிவு செய்யப்பட்டன. அரசர் இட்ரிஸின் உத்தரவுப்படி, அவை

ஓமர் அல்-முக்தார் சாலையில் அமைந்த தேசிய வங்கியின் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டன.

1969-ம் ஆண்டில் லிபியாவில் ராணுவப்புரட்சி அரங்கேறியது. முகம்மது கடாஃபி லிபியாவின் சர்வாதிகாரி ஆனார். ஏறத்தாழ 42 ஆண்டுகள் நிலைத்த அவரது ஆட்டம், 2011-ம் ஆண்டில் முடிவுக்கு வந்தது. அப்போது உருவான மக்கள் புரட்சியால் கடாஃபி ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டார். கிளர்ச்சிப் படையினர், பெங்காஸி நகரில் இடைக்கால அரசு ஒன்றை அமைத்தனர். உள் நாட்டுப்போர் மூண்டது. அந்த அசாதாரணமான சூழலில் பெங்காஸி நகரமெங்கும் பல்வேறு வன்முறைகள் நிகழ்ந்தன. மே மாதத்தில் தேசிய வங்கியும் கொள்ளையடிக்கப்பட்டது. ஆனால், அந்த அக்டோபர் வரை கொள்ளையடிக்கப்பட்ட செய்தி வெளியில் தெரிவிக்கப்படவில்லை. ஏனென்றால் கிளர்ச்சியின் ஒரு பகுதியாக வங்கி தீவைத்துக் கொளுத்தப்பட்டதாகத்தான் பலரும் நினைத்துக் கொண்டிருந்தார்கள். பின்புதான் அது ஏதோ ஒரு கொள்ளைக்கும்பலின் திட்டமிட்ட சதி என்பது கண்டறியப்பட்டது.

2011, மே 25 அன்று வங்கிக்குள் புகுந்த கொள்ளையர்கள், பாதுகாப்புப் பெட்டக அறையின் மேல் தளத்தில் ஓர் ஆள் நுழையும் அளவுக்குத் துளையிட்டிருக்கிறார்கள். அதன் வழியே உள்ளே புகுந்து பாதுகாப்புப் பெட்டகங்களை உடைத்து, பெங்காஸி பொக்கிஷங்களை அள்ளிக் கொண்டு சென்றிருக்கிறார்கள். வங்கிக் கட்டடத்துக்குத் தீ வைத்ததும் அவர்களே.

வங்கி குறித்தும், பாதுகாப்புப் பெட்டக அறை குறித்தும் தெளிவாகத் தெரிந்த யாரோ சிலரது உதவியுடனேயே கொள்ளை நடந்திருக்கும் என்று நம்பப்படுகிறது. விசா

ரணை தொடர்கிறது. ஆனால், இதுவரை பெங்காஸி பொக்கிஷங்கள் எதுவும் மீட்கப்படவில்லை. பாதுகாப் புப் பெட்டகத்தில் என்னென்ன பொக்கிஷங்கள் வைக் கப்பட்டிருந்தன என்பதற்கு முறையான பட்டியல் கிடை யாது என்பதும் இதில் மிகப்பெரிய சிக்கல். The Art Newspaper-ல் மார்ட்டின் பெய்லே என்பவர் பெங்காஸி பொக்கிஷங்கள் குறித்த உத்தேசப் பட்டியல் ஒன்றை 2011 நவம்பரில் வெளியிட்டார். 364 தங்க நாணயங்கள், 2433 வெள்ளி நாணயங்கள், 4484 வெண்கல நாணயங் கள், 306 தங்க நகைகள் மற்றும் 43 கலைப்பொருள்கள். கிரேக்க காலத்துப் பொக்கிஷங்கள் மட்டுமன்றி, ரோமா னிய, பைசாந்திய, பண்டைய இஸ்லாமிய ராஜ்ஜியங்க ளின் பொக்கிஷங்களும் இதில் அடக்கம். இதில் 90% பொருள்கள் கொள்ளை போய்விட்டதாகச் சொல்லப்ப டுகிறது.

2011-ம் ஆண்டுக்குப் பிறகு எகிப்தின் கள்ளச்சந்தையில் சில பண்டைய கிரேக்க நாணயங்கள் விற்கப்பட்டதாகச் செய்திகள் உண்டு. ஆனால், யாரும் பிடிபடவில்லை. தற்போது உலகமெங்கும் செயல்படும் ஏல நிறுவனங்கள் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றன. அவை மூல மாக பெங்காஸி பொக்கிஷக் கொள்ளையர்கள் பிடிபடு வார்கள் என்று உலகமே காத்திருக்கிறது.

சரி, பெங்காஸி பொக்கிஷங்களின் மதிப்பு எவ்வளவு? அதை மதிப்பிடவே முடியாது. 2011-ம் ஆண்டில் பாரி ஸில் அதிகாரபூர்வமாக நடத்தப்பட்ட ஏலம் ஒன்றில் பண்டைய கிரேக்க நாணயம் ஒன்று $431,000 மதிப் புக்கு விலை போயிருக்கிறது. இதைக் கொண்டு பெங் காஸி பொக்கிஷங்களின் மதிப்பை நாம் கூட்டி, பெருக் கிப் பார்த்து வாய்பிளந்து கொள்ளலாம்.

உலகில் இதுவரை தொல்லியல் பொக்கிஷங்கள் பலவும் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன. அதில் மிகப் பெரிய கொள்ளைச் சம்பவம் இதுவே.

## 38. அரேனி-1 அதிசயங்கள்!

ஐரோப்பியக் கண்டமும் ஆசியக் கண்டமும் இணையும் பகுதியில் அமைந்த நாடு அர்மேனியா. அங்கே வயோட்ஸ் ஜோர் (Vayotz Dzor) மாகாணத்தில் அரேனி என்ற கிராமத்தை ஒட்டி, சில குகைகள் அமைந்துள்ளன. அதில் 'அரேனி-1' என்று பெயரிடப்பட்ட குகையில் அகழ்வாராய்ச்சிகள் நடத்தப்பட்டன. அங்கே கண்டெடுக்கப்பட்ட பழைமையான பொருள்கள் ஒவ்வொன்றுமே மனித குல வரலாற்றைப் புரிந்துகொள்ள உதவும் பொக்கிஷங்கள்.

2007-ம் ஆண்டில் அர்மேனியா மற்றும் அயர்லாந்தைச் சேர்ந்த தொல்பொருள் ஆய்வுக் குழுவினர், பறவையின் கண் வடிவத்தில் அமைந்த அந்தக் குகையில் தம் ஆராய்ச்சியைத் தொடங்கினர். அங்கே செப்புக்காலத்தைச் சேர்ந்த (அதாவது கி.மு. 5000-க்கும் கி.மு. 4000-க்கும் இடைப்பட்ட காலகட்டத்தைச் சேர்ந்த) சவக்குழிகள் இருப்பதைக் கண்டுகொண்டார்கள். சவக்குழிகள் என்றால் களிமண்ணால் செய்யப்பட்ட பெரிய பானைகள். இறந்தவர்களின் உடல்களைப் பானைகளுக்குள் போட்டு புதைக்கும் பழக்கம் ஆதி அர்மேனியர்களிடம் இருந்திருக்கிறது. பானைகளுக்குள் பருவ வய

தில் இறந்துபோன சிறுவர்களின், சிறுமிகளின் எலும்புத் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டன. ஒரு குறிப்பிட்ட பானையில் பருவ வயதுச் சிறுவன் ஒருவனது மண்டை ஓடு கிடைத்தது. அதற்குள் மூளைத்திசு ஒன்றும் பத்திரமாகக் கண்டெடுக்கப்பட்டது. சுமார் 7000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த, அதாவது புதிய கற்காலத்தில் (Neolithic) வாழ்ந்த ஒரு மனிதனின் மூளைப்பகுதியானது, இப்போது சிதைவின்றிக் கண்டெடுக்கப்பட்டது என்பது பேரதிசயம்.

எகிப்தியர்கள் பாணியில் 'மம்மி' ஆக்கப்பட்ட ஆடு ஒன்றும் அரேனி-1 குகையில் தோண்டியெடுக்கப்பட்டது. சுமார் 5900 ஆண்டுகளுக்கு முன்பு, அர்மேனியர்கள் ஆடு ஒன்றை முழுதாக 'பதப்படுத்தி' புதைத்திருக்கிறார்கள். அது அவர்களது மதச்சடங்காக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அர்மேனியாவின் இந்த 'மம்மி ஆடு', எகிப்தில் கண்டெடுக்கப்பட்ட எந்த ஒரு 'மம்மி விலங்குகளை'க் காட்டிலும் பழைமையானது என்கிறார்கள் தொல்லியல் ஆய்வாளர்கள்.



2010-ம் ஆண்டில் ஆய்வாளர்கள் அரேனி-1 குகையில் செப்புக்காலத்தைச் சேர்ந்த தோல் ஷூ ஒன்றைக் கண்டெடுத்தனர். பெரிய அளவு கொண்ட மாட்டுத் தோலினால் செய்யப்பட்டது. இறுக்கமாகக் கட்டுவதற்கு ஏற்ப கயிறு பிணைக்கப்பட்ட வலது கால் ஷூ. இது பெண்ணினுடையதா, ஆணினுடையதா என்று கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால், காலின் அளவுக்கேற்ப

தோலை வெட்டி, மடித்து ஷூவைத் தைத்துள்ளார்கள். ஷூவுக்குரிய வடிவம் கிடைக்க உள்ளே வைக்கோலைத் திணித்துள்ளார்கள். ரேடியோ கார்பன் வயதுப் படி சுமார் 5500 வருடங்களுக்கு முன்பு கைகளால் தைக்கப்பட்ட அந்த பழம்பெரும் ஷூவுக்கும், இன்றைய அதிநவீன ஷூக்களின் வடிவத்துக்கும் பெரிய மாறுதல் எல்லாம் இல்லை என்பது ஆச்சரியமான விஷயம். இத்தனை ஆண்டுகளாகியும் இந்த தோல் ஷூ மக்கிப்போகாமல் இருந்ததற்கானக் காரணம், ஆட்டின் சாணம் கொண்டு கெட்டியாக உருவாக்கப்பட்ட தளத்தினுள் அது புதைத்து வைக்கப்பட்டிருந்தது. எனவே, இத்தனை ஆயிரம் ஆண்டுகளானாலும் குகையின் தட்பவெப்ப நிலை மாறுதல்கள் ஷூவைப் பாதிக்கவில்லை. உலகில் கண்டெடுக்கப்பட்ட 'பழைமையான தோல் ஷூ' இதுவே!

இதைவிடப் பழைய காலணி ஒன்றும் கண்டெடுக்கப் பட்டிருக்கிறது. அது அரேனி-1 குகையில் அல்ல. அமெரிக்காவின் ஓரிகன் மாகாணத்தில். அங்கே ஃபோர்ட் ராக் பள்ளத்தாக்குப் பகுதியில் 1938-ம் ஆண்டில் சில ஜோடி செருப்புகளும், சில ஒற்றைச் செருப்புகளும் கண்டெடுக்கப்பட்டன. அவை, 7500 ஆண்டுகளுக்கு முன்பாக வெடித்த ஒரு எரிமலையின் குழம்புப் படிமத்துக்குக் கீழ் பாதுகாப்பாக இருந்தன. அவை அனைத்துமே ஒருவகைக் காட்டுப்புல்லால் நெய்யப்பட்ட செருப்புகள். கார்பன் வயதுக் கணக்கின்படி அந்த ஜோடி செருப்பின் வயது 10000 ஆண்டுகளாக இருக்கலாம் என்கிறார்கள். ஆம், அப்போதே ஆதி மனிதன் காலிலிருந்து கழன்று போகாமல் இருக்க பட்டை (Strap) வைத்தச் செருப்பு அணிந்திருக்கிறான் என்பது ஆச்சரியமான தகவல். உலகில் கண்டெடுக்கப்பட்ட பழமை

யான இந்தச் செருப்புகளுக்கு 'ஃபோர்ட் ராக் செருப்புகள்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

சரி, அரேனி-1 குகைக்குத் திரும்புவோம். திராட்சை, உலகின் பழைமையான பழங்களில் ஒன்று. கி.மு. 8000 சமயத்திலேயே மனிதன் திராட்சை விவசாயம் செய்ய ஆரம்பித்துவிட்டான் என்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். மத்திய கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள், குறிப்பாக அர்மேனியர்கள் கி.மு. 4000 சமயத்திலேயே செழிப்பாக திராட்சை விவசாயம் செய்திருக்கிறார்கள். திராட்சை ரசத்தை விரும்பிப் பருகியிருக்கிறார்கள். அதாவது பெரிய மண் குடுவைகளில் திராட்சைகளை நிரப்பி, அவற்றை மண்ணுக்குள் புதைத்து நொதிக்க வைத்து திராட்சை ரசம் தயாரித்திருக்கிறார்கள். தங்களது கடவுள்களுக்கும் படைத்திருக்கிறார்கள். பின் அவற்றைப் பருகி போதையில் கிறங்கி மகிழ்ந்திருக்கிறார்கள். அரேனி-1 குகையில் நடந்த அகழ்வாராய்ச்சியில் வரிசையாகப் பல மண் குடுவைகள் புதைக்கப்பட்டிருப்பதை ஆய்வாளர்கள் கண்டுபிடித்தார்கள். அந்தக் குடுவைகளில் திராட்சையில் நிறைந்துள்ள டார்டாரிக் அமிலம் படிந்துள்ளதைக் கண்டறிந்தார்கள். ஆக, அரேனி-1 குகைதான் உலகின் பழைமையான திராட்சை ரசத் தயாரிப்புக்கூடமாக அறியப்படுகிறது.

அரேனி-1 குகையில் அடுத்த அற்புதமான கண்டுபிடிப்பு 2011-ன் இறுதியில் நிகழ்ந்தது. இந்த முறை ஆடை ஒன்றின் பகுதிகளைக் கண்டுபிடித்தார்கள். பாவாடை போன்ற உடை. ஆணுக்கானதா, பெண்ணுக்கானதா, இல்லை இருவருமே அணிந்த பொதுவான உடையா என்று இனம்காண இயலவில்லை. அந்த உடை கி.மு. 3900 காலத்தைச் சேர்ந்ததாக, அதாவது சுமார் 5900 ஆண்டுகள் பழைமையானது என்று கண்டறிந்தார்கள்.

நாணல் போன்ற புல்லால் இறுக்கமாக நெய்யப்பட்டிருந்தது. அழகாக வண்ணம் தீட்டப்பட்டிருந்ததற்கான சுவடுகளும் உடையில் தென்பட்டன. இதுவும் அதிகம் நைந்தோ, சிதைந்தோ போகாமல் பாதுகாப்பாகவே கண்டெடுக்கப்பட்டது. உலகில் இதுவரை கண்டெடுக்கப்பட்ட மனிதனின் ஆதி உடைகளில் இதுவும் ஒன்று. அர்மேனியாவின் மிகப் பழைமையான உடை இதுவே.

அரேனி-1 குகையிலிருந்து எடுக்கப்பட்ட ஷூ, திராட்சை ரசப் பானைகள், உடை, மண்டை ஓடுகள், மூளையின் திசு, ஆட்டு மம்மி போன்ற அனைத்துமே அர்மேனியாவின் வரலாற்று அருங்காட்சியகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன. அரேனி-1 குகையில் மேலும் சில அதிசயப் பழம்பொருள்கள் நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் அகழ்வாராய்ச்சியாளர்கள் தங்கள் தேடுதல் பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

## 39. ஆடையின் வயது 5000!

வெளிர் மஞ்சள் நிற உடையாக அது இருந்திருக்கலாம். காலப்போக்கில் பழுப்பேறிப் போயிருக்கிறது. அது ஓர் ஆண் அணிந்த உடையா அல்லது பெண்ணினுடை யதா என்று தெரியவில்லை. அந்த உடையை அந்த மனிதன் அல்லது மனிதி தன் கைப்படவே நெய்தார் களா அல்லது சந்தையில் வாங்கினார்களா அல்லது அவர்களுக்கு யாராவது பரிசாகக் கொடுத்தார்களா? என்ன நிகழ்வுக்காக அந்த உடையை அவர்கள் அணிந் திருக்கக் கூடும்? அது முழு நீள அங்கியா அல்லது முட்டி தொடும் கவுனா அல்லது இடுப்பு வரையி லான சட்டையா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் இல்லை. ஆனால், V வடிவக் கழுத்துடன் நெஞ்சுப் பகு தியிலும், கைகளிலும் மடிப்புகள் எல்லாம் வைத்துத் தைக்கப்பட்ட அதிநவீன உடை போலவே காட்சியளிப் பது ஆச்சரியம்.

பண்டைய எகிப்தின் முதல் ராஜ்ஜியம் என்பது கி.மு. 3100-ம் ஆண்டில் நிறுவப்பட்டது. அந்த முதல் ராஜ்ஜி யத்தைச் சார்ந்த கல்லறை ஒன்று, எகிப்தின் கெய்ரோ விலிருந்து தெற்கே 50 கி.மீ. தொலைவில் அமைந்த தர்கானில் கண்டுபிடிக்கப்பட்டது. கி.பி. 1913-ம் ஆண்

டில் எகிப்தில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்டு வந்த இங்கிலாந்தின் ஃப்ளிண்டர்ஸ் பெட்ரி என்பவர் அந்தக் கல்லறையையும் ஆராய்ந்தார். அப்போது மண்ணில் புதைந்து கிடந்த இந்த வெளிர் மஞ்சள் உடையைக் கண்டெடுத்தார். அதற்கு 'தர்கான் உடை' என்று பெயர் அமைந்தது. கண்டெடுக்கப்பட்ட சமயத்தில் ஆய்வாளர்கள் அந்த உடையைப் பெரிதாகச் சட்டை செய்யவில்லை. பயன்படாத ஏதோ ஒரு துணி என்றே நினைத்தனர். அதனுடன் கிடைத்த மற்ற பொருள்கள் மீதே கவனம் குவித்தார்கள். ஆனால், பெட்ரி அங்கே கிடைக்கப்பெற்ற பொருள்கள் அனைத்தையும் பிற்கால ஆய்வுக்குப் பயன்படும் என்று பத்திரப்படுத்தி வைத்தார்.



அதே ஆண்டிலேயே பெட்ரி, தான் எகிப்தில் கண்டெடுத்த பொருள்கள் பலவற்றையும் இங்கிலாந்தின் யுனிவர்சிட்டி காலேஜ் லண்டனுக்கு விற்றுவிட்டார். 1942-ம் ஆண்டில் பெட்ரி இறந்து போனார். அப்போது வரை தர்கானில் பெட்ரி கண்டெடுத்த பல பொருள்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. அவை குப்பை

போல ஓரிடத்தில் கட்டி வைக்கப்பட்டிருந்தன. சுமார் 64 வருடங்கள் கழித்து, அதாவது 1977-ம் ஆண்டில்தான் ஆய்வாளர்கள், தர்கான் தொல்லியல் பொருள்களைக் கையில் எடுத்தனர். அதில் அந்த தர்கான் உடையும் இருந்தது. பழைய ஆடைகளை ஆய்வு செய்வதில் நிபுணராக விளங்கிய ஶீலா லேண்டி என்பவர், தர்கான் உடை மீது படிந்திருந்த மண்ணைக் கவனமாக அகற்றினார். அது பண்டைய எகிப்தியர்கள் பயன்படுத்திய 'லினன் துணி' என்று அறிந்தபோது லேண்டி ஆச்சரியத்தில் ஆகாயம் வரைக்கும் துள்ளிக் குதித்தார்.

லினன் துணி என்பது ஒருவகையான சணல் செடியின் நாரிலிருந்து தயாரிக்கப்படுவது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே எகிப்தியர்கள் லினன் ஆடைகள் நெய்வதில் கைதேர்ந்தவர்களாக விளங்கினார்கள். சணல் செடியைத் தகுந்த பருவத்தில் அறுவடை செய்வார்கள். அந்தத் தண்டுகளைக் கட்டுக்கட்டாகக் கட்டி, வெயிலில் நன்றாக உலர வைப்பார்கள். பிறகு தண்டுகளை முறையாக ஒழுங்குபடுத்திக் கட்டி, அதன் மீது சுமையை ஏற்றி, நீரில் நன்றாக ஊறப்போட்டார்கள். ஊறவைக்கும் கால அளவைப் பொருத்து நாரின் நிறம், வலிமை போன்றவை மாறுபடும். பிறகு நீளமான நார், நீளம் குறைந்த நாரைப் பிரித்தெடுத்தார்கள். விதவிதமான லினன் துணிகளை நெய்தார்கள். துணிகளில் வண்ணங்கள் பூசப்பட்டன. ஓவியங்களும் வரையப்பட்டன.

எகிப்திய மதகுருமார்கள் வழிபாட்டுச் சடங்குகள் செய்யும்போது லினன் துணியை உடுத்திக் கொண்டார்கள். சாதாரணர்களுக்கும் விருப்பமான ஆடைகளாக லினன் துணிகளே இருந்தன. எகிப்தியர்களிடமிருந்துதான் மத்

திய கிழக்குப் பகுதிகளிலும், ஐரோப்பிய ராஜ்ஜியங்களிலும் லினன் துணி பரவியது.

ஸீலா லேண்டி, தர்கான் லினன் துணியைப் பொறுமையாக ஆய்வு செய்தார். அது முழு நீள உடையா, ஆணினுடையதா, பெண்ணினுடையதா என்றெல்லாம் லேண்டியால் முடிவுக்கு வர முடியவில்லை. ஆனால், எகிப்தின் முதல் ராஜ்ஜியக் காலத்தில் கிடைத்த பொருள்களுடன் இந்த உடையும் கண்டெடுக்கப்பட்டதால், இதுவும் அதே காலத்தைச் சேர்ந்ததாகத்தான் இருக்கும் என்று உறுதியாக நம்பினார். அப்போது கார்பன் வயதுக் கணிப்பின்படி உடையின் வயதைக் கண்டறிய அதிக அளவில் துணி தேவைப்பட்டது. எனவே அந்த ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்பு 2.24 மில்லி கிராம் அளவு தர்கான் லினன் உடை, நவீன ரேடியோ கார்பன் வயதுக் கணிப்புக்கு உட்படுத்தப்பட்டது. ஆய்வாளர்கள் 95% துல்லியமான முடிவை வெளியிட்டார்கள். 'தர்கான் உடை கி.மு.3482-க்கும் கி.மு.3102-க்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தது.' அதாவது சுமார் 5000 ஆண்டுகளுக்கும் மேல் பழைமையானது என்பது உறுதியானது. இதுவரை உலகில் கண்டெடுக்கப்பட்டதில் மிகவும் பழைமையான, நெய்யப்பட்ட உடை இதுவே. யுனிவர்சிட்டி காலேஜ் லண்டனின் அருங்காட்சியகத்தில் பெட்ரி பெயரில் அமைக்கப்பட்ட எகிப்தியப் பிரிவில் இந்த தர்கான் உடை காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

உலகின் மிகப் பழைமையான பேண்ட், அதாவது முழு நீளக் கால்சட்டை 2014-ம் ஆண்டில் சீனாவில் கண்டெடுக்கப்பட்டது. வடமேற்கு சீனாவின் சின்ஷியாங் மாகாணத்தில் அமைந்திருக்கும் யாங்காய் கல்லறைகளில்

தாம் அது புதைந்து கிடந்தது. இடுப்புப் பகுதி, இரண்டு கால்கள் என்று மூன்று பகுதிகள் கொண்ட கால்சட்டை. துணியின் வண்ணத்தை ஒத்த நூலால் சேர்த்து தைக்கப்பட்டிருக்கிறது. குதிரைகள் மீது ஏறி பயணம் செய்வதற்கேற்ப கனமான துணியால் தயாரிக்கப்பட்ட இதில் ஏராளமான அழகான டிசைன்களும் நெய்யப்பட்டிருக்கின்றன. பாலைவனப்பகுதியில் அமைந்த கல்லறையில் கண்டெடுக்கப்பட்டதால் இத்தனை ஆண்டுகள் ஆகியும் இது சிதையாமல் இருந்திருக்கிறது. இந்தப் பழைமையான முழுநீளக் கால்சட்டையின் வயது சுமார் 3000 ஆண்டுகள்.

மத்திய எகிப்தில் கிரேக்கத்தின் காலனியாக இருந்த ஆக்ஸிரின்கெஸ் பகுதியில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொல்பொருள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது கல்லறை ஒன்றில் ஒரு ஜோடி சிவப்பு நிறக் காலுறைகள் கண்டெடுக்கப்பட்டன. பெருவிரலுக்கும், மற்ற விரல்களுக்கும் இடையே பிளவு இருப்பது போலமைந்த காலுறைகள் இன்றைக்கும் புதிது போலவே காட்சியளிக்கின்றன. உலகின் மிகப் பழைமையான இந்தக் காலுறைகளின் வயது சுமார் 1600 ஆண்டுகள்.

நார்வேயின் பனித்தளப்பரப்பில் 2013-ம் ஆண்டில் உலகின் பழைமையான ஸ்வெட்டர் கண்டெடுக்கப்பட்டது. ஆடு மற்றும் செம்மறியாட்டின் தோலினால், கடுங்குளிரைத் தாங்கும்விதமாக தடிமனாக உருவாக்கப்பட்டது. ஆறடி உயரமுள்ள மனிதன் ஒருவன் அணியும் நீளத்தில் இந்த ஸ்வெட்டர் அமைந்திருக்கிறது. இதன் வயது சுமார் 1700 ஆண்டுகள்.

புவி வெப்பமயமாதலால் பனித்தளப் பரப்புகள் மேலும் மேலும் தொடர்ந்து உருகும். எனவே வருங்காலத்தில்

இன்னும் பல பழமையான பொருள்கள், பொக்கிஷங்கள் கிடைக்கக்கூடும் என்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். இதற்காக வருத்தப்படுவதா? சந்தோஷப்படுவதா?

## 40. பேல் புதையல்!

ஒரு செய்தியை சங்கேத (ரகசிய) வார்த்தைகளால் எழுதுவார்கள். அதாவது எண்களாலும், சில சமயம் குறியீடுகளாலும் அந்தச் செய்தியை யாராலும் நேரடியாகப் புரிந்துகொள்ள இயலாதபடி மாற்றுவார்கள். மற்றவர்கள் அந்தச் செய்தியைப் பார்த்து, வார்த்தைகளாக மாற்றி புரிந்துகொள்வது சவாலான விஷயம். இது மறையீட்டியல் அல்லது குறியாக்கவியல் (Cryptography) என்றழைக்கப்படுகிறது. இந்தச் சங்கேதச் செய்திகள் Ciphertext என்றழைக்கப்படுகின்றன. பண்டைக் காலத்திலிருந்தே போர்க்களங்களில் எதிரிகளுக்குப் புரியாதவிதத்தில் செய்திகளைப் பரிமாறிக் கொள்ள இந்த சங்கேதச் செய்தி முறை பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.

அமெரிக்காவின் வெர்ஜினியா மாகாணத்தைச் சேர்ந்த தாமஸ் பேல் என்பவர், கி.பி. 1822-ம் ஆண்டில் தன் நண்பரான ராபர்ட் மோரிஸ் என்பவரைத் தேடி வந்தார். வின்ச்பெர்க் நகரத்தில் தங்கும் விடுதி ஒன்றை நடத்தி வந்த மோரிஸ், சிறிய இரும்புப் பெட்டி ஒன்றைக் கொடுத்தார். அது பூட்டப்பட்டிருந்தது. ‘பெட்டிக்குள் என்ன இருக்கிறது என்று கேட்காதீர்கள். பத்து வருடங்களுக்குள் நானோ, என் நண்பர் ஒருவரோ உங்

களைத் தேடி வருவோம். அப்படி வரவில்லையெனில் பெட்டியைத் திறந்து பாருங்கள்' என்று சொல்லிவிட்டு பேல் கிளம்பினார். சில மாதங்கள் கழித்து ஒரு கடிதம் மட்டும் பேலிடமிருந்து வந்தது. 'செயிண்ட் லூயிஸைச் சேர்ந்த ஒரு நண்பரிடமிருந்து உங்களுக்கு ஒரு கடிதம் வரும்' என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. கடிதமும் வரவில்லை. பேலும் திரும்பி வரவே இல்லை. பெட்டி யைக் கேட்டு வேறு யாரும் வரவில்லை.

காலப்போக்கில் பேல் கொடுத்த இரும்புப்பெட்டி குறித்து மோரிஸ் மறந்தே போனார். சுமார் 23 வருடங்கள் கழித்து அவரது நினைவில் அந்தப் பெட்டி வந்தது. தேடி எடுத்தார். திறந்து பார்த்தார். உள்ளே ஒரு கடிதமும், சங் கேத வார்த்தைகள் அடங்கிய மூன்று தனித்தனிக் காகி தங்களும் இருந்தன. என்ன விஷயம்?

தாமஸ் பேல், தன் நண்பர்களுடன் காட்டெருமை வேட் டைக்குச் சென்றார். காட்டெருமை ஒன்றைத் துரத்திச் சென்றபோது ஓரிடத்தில் தடுமாறி விழுந்தார். அவர் விழுந்த இடம் தங்கமும் வெள்ளியும் கிடைக்கும் சுரங் கம் என்பதைக் கண்டறிந்தார். பதினெட்டு மாதங்கள் அங்கே தம் குழுவினருடன் செலவிட்ட பேல், ஏகப் பட்ட பவுண்ட் எடையுள்ள தங்கத்தையும் வெள்ளியை யும் தோண்டி எடுத்தார். அவற்றை அங்கிருந்து பாது காப்பான இடத்தில் பதுக்கி வைக்கும் பொறுப்பையும் பேலே எடுத்துக் கொண்டார். பதுக்கி வைத்த பின், அவை எங்கே புதைக்கப்பட்டிருக்கின்றன என்ற இடத் தைக் குறிப்பிடும் செய்தியை சங்கேத மொழியில் ஒன் றாம் காகிதத்தில் எழுதினார். தான் புதைத்து வைத்த செல்வங்களில் என்னவெல்லாம் இருக்கின்றன என்ற செய்தியை சங்கேத மொழியில் இரண்டாம் காகிதத்தில் எழுதினார். இந்தச் செல்வங்களுக்கு உரிமையுடைய

வர்கள் யார் யார் என்ற செய்தியை மூன்றாம் காகிதத்தில் எழுதினார். மூன்று காகிதங்களும் அடங்கிய இரும்புப் பெட்டியைத்தான் மோரிஸிடம் கொடுத்துவிட்டுக் காணாமலேயே போய்விட்டார் பேல்.

சங்கேத மொழியை உடைத்துச் செய்தியைப் புரிந்துகொண்டு புதையலைத் தேடிப் போகுமளவுக்குத் திறமை மோரிஸுக்கு இல்லை. எனவே அவர், தன் நண்பர் ஒருவரிடம் அந்தக் காகிதங்களைக் கொடுத்தார். அந்தப் 'பெயர் தெரியாத' நண்பரும் சுமார் 20 வருடங்கள் அந்தச் சங்கேதச் செய்திகளைப் புரிந்துகொள்ள முட்டி மோதிப் பார்த்தார். அமெரிக்காவின் சுதந்தரப் பிரகடனத்தைச் சொல்லும் United States Declaration of Independence-ஐ அடிப்படையாக வைத்தே இரண்டாவது காகிதத்தின் சங்கேதச் செய்தி வடிவமைக்கப்பட்டிருப்பதைக் கண்டுகொண்டார். அதன்மூலம் இரண்டாவது காகிதத்தின் குறியீடுகளை உடைத்து செய்தியைக் கண்டுபிடித்தார். அதன்மூலம் பேல் புதையலில் என்னென்ன செல்வங்கள் எல்லாம் இருக்கின்றன என்பதை அந்த நண்பர் தெரிந்து கொண்டார். ஆனால், அவரால் காகிதம் ஒன்று மற்றும் மூன்றின் செய்திகளைப் புரிந்துகொள்ள இயலவில்லை.

இந்த பேல் காகிதங்களை அந்தப் 'பெயர் தெரியாத நண்பர்', ஜேம்ஸ் வார்ட் என்பவரிடம் ஒப்படைத்தார். ஜேம்ஸ், அவற்றை The Beale Papers என்ற பெயரில் அச்சிட்டு பொதுமக்களிடம் விநியோகம் செய்தார். யாரால் இயலுகிறதோ அவர்கள் இந்தச் சங்கேதச் செய்திகளை உடைத்துப் புரிந்துகொண்டு புதையலை எடுத்துக் கொள்ளுங்கள் என்று ஜேம்ஸ் தாராள மனத்துடன் அறிவித்தார்.

பேல், அந்தப் புதையலை மறைத்துவைத்து சுமார் 200 ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போதுவரை காகிதம் ஒன்று மற்றும் மூன்றின் செய்திகளை யாராலும் புரிந்துகொள்ள முடியவில்லை. எவராலும் பேல் புதையலை வெளியே எடுக்கவும் இயலவில்லை. உலகம் அதைத் தொடர்ந்து தேடிக் கொண்டே இருக்கிறது. பெயர் தெரியாத அந்த நண்பர் இரண்டாவது காகிதத்தில் புரிந்து கொண்ட செய்தியின் சுருக்கம் இதுதான்.

'பெட்ஃபோர்ட் கவுண்டியில், பஃபோர்டிலிருந்து நான்கு மைல்கள் தொலைவில் இந்தச் செல்வங்களைப் புதைத்துள்ளேன். தரையிலிருந்து ஆறு அடி பள்ளத்தில் இரும்புப் பானைகளில் அவை புதைக்கப்பட்டுள்ளன. 1014 பவுண்ட் தங்கம், 3812 பவுண்ட் வெள்ளியும் அடங்கிய முதல் பகுதி செல்வமானது நவம்பர் 1819-ல் ஆண்டில் புதைக்கப்பட்டது. நகைகளும், 1907 பவுண்ட் தங்கமும், 1288 பவுண்ட் வெள்ளியும் அடங்கிய இரண்டாவது பகுதி செல்வமானது டிசம்பர் 1821-ம் ஆண்டில் புதைக்கப்பட்டது. புதைக்கப்பட்ட இடமானது ஒன்றாம் காகிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.'

இந்தச் செல்வத்தின் மொத்த மதிப்பு - தங்கம் அமெரிக்க டாலரில் 42 மில்லியன் என்றும், வெள்ளி அமெரிக்க டாலரில் 1 மில்லியன் என்றும், நகைகள் $220,000 என்றும் ஜனவரி 2017-ம் ஆண்டில் அறிவித்திருக்கிறார்கள். இன்னொரு பக்கம், பேல் புதையல் குறித்த ஒவ்வொரு விஷயமும் வடிகட்டிய பொய் என்று வாதிடுபவர்களும் இருக்கிறார்கள். தாமஸ் பேல் என்று ஒருவர் வாழ்ந்ததற்கான ஆதாரமே கிடையாது. அவர் செல்வங்களைப் புதைத்திருக்கிறார் என்பதெல்லாம் கட்டுக்கதை என்று அடித்துச் சொல்கிறார்கள். இன்னொரு பக்கம், 1810 மக்கள் தொகை கணக்கெடுப்புப் பதிவின்படி தாமஸ்

பேல் என்று இருவர் இருந்திருக்கிறார்கள் என்று சிலர் வாதிடுகிறார்கள்.

இந்த சங்கேதக் காகிதங்கள் எல்லாம் பொய். அவை ஏனோதானோவென அர்த்தமே தராத எண்களால் நிரப்பப்பட்டிருக்கின்றன என்று சிலர் சொல்கிறார்கள். இரண்டாவது காகிதத்தின் ரகசியச் செய்தியை அறிய முடிந்ததல்லவா. எனில், பேல் புதையலும் உண்மை தான் என்று பலர் நம்புகிறார்கள். சிலர் காகிதச் செய்தி களை எல்லாம் புறந்தள்ளிவிட்டு நேரடியாக வெர்ஜினி யாவில் பல பகுதிகளில் சென்று, ஆறு அடிக்கும் மேல் தோண்டி தேடுதல் வேட்டை நடத்தியிருக்கிறார்கள். அதற்காக பெரிய அளவில் செலவும் செய்திருக்கிறார் கள். யாருக்குமே வெற்றி கிட்டவில்லை. குண்டுமணித் தங்கம்கூட கிடைக்கவில்லை.

பேல் என்பவர் ஒருவர் உண்மையிலேயே இருந்தாரா? அப்படி இருந்திருந்தார் என்றால், அவரே தனது புதை யலை எடுத்துக் கொண்டு தலைமறைவாகிவிட்டாரா? இல்லை, இன்னும் அந்தப் புதையல் ஆறடி ஆழத்தில் உறங்கிக் கொண்டுதான் இருக்கிறதா? உலகின் தீராத மர்மங்களில் பேல் புதையலும் ஒன்று!

## 41. ஐந்தாம் ஜார்ஜின் மணிமகுடம்!

தர்பார் என்பது பெர்சிய மொழிச்சொல். அரசவை என்று சொல்லலாம். தர்பாரை இந்தியாவுக்கு அறிமுகப்படுத்தியவர்கள் முகலாயர்கள். மாபெரும் சபைதனில் அரசர் தலைமையில் கூடுவார்கள். விருந்தினர்கள் வந்து அரசரைச் சந்திப்பார்கள். ஏகத்துக்கும் புகழ்வார்கள். கேளிக்கை நிகழ்வுகள் நடைபெறும். வியாபார விஷயங்களைப் பேசுவார்கள். எப்போதாவது தர்பாரில் மக்கள் நலத்திட்டங்களும் விவாதிக்கப்படுவதுண்டு.

பிரிட்டிஷார், தங்களை இந்திய மக்களுக்கு மிகவும் நெருக்கமானவர்களாகக் காட்டிக் கொள்வதற்காக, இந்த தர்பார் கலாசாரத்தைத் தாங்களும் பின்பற்ற நினைத்தார்கள். 1877, ஜனவரி 1 அன்று, பிரிட்டிஷாரின் முதல் இந்திய தர்பார் டெல்லியில் கூடியது. இந்தியாவின் பேரரசியாக குயின் விக்டோரியா அறிவிக்கப்பட்டார். 1903-ம் ஆண்டின் ஆரம்பத்தில் வைஸ்ராய் கர்ஸன், இரண்டாவது தர்பாரை ஏற்பாடு செய்திருந்தார். அப்போது கிங்காக ஏழாம் எட்வர்டும், குயினாக அலெக்ஸாண்ட்ராவும் லண்டனில் பதவி ஏற்றிருந்தார்கள். கிங்

கையும் குயினையும் டெல்லிக்கு வரவழைத்து தர்பார் நடத்தி அவர்களை மகிழ்வித்தார் கர்ஸன்.

1911-ம் ஆண்டில் அடுத்த தர்பாரைக் கூட்டுவதற்கான சூழ்நிலை வந்தது. புதிய கிங்காக ஐந்தாம் ஜார்ஜும், குயினாக மேரியும் பதவி ஏற்கவிருந்தார்கள். அப்போது கிங்கின் இந்தியப் பிரதிநிதியாக பொறுப்பில் இருந்த வைஸ்ராய் ஹார்டிங், ஐந்தாம் ஜார்ஜுக்குப் பெரிய அளவில் மரியாதை செய்து, தனது 'ராஜ விசுவாசத்தை'க் காட்ட நினைத்தார். 1911, டிசம்பர் 12 என்று தர்பாருக்கான நாள் குறிக்கப்பட்டது. அந்த ஜனவரியிலிருந்தே அதற்கான வேலைகள் ஜரூராக நடக்க ஆரம்பித்தன.

டெல்லியின் வடக்குப் பகுதியில் 17920 ஏக்கர் பரப்பில் மாபெரும் நிலம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. அங்கே எங்கெங்கு, என்னென்ன, எப்படியெப்படி அமைக்கப்பட வேண்டும் என்பதற்கான ஒட்டுமொத்த வரைபடமும் தயாரானது. நாற்பது மைல்களுக்கு தார்ச்சாலைகள் போடப்பட்டன. இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்டு, பதினாறு குட்டி ரயில் நிலையங்களும் முளைத்தன. கிங் ஜார்ஜ் தங்குவதற்காகவும், பதவியேற்பு விழா மேடைக்காகவும் தனியாக மையப்பகுதியில் எண்பத்து மூன்று ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. பதவியேற்பு விழாவில் கலந்துகொள்ளும் பிரிட்டிஷ் விருந்தாளிகளும், இந்தியாவிலுள்ள அனைத்து சமஸ்தான மகாராஜாக்களும் ராஜாக்களும் குட்டி ராஜாக்களும் தங்குவதற்காக 233 முகாம்கள் அமைக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான கூலியாள்கள், கூடாரங்கள் அமைப்பதற்காக வெட்டவெளி மொட்டை வெயிலில் உழைப்பைக் கொட்டினார்கள்.

ஒவ்வொரு மகாராஜாவும் தங்களுக்குரிய முகாமில் தேவையான வசதிகளைச் செய்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ரோல்ஸ்-ராய்ஸ் கார்கள் வந்து செல்ல பாதை, தங்கத்தாலான டாய்லெட், குதிரைகள், யானைகள், பிற கால்நடைகளைக் கட்டுவதற்கு இடம், பெரிய பெரிய ரதங்களை நிறுத்த இடம் என்று ஒவ் வொரு மகாராஜாவும் சௌகரியத்திற்கேற்ப தங்களுக் கான முகாம்களை வடிவமைத்துக் கொண்டார்கள்.

அனைத்து இடங்களிலும் மின்சார வசதியும் தண்ணீர் வசதியும் செய்யப்பட்டிருந்தன. தர்பார் நடக்கும் காலத் தில் அங்கே சுமார் இரண்டரை லட்சம் பேர் கூடுவார் கள் என்று கணக்கிடப்பட்டிருந்தது. அத்தனைப் பேருக் கும் தேவையான உணவுப்பொருள்கள், காய்கறிகள், இறைச்சி, பால், ரொட்டி, பழங்கள், பானங்கள் எல்லாம் ரயில்களிலும், பிற மோட்டார் வாகனங்களிலும் வந்து இறங்கின. முப்பது இடங்களில் தாற்காலிகத் தபால் நிலையங்கள் அமைக்கப்பட்டன. ஆங்கிலம் மற்றும் இந் தியாவின் முக்கியமான இருபது மொழிகளில் தந்தி சேவைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 1911 நவம் பரின் மத்தியில் விழாவுக்கான எல்லா ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டன.

கிங்கும் குயினும் படு அமர்க்களமான வரவேற்புடன் இந்தியாவுக்கு வந்திறங்கினார்கள். அதேசமயம் மழை யும் வானத்திலிருந்து வந்து இறங்கியது. கொட்டித் தீர்த் தது. பல மாதங்கள் பாடுபட்டு செய்த ஏற்பாடுகள் எல் லாம் பாழ். விழா நடப்பது சந்தேகம்தான், கிங் கிளம்பிவி டுவார் என்று பேச்சுகள் எழ ஆரம்பித்தன.

வைஸ்ராய் ஹார்டிங், தவிதவித்துப் போனார். விழா வுக்கு மூன்றே நாள்கள்தான் பாக்கியிருந்தன. ஆயிரக்

கணக்கான கூலி ஆள்களையும், ராணுவ வீரர்களையும் முடுக்கி விட்டார். டிசம்பர் 12 அன்று தர்பார். அதற்கு முந்தைய நாளே எல்லாம் இயல்பு நிலைக்குக் கொண்டு வரப்பட்டது.

இங்கிலாந்து அரச பரம்பரையில் அதுவரை முடிசூட்டு விழா என்பது லண்டனில் மட்டும்தான் நடைபெற்றுவந்தது. ஐந்தாம் ஜார்ஜும் 1911, ஜூன் 22 அன்று லண்டனில் முடிசூட்டிக் கொண்டார். ஆனால், இந்தியாவின் பேரரசராக இங்கு டெல்லி தர்பாரிலும் தனியாக முடிசூட்டிக் கொள்ள விரும்பினார். அவரது விருப்பத்துக்காக ராஜ பரம்பரை விதிகள் தளர்த்தப்பட்டன. ஐந்தாம் ஜார்ஜுக்காகப் புதிய மணிமகுடம் ஒன்றைத் தயார் செய்தார்கள். லண்டனின் பிரபல நகை நிறுவனமான Garrard & Co. தயாரித்த அந்த கிரீடத்தின் மதிப்பு அறுபதாயிரம் பவுண்ட். எடை 920 கிராம். 6170 பெரிய, சிறிய வைரக்கற்கள், 9 மரகதக்கற்கள், 4 ரத்தினக்கற்கள், 4 நீலக்கற்கள் பதிக்கப்பட்ட அந்தக் கிரீடத்துக்கு வைக்கப்பட்ட பெயர், Imperial Crown of India.

டெல்லி தர்பாருக்காக எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்ட பிறகுதான் ஜார்ஜுக்கு ஒரு விஷயம் உறுத்த ஆரம்பித்தது. இந்தியா, இந்துக்களும் இஸ்லாமியர்களும் நிறைந்த நாடு. அங்கு சென்று கிறிஸ்துவ மத முறைப்படி முடிசூட்டிக் கொள்வது முறையல்ல. வேறென்ன, செய்யலாம்?

முடிசூடும் நாளும் வந்தது. டிசம்பர் 12, காலை நேரம். எந்தவித மதச்சடங்குகளும் இன்றி, கிங் ஐந்தாம் ஜார்ஜ் தனக்குத் தானே முடிசூட்டிக் கொண்டார். குயின் மேரியோடு தர்பாருக்குக் கிளம்பினார். நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட, தங்கநிற பட்டைகளால் அலங்கரிக்கப்பட்ட

சிவப்பு நிற சாரட் அவர்கள் ஏற, குதிரைப்படை வீரர்கள் முன்னே அணிவகுக்க ஊர்வலம் ஆரம்பமானது.

மகாராஜாக்கள், ராஜாக்கள், குட்டி ராஜாக்கள், ஐரோப்பிய விருந்தினர்கள், இந்திய அதிகாரிகள், பிரிட்டிஷ் அதிகாரிகள் என்று எல்லோருமே தங்களுக்காக ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் கிங்குக்காகக் காத்திருந்தார்கள். மண்டபத்தின் முன் அரசுப் படை வீரர்கள் அரைவட்ட வடிவில் அணிவகுத்து நின்றார்கள். அந்த மைதானத்தில் பல சமஸ்தானங்களைச் சேர்ந்த வீரர்கள் வியர்வை வழிய வழிய வரிசை கட்டி நின்றார்கள். டெல்லி, பஞ்சாப் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளிலிலிருந்து சுமார் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் வரவழைக்கப்பட்டிருந்தார்கள்.



சாரட், தர்பார் மண்டபத்தின் அருகில் வந்து நின்றது. அந்த மாபெரும் மைதானமே ஆரவாரத்துடன் எழுந்து நின்றது. தனக்குத் தானே முடிசூட்டிக் கொண்ட கிங்கும் குயினும் இறங்கி மண்டபத்திலுள்ள சிம்மாசனங்களை நோக்கி நடந்தார்கள். கிங்கின் பதவியேற்புக்குரிய மரியாதையாக நூற்றியொரு முறை துப்பாக்கி குண்டுகள்

முழங்கின. பிரிட்டிஷ் ராஜ பரம்பரைக் கொடி ஏற்றப்பட்டது. God Save the King! - வாழ்த்துகள் ஒலித்தன. முரசொலி முழங்கியது. பிரிட்டிஷாரின் மூன்றாவது டெல்லி தர்பார் இனிதே தொடங்கியது. பல்வேறு சிறப்பான நிகழ்வுகளுடன் நடந்து முடிந்தது.

உண்மையில் ஐந்தாம் ஜார்ஜுக்கு அந்தக் கிரீடம் பிடிக்கவே இல்லை. அதைத் தனது டைரிக் குறிப்பில் எழுதி வைத்திருக்கிறார். 'சுமார் மூன்றரை மணி நேரம் அந்தக் கிரீடத்தை அணிந்து கொண்டு தர்பார் நிகழ்வுகளைக் கண்டது களைப்பாக இருந்தது. எடை அதிகமான அந்தக் கிரீடத்தை அணிந்தது எனக்குத் தலைவலியைக் கொடுத்தது.'

1911 டெல்லி தர்பார் நிகழ்வுகளுக்குப் பின் கிங் ஐந்தாம் ஜார்ஜ், மீண்டும் அந்தக் கிரீடத்தை ஒருமுறைகூட அணியவே இல்லை. 1936-ம் ஆண்டில் கிங் ஐந்தாம் ஜார்ஜ் இறந்து போனார். அவருக்குப் பின் வந்த யாரும் அதைச் சூட்டிக் கொள்ளவே இல்லை. இந்தியாவுக்குச் சுதந்தரம் கிடைத்த பிறகு, 'இந்தியப் பேரரசர்' என்ற விதத்தில் ஐந்தாம் ஜார்ஜ் சூட்டிக் கொண்ட அந்தக் கிரீடத்தை இந்தியாவுக்கே திருப்பித் தருமாறு கோரிக்கை வைக்கப்பட்டது. அந்தக் கிரீடம் மட்டுமல்ல, அதைப் போல பிரிட்டிஷார் இங்கிருந்து அபகரித்துச் சென்ற பல்வேறு பொக்கிஷங்கள் இதுவரை இந்தியாவுக்குத் திரும்பவில்லை.

உலகப்புகழ்பெற்ற லண்டன் அருங்காட்சியகமானது, பிரிட்டிஷார் தாங்கள் காலனி அமைத்திருந்த தேசங்களிலிருந்து கொள்ளையடித்துச் சென்ற பொக்கிஷங்களாலும் பொருள்களாலும்தான் நிரம்பியிருக்கிறது. கிங் ஐந்தாம் ஜார்ஜின் மணிமகுடமானது பல காலமாக லண்

டன் டவரில் அமைந்துள்ள ஜுவல் ஹவுஸில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

------------